டாக்டர். சி.பாலசுப்பிரமணியன்

சங்க இலக்கியம்

-சில பார்வைகள்

சங்க இலக்கியம்:
சில பார்வைகள்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.

வெளியீடு :

நறுமலர்ப் பதிப்பகம்
சென்னை-29

முதற்பதிப்பு : டிசம்பர், 1989
உரிமை ஆசிரியர்க்கு
விற்பனை உரிமை :
பாரி நிலையம்
184, பிராட்வே
சென்னை-600 108
விலை : ரூ. 25-00

ஆசிரியரின் பிற நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாறு
உருவும் திருவும்
கட்டுரை வளம்
காரும் தேரும்
மனோன்மணீயம் (பதிப்பு)
முருகன் காட்சி
வாழையடி வாழை
இலக்கிய அணிகள்
இலக்கியக் காட்சிகள்
நல்லோர் நல்லுரை
நெஞ்சின் நினைவுகள்
மலர் காட்டும் வாழ்க்கை
சான்றோர் தமிழ்
சங்ககால மகளிர்
ஆண்டாள்
சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்
புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்
அறவோர் மு.வ.
பெருந்தகை மு.வ.
கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்
திருவெம்பாவை விளக்கம்
மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
Papers on Tamil literature
The status of women in Tamilnadu during the Sungam Age
A Study of the Literature of the Chera Country

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை- 14.

முன்னுரை

தமிழ்நாடு தொன்மையும், சிறப்பும் வாய்ந்தது. "மனித நாகரிகம் வளர்ந்த தொட்டில்" என்று லெமூரியாக் கண்டத்தைக் குறிப்பிடுவர். இன்றுபோல் இல்லாமல் குமரி முனை இன்னும் சற்றுத் தெற்கே விரிந்து இருந்தது. அங்கே குமரி மலை இருந்தது. குமரி ஆறு ஓடிற்று பஃறுளி ஆறு பாய்ந்து சென்றது. இச் செய்தியினை,

> "வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள
> வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
> தென்திசை ஆண்ட தென்னவன் வாழி"

என்ற சிலப்பதிகார அடிகளால் அறிகிறோம்.

இவ்வாறெல்லாம் தமிழ்நாட்டினுடைய தொன்மையும் சிறப்பும் வரலாற்றுப் பரம்பரையும் நல்ல தமிழ் நூல்களில் நவிலப்படுகின்றன. இவ்வாறு தமிழ்நாட்டின் தொன்மை யினையும், சிறப்பினையும் பல்வேறு இலக்கியங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

தமிழ்நாட்டின் பழமையினையும் சிறப்பினையும் போலவே தமிழ் இனத்தின் தொன்மையும் சிறப்பும் நினைக்கற்பாலன.

> "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
> வாளொடு முன்தோன்றி மூத்த குடி"

எனும் புறப்பொருள் வெண்பாமாலை தமிழ்க்குடியின் பழமையினைப் பேசுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் இணையிலாக் கவிஞர் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்,

> "திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
> விண்ணோடும் உடுக்களோடும்
> மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த
> தமிழோடு பிறந்தோம் நாங்கள்"

என்று தமிழ்மொழியின் பழமையினையும், தமிழ்க்குடியின் தொன்மையினையும் குறிப்பிட்டார். அந்த அளவிற்குத்

தமிழ் இன்றும் தொன்மையானது. இதனைப்பற்றி இரண்டாவது கட்டுரை இயம்புகின்றது.

மூன்றாவது கட்டுரை, தமிழ் மொழியின் தொன்மை குறித்தும் சிறப்புக் குறித்தும் பேசுகின்றது. உலகின் பழைய மொழிகளில் தமிழ் ஒன்று. வழக்காற்றில் இக்காலத்தில் வாழும் மொழிகளில் தமிழே தொன்மையானது. **(Tamil is the oldest of the present languages)** எனக் குறிப்பிடுவர். வில்லிபாரதப் பாட்டு ஒன்றும் தண்டியலங் காரப் பாட்டு ஒன்றும் தமிழின் சிறப்புகளை உணர்த்துவன வாகும்.

நான்காவது கட்டுரை, சங்ககாலம் குறித்ததாகும். சங்க காலம் எந்த நூற்றாண்டில் தொடங்கி எந்த நூற்றாண்டில் முடிவுறுவதாகக் கருதலாம் என்பதற்கு அறிஞர் பெருமக்க ளிடையே பல்வேறு கருத்துகள் உள்ளன. கி.மு. 500 என்பாரும், கி.பி. 9-ஆம் நூற்றாண்டு எனக் கூறுவாரும் உளர். விருப்பு வெறுப்பின்றி இன்று நாம் சங்க காலத்தைக் குறிப்பிடுகிறபொழுது, கி.மு. 3-ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 2-ஆம் நூற்றாண்டு வரை சங்கம் நிலவியது எனக் கொண்டு சங்க காலத்தைக் காலப்பகுதிகளாகக் கொள்ளலாம்.

பதிற்றுப்பத்து இலக்கியத்தில் ஒரு தனிச் சிறப்பு உள்ளது- சேரப் பேரரசர்களைப் பற்றி எழுந்த நூல் இது. இதுபோன்று சோழருக்கோ பாண்டியருக்கோ தனி நூல் அமைந்தது இல்லை.

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு"

எனத் தொல்காப்பியம் பாராட்டும். அவர்தம் அடையாளப் பூமாலைகள்

"போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்"

எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.

சேரநாடு நீர் வளமும் நில வளமும் ஊர் வளமும் மிகுந்தது. நுகர் பொருள்கள் மக்களுக்கு எளிமையாகக் கிட்டின. இதனை,

"கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்"

என்பார் பாலைக் கௌதமனார்.

"காலம் அன்றியும் கரும்புஅறுத்து ஒழியாது"

என்றும்,

"மறாஅ விளையுள் அறாஅ யாணர்"

என்றும் சேர நாட்டு வளம் செப்பப்படுகின்றது.

சேர நாட்டின் பெண்மணிகள் இரவும் பகலும் தாங்கள் அணிந்திருந்த அணிகலன்களைக் களைவது இல்லை என்று அவர்தம் செல்வச்செழிப்பை எடுத்துக்கூறுவர், அரிசில் கிழார் என்னும் புலவர். சேரர்கள் வீரத்திலும் விளங்கி நின்றார்கள்; கொடைவளத்திலும் சிறந்து நின்றார்கள்; மழையே பொய்த்தாலும் சேரலாதன் கொடை வழங்குதலில் பொய்க்கமாட்டான் என்பர். இவ்வாறு பல்வேறு வளமும் பாங்குறப் பெற்ற நாடு எனச் சேர நாடு செப்பப்படுகிறது. இவ் உண்மைகளை எடுத்துக்காட்டுவது ஐந்தாவது கட்டுரை.

ஆற்றுப்படை இலக்கியம் தமிழின் பண்பாட்டுச் சிறப்பினை எடுத்து மொழிவதாகும். பத்துப்பாட்டின் முதற்பாட்டு திருமுருகாற்றுப்படை. அத் திருமுருகாற்றுப் படை 'உலகம் உவப்ப' எனத் தொடங்குகின்றது. பிற் காலத்தே எழுந்த பெரிய புராணமும், கம்பராமாயணமும் 'உலகம்' என்ற சொல்லாலே தொடங்குகின்றன. உலகம் ஒளி பெற உதவுவது கதிரவன் ஆகும்.

"அகலிரு விசும்பிற்கு ஓடம் போலப்
பகலிடை நின்ற பல்கதிர் ஞாயிறு"

எனக் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடும். கதிரவனைப் பற்றிய குறிப்பு மிகப் பல இலக்கியங்களில் இடம் பெற்றிருக்கின்றதனைக் காணலாம். இருபதாம் நூற்றாண்டு மகாகவி பாரதியார்,

"புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சிதந்து
விந்தை செய்யும் சோதி"

என்று கதிரவனைக் குறிப்பிடுவர். பாரதிதாசன்

"காலை யிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்"

என்று அழகு உறையும் இடமாகக் கதிரவனைக் குறிப்பிடுவர். இத்தகைய செய்திகள் எல்லாம் எட்டாவது கட்டுரையில் இடம் பெற்றுள்ளன.

'சங்க இலக்கியத்தில் அணி நலம்' என்னும் கட்டுரை உவமைச் சிறப்புமிக்க சங்க இலக்கியத் தொடர்களைத் தொகுத்துக் கொடுக்கின்றது. தற்குறிப்பேற்ற உவமை, தடுமாறு உவமை, விலக்குவமை, இல்பொருள் உவமை, அந்தாதி உவமை, இரட்டை உவமை, நிரல்நிறை உவமை, பல்பொருளுவமை, பிறிதுமொழிதலணி, விபரீத உவமை, மாலை உவமை, வேற்றுமை அணி என்பனவெல்லாம் விரித்துக் கொடுக்கும் சங்கத் தமிழ் பரப்பு, உவமைச் செல்வங்களை ஒருங்கிணைத்துக் கொடுக்கின்றது.

"... ... ... சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே"

என்றும் குறுந்தொகை உவமை, என்று நினைத்தாலும் நின்று இன்பம் தருவதாகும்.

பத்தாவது கட்டுரை, 'பண்டைத் தமிழரின் வணிகம்' என்ற பெயருடையதாகும். தொன்மைச் சிறப்பு வாய்ந்த தமிழ்க்குடியினர் காலிற் பிரிந்தும், கலத்தில் பிரிந்தும், வாணிகம் செய்வதில் வல்லவர். பன்னாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தவர்கள் அவர்கள். தமிழ் நாட்டு முத்து கிரேக்கப் பேரரசியின் அணிகலனாயிற்று. 'சாத்துடை வழங்கும் உல்குடைப் பெருவழி' என்னும் பெரும் பாணாற்றுப்படைத்தொடர் மிளகு வாணிகத்தைக் கூறும். பிற நாட்டினர் கலங்களில் வரும்பொழுதே பொன்னைக் கொண்டுவந்து அதற்கு மாற்றாக மிளகை வாங்கிச்

சென்றனர். 'பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளங்கெழு முசிறி' என்ற குறிப்பு இதற்குச் சான்று பகரும். தமிழர் வணிகத்தை மிக விளக்கமாக இந்தக் கட்டுரை புலப்படுத்துகின்றது.

பதினொன்றாவது கட்டுரையாக அமைந்துள்ள இசைக் கலை என்னும் கட்டுரை தமிழ் இசையின் தொன்மையினையும் சிறப்பினையும் புலப்படுத்தி நிற்கின்றது. தொல்காப்பியனார் குறிப்பிட்டுள்ள கருப்பொருள்களுள் ஒன்று யாழ் என்பதாகும். யாழில் எழுவது இசை. ஒவ்வொரு நிலத்திற்கும் யாழைக் குறிப்பிட்டு அதன்வழி தமிழ் இசையின் தொன்மை புலப்படுத்தப்படுகின்றது. சில பாடல்களைப் பாடுகின்றபொழுது தினை உண்ண வந்த யானை தினை உண்ணாது இசையில் மயங்கி நின்ற செய்தி சங்க இலக்கியம் விளம்பும் செய்தி. வழிச்செல்வோரைத் தாக்கிவரும் ஆறலை கள்வரும் பாலைப் பண்ணிசையைக் கேட்டு, தம் செயல் மறந்து தம் கையிலே தாங்கி நிற்கின்ற கொலைக் கருவிகளைக் கீழே போட்டுவிட்டுத் தம் வன்கண்மை தவிர்த்து நிற்பாராம். இவ்வாறெல்லாம் இசைக்கலையின் சிறப்புப் பேசப்படுகின்றது.

இறுதிக் கட்டுரையான தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கருத்துகள், தமிழரின் அறிவியல் மதிநுட்பத்தினை விளக்க முற விளக்கி நிற்கின்றது.

முன்நூல்போல இந் நூலின் பதிப்பிற்கு உதவிய டாக்டர் இ. சுந்தரமூர்த்தி அவர்களுக்கு என் நன்றி.

"சங்க இலக்கியம்: சில பார்வைகள்" எனும் இந்நூலில் யான் அரிதின் முயன்று எடுத்த குறிப்புகளைக் கொண்டு ஒழுங்குபடுத்திப் பல்வேறு கட்டுரைகளாக்கி ஒரு நூலாகத் தொகுத்துள்ளேன். பல ஆண்டுகள் தமிழ் ஆராய்ச்சிக் கடலிலே ஆழ்ந்து நான் எடுத்த நன்முத்துகள் இவை. வழக்கம்போல் எனக்கு அன்பு காட்டி ஆதரவு நல்கும் தமிழ்கூர் நல்லுலகம் இந்நூலினையும் ஏற்றிப் போற்றுமென்று நம்புகின்றேன்.

—சி. பா.

பொருளடக்கம்

1. தமிழ் நாட்டின் தொன்மையும் சிறப்பும் ... 9
2. தமிழ் இனத்தின் தொன்மையும் சிறப்பும் ... 22
3. தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும் ... 31
4. சங்க காலம் ... 45
5. பதிற்றுப்பத்தின் இலக்கிய வளம் ... 64
6. ஆற்றுப்படை ... 81
7. பாடாண் திணை ... 96
8. தமிழ் இலக்கியங்களில் கதிரவன் ... 107
9. சங்க இலக்கியத்தில் அணிநலம் ... 118
10. பண்டைத் தமிழரின் வணிகம் ... 141
11. இசைக் கலை ... 181
12. தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கருத்துகள் ... 226

1. தமிழ்நாட்டின் தொன்மையும் சிறப்பும்

உலகம் தோன்றிய காலத்தில் தீக்குழம்பாக இருந்த மண் முதலில் குளிர்ந்து அமைந்த நிலப்பகுதி தென்னிந்தியாவாகும். இவ்விடத்தில் மனிதன் தோன்றி இருக்கலாம் என்ற கருத்து நிலவுகிறது[1].

இந்திய நாடு இன்று காணப்படும் வடிவினை முன் அடைந்திருக்கவில்லை. கன்னியாகுமரிக்குத் தெற்கே காணப்படும் இந்துமாக்கடல், முன் ஒரு பெரிய நிலப்பரப்பாக விளங்கியது. அது கிழக்கே பர்மா தொடங்கித் தெற்கே சீனா வரையிலும், மேற்கே, ஆப்பிரிக்காவின் கிழக்குத் தெற்குக் கரைகள் வரையிலும், வடக்கே விந்தியமலை வரையிலும் விரிந்திருந்தது. அந் நிலப்பரப்புக்கு ஆங்கில பௌதீக நூலார் லெமூரியா என்னும் பெயர் இட்டனர்.

---

1. Considering the fact that we have scarcely any trades of volcanic erruptions or earn tremors, as they frequent occur in North India, it may be said that South India was the part of the world to settle first as a land mass. It is probable that the original man might have come into existance first in South India.

—V. R. R. DIKSHITAR

—Pre Historic South India P. 234.

தமிழ் முன்னோர் இதனைக் குமரிக்காண்டம் என வழங்கினர்[1].

ஒரு காலத்துக் கடல் பொங்கியெழுந்து அதன் பல பகுதிகளைத் தன்னகப்படுத்திக்கொண்டது. முன் ஒன்றாயிருந்த ஆஸ்திரேலியா, சீனா ஆப்பிரிக்கா இந்தியா முதலிய நாடுகள் அக்காலத்திலேயே பிளவுபட்டிருத்தல் வேண்டும். 'ஸ்காட் எலியட்' கூறும் ஐந்தாவது கடல்கோட் காலமே அவ்வெள்ளப் பெருக்கின் காலமெனக் கருதப்படுகின்றது.[1]

குமரிக்கண்டம் அழிவெய்தியபின் தென்னிந்தியாவின் தொடர்ச்சியாக இலங்கை, சுமத்திரா, ஜாவா முதலிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு பெருந்தீவு விளங்கிற்று. அதன்கண் நாவல் மரங்கள் செழித்தோங்கி வளர்ந்தமையால் அது நாவலந்தீவு என்னும் பெயரைப் பெறுவதாயிற்று. "குமரித் தீவு", "குமரி காடு" என்றும் அது வழங்கப்பட்டது. குமரி நாட்டின் வடக்கு எல்லை விந்திய மலையாக இருந்தது. இமயமலையும் சிந்து கங்கைச் சமவெளிகளும் அக்காலத்தில் தோன்றவில்லை. ஆகவே குமரி நாடு அல்லது பழைய தமிழகம் ஆசியாக் கண்டத்தின் பகுதியாக இருக்கவில்லை. தெற்கே கிடந்த நிலப்பரப்புக்களிற் பெரும் பகுதி கடலுள் மறைந்தது. அப்போது இமயமலையும் சிந்துகங்கைச் சமவெளிகளும் கடலாழத்தினின்றும் மேற்கிளம்பின. இமயமலைச் சாரல்களில் நீர்வாழ் உயிரினங்களின் எலும்புக்கூடுகளும் காணப்படுகின்றன. அதனால் இமயமலை ஒரு காலத்தில் நீரில் மூழ்கிக் கிடந்ததெனத் துணியப்படுகின்றது. இமயமலையும் அதனைச் சார்ந்த

---

1. "There is Geological evidence to prove that in very early time South India formed part of a huge continent which extended from Burma and South China in the east, South Africa on the west, Vindya hills on the North and Australia on the South".

—Ric Vedic India, p. 91.

நிலங்களும் மேற்கிளம்பிய பின்னும் விந்திய மலைக்கு வடக்கே நிலவிய கடல் முற்றாக மறைந்துவிடவில்லை. அதன் ஒரு சிறு பாகம் வடஇந்தியாவைத் தென்இந்தியா வினின்றும் பிரித்தது. நிலநூலார் அதன் ஒரு பகுதிக்குக் கிழக்குக் கடலென்றும், மற்றைப் பகுதிக்கு இராசப்பட்டினக் கடலென்றும் பெயரிட்டனர்.

குமரி நாட்டின் வடக்கே குமரிஆறும் தெற்கே பஃறுளி ஆறும் ஓடிக்கொண்டிருந்தன. இந்த இரு ஆறு களையும் இவற்றின் இடையே கிடந்த நாற்பத்தொன்பது நாடுகளையும் கடல் கொண்டமையை இலக்கியங்கள் விளக்கி நிற்கின்றன.

முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள்,

வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் படுமலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையும் இமயமும் கொண்டு
தென்திசை ஆண்ட தென்னவன் வாழி

—சிலம் கா. 11 வரி. 18-22

என்று பாண்டியன் புகழைப்பாடி வாழ்த்தியுள்ளார். இதனால் பாண்டிய நாட்டில் ஓடிய பஃறுளி ஆற்றோடு பல மலைப் பகுதிகளும் குமரி மலையும் கொடிய கடலால் கொள்ளப்பட்டு அழிந்தது தெளிவாக விளங்குகின்றது.

கடல் கொண்ட குமரி நாட்டில் ஓடிய பஃறுளி ஆற்றைப் புறநானூற்றுச் செய்யுள்,

எங்கோ வாழிய குடுமி தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீந்த
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே

—புறம். 9

என்று குறிப்பிடுகின்றது. இப் பாட்டால் தொல்பழங்காலத்தில் பாண்டிய நாட்டில் ஓடியது பஃறுளி ஆறு என்பதும், அதனைத் தோற்றுவித்த நெடியோன் என்பான் பாண்டிய வேந்தருள் மிகத் தொன்மையானவன் என்பதும் தெளிவாகின்றது.

மலிதிரை ஊர்ந்து மண்கடல் வெளவலின்
மெலிவின்று மேற்சென்று மேவார் நாடிடம்படப்
புலியொடு வில்நீக்கிப் புகழ்பொறித்த கிளர்கெண்டை
வலியினான் வணக்கிய வாடாசீர்த் தென்னவன்

—கலி. 104

என்று தமிழ்ச் சான்றோர் ஒருவர் பாண்டியனின் அருஞ்செயல்களைக் குறிக்கின்றார். பாண்டியனுடைய வீரத்தின் சிறப்பினைக் கூறும் புலவர் கடல் அலைகள் மிகப் பலவாகப் பொங்கி எழுந்து நாட்டினை வெளவியதைக் குறிப்பிட்டுள்ளார்.

இறையனார் களவியல் உரையும் (பக்கம் 6) கடல்கோள் பற்றிய குறிப்பினை நல்குகின்றது. தொல்காப்பியத்திற்கு முதன்முதலில் உரை எழுதிய இளம்பூரணரும், சிலப்பதிகாரத்திற்கு நல்லதொரு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் அவர்களும் முச்சங்க வரலாற்றோடு தமிழகத்தில் தென்பகுதி கடல் வாய்ப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளனர். பனம்பாரனார் பாடிய குறுந்தொகைப் பாட்டில்,

ஆர்கலி மிதித்த நீர்திகழ் சிலம்பிற்
கூரசைந் தனையாய் நடுங்கல் கண்டே

—குறுந். 50

என வருவதன்கண், கடல் எழுந்து மிதித்தலால் நீரில் விளங்குகின்ற மலை அசைந்து நடுங்குதல் கண்டு எனக் கூறுவது, இவர் தாம் கண்கூடாகக் கண்ட பெருங்கடல்கோள் நிகழ்ச்சியை உவமைமுகத்தான் கூறினார் என்பது இயைபுடையதாகும். கடல்கோளுக்கு உட்பட்ட அக் குமரி நாடு (அ) லெமூரியா மனித நாகரிகத்தின் தொட்டில் (Craddle of human Race) எனச் சிறப்பிக்கப்படுகிறது.

இந்து சமுத்திரத்தினூடே விளங்கிய பெரிய கண்டத்தில் பல பகுதிகள் கடல்வாய்ப்படுதலும், அங்கு வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் பல திசைகளை நாடிச் செல்வாராயினர், என அறிஞர் கருதுவர். திரு. ஜான் மார்ஷல் என்பவர் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்து வெளி நாகரிகத்தினைத் திராவிட நாகரிகத்திற்கு இணை யானது என்று கூறுகின்றார். ஆரியர் வருவதற்குமுன் இந்தியா முழுதும் இருந்த பழைய மக்கள் பேசிய மொழியை யும் தமிழ் என்று கூறுவதைவிட வேறு பெயரால் வழங்குவது தகும் என்பது அறிஞர் கருத்து. மொகஞ்சதரோ நாகரிகத் தில் மக்கள் பேசிய அந்தப் பழைய மொழியைத் திராவிட மொழி என்று கூறாமல் பழந்திராவிட மொழி என்று கூறுவது பொருந்துவதாகக் கருதுகிறார் அறிஞர் ஹீராஸ்[1].

வடநூலார் தமிழரைத் திராவிடர் என்றும், ரோமர் தமிழகத்தை தமிரிலி என்றும் சீனர் தமிழகத்தைத் தெஹிமோலோ என்றும் குறிப்பிட்டனர்.

சங்க இலக்கியங்களில் தமிழகத்தின் எல்லை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

> வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
> தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
> குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்
> குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்
>
> —புறம். 6:1-4

---

1. Being Dravidians, the inhabitants of Mohenjedaro and Northern India naturally spoke of a Dravidian language; yet this language was not of the Dravidian language now spoken in India, but probably their parent which may be called Proto—Dravidian.

—REV. H. HERAS

Light on the Mohenjedaro Riddle, p.14,

தென்குமரி வடபெருங்கல்
குணகட கடலா எல்லை

—புறம். 17: வரி 1-2

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து

—தொல். சிறப். பாயிரம்

சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் குமரிக்குத் தெற்கே இருந்த 49 நாடுகளான 1) ஏழ் தெங்க நாடு 2) ஏழ் மதுரை நாடு 3) ஏழ் முன்பாலை நாடு 4) ஏழ் பின்பாலை நாடு 5) ஏழ்குன்ற நாடு 6) ஏழ் குணகாண நாடு 7) ஏழ் குறும்பனை நாடு என்பவற்றைக் குறிக்கின்றார்.

தமிழினத் தொன்மையைச் சுட்டவரும் புறப்பொருள் வெண்பாமாலை,

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றி மூத்தகுடி

எனக் குறிப்பிடுகின்றது.

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரிதல் இல்

என்னும் திருக்குறள் உரையில் பரிமேலழகர், "பழங்குடி தொன்றுதொட்டு வருகின்ற குடி: தொன்றுதொட்டு வருதல் சேர சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வருதல்" எனப் பொருள் கூறினர்.

ஆதிமாலமல நாபி கமலத்தய னாதித்
தயன் மரீசியெனு மண்ணலை யளித்த பரிசும்
காதல் கூர்தரு மரீசி மகனாகி வளருங்
காசிபன் கதிருக்களை யளித்த பரிசும்
அவ்வருக்கண் மகனாகி மனமே திரிபுரந்
தரிய காதலனை யாவினது கன்று நிகரென்

றெவ்வருக்கமும் வியப்பமுறை செய்த பரிசும்
இக்கு வாகுனின் மைந்தனென வந்த பரிசும்

என்னும் கலிங்கத்துப்பரணி மக்கட் படைப்புத் தமிழகத்தில் உற்றதாகவே கூறுகின்றது. இங்குக் கூறப்பட்ட இராச பரம்பரையிலுள்ளோர் தமிழ் மக்களாகவே காணப்படுகின்றனர்.

தமிழர் தென்னிந்தியாவை வென்று குடியேறினார்களோ அன்றி பூர்வமே அங்கு வாழ்ந்து வருகின்றார்களோ என்று அறியக்கூடாத அவ்வளவு பழமை தொட்டு இந்தியாவில் உறைகின்றார்கள் என்றும், அவர்களுடைய உற்பத்தி மதுரை அல்லது தஞ்சாவூருக்குச் சமீபத்தில் இருக்கலாமென்றும் அவர்கள் பிறநாடுகளிலிருந்து இந்தியாவை அடைந்தார்களென்பது குறித்து யாதும் வரலாறு காணப்படவில்லையென்றும் டாக்டர் வெர்கூசன் என்பவர் கூறுவர்.[1]

சலப்பிரளயத்துக்குப் பின் மக்கட் சந்ததி இந்தியாவிலேயே பல்கியது என சர். வால்டர் ரலி என்னும் மேல்நாட்டறிஞர் கூறுகின்றார்[2].

---

1. "The Dravidians settlements in India extend to such Pre-historic times that we cannot even feel sure that we regard them as immigrants or atleast, as either conquerors or colonists on a large scale but rather as aboriginal in the sense in which that term is usally understood"

—Dr. FERGUSSON
Quoted In Tamilian Antiquary No. 1

2. According to Sir Walter Releigh, India was the first planted and peopled country after the flood.

—Dravidian India

தமிழினத்தின் பழமையை ஒல்காப் புகழ்த் தொல்காப்பியம்

.... உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்துபுகழ்
போந்தை வேம்பே ஆர்என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்

எனக் குறிப்பிட்டுச் செல்கின்றது.

பி. தி. சீனிவாச ஐயங்கார் தம் திராவிட இந்தியா என்ற நூலில், இந்தியாவிலே புதிய கற்கால நாகரிகம் 20,000 ஆண்டுகட்குமுன் தொடங்கி எல்லா ஆற்றோரங்களிலும் பரவியது. தமிழில் முதற் பருவத்திலுள்ள சொற்களெல்லாம் ஓரசையாயின. சர். ஜான்மார்ஷல் என்பவர் 'அரப்பா' 'மொகஞ்சதரோ' என்னுமிடங்களில் அகழ்ந்து கண்டு பிடிக்கப்பட்ட ஓவிய எழுத்துக்களைக் குறித்த எழுத்துக் களாக அமைதல் கூடும். இந்தியாவின் புதிய கற்கால நாகரிகம் இந்தியாவினின்றும் கடல் வழியாகச்சென்று சுமேரிய நாகரிகத்துக்கு ஏதுவாக அசீரியாவில் தங்கினது சுமேரியருக் கும் தமிழருக்கும் முகவெட்டு ஒருவகையாகவிருத்தல் தற்செயலாக ஏற்பட்டதன்று என்னும் பகுதி தமிழகத்தின் தொன்மையையும் சிறப்பையும் உணர்த்தி நிற்கிறது.

இவ்வாறாகத் தமிழினத் தொன்மையை, தமிழர்கள் பல்வேறு இடங்களில் சென்று குடியேறியதை அறிஞர்கள் பலரும் தத்தம் நூல்களில் குறித்துச் சென்றுள்ளனர்.

வால்மீகி இயற்றிய இராமாயணம் வடமொழியில் ஆதிகாவியம் என்று புகழ் பெறுவது. அத்தகைய ஆதிகாவி யத்தில் பாண்டிய மன்னனும் அவனது தலைநகரமும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை,

பொன்னிறைந்ததாயும் அழகுடையதாயும், முத்து மயமான மணிகளால் அலங்கரிக்கப் பெற்றதாயும் பாண்டியர்க்குரியதுமாகிய கவாடத்தைப் பார்க்கக் கடவீர்.

—வால்மீகி

என்னும் பகுதியினால் உணரலாம். இத்தகைய ஆதிகாவியத்தில் தமிழ்மொழி வளர்ந்த நகரத்தைப் பற்றிய குறிப்புக் காணப்படுவதால் தமிழகத்தின் தொன்மையை ஒருவாறு உய்த்துணரலாம்.

பாணினிக்கு இந்தியாவின் முழுநிலப்பரப்புத் தெரியாதிருக்க அவருடைய நூலின் உரையாசிரியரான காத்தியாயருக்கு இமயம் முதல் குமரி வரை உள்ள நாடுகள் அனைத்தும் தெரிந்து இருந்தமை வியப்பிற்குரியதாகும். இவர் சோழ பாண்டிய நாடுகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவரது காலம் மௌரியப் பேரரசுக்கு முற்பட்ட நவநந்தரின் ஆட்சிக் காலம் என்று வடமொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இதனால் இவருடைய காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும். இக் காலத்தில்தான் தமிழகத்திற்கும் வட நாட்டிற்கும் நேரடியான தொடர்பு உண்டாகியிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

அலெக்சாண்டர் காலத்தில் இந்தியாவின் நில இயலைப் பற்றிய நிறைந்த அறிவு இருந்ததாகத் தெரிகின்றது. ஸ்டிரெபோ என்ற கிரேக்க வரலாற்று ஆசிரியர் அலெக்சாண்டரின் படையெடுப்பின்போது இந்திய நாட்டினை முழுவதும் அறிந்தவர்களைக்கொண்டு இந்திய நாட்டின் முழு வருணனையை எழுதச் செய்தான் என்று கருதப்படுகிறது.

மௌரியப் பேரரசர் காலத்தில் இந்திய நாட்டின் நில இயல் அறிவு ஆழ்ந்தும், பரந்தும் இருந்தது என்பதை நாம் இந்திய வரலாற்றின் மூலம் அறிகின்றோம். சந்திரகுப்த மௌரியரின் அவைக்களத்திருந்த கிரேக்கத் தூதரான மெகஸ்தனிஸ் தமது 'இந்திகா' என்ற நூலில் பாண்டிய நாட்டின் செல்வத்தையும், பாண்டியனது படை ஆற்றலையும், அவனது அரச மாதேவியின் சிறப்பையும், அந் நாட்டிற்கே உரியதும் சிறப்புடன் நிகழ்ந்ததுமான முத்துக் கொழிக்கும் தொழிலையும் பற்றி விளக்கம் தந்துள்ளார்.

சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தில் தென்னாட்டைப் பற்றி வடநாட்டு மக்கள் நன்கறிந்தவர் என்பதற்குரிய சான்றுகள் சில உள.

பதஞ்சலியின் காலத்தில் (கி.மு. 150) தென்னாட்டைப் பற்றிய அறிவு மிகவும் வளர்ச்சியுற்று இருந்ததாகத் தெரிகின்றது. தமது மாபாடியத்தில் மகிசுமதி, வைதருப்பம், காஞ்சிபுரம், கேரளம் ஆகிய நாடுகளில் காணப்படும் மொழி இயல் வழக்கைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தென்னாட்டில் சாரசி என்ற பெரிய ஏரிகளைக் குறிப்பிடப் பயன்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். இதனால் தென்னாட்டு மொழி வழக்காற்றினை அறிந்திருந்தார் என்று தெரிகிறது.

வராகமிகிரர் இந்தியத் துணைக்கண்டத்தை ஒன்பது நாடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலும் பெறக்கூடிய பொருள்களைப் பற்றிய விளக்கம் தந்துள்ளார். அவற்றுள் காஞ்சி, சேர, சோழ, கொங்கண, பாண்டிய நாடுகள் சிறப்பிடம் பெற்றுள்ளன.

அசோகப் பேரரசனின் சேர கற்சாசனங்களில் இரண்டாவது கற்சாசனமும், பதின்மூன்றாவது கற்சாசனமும் தென்னிந்தியாவோடு இலங்கையையும் சேர்த்துக் குறிக்கின்றன. இவை மட்டுமன்றித் தமிழர்கள் அயல்நாடுகளுடன் கொண்ட கலாசாரத் தொடர்புகளும் தமிழகத்தின் தொன்மையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. காலினும் கலத்தினும் சென்று தமிழர்கள் வாணிகம் செய்திருக்கின்றனர்.

எகிப்தோடு உள்ள வாணிகம் மிகப் பழமையானது என்பதற்குச் சான்றுகள் பல உள்ளன. எகிப்து மன்னர்கள் மெல்லிய துணி வகைகளையும் கருங் கட்டைகளையும் வரவழைத்ததாகக் கூறப்படுகின்றது. கி.மு. 15 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் இலவங்கம், சேரநாடாகிய கேரளத்திலிருந்து சென்றதாக இருக்கலாம். கி.மு. 3000த்தில் தென்னாட்டு வணிகரே தம்

சரக்குகளை அனுப்பினர். அராபியர் செங்கடல் வாணிபத்தைத் தம் கைக்குள் கொண்டிருந்தனர்.

பாலத்தீனத்தை 8ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்த சாலமனுக்கு மூன்று ஆண்டுகட்கு ஒருமுறை பல அரிய பொருட்கள் பரிசுகளாகக் கப்பலில் அனுப்பப்பட்டு வந்தன. ஹீப்ரு மொழியில் உள்ள 'துக்கிம்' 'ஆம்மக்' போன்றவை முறையே தமிழ்ச் சொற்களாய 'தோகை', 'அகில்' என்பவற்றிலிருந்து தோன்றியிருத்தல் திண்ணம்.

சுமேரியத் தலைநகரான மூக்கியரிலிருந்து சந்திரன் கோவிலும் நெபுகத் நெஸார் மன்னனின் அரண்மனையிலும் மலபாரிலிருந்து சென்ற தேக்குக் கட்டைகள் காணப்படுகின்றன. இவை கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து வாணிகம் நடந்திருக்கவேண்டும் என்பதை விளக்குகின்றன.

பாபிலோனியாவில் ஆடைகளைக் குறிக்கும் பட்டியல் ஒன்றில் 'சிந்து' என்ற பெயர் காணப்படுகின்றது. வெண் துகிலைக் குறிக்கும் இச் சொல்லானது கன்னடத்திலும், துளுவிலும் வழங்கி வரும் சிந்தி என்ற பழைய திராவிடச் சொல்லிலிருந்து தோன்றியனவாய் இருக்கலாம். இது தென்னிந்தியாவோடு பாபிலோனியா நடத்திய வாணிகத்தைக் குறிக்கின்றது.

ஐரோப்பாவோடு தென்னிந்தியா ஏறத்தாழ கி.மு. 500 முதல் வாணிகம் தொடங்கியது உரோம வல்லரசர் அகஸ்டெஸின் காலத்தைச் சேர்ந்த ஸ்டிரபோஸின் விவரணம் சுமார் கி.பி. 60இல் தோன்றிய பெரிபுளூஸ் என்னும் நூல், பிளினியின் இயற்கை வரலாறு, தாலமியின் பூகோள விவரணம் (கி.பி. 150) என்னும் நூல்கள் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் நடைபெற்ற ஐரோப்பிய - தென்னிந்திய வாணிகத்தைப் பற்றி அறிவிக்கின்றன.

கி.மு. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து நடைபெற்ற உரோம - யுவன நாகரிகம்

கி. மு. முதலாம் நூற்றாண்டில் உச்சநிலையை அடைந்தது. வாணிக வளர்ச்சி கருதி கி. மு. 20, கி.பி. 127, கி. பி. 138, கி. பி. 336 ஆகிய ஆண்டுகளிலும் உரோமப் பேரரசி பாண்டிய அரசில் தூதர்களை அனுப்பியதாக அறிகிறோம். கி.மு. 20இல் ஒரு தூது மெய்க்காப்பாளர் படைக்கு வீரர் களைக் தருவிப்பதற்காக யவனப் படைத்தலைவரிடம் அனுப்பப்பட்டது.

கிரேக்க - உரோமருடன் தமிழகம் நடத்திய வாணிகம் பற்றிய பலவிரிவான குறிப்புக்களைத் தாலமி என்ற எகிப்திய நிலநூல் ஆசிரியரும் பிளினி என்ற உரோம வரலாற்று ஆசிரியரும் பிறரும் தந்துள்ளனர்[1].

யவனர் தமிழகத்தோடு மிகச் சிறந்த முறையில் வணிகம் செய்திருக்கின்றனர். சங்க இலக்கியங்களில் யவனர் பற்றிய குறிப்பு பத்து இடங்களில் வருகின்றது.

கிரேக்க - உரோமருடன் தமிழகம் நடத்திய வாணிகம் பற்றிக் பிளினி குறிப்பிடுவார்[2].

So that pliny complained In 70 A. D that India drained gold to the value of nearly half a millian pounds a year giving back her own wears, which are among as at Fully a hundred times of their first cost.

—SRINIVASA IYANGAR
History of Tamils, p.305.

The extravagent Importation of luxuries from the west without adequate production of commodities to offer in exchange was the main cause, of the successive depreciation and degradation of the Roman Currency leading finally to its total repudiation.

—SRINIVASA IYANGAR
History of the Tamils.

உரோம வாணிகத்தின் நிலை தளர்ந்ததைப் பி. டி. சீனிவாச ஐயங்கார் தம் தமிழ் வரலாற்றில் கூறியுள்ளார்.

தமிழர் வணிகம் செய்த தன்மையைப் பட்டினப் பாலை,

நீரில் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கலி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெறிய ஈண்டி
வனந்தலை மறுகிய நனந்தலை மறுகு

என்று குறிப்பிடுகின்றது.

மேற்கூறியவற்றால் தமிழ்நாட்டின் தொன்மையும், அக்காலத்திலேயே அது சிறந்து விளங்கின வரலாறும் தென்படுகின்றன.

2. தமிழ் இனத்தின் தொன்மையும் சிறப்பும்

திராவிட இனத்தின் தோற்றத்தைப் பற்றிப் பலவகைப் பட்ட கருத்துக்களை அறிஞர் பெருமக்கள் தெரிவித்துள்ளனர். அவற்றை நாம் இரண்டு வகையாகப் பகுத்துக் காட்டலாம். அவர்கள் வெளிநாட்டிலிருந்து வந்தவர்களே என்பது முதல் கருத்து. இந் நாட்டில் தோன்றி வாழும் பழங்குடி மக்களே திராவிடர் என்பது இரண்டாவது கருத்து. இக் கருத்துக்களை இவண் காண்குவம்.

தமிழர் ஒரு தனி இனத்தவர். பிற இனத்தவருள் ஓர் உட்பிரிவினர் அல்லர் என்பது பல்லாண்டுகளாகத் தொடர்ந்து செய்த ஆராய்ச்சியின் முடிபாகும். தஸ்யூக்கள் என்றும், கீழ்மக்கள் என்றும், சுமேரியர் இனத்தைச் சார்ந்தவர் என்றும், பிராகுவி மொழி பேசும் இனத்தைச் சேர்ந்தவர் என்றும் தமிழர் வழங்கப் பெற்ற காலம் மலையேறிவிட்டது. டாக்டர் ஜி யு. போப், டாக்டர் கால்டுவெல், ரேகோசின், சர். ஜான்மார்ஷல், டாக்டர் எச். ஆர். ஹாஸ் போன்ற வெள்ளையர்கள் காட்டிய வழிபற்றிச் சென்று ஆராய்ந்த ஆராய்ச்சியின் முடிபே தமிழர் ஒரு தனி இனத்தவர் என்றும் தனிப்பட்ட பழக்கவழக்கங்களும் கொள்கைகளும் உடையவர் என்றும் துணிந்து கூறுதற்கு இடமளித்தது என்பர் டாக்டர் மொ. அ. துரை அரங்கனார்.

ஆரியர் இவ்விந்திய நாட்டின் வடமேற்கே புகுந்து குடியேறுவதற்கு முன்பே இவ்விந்திய நாடு முழுவதும் பரவியிருந்தவர்கள் தமிழ் மக்களும் அவர்க்கு இனமான திராவிட

மக்களுமே என்பதை ரைஸ்லி அவர்களின் கூற்று உணர்த்து கின்றது.

மங்கோலியரா?

தமிழருடைய வரலாற்றை முதன்முதல் முறையாக ஆங்கிலத்தில் எழுதிய தமிழறிஞர் திரு. வி. கனகசபைப் பிள்ளை. தமிழர் திபெத்திலிருந்து தென்னிந்தியாவிற்கு வந்தேறிய மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

தென்னாட்டின் பழங்குடி மக்களான வில்லவர் மீனவர் முதலானவர்களை நடு ஆசியாவிலிருந்து வந்த நாகர்கள் என்னும் கூட்டத்தார் வென்று அவர்களைக் காடுகளுக்கும் மலைகளுக்கும் விரட்டினர். அதன் பிறகு திபெத்திலிருந்து வந்த மங்கோலிய இனத்தைச் சேர்ந்த தமிழர் நாகர்களை வென்று அடக்கினர் என்பது அவருடைய நம்பிக்கையாகும். தமிழர் நான்கு பிரிவாகத் தென்னாட்டில் நுழைந்தனராம். 'மாறர்' என்ற கூட்டத்தினர் முதன்முதல் தமிழகத்திற்கு வந்து பாண்டிய நாட்டில் தங்கினர் என்றும், அதன் பிறகு வந்த 'திரையக' என்பார் சோழர் வாழ வசதி செய்து கொண்டனர் என்றும், மூன்றாவதாக வந்த 'வானவர்' என்ற குழுவினர் சேர நாட்டைத் தமதாக்கிக் கொண்டார் என்றும் இம்மூவருக்கும் பின்னர் வந்த 'கோசர்' என்னும் கூட்டத் தார் கொங்கு நாட்டைத் தங்களாட்சிக்குட் படுத்திக் கொண்டனர் என்றும் திரு. வி. கனகசபைப் பிள்ளை விளக்கியுள்ளார்.

திராவிடருடைய உடற்கூறு மங்கோலியருடைய உடற் கூற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டுள்ளமை இங்குச் சிந்தித்தற்குரியது. இவை அல்லாமல் சமூகப் பழக்க வழக்கங்களும் பண்பாட்டு நெறிகளும் இவ்விரு மக்களினத் தவரிடையே தொடர்பற்றுக் காணப்படுகின்றன. தமிழர் மங்கோலிய இனத்தைச் சார்ந்தவர் என்னும் கருத்து மக்களின் இனமரபு வரலாற்றிற்கு முரண்படுகிறது.

தமிழகத்தின் தொல்குடி மக்களா?

வரலாற்றாசிரியர்கள் சிலர் திராவிடர் அயல்நாட்டிலிருந்து வந்தவர் அல்லர். இந் நாட்டு மண்ணில் தோன்றிய முதல் பழங்குடி மக்களின் வழித் தோன்றல்களே என்பதைச் சான்றுகள் பல தந்து நிறுவியுள்ளனர்.

பி.தி. சீனிவாச ஐயங்கார் மனிதன் தென்னிந்தியாவின் நடுப்பகுதியில்தான் தோன்றியிருக்கவேண்டும் என்று அறுதியிட்டுக் கூறியுள்ளார். புதுக்கற்கால மக்கள் திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழி ஒன்றையே (பெரும்பாலும் தமிழை) பேசியிருக்க வேண்டும் என்று மொழிந்துள்ளார்.

திரு. சு. வே. வெங்கடேஸ்வரன் என்னும் அறிஞர் திராவிடர் இந்தியாவிற்குள் வெளிநாட்டிலிருந்து வந்து நுழைந்தவர்கள் அல்லர் என்றும் திராவிட நாகரிகப் பண்பாடு இந் நாட்டு மண்ணிலேயே முளைத்து எழுந்து தழைத்து வளர்ந்து பல விழுதுகள் விட்டு முதிர்ந்த பேராலமரம் என்பதைக் கடந்த ஊழிகளில் இந்தியப் பண்பாடு என்னும் நூலில் விளக்கியுள்ளார்.

இவ்விருவர் கூற்றினையும் ஏற்றுக்கொண்ட பேராசிரியர் இராமச்சந்திர தீட்சிதர், குமரிக் கண்டமே திராவிடரின் மூலத் தாயகம் என்றும், திராவிடப் பண்புகள் இந்திய நாகரிகத்தில் மட்டும் காணப்படுவது அல்ல என்றும், சிறந்த நாகரிகம் உற்றிருந்த கிரீக், சுமேரியா, பாபிலோனியா, பொலிசீனியா ஆகிய நாடுகளிலும், மற்றும் பண்டை உலக நாகரிகங்கள் பலவற்றிலும் பெரும்பாலும் திராவிடப் பண்பாட்டின் கூறுகளைக் காணலாம் எனவும் பகன்றுள்ளார்.

எகிப்திலிருந்து வந்தவர்

'எலியட் ஸ்மித்' என்பார் திராவிடரை எகிப்தினின்றும் இந்தியாவிற்குள் வந்தவர்கள் என்று கூறிப்போந்தார். இக் கருத்தினை நிலைநாட்ட கார்னீலியசு அரும்பாடுகின்றார்.

திராவிடர்கள் நடு ஆசியாவிலிருந்து வந்த சித்தியர்கள் என்று கால்டுவெல் கருதினார்.

மற்றும் பலர் திராவிடர் மேற்காசியப் பகுதியில் தோன்றியவர் என்னும் கருத்தினை வலியுறுத்துகின்றனர்.

பலுசிஸ்தானத்தில் வழங்கும் 'பிராகுயி' மொழிக்கும் திராவிட மொழிக்கும் உள்ள ஒற்றுமையைக் காரணம் காட்டித் திராவிடர்கள் பலுசிஸ்தானத்தின் வழியாக இந்தியாவில் நுழைந்தனர் எனவும் நம்புகின்றனர்.

டாக்டர் ஆல் என்ற அறிஞர் சுமேரியருக்கும் திராவிடருக்கும் உள்ள உடற்கூறு ஒற்றுமையைக் கொண்டு சுமேரியர் என்பார் திராவிட இனத்தைச் சார்ந்தவர் என்றும் அவர்கள் இந்தியாவிலிருந்து பாரசிகத்தின் வழியாக டைக்ரீஸ், யூப்ரடீஸ் ஆறுகள் பாயும் சமவெளிக்குச் சென்று குடியேறியவர் என்றும் குறிப்பர். இதனைச் சிலர் மறுப்பர்.

நடுநிலக்கடல் இனத்தினர்

இந்தியாவிற்கும் பாபிலோனியாவிற்கும் இடையே பண்டைக்காலத்தில் நிகழ்ந்த வணிகத்தைப்பற்றி ஆய்வு நடத்திய கென்னடி என்பார் திராவிடருக்கும் நடுநிலக்கடல் இனத்து மக்களுக்கும் இடையே காணப்படும் ஒப்புமைப் பண்புகளையும் தொடர்பினையும் சுட்டிக்காட்டித் திராவிடர்கள் நடுநிலக்கடல் பகுதியிலிருந்து இந்தியாவிற்கு வந்திருக்கவேண்டும் என்கின்றார்.

எய்மெண்டார்ஃப் கருத்து

தென்னிந்தியாவில் இரும்புக்கால நாகரிகத்தைத் தமிழகத்தில் வெளிநாட்டினின்று கொணர்ந்து புகுத்தியவர்கள் திராவிடர்களே. சற்றேறக் குறைய கி.மு. ஐந்தாம் நூற்றாண்டளவில் நடு ஈரானிலிருந்து திராவிடர்கள் தென்னிந்தியாவிற்கு இரும்புக்கால நாகரிகத்தைக் கொண்டு வந்து புகுத்தியிருத்தல் வேண்டும். அண்மைக் காலத்தில்

மைசூர் மாநிலத்தில் உள்ள பிரமகிரி என்னும் இடத்தில் செய்யப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியின் விளைவாகத் தென்இந்தியாவில் புதுக்கற்காலத்திலிருந்து இயல்பாகவே இரும்புக்காலம் தோன்றவில்லை; புகுத்தப்பட்டது, என்பதைத் தெரிவிக்கின்றார். திராவிடர்கள் ஈரானிலிருந்து பலுசிஸ்தானத்தின மூலம் நிலவழியாகவே இந்தியாவிற்குள் நுழைந்து இருக்கவேண்டும். மைசூர் மேட்டு நிலத்தை அடையும்வரை அவர்கள் மேலைக் கடற்கரையோரமாகவே தென்னாட்டிற்குள் சென்றிருக்க வேண்டும்'' என்று எய்மண்டார்ஃப் விளக்கம் தருகின்றார். இக் கொள்கை கி.மு. 5ஆம் நூற்றாண்டளவில் திராவிடர் தென்னிந்தியாவில் குடியேறினர் என்னும் கருத்தை வலியுறுத்துவதாகும்.

பிரமகிரியில் கிடைத்துள்ள பழம்பொருட் சின்னங்களைச் சர்மார்ட்டிமர் விளர் என்னும் இந்தியத் தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் டைரக்டர் ஜெனரல் நேரில் ஆராய்ந்து பார்த்து அவையாவும் கி.மு. 200இல் தென் இந்திய மக்கள் பயன்படுத்தியவை என மொழிந்துள்ளார். இவண் இருவரும் கருத்து வேறுபாடு அடைகின்றனர். இக் கருத்து வரலாற்று வழுவுடையதாகும்.

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் தோன்றுவதற்குமுன் பல இலக்கியங்கள் தோன்றி முதிர்ந்த நிலையில் இருந்திருக்கவேண்டும். இலக்கணம் எழுதப்படுவது முதிர்ந்த நிலையில் உள்ள இலக்கியங்கட்கே அன்றி அப்பொழுது தோன்றிய இளம் இலக்கியங்கட்கு அன்று. தொல்காப்பியர் காலம் பாணினிக்கு முற்பட்டது. பாணினியின் காலம் கி.மு. 4ஆம் நூற்றாண்டு. திராவிடர் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் தென்னிந்தியாவிற்கு வந்து இருந்தால், "தமிழ் இலக்கியம்'' எக்காலத்தில் தோன்றியது; எந் நாட்டில் தோன்றிற்று'' என்ற ஐயம் எழுகிறது.

இவ்வாறே கி.மு. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகன் தன் கல்வெட்டுக்களில் சேர, சோழ, பாண்டியர்

களைக் குறிக்கின்றான். இவற்றையெல்லாம் நோக்கும்போது கி.மு.5ஆம் நூற்றாண்டளவில் திராவிடர்கள் இந்தியாவிற்குள் புகுந்தது உண்மையன்று என்ற முடிவிற்கு வருதலே சாலச் சிறந்தது.

சென்னைப் பல்கலைக் கழகத் தொல்பொருள் ஆராய்ச்சித் துறைத் தலைவரான பேராசிரியர் டாக்டர் டி.வி. மகாலிங்கம் என்பவர் "தென்னிந்தியாவில் தொல் பொருள் ஆராய்ச்சி" என்னும் கட்டுரையில் புயூரார் எய்மண்டார்ப் கருத்தினை முடிந்த முடிவாகக் கருதாது தொல்பொருள் ஆராய்ச்சி தரும் ஒளியைக்கொண்டுதான் இருள்சூழ்ந்த தமிழரின் தாயகத்தைக் கண்டறியவேண்டும். அதுவரையில் தமிழரின் தாயகம் பண்டையக் காலத்திய தமிழகமே என்று கொள்வது பொருத்தமுடையது என்பார்.

இவ்வாறு கருதுதற்குரிய காரணங்கள்:

1. பழந்தமிழ் இலக்கியங்கள் என்று போற்றப்படும் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு, இரட்டைக் காப்பியங்கள் ஆகிய நூல்களுள் தமிழர் அயல் நாட்டிலிருந்து கடல் வழியாகவோ, நில வழியாகவோ தமிழகத்தில் வந்து குடியேறியவர் என்பதற்குரிய சான்றுகள் இல்லை. அதற்கு மாறாகத் தமிழகத்திற்குத் தெற்கே பரந்து இருந்த நிலைப்பரப்பினைக் கடல் கொண்டது என்றும், அவ்வாறு கடல் கொண்ட பொழுது எல்லாம் அங்குக் குடியிருந்த பண்டைத் தமிழர் வடக்கு நோக்கிக் குடியேறிய வண்ணம் வாழ்ந்தனர் என்றும் சங்க இலக்கியங்கள் யாவும் குறிப்பிடுகின்றன.

2. பழந்தமிழ் இலக்கியங்களுள் குளிர் நாட்டுக்குரிய செடி, கொடிகள், மரங்கள், விலங்குகள், வேறுபல உயிரினங்கள் ஆடைஅணிகள், உணவுப் பொருள்கள் பற்றிய குறிப்புக்களைக் காண முடியவில்லை. தமிழகத்தில் குடியேறுவதற்கு முன்பு கோதுமை பார்லி தமிழரின்

உணவுப் பொருட்களாக இருந்திருந்தால் குடிபுகுந்த நாட்டிலும் அவற்றை ஓரளவிற்குப் பயன்படுத்தியிருத்தல் வேண்டும். அவற்றைப் பற்றிய குறிப்பு மேற்கண்ட நூல்களில் யாண்டும் காணோம். தமிழருடைய உணவுப் பொருளாகப் பண்டைக் காலத்தில் செந்நெல், வரகு, கேழ்வரகு, சாமை முதலியன இருந்தன என்பதைப் பழந்தமிழ் இலக்கியங்களால் அறிகிறோம்.

ஒரு மொழியில் உள்ள சொற்களில் மிகப்பழமையானவை - எளிதில் மாறாதவை - வினைச்சொற்கள் -திசைப் பெயர்கள் முதலியவை. அவற்றுள் திசை பற்றிய பெயர் பழமை வாய்ந்தனவாக இருக்கவே ஞாயிறு தோன்றும் திசையை முதலாகக் கொண்டு பலதிசைக்கும் அடையாளங் குறித்துப் பெயர்களை வழங்கினர். இவ்வாறு திசைகட்குப் பெயரிடுதல் நாகரிகத்தின் அடையாளம் என்பர். தமிழ்மொழியில் திசைக்குரிய பெயராகக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு வழங்குவதோடு அவ்வத் திசைகளில் இருந்து வீசும் காற்று ஒவ்வொன்றிற்கும் திசையின் அடிப்படையில் பெயரிட்டு வழங்கினர் பண்டைத் தமிழர். கீழ்க்காற்றைக் கொண்டல் என்றும், மேல்காற்றைத் கோடை என்றும், வடக்கிலிருந்து வரும் காற்றை வாடை என்றும், தெற்கிலிருந்து வரும் காற்றைத் தென்றல் என்றும் காரணப் பெயரால் குறிப்பிட்டனர். இவ் வழக்கினை.

கொண்டலொடு புகுந்து —சிலப். 14, கா. வரி 110

கோடையொடு புகுந்து கூடல் ஆண்ட வேனில் வேந்தன்
—சிலப், 14, கா. வரி 123—124

கார் அரசாளன் வாடையொடு வருஉம்
—சிலப். 14. கா. வரி 39

தென்னவன் பொதியம் தென்றலொடு புகுந்து
—சிலப். 14. கா. வரி 115

என்று இளங்கோவடிகள் கூறியுள்ளமையால் அறியலாம்.

ஹீராஸ் பாதிரியார் குமரிக்கண்டத்தில் தோன்றிய மக்கள் பலவகை மக்களாக வாழ நேரிட்டது என்பதைக் குறிக்கின்றார்[1].

லெமூரியா என்று கூறப்படும் அந் நிலப்பரப்பே குமரிக் கண்டம் என்று தமிழிலக்கியத்தால் அறியப்படும் பகுதியாகும். அங்கே குமரிமலை என்ற பெருமலை இருந்தது என்றும், பஃறுளியாறு என்னும் ஆறு ஓடியது என்றும், பழந்தமிழ்ப் பாட்டுகள் அறிவிக்கின்றன. அந்த மலையும் ஆறும் இருந்த பழங்காலம் இமயமலையும் கங்கையும் தோன்றாமல் இருந்த காலமாகும். அத்தகைய குமரிக்கண்டத்தில் முதன் முதலில் தமிழ்மக்கள் தோன்றினர் என்றும், அவர்கள் பேசிய மொழியே மூலத் திராவிட மொழி என்றும் ஆராய்ச்சியாளர் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர். குமரிக் கண்டத்தில் அரும்பிய நாகரிகமே மலர்ந்தது என்றும், மொகஞ்சதரோவில் வளர்ந்த பழந்தமிழர் நாகரிகமே நடுநிலக்கடலை அடுத்த பகுதிகளில் எகிப்து நாகரிகம், கிரேக்க நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், பொனிசீய நாகரிகம் முதலியன வளரக் காரணமாக இருந்தன என்றும் கருத இடமுள்ளமை ஆராய்ச்சியாளர்கள் நினைவு கூரத்தக்கனவாகும்.

---

1. We are therefore forced to acknowledge that the Dravidians of India, after a long period of development in this country, travelled westwords of settling success - fully in the Various lands' they found this way from Mesapatomia up to the British Isles, spread their race afterwards named Mediterranean owing to the place where tney were known anthropologically - through the west and made their civilization flourish in two conti- neous being thus organations of the modern world Civilization.

—REV. St. HERAS
Studies in Proto-Indo Mediteranean Culture, P. 21.

திராவிடர் பண்பாடு

ஆரியர் வருகைக்கு முன்பே திராவிடர் நாகரிகத்தில் சிறந்து விளங்கினர். திராவிடருடைய பண்பாட்டை டாக்டர் கால்டுவெல் சுருக்கமாகவும் தெளிவாகவும் நூறு ஆண்டுகட்கு முன்னரே வரைந்துள்ளார்.

திராவிடர்கள் வாழ்க்கை முறை செம்மைப்பட்ட திருந்திய ஒன்றாக அமைந்திருக்கிறது. அரசியல் வாழ்வும், சமய வாழ்வும், இவர்களிடத்தில் சிறந்த முறையில் அமைந் திருக்கின்றது. இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் முழுநிறைவுடையதாக்கிப் பொலியச் செய்தவர்கள் திராவிடர்களே யாவர். இன்றைய இந்தியப் பண்பாட்டில் நூற்றுக்கு எழுபத்தைந்து விழுக்காடு ஆரியர் ஆரியர் அல்லாதாரின் பண்புகளே சிறப்புற்று விளங்குகின்றன என்பது டாக்டர் எஸ்.கே. சட்டர்ஜியின் கருத்தாகும். இவ் வெழுபத்தைந்து விழுக்காட்டில் அறுபத்தைந்து விழுக் காடு திராவிடருடைய பண்பாட்டுக் கூறுகளாக உள்ளன என்று கூறினால் அது மிகையாகாது.

மேற்கூறியவற்றால் தமிழ் இன மரபின் தொன்மையை யும் சிறப்பையையும் நன்கு தெளியலாம்.

3. தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்பும்

உலகில் பல மொழிகள் தோன்றி வழங்கி மறைந்து ஒழிந்தன. ஒருசில மொழிகள் மட்டும் கால வெள்ளத்தில் அழியாமல் நிலைத்து நிற்கின்றன. அவ்வாறு நிலைத்துள்ள மொழிகளிலும் சில பேச்சு வழக்கு இழந்து இலக்கிய மொழியாக மட்டுமே உள்ளன. அவற்றின் இடத்தில் வேறுசில பல புதிய மொழிகள் தோன்றி வாழ்ந்து வருகின்றன. இவ்வாறு தோன்றி வளர்ந்து மாயும் மொழிகளுக்கு இடையே மிகப் பழங்காலத்திலேயே தோன்றி செல்வாக்குடன் வளர்ந்து இன்றளவும் வாழ்ந்து விளங்குவன தமிழ் சீனம் முதலிய மொழிகளே. இவற்றுள்ளும் பழமைக்கும் பழைமையாய் இலக்கிய வளம் உடையதாய் நிற்பதோடு, புதுமைக்கும் புதுமையாய்க் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது தமிழ் மொழியாகும். ஆதலின் தமிழ்மொழி பெருமைமிக்க பழைய வரலாறு உடையதாகும்[1].

திராவிட மொழிகளுள் மிகத் தொன்மையானதாகக் கருதப்படுவது தமிழ்.

---

1. In the most ancient layers of the Tamil Language can be discovered not only ample trace of Neelithic Culture but also the birth of the iron age culture which succee-ded in

—V.R.R. DIKSHITAR, Pre-historic South India, P.179.

நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்தான் —கம்பர்

என்று கம்பர் தமிழைப் பற்றிக் கூறுகின்றார். பாரதியும்,

ஆதிசிவன் பெற்றான்
அகத்தியன் எனை வளர்த்தான்

என்று தமிழ்த்தாய் கூற்றாகக் கூறுகின்றார். இவ் வண்ணம் தமிழ்மொழியின் பிறப்பினை அநாதியான இறைவனுடன் தொடர்புபடுத்திக் கூறுவது எல்லாம் மொழியின் மிகத் தொன்மையான தன்மையைக் குறிப்பதற்கேயாம். ஆயின் இவ்வாறு வருகின்ற இலக்கியப் பகுதிகளை மட்டுமே வைத்துக்கொண்டு தமிழ் மிகத் தொன்மையானதொரு மொழி என்று நிறுவிவிடல் இயலாது. எனவே பொருளொடு கூடிய, உண்மையொடு, தொடர்புடைய, வரலாற்றோடு பிணைப்புள்ள, பல்லறிஞர்களும் ஏற்றுக்கொள்ளுகின்ற சான்றுகளைக் காணல்வேண்டும்.

1) தமிழ் செந்தமிழ் கொடுந்தமிழ் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. செந்தமிழ் என்பது செம்மைப்பட்ட அல்லது திருத்தமுற்ற தமிழாம். தமிழின் மிகப் பழமையான வடிவங்களை அழியாமற் பாதுகாத்து வருவது. செந்தமிழ் வடமொழிச் சொற்கள் கலப்புற்ற தூய்மையை உடையது. கொடுந்தமிழ் என்பது பேச்சுத் தமிழாம். செந்தமிழினின்றும் கொடுந்தமிழ் பல்லாற்றானும் வேறுபடுகின்றது. பதிற்றுப்பத்து போன்ற சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் நாம் காணும் செந்தமிழ் நடை தற்காலத் தமிழனுக்கு விளங்காத நிலையில் உள்ளது. எடுத்துக்காட்டாகச் சிலப்பதிகாரத்தே இடையிடையே நாம் காணும் உரையையும், இறையனார் அகப்பொருள் உரையையும் குறிப்பிடலாம். செந்தமிழின் தூய்மையைநோக்குழி அது இன்றைய மக்கட்கு விளங்காதகடுமையை நோக்குழி, செந்தமிழ் பேச்சுத் தமிழினின்றும் வேறுபட்ட ஒரு தனிமொழியோ என்று

கூறத் தோன்றுகிறது. தமிழ் என்ற ஒரு மொழியின் இரு நிலைகளா இவை என்று ஐயுறத் தோன்றுகிறது. செந்தமிழிற்கும் பேச்சுத்தமிழிற்கும் உள்ள இத்தகைய வேறுபாடு தமிழின் தொன்மைக்கு ஒரு சான்றாகும். அதாவது செந்தமிழினின்றும் இத்துணை வேறுபாடு கொண்ட பேச்சுத் தமிழ் தோன்றுவதற்கு எத்துணைக் காலம் ஆகியிருத்தல் வேண்டும் என்பது!

2) தமிழின் சொற்பெருக்கத்தைச் சொல்லில் வடிக்க இயலாது. தமிழில் ஒரு பொருட் பன்மொழி உண்டு. மலை என்ற ஒன்றைக் குறிக்க ஓங்கல், வெற்பு, அடுக்கம், பொருப்பு, வரை என்று பல சொற்கள் உள. மேலும் ஒவ்வொரு கருத்தையும் குறிக்கத் தமிழில் பெரும்பாலும் பிறமொழிகளில் காணப்படாத சிறப்புச் சொற்கள் இருப்பதோடு அப் பிறமொழிகள் ஒவ்வொன்றிற்கும் சிறப்பான அதே கருத்துடைய சொற்களும் உள்ளன. 'வீடு' என்பது தமிழுக்கே உரிய சிறப்பான சொல். தெலுங்கில் உள்ள 'இல்லு' என்ற சொல்லுக்கு நிகரான 'இல்' என்ற சொல்லும் கன்னடத்தே 'மனே' என்ற சொல்லுக்கு நிகரான 'மனை' என்ற சொல்லும், வடமொழியில் அமைந்த குடி என்ற சொல்லுக்கு இணையாகக் 'குடி' என்ற சொல்லும் தமிழில் உள்ளன. இவ்வாறு ஒவ்வொரு திராவிட மொழியிலும் உள்ள சொற்களின் பழந்திராவிட வடிவங்களும் வேர்ச்சொற்களும் தமிழில் இருப்பதால் இதனைப் பழைய வேர்ச்சொற்களும் வடிவங்களும் உள்ள ஒரு களஞ்சியம் எனலாம். இச் செய்திகளை நோக்கத் தமிழ்மொழி இலக்கிய மொழியாகத் திருத்த முற்றது மற்ற திராவிட மொழிகள் இலக்கிய மொழிகளாதற்கு நெடுங்காலம் முன்னரே என்பது வெள்ளிடை மலையாகிறது.

3) தமிழ் தொல் இலக்கணச் சொல் வடிவங்கள், இறந்துபட்ட பொருள் நிறை சொற்கள், பழங்கால

விகுதிகள் முதலியன நிறைந்ததொரு பொருட் காட்சிச் சாலை போன்றது. வழக்கற்ற சொற்கள் பொருள் மாறுபாடு அடைந்துவிட்ட சொற்றொடர்கள் தமிழில் பல; எடுத்துக்காட்டாகப் புறநானூற்றில் பிசிராந்தையார் பாடலில் வரும் ஒரு தொடரைக் காணலாம்.

மாண்ட என் மனைவியொடு மக்களும் நிரம்பினர்

இதில் 'மாண்ட' என்ற சொல்லுக்கு மாட்சிமைப்பட்ட என்று பொருள். ஆயின் இன்றோ அச்சொல் இறந்து பட்ட என்ற பொருளைத் தருகின்றது. அது போன்றே நாற்றம், கழகம் போன்ற சொற்களும் பொருள் மாற்றம் அடைந்துள்ளன.

படைக்குப் பிந்தி பந்திக்கு முந்தி

என்ற தொடரும் ஒரு காலத்தே பொருள்மிக்கதாகத் திகழ்ந்தது. இப்போது பொருள்மாறி எள்ளல் பொருளாக வழங்கப்படுகின்றது. அதோளி, இதோளி போன்ற சொற்களும், பல அளவைப் பெயர்களும், இப்போது வழக்கற்றுப் போய்விட்டன. இவ்வாறெல்லாம் சொற்கள் வழக்கற்றுப் போவதற்கும் பொருள் மாறிப் போவதற்கும் ஆண்டுகள் ஆகியிருக்க வேண்டும் என்பதை எண்ணுழித் தமிழின் தொன்மை நன்கு புலனாகின்றது.

4) தமிழின் பழமைக்கும் தூய்மைக்கும் மற்றொரு சான்று. அது பழங்கன்னடம் பழந்தெலுங்கு போன்ற மொழிகளோடும் துதம், கோண்டு, கூ, துளு போன்ற பழங்குடி மக்களின் மொழிகளோடும் ஒற்றுமை யுடையதாய் இலங்குவதாகும். பல இடங்களில் இக் காலக் கன்னடமும் தெலுங்கும் தமிழுக்கு மாறுபட்டிருப்பினும் பழங்கன்னடம் முதலிய பழைய மொழிகள் தமிழை ஒத்திருக்கின்றன. இவ்வாறு மிகப் பழைமை யான மொழிகளோடு தமிழ் ஒத்திருப்பதைக் காணுங் கால் தமிழின் தொன்மையும் சிறப்பும் தெளிவுறும்.

5) தமிழில் உள்ள கொச்சைச் சொற்கள் எல்லாம் தெலுங்கு மலையாளம் போன்ற மொழிகளில் இலக்கண வழக்காகப் போற்றிப் பாதுகாக்கப்படுகின்றன. தமிழில் ஒன்று என்பது கொச்சையாக 'ஒண்ணு' என்று வழங்கப்படுகிறது. அதுவே மலையாளத்தே 'ஒன்நு' என வழங்கப்படுகிறது. தமிழில் இரண்டு என்பது கொச்சையாக 'ரெண்டு' என்று வழங்கப்படுகிறது. தமிழில் உள்ள நான்கு என்பது கொச்சையாக 'நாலு' என வழங்கப்படும். கோண்டு மொழியில் நாலு என்றே வழங்கப்படுகிறது. தமிழின் கொச்சை மொழியான 'இரண்டு' என்பன தெலுங்கில் இலக்கண வழக்காகப் பயின்று வருகிறது. தமிழில் அமைந்த 'படுஞாயிறு' என்பது மிகத்திரிந்து 'படிஞ்ஞாயிறு' என்று மலையாளத்தில் வழங்கப்படுகிறது. தீமை செய்வித்து என்பது மலையாளத்தில் 'தின்மை செய்விச்சு' என்றாகிறது. இவ்வாறு தமிழில் கொச்சைச் சொற்கள் என வழங்கப் படுவனவெல்லாம் மற்ற திராவிட மொழிகளில் இலக்கண முடையதாகப் போற்றப்படுகிறது. மேலும் தெலுங்கில் உள்ள பகுதிகளும் விகுதிகளும் தமிழ்ச்சொற்களின் பகுதி விகுதி ஆகியவற்றின் மரூஉவாக மிகுதியும் உள்ளன.

திராவிட மொழிகளில் அகரம் தொலைவையும் இகரம் அண்மையையும் சுட்டுவன. இவற்றோடு பால் உணர்த்தும் விகுதியும் இடையே உடன்படு மெய்யும் வர 'அவன்' 'இவன்' என்ற சுட்டுப்பெயர்கள் ஏற்படு கின்றன. இவற்றிற்கு இணையாக உள்ள தெலுங்குச் சொற்களைக் காண்போம். தமிழில் அன் எனும் விகுதிக்கு இணையான தெலுங்கு விகுதி அடு, உடு என்பனவாம். எனவே தமிழில் அவ்+அன் என்பதற்கு நேராகத் தெலுங்கிலும் அ+வ்+அடு = அவடு என்ற புணர்ப்பு உருவை எதிர்பார்க்கலாம். ஆயின் இவற்றைத் தெலுங்கில் உள்ள ஆண்பால் சுட்டுச்சொல்

வாடு என்பேத (வாடு-அவன்) உயிரிடம் பெயரல் (Euphonic Displacement of Vowels) என்ற ஒலியியல் விதிப்படி முதலில் உள்ள சுட்டு அகரம் இரண்டாவதாக உயிரைத் தன் இனம் ஆக்கிய பின்தானிறந்து விடுகின்றது. இறந்துபட்ட உயிரின் மாத்திரை பின் உயிருடன் கூட்டப்பட்டு அது நீள்கின்றது.

அ+வ்+அ+டு — வ்+ஆடு→வாடு
ஆ
இ+வ்+இ+டு — வ்+ஈடு→வீடு
ஈ

இவ்வண்ணம் அவன் என்ற சொல் வாடு என்றும் இவன் என்ற சொல் வீடு என்றும் மாற்றம் அடைவதற்கு எத்துணை காலம் ஆகியிருத்தல் வேண்டும்.

6) வடமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் இரு முறைப்படி புகுகின்றன. 1. தற்சமம், 2. தற்பவம். தற்சமம் என்பது வடமொழியில் உள்ள சொற்கள் அப்படியே தமிழில் ஆளப்படுதல். எ.கா. குங்குமம்.

தற்பவம் என்பது வடமொழிச்சொற்கள் தமிழில் சிதைந்து திரிபுற்று வழங்கப்படுதல். அதாவது தமிழ் இலக்கண விதிகட்கு ஏற்ப அச்சொற்கள் மாறி அமைந்திருக்கும். எ.கா. பங்கஜம் — பங்கயம்

தமிழில் தற்பவமான சொற்கள் மிகுதியும் காணப்படுகின்றன, அச் சொற்கள் பிறமொழிகளில் உள்ள வடமொழித் திரிபுகளைவிட எவ்வளவோ சிதைந்திருப்பதை நோக்குங்கால் அவ் வழக்குகள் மிகப் பழமையானவை என்பது தெளிவாகின்றது.

அ) ஸ்ரீ - பழந்தமிழில் திரு. பிற்காலத் தமிழில் சிரி - சிறீ - சீ என்றாயது.

ஆ) வடமொழியில் கர்ம என்பது மிகப் பழந்தமிழில் 'கம்' பழந்தமிழில் 'கன்மம்'. பிற்காலத் தமிழில் 'கருமம்'

இ) 'பூர்வ ஆஷாடம்' என்ற விண்மீனின் பெயர் தமிழில் 'பூராடம்' என்றாயிற்று. ஆஷாடம் என்ற வடசொல் ஆடம் என்றாகிப் பின் ஆடி என்றாயிற்று.

ஈ) 'அஸ்வினி' என்பது ஐப்பசி ஆயிற்று.

உ) 'பூர்வ - பத்ர - பத' என்பது 'பூரட்டாதி' 'புரட்டாசி' என மருவிற்று.

7) தமிழில் மிகப்பழைய கல்வெட்டுக்கள் யாவும் தூய தமிழில் உள்ளன. ஆயின் தெலுங்கு, கன்னடம் போன்றவற்றின் கல்வெட்டுக்கள் வடமொழிச் சொற்கள் மிகுதியாக வரப்பெற்றும் கிரந்த எழுத்தில் எழுதப்பட்டும் உள்ளன.

8) தமிழில் உள்ள இலக்கிய இலக்கணப் பாகுபாடுகள் யாவும் மிகச்சிறப்பு உடையன. இலக்கியத்தை அகம், புறம் என்று பிரித்ததும், அகத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்றும், புறத்தை வெட்சி, கரந்தை,நொச்சி, உழிஞை, வஞ்சி, காஞ்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல் என்றும் பாகுபடுத்தியதும் தமிழரின் அறிவைக் காட்டுவதோடு அவர்தம் பண்பாட்டையும் காட்டுகிறது. தமிழ் இயல், இசை, நாடகம் என்ற மூன்றாகக் கூறப்படுவதும் நோக்கத்தக்கது. அத்துடன் இலக்கணப் பாகுபாடான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐவகைப் பாகுபாடும் மிகத் தொன்மையானது; சிறப்புமிக்கது. பண்பட்டுச் சிறந்த உயர்தனிச் செம்மொழிகளிலேயே இத்தகைய பாகுபாடுகளைக் காணமுடியும். எனவே இப் பாகுபாடுகள் எல்லாம் தமிழின் பழமையைக் காட்டுகின்றன எனலாம்.

9) பல புராண இதிகாச குறிப்புக்கள் கூடத் தமிழின் தொன்மையைக் குறிக்கும். சான்றுகளாக ஓரளவிற்கு அமைகின்றன.

அ. வால்மீகி இராமாயணத்தில் கவாடம் என்ற கபாடபுரம் குறிக்கப் படுகின்றது. கபாடபுரம் கடல் கொண்ட பாண்டியனின் தலைநகரமாகும்.

ஆ. திரௌபதியின் திருமணத்திற்குச் சேர, சோழ, பாண்டியர் வந்திருந்தனர் என்பது மகாபாரதம் கூற்று.

இ. அர்ச்சுனன் பாண்டிய மங்கையாகிய சித்திராங் கதையை மணந்தான் என்பதும் பாரதக் குறிப்பு.

ஈ. உதியன் சேரலாதன் என்ற சேர அரசன் பாரதப் போரில் படைகளுக்கெல்லாம் உணவளித்தான் என ஒரு செய்தியும் காணப்படுகின்றது. புராண இதிகாசங்கள் எல்லாம் மிகப்பழமையானவை. அவை தமிழகத்தைப் பற்றியும் தமிழக அரசர்களைப் பற்றியும் கூறின என்றால் அது தமிழின் தொன்மைக்குச் சான்றாகாதோ?

10) வரலாற்று ஆசிரியர்களாய தாலமி, பிளினி, பெரிபுளூஸ் நூலாசிரியர் போன்றோர் நூல்களில் பல குறிப்புகள் தமிழகத்தைப் பற்றிக் காணப்படுகின்றன. மேலும் பாடலிபுரம், நந்தர், மௌரியர் பற்றிய குறிப்புக் கள் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றன. கி.மு. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சந்திரகுப்தரின் அமைச்சராய சாணக்கியர் என்பார் 'பாண்டிய கவாடகம் என்று' தமது குறிப்பில் குறித்தார். கி.மு. 4ஆல் வாழ்ந்த வடமொழி அறிஞராய கார்த்தியாயனர் சோழ பாண்டியரைக் குறிக்கின்றார். கி.மு. 150 இல் வாழ்ந்த பதஞ்சலி என்பார் காஞ்சியைப் பற்றியும் கேரளத்தைப் பற்றியும் பேசுகின்றார்.

11) தமிழர்கள் கி. மு. விலும், கி. பி.யிலும் செய்த வாணிகம் தமிழன் தொன்மைக்குச் சான்றாக உள்ளது. சுமேரிய நாட்டில்'மலையாளத் தேக்கு, மஸ்லின் ஆடை கண்டு எடுக்கப்பட்டன. இவை தென்னாட்டினின்று கி.மு. 3000 இல் சென்றிருக்க வேண்டும் என்று கருது கின்றனர். கி.மு. 2600இல் யானைத்தந்தம், வாசனைப் பொருட்கள் முதலியவை எகிப்திற்குச் சென்றன என்பது ஆய்வாளா கருத்து. கி.மு. 1000இல் வாழ்ந்த சாலமன் அரசனுக்குத் தமிழகத்தினின்று பல பொருட் கள் சென்றன. ஹீப்ரு மொழியில் அப் பொருட்களைக் குறிக்கும் சொற்கள் பல காணப்படுகின்றன. 'துக்' (அ) 'துகி' என்ற சொல் மயிலின்தோகையைக் குறிக் கின்றது. 'அகிலின்' 'அகிலத்' என்ற சொற்கள் அகிலைக் குறிக்கின்றன. கி.மு. 30இல் உரோமப் பேரரசரான அகஸ்டஸிக்குப் பாண்டியன் ஒருவன் தூது அனுப்பினான். கி.பி. முதல் நூற்றாண்டிலும் உரோம நாட்டிற்கு யானைத்தந்தம், முத்து. நெய், ஆட்டுமயிர், முதலியன அனுப்பப்பட்டன. உரோம நாடு முத்துக் களை மிகவிலை கொடுத்துத் தமிழகத்தினின்றும் வாங்குவதால் உரோம நாட்டின் செல்வம் குறை கின்றது என்று பிளினி வருந்துகிறார். கி.பி. 60இல் நூலாசிரியர் வாழ்ந்த பெரிபுளூஸ் தமிழகத்தின் பலதுறை முகங்களைக் குறித்துள்ளார். தமிழகத்திலும் மதுரை போன்ற தலைநகர்களில் யவனர் குடியிருப்புக்கள் இருந்தன. இவ்வாறெல்லாம் மிகப் பழமையான தமிழகத்தின் வாணிபத்தைக் குறிக்கின்ற குறிப்புக்கள் தமிழின் பழமைக்குச் சான்றாகின்றன.

12) தமிழரின் அரசியல்முறை மிகப்பண்பட்டது. நாடு, கோட்டம், சுற்றம், ஊர், சிற்றூர் என்றெல்லாம் பிரிக்கப்பட்டு அரசன், அமைச்சன், புலவன், மெய்க் காப்பாளர், சேனைத்தலைவர், காவலர் ஆகிய பலரை யும் கொண்டு இயல்வது தமிழரசு. தமிழனின் அரசியல்

பண்பாட்டைப் பழம் இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் நமக்குத் தெளிவாக்குகின்றன.

13) இராமாயணத்திற்கு முற்பட்டது மகாபாரதம். மகாபாரதத்திற்கு முற்பட்ட காலத்தைத் 'திரிபுராதிகள் காலம்' என்பர். அதற்கு முற்பட்டது தமிழ் என்று தமிழின் தொன்மையைக் குறிப்பிடுகின்றார் திரு. து. அ. சிதம்பரநாதன் அவர்கள்.

14) ஆரியத்திற்கு முற்பட்டது தமிழ் என்று தமது ஆய்வுக் கட்டுரையில் கூறுகின்றார் திரு. வீரபாகுப் பிள்ளை.

15) பழந்தமிழரே முதன்முதலில் தோன்றிய மக்கள் என்றும் பழந்தமிழே முதலில் பேசப்பட்ட மொழி என்றும் உலகில் ஆங்கிலேயர் முதலான ஐரோப்பியரும், மற்ற இனத்தவர்களும் பழந்தமிழரின் வழித் தோன்றியவர்களே என்றும் மொகஞ்சதரோவில் வளர்ந்த பழந்தமிழ் நாகரிகமே மத்தியத் தரைக்கடலை அடுத்த பகுதிகளில் எகிப்து நாகரிகம், பாபிலோனிய நாகரிகம், போனிசிய நாகரிகம் கிரேக்க நாகரிகம் வளரக் காரணமாக இருந்தது என்றும் கருத இடம் உள்ளது, என்று வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதர் Pre historic South India என்ற தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

16) திராவிடம் என்ற சொல் தமிழைக் குறித்து நின்றது. இதன் வரலாற்றை நோக்கும்போது தமிழின் தொன்மையும் சிறப்பும் நன்கு விளங்கும்.

அ) வடமொழியில் வால்மீகி இராமாயணத்திலும், மனுநூலிலும், பாரதத்திலும், பாகவதத்திலும் 'திராவிடர்' என்ற சொல் வழக்கு உள்ளது.

ஆ) கி.பி. எட்டாம் நூற்றாண்டில் குமாரிலபட்டர் என்பார் ஆந்திர திராவிடர் பாஷைகள் என்ற தொடரை

வழங்கியுள்ளார். அவர் கருத்துப்படி ஆந்திரம் என்பது தெலுங்கைக் குறிக்க, திராவிடம் என்பது தமிழைக் குறிப்பதாகிறது.

இ) 1573இல் தாரநாத் என்பவர் எழுதிய புத்தமத நூலில் 'திரமிள' என்ற சொல் தமிழைக் குறிக்கிறது. தென்னாட்டு மக்களைப் பொதுவாகக் குறிக்கத் திராவிடர் என்ற சொல்லை வடநூல்கள் வழங்குகின்றன.

ஈ) தமிழில் உள்ள ஆழ்வார் நாயன்மார்களின் பாடல்கள் திராவிட வேதம் என்று குறிக்கப்படுதலும் உண்டு.

உ) சங்கராச்சாரியார் திருஞான சம்பந்தரைத் 'திராவிட சிசு' என்று குறிப்பிடுகின்றார்.

ஊ) விந்தியமலைக்குத் தெற்கே வழங்கிய மக்களை மகாராஷ்டிரர் ஆந்திரர் திராவிடர் கருநாடகர் கூர்ச்சரர் என்று பகுத்துப் பஞ்ச திராவிடர் என்று கூறும் மரபும் வடநூல்களில் காணப்படுகிறது. தமிழைத் திராவிடம் என்று குறிப்பிட்டமைக்கு இதுவும் ஒரு சான்றாகும்.

எ) தமிழ் என்ற சொல்லுக்கு நேரான வடசொல் திராவிடம் என்பதைக் கால்டுவெலும் எடுத்துக்காட்டியுள்ளார். தமிழ், திராவிடம் என்பவை வேறுபட்ட இரண்டு சொற்கள் போலத் தோற்றமளிப்பினும் ஒன்றன் திரிபே மற்றது என்பதையும் அவர் உடன்படுகின்றார். ஆனால் திராவிடம் என்ற சொல்லே தமிழ் எனத் திரிந்தது என்ற கொள்கையைப் போற்றுகின்றார். திராவிடம், திரவிடம், தர்மிளோ, தமிளோ, தமிழ் எனப் படிப்படியே திரிந்திருத்தல்கூடும் என்கின்றார். பழைய ரோம நிலப் படங்களில் (The Peutinger Tables) தமிரிசி என்ற பெயரும் சீன அறிஞர் ஹியூன்சியாங் எழுதிய குறிப்பில் ட்சிமிமாலோ என்றபெயரும் தமிழுக்கு ஈடாக வழங்குவதையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஏ) தமுளியா என்ற திரிபை டச்சுப் பாதிரிமார்களும் (Lingua Damulia) தமிரிசி (Damirici) என்ற திரிந்த வடிவத்தை ரோமர்களும் தெஹிமோலே (Tehi-mole) என்ற திரிபைச் சீனர்களும் வழங்கியது போலவே தமிழொலி பயிலாத ஆரியர் தமிழ் என்பதையே தமிளோ, த்ரமிளோ, திரமிளம் திரவிடம், திராவிடம் எனத் திரித்து வழங்கினர் எனக் கொள்வதே பொருந்தும் என வி ஆர். ஆர். தீட்சிதர் குறிப்பிடுகின்றார்[1].

17. தமிழ் என்ற சொல் பழங்காலம் முதல் தமிழிலக்கியத்தில் பயின்று வழங்கியிருத்தலையும், திரமிளம், திராவிடம் என்ற சொற்கள் வடநூல்களில் ஒரோ வழி ஆங்காங்கே வழங்குதலையும் இங்குக் கருதல் வேண்டும்.

18. இவ்வாறு பல்லாற்றானும் சிறப்புற்றிலங்கும் தமிழ் மொழியின் சிறப்பினை,

பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை மருங்கிலே வளருகின்றாள்
—வில்லிபாரதம்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதி ரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்
—(தண்டி. உரை-மேற்கோள்)

---

1. To return to the term Dravida, it must be a corruption of the word Tamil, ..so the Dravidian must ligitimately refer to the growth and development of the Tamil language. But the word has been extended by the Modern scholars to all the allied languages and even as the generic name for all South Indian people.
—V.R.R. Dikshitar, Pre-historic South India, p. 230

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தனித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே

—மனோன்மணீயம்

இவ்வாறு பல நூல்கள் போற்றுகின்றன.

19. சென்ற நூற்றாண்டில் சமயத்தொண்டு காரணமாக இந்நாட்டிற்கு வந்த ஐரோப்பியர் தமிழின் அருமை பெருமைகளை உணர்ந்து போற்றியது தமிழின் பெருமையை உயர்த்துவதாக அமைந்தது. ஆங்கிலம் கற்ற தமிழர் பலரைத் தட்டியெழுப்புவதற்கு அது காரணம் ஆயிற்று. தமிழரிடையே மீண்டும் மொழிப்பற்று வளர்வதற்கும் அது உதவியது.

அ) ஜி. யு. போப் என்றும் தன் வாழ்வைத் தமிழோடு தொடர்பு படுத்திக் கூறிக்கொள்வதில் பெருமைப்படுகின்றார்.

ஆ) ஆந்திர இலக்கியத்திலும் அரசியற் கலைகளிலும் வல்லுநராய் ஆந்திரப் பல்கலைக்கழகத் துணைவேந்தராய் விளங்கிய அறிஞர் சி. ஆர். ரெட்டி தமிழ்மொழியைத் திராவிடர்களின் சமயப் பெருமொழி எனப்போற்றுகின்றார்[1].

---

1. "Tamil the holy language of the Dravidians"
—C. R. Reddy, Foreword to the Ancient Dravidians by J. R. Sesha Iyangar p. xvii.

இலக்கியச் செல்வங்கள் பலவற்றைப் பெற்றிருக்கும் தமிழின்மேல் ஆந்திரராகிய தாம் பொறாமை கொள்வதாகக்கூறுகின்றார் சி. ஆர். ரெட்டி[1].

மிகமிகப் பண்பட்ட மொழி என்றும், தனக்கே உரியதாக இயல்பாக வளர்ந்த சிறந்த இலக்கியச் செல்வம் உடையமொழி என்றும் 'மாக்ஸ்முல்லர்' தமிழைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்[2].

ஆற்றல் மிக்கதாகவும் சில சொற்களால் கருத்தைத் தெரிவிப்பதாகவும் விளங்குவதில் தமிழ் மொழியை எந்த மொழியும் விஞ்சமுடியாது என்றும், உள்ளத்தின் வெற்றியை எடுத்துக் காட்டுவதில் வேறு எந்த மொழியும் தமிழைவிட இயைந்ததாக இல்லை என்றும் பெரிசிவில் என்னும் அறிஞர் எடுத்துரைத்துள்ளார்[3].

முடிவுரை : இவற்றையெல்லாம் நோக்கும்போது தமிழன் தொன்மையும், சிறப்பும் பிறநாட்டார் தமிழைப் போற்றும் திறனும், தமிழின் பெருமையும், அருமையும் இனிமையும் தெளிவாகின்றதன்றோ!

---

1. As an Andra I envy Tamil its Possession of two such poems as Silappathikaram and Manimekalai for which I can find no equivalents in Telugu literature. Even in translation they dominate the soul - like charm. what must be like in the original.

— Ibid, p. xx.

2. Tamil is the most highly cultivated language and possessed the richest sores of indigenous literature.

—Max Muller

3. No language combines greater force with equal brevity than Tamil and it may be asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind than the same.

—Rev. Percival.

4. சங்க காலம்

தோற்றுவாய்

பண்டைத் தமிழர் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்தனர் என்பதை முற்கால இலக்கியச் சான்றுகள், பிற்கால இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுச் சான்றுகள், போன்றவை உணர்த்தி நிற்கின்றன. இவ்வாறு பண்டைத் தமிழர் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்த காலத்தைப் பற்றிய கோட்பாடுகள் பல. எட்டாம் நூற்றாண்டு முதல் கி பி. 2, 3ஆம் நூற்றாண்டுகள் வரை சங்ககாலம் பற்றிய கருத்துகள் அறிஞர் உலகத்தில் உலா வருகின்றன. எனினும் கி. பி. இரண்டாம் நூற்றாண்டே சங்க கால எல்லையாகப் பெரும் பாலோரால் தமிழ் உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. சங்க காலம் பற்றிய கருத்துக்களைக் கூறி அவற்றின் வழி கி. பி. இரண்டாம் நூற்றாண்டளவே சங்க காலமாக இருக்கலாம் எனத் துணிய வருவதே இக் கட்டுரை.

கி. பி. எட்டாம் நூற்றாண்டு

சங்க காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டினதாகலாம் எனக் கருத்துத் தெரிவித்தவர் எல். டி. சாமிக்கண்ணுப் பிள்ளை என்பவர். தம் கருத்துக்கு அரணாக நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும்,

ஆடித் திங்கள் பேரிருட்பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமிஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி வண்ண
உரைசால் மதுரையொடு அரைசு கேடுறும்

(சிலம்பு, கட்டுரை காதை. 133 - 136)

என்ற பகுதியைக் காட்டுவர். இதில் குறிப்பிட்டுள்ள பேரிருட் பக்கம், கிருட்டின பக்கம் (பௌர்ணமி முதல் அமாவாசை வரை உள்ள காலம்) அழல்சேர் குட்டம் - கார்த்திகைப் பரணி என்ற உரைக் குறிப்புகளையும் தம் வானநூல் அறிவையும் பயன்படுத்தி, கண்ணகி மதுரையை எரியூட்டியது கி. பி. 765 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28 ஆம் நாள் என்றும் அதனால் கடைச் சங்ககாலமும் அதுவே தான் என முடிவு கூறுகின்றார். இவ்வாறு கூறக் காரணம் சிலப்பதிகாரம் கடைச் சங்க நூலாகக் கருதப்படுகின்றமையே! ஆனால் அடியார்க்கு நல்லார் கூறும் வானியற் குறிப்புக்கள் தவறு என நவில்கின்றார். எனவே தவறான சில குறிப்புகளைக் கொண்டு நேரிதான முடிவைக் கூறுதல் இயலாது ஆகையால் சாமிக்கண்ணு பிள்ளையவர்களின் கருத்து ஏற்புடையதல்ல என்பர் பிற அறிஞர்கள்.

இங்கு, பிள்ளையவர்கள் கணித்துக் கூறியது சிலப்பதிகாரம் கூறும் வானியற் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டா? என்பது கவனிக்கத்தக்கது. அடியார்க்கு நல்லார் குறிப்பெனில் இவரே அதனைத் தவறு என்று உரைக்கின்றார்.

திரு கே. ஜி. சங்கரஐயர் கி. பி. ஒன்று முதல் கி. பி. 1400 வரையும் உள்ள கால இடைவெளியில் சிலம்பின் சோதிடக் குறிப்புப் பொருந்தி வரவில்லை என்று கூறுகின்றார். இவற்றை நோக்கும்போது சங்ககாலம் கி. பி. 8ஆம் நூற்றாண்டு என்ற கருத்து ஏற்புடைத்தாக அமையவில்லை.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு

கி. பி. ஏழாம் நூற்றாண்டே சங்ககால எல்லையாக இருக்கலாம் என்று கூறுகின்றவர்கள், திருநாவுக்கரசர் தம் வரலாற்றைக் காட்டுவர். இவர் வாழ்ந்த காலம் மகேந்திரன் காலமாய 600 முதல் 680 வரை உள்ள காலம். அவர் தம் தேவாரத்தில் காணப்படும்,

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நற்கனகக் கிழி தருமிக்கருளினேன் காண்

என்ற பகுதி முதன்முதலில் சங்கம் இருந்தமையைக் குறிக்கின்றது. எனவே ஏழு அல்லது ஏழாம் நூற்றாண்டுக்குமுன் சங்கம் இருந்திருத்தல் வேண்டும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இங்கு சங்கம், தருமி என்ற சொற்களில் அடங்கியுள்ள கதை, வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டதா? புராணக் கதையா? இந்தக் கதை நிகழ்ச்சி சங்கப் பாடல்களில் உள்ளதா? போன்ற ஐயப்பாடுகள் ஏற்படுகின்றன. மேலும் இந் நூற்றாண்டில் பாடப்பட்ட தேவாரம் போன்ற தெய்வீகப் பாடல்களில் எளிய நடைக்கும் சங்க காலத்தில் தோன்றிய இயற்கையோடு இயைந்த பாடல்களின் இலக்கிய முறைக்கும் இடையே பல நூற்றாண்டுகள் கடந்திருக்க வேண்டும். எனவே 7ஆம் நூற்றாண்டில் சங்கம் என்ற சொல்லாட்சியினை மட்டும் காண்கின்றோம் என்று இக் கருத்தை ஏற்க மறுக்கின்றார் பன்னீர் செல்வம் அவர்கள்.

கி. பி. ஆறாம் நூற்றாண்டு

மணிமேகலையில் ‘குச்சர குடிகை’ குமரியை மரீஇ’ என்ற சொற்கள் வருகின்றன. அவை கூர்ச்சரம் என்ற நாட்டைக் குறிக்கின்றன என்றும், கூர்ச்சரர்கள் கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் என்றும் சங்க இலக்கியம் அவர்கள் காலத்தில்தான் எழுந்தது என்றும் மு. இராகவ ஐயங்கார் உரைப்பர். இச் சான்று சொல் ஒற்றுமையின் அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளதால் ஏற்புடைத்தாயில்லை என்பர். ஆனால் புதைபொருள் ஆய்வு இயக்குநரான டாக்டர் என்.பி. சக்கரவர்த்தி அவர்கள் இம்முடிபை ஏற்றுக் கொள்கின்றார்.

மேலும் இராகவ ஐயங்கார் அவர்கள் கி. மு. 3ஆம் நூற்றாண்டு, 2 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துக்கள் வளர்ச்சி யுறாத நிலையில் காணப்படுகின்றன; ஆகையால் நன்கு இலக்கண இலக்கிய வளம் செறிந்து விளங்கும் தமிழ் நூல்கள் கி. பி. 6 ஆம் நூற்றாண்டிற்குமுன் தோன்றியிருக்க முடியாது என கருத்துத் தெரிவிக்கின்றார்.

கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துகளும் சொற்களும் இலக்கண அமைதி இல்லாதவை என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இவற்றைக்கொண்டு இவை பொறிக்கப் பட்ட தமிழின் காலத்தை ஆராய்தல் தவறாகும். மேலும் இந்த பிராமிக் கல்வெட்டுக்கள் யாவும் சமணத்துறவிகளுக்கும் புத்த பிக்குகளுக்கும் குகைப் பள்ளிகள் அளந்து அளிக்கப்பட்ட செய்திகளையே குறிப்பிடுகின்றன. எனவே இத்னைக்கொண்டு சங்க காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு எனக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு

சங்க காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு என்று அறைப வருக்கு அரணாக நிற்பது அகநானூற்றில் காணப்படும் பாடலி அழிவுச் செய்தியாகும்.

> பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
> சீர்மிகு பாடலி குழீஇக் கங்கை
> நீர்முதற் கரந்த நிதயங் கொல்லோ

—அகம். 265

கங்கைக் கரையில் அமைந்த பாடலிபுரம் என்ற நகரானது வெள்ளப் பெருக்கால் அழிவுற்றது. அதன் காலம் கி. பி. 5 ஆம் நூற்றாண்டு. மற்றொன்று சமுத்திர குப்தனின் தென்னாட்டுப் படையெடுப்பு. படையெடுப்பின் காலமும்

5 ஆம் நூற்றாண்டு. இவ் விரண்டு கருத்துடைய பாடல்களையும் பாடியவர் மாமூலனார். எனவே சங்க இலக்கியங்களில் பாடல் செய்துள்ள மாமூலனாரும் அந்தக் காலத்தைச் சார்ந்தவர். எனவே சங்கம் இருந்த காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு ஆகும் என்ற முடிவினைக் கூறுகின்றார்.

இப் பாடலில் வரும் நந்தர் என்ற சொல் நந்தர் குலத்தைக் குறிப்பது. நந்த வம்சம் மோரியருக்கு முற்பட்டது. நந்தர்தம் இறுதி அரசன் மகாபத்ம நந்தன் காலம் கி. மு. 371. எனவே நந்தரைப் பற்றிப் பாடிய மாமூலனாரும் கி. மு. நான்காம் நூற்றாண்டினர் ஆதல் வேண்டும். ஆனால் இது ஏற்புடைய கருத்து ஆகாது என்பர் பன்னீர் செல்வம்.

மௌரியர் காலம் சந்திர குப்தன் காலத்தில் துவங்குகிறது. கடைசி நந்தனை அழித்து விட்டுக் கி. மு. 322ல் அரியணை ஏறுகிறான் சந்திரகுப்தன். இவனுக்கு பின் சமுத்திரகுப்தன் ஆட்சிக்கு வருகிறான். இவன் கி. பி. 336 முதல் 380 வரை ஆட்சி செலுத்துகின்றான். தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்து காஞ்சியில் விஷ்ணுகோபப் பல்லவனையும், கேரளத்தில் ஒரு தலைவனையும் வென்றவன் இவனே. இது நான்காம் நூற்றாண்டில் நடைபெறுகிறது. இவ் வரலாற்றுப் போர் நிகழ்ச்சியினைச் சங்கப் புலவர்களில் ஒருவர்தான் அறிந்திருக்க முடியுமா? வரலாற்றுப் புலவர் என்று கருதப்படும் சேரன் புகழ்பாடிய பரணர் சேரநாட்டின்மீது வடபுலத்தரசன் படையெடுத்து வந்து வென்ற செய்தியினைக் குறிப்பிடாது இருப்பாரா? மேலும் இப் படையெடுப்பு நான்காம் நூற்றாண்டில் இடையில் நடக்க ஐந்தாம் நூற்றாண்டினைச் சார்ந்தவராக மாமூலரைக் கூறுவது எங்ஙனம் பொருந்தும் என்ற வினாக்கணைகள் தொடுக்கப்படுவதால் இவ்வாறான சிக்கல்கள் காரணமாக 5 ஆம் நூற்றாண்டு என்று கூறுவதும் ஏற்புடைத்தாகத் தோன்றவில்லை.

கி.பி. நான்காம் நூற்றாண்டு

மாணிக்க வாசகர் காலத்தை நான்காம் நூற்றாண்டாகக் கொண்டு,

> வானுயர் மதிற்கூடலி னாய்ந்த ஒண்டீந் தமிழின்
> துறைவாய்ப் புக்கனையோ

என்று அவர் கூறுவதால் சங்ககாலம் நான்காம் நூற்றாண்டாகவும் இருக்கக்கூடும் என்ற கருத்து உளது. மணிவாசகர் காலத்தைப் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுவதால் இக் கொள்கையும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.

சங்க நூல்கள் பல்லவரைப்பற்றி ஓரிடத்திலாயினும் குறிப்பிடாது இருத்தல் நோக்கற்பாலது. அவர்கள் கி. பி. 7 ஆம் நூற்றாண்டிலேயே செல்வாக்குப் பெற்றுவிளங்கினாலும் கி. பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்தே ஆட்சியைத் தொடங்கி விட்டனர். இதனை அவர்களது பாகதச் சாசனங்களால் தெளியலாம். முடியுடை மூவேந்தரையும், குறுநில மன்னரையும் அடைந்து அவர்கள் புகழையும், வீரத்தினையும் பாடிய சங்க காலப் புலவர் ஒருவராவது பல்லவரைப் பற்றிக் குறிப்பிடாதிருத்தல் சங்க நூல்கள் கி.பி. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்ற கொள்கையை வற்புறுத்தும் என்று வித்தியானந்தன் அவர்கள் கூறியுள்ளார்.

சங்க காலம் கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்ற இக் கருத்து சங்ககால வரையறைக்குச் சிறிது நெருங்கி வருவதாய் உள்ளது.

மூன்றாம் நூற்றாண்டு

சங்கத்தின் இறுதி எல்லையைக் கி.பி. 3 ஆம் நூற்றாண்டாகக் கொள்வது வரலாற்று ஆய்வுக்குப் பொருத்த மானது என்பது டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் கருத்தாகும்.

பல்லவர் என்னும் புதிய மரபினர் காஞ்சியை அரசிருக்கையாகக் கொண்டு தொண்டை நாட்டை ஏறத்தாழக் கி.பி. 300 இல் ஆளத் தொடங்கினர் என்பது வரலாறு கண்ட உண்மை. இப் பல்லவரைப் பற்றிய குறிப்புத் தொல்காப்பியத்திலோ, குறளிலோ, தொகை நூல்களிலோ சிலம்பு, மணிமேகலை என்னும் காவியங்களிலோ இடம்பெறவில்லை. எனவே பல்லவர் ஆட்சி காஞ்சியில் தோன்றிய காலம் சங்கத்தின் இறுதி எல்லையாகக் கொள்வது வரலாற்று ஆய்வுக்குப் பொருத்தமானது. இதன் பேரெல்லை ஆய்வுக்குரியது.

மூன்று சங்கங்கள் இருந்தன என்பதற்குக் களவியல் உரையைத் தவிர வேறு தக்க சான்றுகள் இல்லாவிடினும் மதுரையில் தமிழ்ப் பேரவை இருந்தது என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இச் சங்க நூல்களுள் தொல்காப்பியம் என்னும் பேரிலக்கண நூல் பெற்றுள்ள உயர்வைக் காண அந் நூல் அத்தகைய முழுமையைப் பெற அதற்கு முன்பு எத்துணைப் புலவர்கள் இருந்து நூல்கள் இயற்றினர் என்பது எண்ணத் தக்க ஒன்று. அவ்வாறு எண்ணிப் பார்க்கும்போது இச்சங்கத்திற்கு முன்பு சில சங்கங்கள் இருந்து தமிழை வளர்த்தன என்று கொள்வதில் குற்றம் இல்லை. ஒரே காலமாகக் கொள்ளின் அதன் கீழெல்லை ஏறத்தாழ கி.பி. 300, மேல் எல்லை கூறற்கியலாத பழமையுடையது என்று கொள்வதே பொருத்தமானது என்பது டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் கருத்து.

கடைச்சங்ககாலம் பற்றிக் கருத்துத் தெரிவிக்க வரும், டி. ஏ. கோபிநாதராவ் அவர்கள், இறையனார் அகப்பொருள் உரையில் உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கும் கோவைச் செய்யுட்கள் மாறவர்மனைப் பற்றியன. இம் மாறவர்மன் கி.பி. 750ஆம் ஆண்டிலிருந்தவன் என்பது சாசனங்களால் அறிய வருகின்றது. ஆதலின் இவ்வுரை அவன் காலத்தின் பின்னரே எழுதப்பட்டிருக்க வேண்டும். இவ் வுரையோ நக்கீரர் காலத்தில் பின் பத்துத்

தலைமுறை ஆசிரிய பரம்பரையில் வழங்கி வந்தபின் ஈடேறியதென அவ்வுரை வழங்குகின்றது. இதைக்கொண்டு தலைமுறை ஒன்றுக்கு 30 ஆண்டுகள் என வைத்துக் கொண்டாலும் பத்துத் தலைமுறைக்கு 300 ஆண்டுகளே னும் ஆகும் ஆதலின் நக்கீரர் காலமும் அவரிருந்த கடைச் சங்க காலமும் மாறவர்மன் காலத்திற்கு (760) 300 ஆண்டு கள் முற்பட்டது' எனக் கருத்துத் தெரிவிக்கின்றார். இவரே மற்றோர் இடத்தில் இறையனார் களவியல் உரை 8 ஆம் நூற்றாண்டு எனக் கூறுகின்றார். இவர்தம் கருத்து களுக்குள்ளேயே முரண்பாடுகள் காணப்படுவதால் இக்கூற்று பொருந்தாது.

சங்க காலம் பற்றிக் கூறவரும் கா. சு. பிள்ளையவர் களின் கருத்து:

தமிழகத்திற் கடல்கோள்கள் நிலவின என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு செய்தியாகும். இதைப்பற்றிக் கூறும் போது கா. சு. பிள்ளையவர்கள, 'தலைச்சங்கம் கடல்கோட்கு முன்னிருந்த நாட்டில் நிலவியதென்பதும், கடல்கோள் நிகழ்ந்தபின் கடைச்சங்கம் நிறுவப்பட்டதென்பதும் களவியலுரை சிலப்பதிகாரம் முதலிய நூல்களால் தெளிவா கிறது. இதனை மறுத்தற்கும் போதிய சான்றுகள் இல்லை. தென்மதுரையில் நிலவிய ஒரு சங்கம் அவ்விடத்தை விட்டு கபாடபுரத்திற்குப் பெயர்வதற்குக் கடல்கோள் ஏதுவாகக் கூடிய ஒன்றே. கபாடபுரம் என்பது கடைச்சங்கத்துக் காலத் தில் இருந்ததாகத் தெரியாமையினும் அவ் விடத்தைவிட்டுக் கூடலம்பதிக்குச் சங்கம் பெயர்வதற்கு ஏதுவும் கடற்கோளே என்று கோடல் மிகையாகாது' என்றும் குறிக்கின்றார்.

தலைச்சங்கம் ஏற்பட்டதன்பின் நடந்த கடற்பெருக் கிலே பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் புக்கது. குமரியாறு கடல் புக்கதாகக் கூறப்படவில்லை. ஆதலால் இடைச் சங்ககாலத்தில் குமரியாறு தென்னெல்லையாகப் பனம்பாரனரால் குறிக்கப்

பட்டது. குமரியாறு கடல் கொள்ளப்பட்டதன் பின்னரே முடத்திருமாறனால் கடைச்சங்கம் தொடங்கப்பெற்றது. பஃறுளியாறு முதற்கடற்பெருக்கிலே மறைந்தொழிந்தது. அங்ஙனம் இருப்பப் புறநானூற்றுள்,

> நெடியோன்
> நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே

என்னும் தொடர் முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்தும் பாட்டில் காணப்படுகிறது.

நெடியோனுக்குப் பின்னே வாழ்ந்தவன் முதுகுடுமி என்பது தெளிவு. நெடியோன் காலத்திலேயே பஃறுளி என்னும் ஆறு கடல் கோட்பட்டதாயின் முதுகுடுமிக் காலத்தே அது நிலவியிருத்தல் முடியாது. கடலுள் மறைந்த ஆற்றினைப் பற்றிப் புலவர் பாடுதற்கும் இடமில்லை. முதுகுடுமிக்குப் பின் முடத்திருமாறன் காலத்தில்தான் பஃறுளி ஆறு கடல்கொள்ளப்பட்டதெனின் குமரியாறு அக் காலத்தில்தான் கடல்கோட்பட்டிருத்தல் வேண்டும். பஃறுளியாறும், குமரியாறும் ஒரே காலத்தில் கடல்கோட்பட்டதென்றால் இடைச்சங்கத்தார் காலத்திற்குக் குமரியாறு தென்னெல்லை என்பதும், இடைச்சங்கத்திற்கு முன்னே கடல்கோள் நிகழ்ந்தது என்பதும் தவறாய் முடியும். ஆதலின் இப் புறநானூற்றுப் பாடலில் இடம்பெறும் பஃறுளி யென்பதும் மறைந்த பஃறுளி ஆற்றுக்கு ஈடாக நெடியோனால் உளதாக்கப் பெற்றது திண்ணம்.

எனவே கடைச்சங்கத்தார் காலம் (இறையனார் களவியல் உரை கருத்துப்படி) மூன்றாம் நூற்றாண்டில் முடிவு செய்யப் பெற்றதாக விளங்கும் என்பர் கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டு

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் கி.பி. 174 முதல் கி.பி. 204 வரை ஆட்சி செய்தவன். அவன் பாடிய,

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகவென் நிலவரை

என்ற பாண்டியனின் பாடல் சங்கத்தைப் பற்றிக் குறிப்பதால் சங்ககாலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு எனக் குறிப்பர்.

ஆயிரத்து ஐநூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் ('Tamil Eighteen hundred years ago') என்ற நூலில் கனக சபைப் பிள்ளையவர்கள் கடைச்சங்க காலப் புலவர்களது எழுச்சியைக் குறித்து அதற்கேற்ப ஆண்டுகள் வரையறை செய்கிறார். எப்படி நோக்கினும் கி.பி. 300க்கு முன்னர் சங்கம் முடிவுற்றிருக்கலாம் என்பது உண்மை. இக் கருத்தை அரண் செய்வது போன்று சிலம்பில் வஞ்சிக் காண்டத்தில் பத்தினித் தெய்வத்திற்குக் கோயில் எடுத்தபோது இலங்கை மன்னன் கயவாகு வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. இலங்கை வரலாறு கூறும் மகாவமிசம் என்னும் நூல் இம் மன்னனின் காலம் கி.பி. 2 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்கும் 2 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட கால மாகச்சுட்டுகிறது.

சேரன் செங்குட்டுவன் சங்கம் மருவிய காலத்தவன். கயவாகு அவன் எடுத்த கோயிலைக் காண வந்தான் எனில் இருவரின் காலமும் சமகாலமே. எனவே இவர்க்கு முற்பட்ட கி. பி. 2 ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை கடைச் சங்கம் இருந்திருக்கலாம் எனக் கருத இடமேற் படுகின்றது.

உரோம நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் இருந்த வாணிபத் தொடர்பைப்பற்றி மேனாட்டு ஆசிரியர் கூறியனவற்றிற்கும் சங்க நூலாசிரியர் கூறுவனவற்றிற்கும் உள்ள ஒற்றுமை யினைக் கொண்டும் இதனைத் தெளியலாம். சில ஊர்ப் பெயர்களும் துறைமுகங்களின் பெயர்களும் இருநாட்டவரின் குறிப்புகளிலும் ஒன்று போலவே காணப்படுகின்றன.

பொன்னொடு வந்து கறியொடு பெயர்ந்த செய்தி அகநானூற்றிலும் பெரிபுளூஸ் என்னும் நூலிலும் ஒன்றுபோலவே காணப்படுகிறது. இந்தக் கிரேக்க உரோம நூலாசிரியர்கள் கி. பி. 1 ஆம் 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். அகழ்வாராய்ச்சியின்மூலம் கிடைக்கும் நாணயங்களும் இக் கருத்தை வலியுறுத்துகின்றன. சங்க காலத்திலேயே வாணிகத் தொடர்பு உன்னத நிலையில் இருந்திருக்க வேண்டும். இதற்குப்பின் வாணிபச் சிறப்புப் பற்றிய செய்திகள் காணப்படவில்லை. இதனை உறுதிப்படுத்தும் வகையில் கி. பி. முதலாம் இரண்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த நேவா, திரேசன் என்ற மன்னர்களின் நாணயங்களே அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இக் காரணங்களால் சங்க காலம் இரண்டாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டதல்ல எனத் தெளியலாம்.

கி. பி. முதல் நூற்றாண்டு

மதுரைத் தலபுராணம் குலசேகர பாண்டியன் முதல் மதுரேஸ்வர பாண்டியன் இறுதியாயுள்ள 74 பாண்டியரைப் பற்றிக் கூறுகிறது. மதுரேஸ்வர பாண்டியன் கூன்பாண்டியனின் மகன். கூன்பாண்டியன் எனப்படும் நெடுமாறனின் காலம் கி.பி.7 ஆம் நூற்றாண்டு என முடிவு செய்துள்ளனர். இவன் காலத்தில் சங்கம் இருந்தது என்பதற்கு எழுத்து மூலமான சான்றுகளோ பரம்பரைக் கதைகளோ இல்லை. மணிமேகலையும் சிலப்பதிகாரமும் சங்கத்தைப்பற்றிக் கூறவில்லை. ஆகவே சங்ககாலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குமுன் ஆதல் வேண்டும். கன்னபரம்பரைச் செய்தியின்படி சங்கத்தை ஆதரித்த இறுதி மன்னன் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டிய மன்னன். இவன் காலத்திலே திருக்குறள் சங்கத்தில் அரங்கேற்றப் பட்டது. தலபுராணத்தில் தமிழ் அரசர்கள் பெயர்கள் வடமொழியில் பெயர்க்கப்பட்டிருத்தலால் 74 அரசர்களில் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி எவன் என அறுதியிட

முடியாமல் இருக்கின்றது. உக்கிரப் பெருவழுதி கரிகாலனின் தந்தையாய இளஞ்சேட் சென்னியின் காலத்தவன் எனப் படுகின்றான். கரிகாலனின் காலம் கி. பி. 50க்கும் 90க்கும் இடையில் என நிறுவப்பட்டுள்ளது. ஆகவே சங்க காலம் கி. பி. முதல் நூற்றாண்டளவில் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்று ந. சி. கந்தையாபிள்ளை அவர்கள் சங்க காலத்தைப் பற்றி சௌரிராயன் அவர்கள் எழுதிய ஆங்கிலக் கட்டுரை யின் பொழிப்பை எடுத்துக் காட்டுகின்றார்.

சில சங்க இலக்கியங்கள் வழிநின்று காலத்தை அறுதியிடல்

தமிழகத்திற்குப் புதியவராய பிராகிருத - வடமொழி வல்லுநராய பல்லவர்கள் கி. பி. 4ஆம் நூற்றாண்டில் காஞ்சியைக் கைப்பற்றித் தொண்டை நாட்டை ஆண்டனர்.

தமிழகத்தைக் காலம் காலமாக உரிமை பூண்டிருந்த முடிகெழு மூவேந்தரும் தம் நாட்டைக் களப்பிரர்க்கும் பல்லவர்க்கும் பறிகொடுத்த நிலை உண்டான காலம் கி.பி. 4, 5ஆம் நூற்றாண்டு ஆகும். மேலும் கி.பி. 800 முதல் கி. பி. 600 வரை தமிழகத்தின் இருட்டடிப்புக் காலமாக தமிழுலகத்தில் கூறப்படுகிறது. எனவே இக் காலத்தில் உறுதி யாகச் சங்கம் இருந்திருக்க முடியாது.

இதனை நோக்கத் தொல்காப்பியம் முதல் சிலப்பதிகாரம் வரை உள்ள நூல்கள் அனைத்தும் கி. பி. 200க்கு முற் பட்டவை என்பது மிகத் தெளிவாகப் புலனாகிறது. இவற்றுள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன.

புறநானூற்றின் காலம்

இந் நூலில் காணப்படும் பெருஞ்சோற்றுதியன் சேரலா தன் வான்மீகியார் என்பவரின் பாடல், மோரியர்

படையெடுப்பு இரண்டாம் கரிகாலன் இமயப் படையெடுப்பு இவை போன்ற குறிப்புகளைக் கொண்டு இதன் காலத்தை வரையறை செய்வர்.

சிலப்பதிகாரம் கூறும் இரண்டாம் கரிகாலன் இலங்கை மீது படையெடுத்த காலம் கி. பி. 111 - 114 என்று இலங்கை வரலாறு கூறுவதால் கரிகாலன் காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியும், கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாக இருக்கலாம் எனக் கருதுவர்.

இவ்வரசனைத் தவிர நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, கோப்பெருஞ்சோழன் போன்ற பிற சோழ அரசர்கள் கரிகாலனுக்கு முற்பட்டவராகவும் பிற்பட்டவராகவும் இருந்திருக்கக் கூடும்.

கி.பி. 300க்குப் பின்பு பல்லவர்களும், கி.பி. 400இல் அச்சுவிக்கந்தன் என்ற களப்பிர குலகாவலன் பேரரசனாய் விளங்கியமையாலும் புறநானூற்றின் இறுதிக்கால எல்லை கி.பி. 300 என்று கூறுவர். இதைப்போலவே பிறதொகை நூல்களின் காலமும் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு எனவும், அதற்கு முன்னரும் என வரையறை செய்யப்படுகிறது. இந்த நூல்களின் காலத்தை வரையறுப்பதிலும் வேறுபாடுகள் காணப்படினும் சங்ககால நூல்களின் பாடுபொருள்கள், பிற்கால நூல்களின் ஒழுக்கம், சமூக மரபுகள், சமயக் கூறுபாடுகள் இவற்றைக்கொண்டு ஆராயின் இப் பண்புகள் பல சங்க நூல்களைக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட காலப்பகுதிக்கு உரியவாக்குகின்றன, என்று கூறுவர் வித்தியானந்தம் அவர்கள்.

சங்ககாலம் பற்றிய மேல்எல்லை

தலைச்சங்கப் புலவராக இறையனார் களவியல் உரையில் முரஞ்சியூர் முடிநாகராயர் என்பார் குறிக்கப்பட்டுள்ளார். பாரதப் போரில் பெருஞ்சோறு வழங்கிய உதியஞ்

சேரலாதனை முடிநாகராயர் பாடிய பாட்டொன்று உளது. அவர் தலைச்சங்கத்தைச் சார்ந்தவரெனின் பாரத காலத்திற்குச் சற்றுமுன்பு இருந்தவர் என்று கருதக்கூடும். பாரத காலம் கி.மு. 12 ஆம் நூற்றாண்டு என அறிஞர் கருதுகின்றனர். எனவே தலைச்சங்க காலம் கி.மு. 12 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது என்பர் கா.சு. பிள்ளை அவர்கள்.

குமரி முனைக்குத் தெற்கிலிருந்த நாட்டிலே தலைச்சங்கம் இருந்ததாக அறிகின்றோம். அது எப்போது நிகழ்ந்ததென்று துணிதல் எளிதன்று. ஸ்காட் எலியட் என்பவர் சொல்கின்ற ஐந்தாவது கடல்கோள் ஏறக்குறைய 9500 ஆண்டுகட்கு முன் நிகழ்ந்ததாகும். அதுவே தலைச்சங்கத்திற்குப் பின் நிகழ்ந்த கடல்கோள் எனின் அத்துணைக் காலத்திற்கு முன்னமேயே தலைச்சங்கம் ஏறக்குறைய 4500 ஆண்டு 89 அரசர்களின் தொடர்ந்த ஆட்சியில் நடைபெற்றிருந்ததாகக் களவியலுரையால் அறிகின்றோம். முச்சங்கங்களுள் களவியலுரையில் கூறப்பட்டிருக்கும் கால அளவு சோதி வட்டக் கணக்கு என்பதில் வைத்துத் தீர்மானிக்கப்பட்டதாகும். இதன்படி முதற்சங்கம் இருந்த காலம் 4440 என்பது மூன்று சோதி வட்டமாகும். இரண்டாவது சங்கம் நிலவிய காலம் $2\frac{1}{2}$ சோதி வட்டமாகும். மூன்றாவது சங்கம் நிலவிய காலம் $1\frac{1}{2}$ சோதி வட்டமாகும் எனக் கருத்துத் தெரிவிப்பர் கா.சு. பிள்ளை அவர்கள்.

சங்கம் 197 பாண்டியர்களால் ஆதரிக்கப்பட்டது. ஒரு அரசனின் ஆட்சிக்காலம் இருபது எனக் கொண்டு மொத்தம் 3940 ஆண்டுகள் என வரையறுக்கிறார் கந்தையா பிள்ளை அவர்கள். மேலும் தென்மதுரையில் இருந்த சங்கம் 89 பாண்டியர்களால் 1780 ஆண்டுகள் நடந்தன எனக்கொண்டு தென்மதுரையைக் கடல்கொண்ட காலம் கி.மு. 2160 எனக் கணக்கிடுகிறார். இக்கணக்கு கி.மு. 2105 இல் பெரிய வெள்ளப்பெருக்கு உண்டானது எனக் கூறும் யூதரின் காலக் கணக்கோடு ஏறக்குறைய ஒத்திருப்பதால் கி.மு. 3940 இல்

தலைச்சங்கம் தொடங்கிற்று எனலாம் என்று அவர் கூறுகின்றார்.

பசும்பூண் பாண்டியன் ஆய் நாட்டைக் கைப்பற்றியது ஏறக்குறைய கி.பி. 70 ஆம் நூற்றாண்டில் ஆகும். இவனுக்கு முன்பும் பின்பும் ஆண்ட அரசர் ஒவ்வொருவரும் இருபத்தைந்து ஆண்டுகள் வரை ஆண்டவர் எனக் கொண்டு கணக்கிட்டால் பொதுவாகச் சங்க காலத்தைக் கி.மு. முதலாம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கு உரியது என்று வித்தியானந்தன் கூறுகிறார்.

ப. இரங்காச்சாரி என்பவர் சங்ககாலத்தின் தொடக்க காலமாகக் கி.மு. 300 என்ற வரையறையைக் குறிக்கின்றார். இராமச்சந்திர தீட்சிதர் கி.மு. 500 என்ற வரையறையைக் குறிக்கின்றார். இவர்களது கருத்துக்கு மாறாக கி.மு 4 என வரையறை செய்கிறார் கனகசபைப் பிள்ளை அவர்கள்.

இவை மட்டுமன்றிக் கி மு. 5000 அளவில் தலைச்சங்கம் இருந்தது என்றும், கி.மு 3000 ஆண்டுகட்குப்பின் இடைச்சங்கம் நிலவியதென்றும், கி.மு. 500 ஆவது ஆண்டில் நிகழ்ந்த கடல்வெள்ளத்திற்குப் பின் கடைச்சங்கம் ஏற்பட்டது என்றும் கூறுவாருமுளர். இன்னும் ஒருசாரார் கி.மு. 12 ஆம் நூற்றாண்டிற்கு முன் தலைச்சங்கம் இருந்தது என்றும், அதற்குப்பின் கடைச்சங்கம் இருந்தது என்றும் கூறுவர். மற்றொரு சாரார் முச்சங்கம் இருந்ததில்லை என்றும் சங்கம் ஒன்றே என்றும் கூறுவர்.

முடிவுரை

1. கி.பி. எட்டாம் நூற்றாண்டு எனக்கூறும் சாமிக் கண்ணுப் பிள்ளை அவர்கள் தம் கருத்துக்கு அரணாகச் சிலப்பதிகாரம் கூறும வானியற் குறிப்புக்களை அடிப்படையாக கொண்டா? அல்லது அடியாரக்கு நல்லார்தம் குறிப்புகளைக் கொண்டா? என்பது தெளிவாகவில்லை. மேலும் அடியார்க்கு நல்லார் கூறும் சோதிடக் கருத்துக்

களை அவரே தவறு என உரைத்துவிடுகிறார். மேலும் ஒன்று முதல் 1400 வரை உள்ள கால இடைவெளியில் சோதிடக் குறிப்புப் பொருந்தி வரவில்லை என்ற கருத்தும் உள்ளது. எனவே சங்ககாலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டல்ல எனக் கருத வாய்ப்பு ஏற்படுகிறது.

2. கி.பி. 7ஆம் நூற்றாண்டே சங்ககாலமாக இருக்கலாம் என்று கூறி, தேவாரப் பகுதி சான்றாகக் காட்டப்படுகிறது. முதன்முதலில் சங்கம் என்ற சொல்தேவாரத்தில் காணப்படு வதால்மட்டும் சங்ககாலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு ஆகிவிட முடியுமா? பண்பாடு என்ற ஒரு சொல்கூடத்தான் தமிழிலக்கி யத்தில் காணப்படவில்லை. எனவே தமிழர்கள் பண்பாடற்ற வர்கள் எனக் கூறிவிட இயலுமா? மேலும் சங்கம் என்ற சொல்லே இடம்பெறாமற் போனாலும் சங்கத்தைக் குறிக்கும் பல்வேறு பழைய இலக்கியச் சான்றுகள் நமக்குக் கிடைக் கின்றன. இதனையெல்லாம் நோக்கும்போது சங்ககாலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு என்ற கருத்தும் ஏற்புடையதாக இல்லை எனக் கருத இடமேற்படுகிறது.

3. மணிமேகலையில் இடம்பெறும் குச்சரபீடிகை, 'குமரியை மரீஇ' போன்ற சொற்களைக்கொண்டு 'சங்க காலம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு என உரைக்கின்றார் மு. இராகவ ஐயங்கார். மணிமேகலையும் சிலப்பதிகாரமும் இரட்டைக் காப்பியங்கள். அவற்றைப் பாடிய புலவர்கள் இருவரும் ஒரே காலத்தைச் சேர்ந்தவர்கள், என்றெல்லாம் கூறப்படும் கருத்து அறிஞர் உலகத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டதாகக் காட்டப்படுகிறது. சிலப்பதிகாரத்தின் காலம் 2ஆம் நூற்றாண்டு ஆகையால் மணிமேகலையின் காலமும் கி.பி. 2ஆம் நூற்றாண்டாகத்தான் இருக்கமுடியும். எனவே இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மணிமேகலையில் இடம்பெறும் சொற்கள் அவைகள் ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த கூர்ச்சரர்களைக் குறித்தது எனக்கொண்டு சங்க காலத்தை ஆறாம் நூற்றாண்டு எனக் கூறுவது பொருத்த மாகத் தோன்றவில்லை.

4. சங்ககாலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டாக இருக்க முடியாது என்ற கருத்து ஏற்புடையதாகவே காணப்படு கிறது.

5. கி.பி. 4ஆம் நூற்றாண்டாகச் சங்ககாலம் இருக்க முடியாது என்பதற்கு வித்தியானந்தன் அவர்கள் கருத்து பொருந்துவதாகவே தோன்றுகிறது.

6. கி.பி. 3ஆம் நூற்றாண்டாகச் சங்ககாலம் இருந்திருக்க லாம் என்பதற்குக் கா.சு. பிள்ளை அவர்களின் கருத்தும், டாக்டர். மா. இராசமாணிக்கனார் அவர்கள் கூறும் கருத்தும் ஓரளவு ஏற்றுக்கொள்ளத் தக்கதாகத் தோன்றுகிறது.

7. பொதுவாக நோக்கும்போது சங்ககாலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி (அல்லது) இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்திருக்கலாம் என்ற கருத்தும், கி.பி. 2ஆம் நூற்றாண்டின் முற்பகுதி (அல்லது) முதல் நூற்றாண்டின் முற்பகுதியாக இருந்திருக்கலாம் என்ற கருத்தும் ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

சங்ககாலம் பற்றிய பல்வேறு கருத்துக்கள்

	ஆசிரியர் பெயர்	நவிலும் காலம்	கருத்துக்கள்
1.	எல்.டி. சாமிக்கண்ணு பிள்ளை அவர்கள்	கி. பி. எட்டாம் நூற்றாண்டு	சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் சோதிடக்குறிப்பு (ஆடித் திங்கள்)
2.	சில ஆய்வாளர்கள்	கி. பி. ஏழாம் நூற்றாண்டு	தேவாரத்தில் இடம்பெறும் அப்பர் வாக்கு (நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம்)
3.	மு. இராகவ ஐயங்கார்	கி. பி. ஆறாம் நூற்றாண்டு	மணிமேகலையில் இடம் பெறும் 'குச்சர பீடிகை' 'குமரியை மரீஇ' போன்ற சொற்களைக் கொண்டு கூர்ச்சரர்களின் காலத்தை 6ஆம் நூற்றாண்டு எனக் கொண்டு உரைத்தல்

4.	சிலர்	கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு	அகநானூற்றில் காணப்படும் பாடலியின் அழிவுச் செய்தி
5.	சில அறிஞர்கள்	கி. பி. நான்காம் நூற்றாண்டு	மாணிக்கவாசகர் கூற்று
6.	கா.சு. பிள்ளை அவர்கள்	கி. பி. மூன்றாம் நூற்றாண்டு	சோதிட வட்டக் கணக்கு, கடல்கோள்
7.	மா. இராசமாணிக்கனார்	கி. பி. மூன்றாம் நூற்றாண்டு	பல்லவர்பற்றிய செய்திகள் சங்க இலக்கியங்கள், சிலம்பு.
8.	டி. ஏ. கோபிநாத ராவ்	கி. பி. மூன்றாம் நூற்றாண்டு	மணிமேகலையில் இடம் பெறாமை
9.	சிலர்	கி. பி. இரண்டாம் நூற்றாண்டு	மாறவர்வன் காலத்தைக் கொண்டு கணக்கிடல்; தலையாலங்கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியனின் காலத்தைக் கொண்டு கணக்கிடல்
10.	ந. சி. கந்தையா பிள்ளை	கி. பி. முதல் நூற்றாண்டு	கரிகாலன் காலத்தைக் கொண்டு கணக்கிடல்

5. பதிற்றுப்பத்தின் இலக்கிய வளம்

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க காலம் பொற்காலம் என்று போற்றப்பெறும். சங்க இலக்கியம் என்று வழங்கப் பெறும் இலக்கியங்கள் பாட்டும் தொகையும் எனலாம். "மூத்தோர்கள் பாடியருள் பாட்டும் தொகையும்" என்று குறிப்பிடப்படும் தொடரில் பாட்டு என்பது பத்துப் பாட்டினை யும் தொகை என்பது எட்டுத் தொகையினையும் குறிக்கும். திருமுருகாற்றுப்படை முதலாக மலைபடுகடாம் ஈறாக உள்ளது பத்துப் பாட்டாகும். நற்றிணை முதலாகப் புறநானூறு இறுதியாக அமைந்திருப்பது எட்டுத் தொகை யாகும். எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களும் அகப்பொருள் பற்றிய நூல்களாகும். பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறப்பொருள் பற்றிய நூல் களாகும். பரிபாடல் அகம், புறம் ஆகிய இரு பொருள்களும் பற்றியெழுந்த நூலாகும்.

பத்துப்பத்து எனப்படுவதே பதிற்றுப்பத்து ஆகும். பத்துப் பத்தாகப் பத்துத் தொகைகளையுடைய பாடல் தொகுதி என்று பெயர். நற்பேறின்மை காரணமாக இன்று முதற்பத்தும் இறுதிப்பத்தும் நமக்குக் கிடைக்கவில்லை. இடைப்பட்ட எட்டுப்பத்துகளே கிடைக்கின்றன. பதிற்றுப் பத்தின் தனிச்சிறப்பு இது பண்டை நாளைச் சேர மன்னர் களைப் பற்றிய நூல் என்பதே. பழந்தமிழ்ச் சேர நாட்டின் வரலாறு முழுவதனையும் ஒருங்கே புலப்படுத்த வல்லதாய் இப் பதிற்றுப்பத்து அமைந்துள்ளது. பதிற்றுப்பத்தின் இரண்டாவது பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப்

பற்றிக் குமட்டூர்க் கண்ணனாரும், மூன்றாவது பத்தில் பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பற்றிப் பாலைக் கௌதமனாரும், நான்காவது பத்தில் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பற்றிக் காப்பியாற்றுக் காப்பியனாரும் ஐந்தாவது பத்தில் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பற்றிப் பரணரும், ஆறாம் பத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பற்றிக் காக்கை பாடினியார் நச்செள்ளையாரும், ஏழாம் பத்தில் செல்வக் கடுங்கோ வழியாதனைப் பற்றிக் கபிலரும், எட்டாவது பத்தில் பெருஞ்சேரல் இரும்பொறையைப் பற்றி அரிசில் கிழாரும், ஒன்பதாவது பத்தில் குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறையைப்பற்றிப் பெருங்குன்றூர்க் கிழாரும் பாடியுள்ளனர். முதல் பத்து உதியஞ் சேரலைப் பற்றியதாக இருக்கவேண்டும் எனவும், பத்தாவது பத்து யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறை என்பானைப் பற்றியதாக இருக்கவேண்டும் என்றும் அறிஞர் சிலர் கருதுவர். பதிற்றுப்பத்திற் காணப்படும் சில தொடர்களைச் சிலப்பதிகாரத்திலும் காணலாம் என்றும் கூறுவர்.

வழங்குவது உள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று
—திருக்குறள், குடிமை 5

என்னும் திருக்குறளுக்கு உரை கூறுமிடத்துப் பரிமேலழகர் என்னும் திருக்குறளின் சிறந்த உரையாசிரியர் 'பழங்குடி' என்னும் சொல்லிற்கு விளக்கம் எழுதுமிடத்து, "படைப்புக் காலந்தொட்டு மேம்பட்டு வருங்குடிகள் இம் மூவேந்தரும்" என்று சேர, சோழ, பாண்டிய அரசர் குடிகளைச் சுட்டுவர். மேலும் தொன்னூலாம் தொல்காப்பியத்தில்,

வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு
—தொல்; பொருள்; செய்யுளியல். 79

என்று மூவேந்தர் நாடுகளும்,

போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூவும்

—தொல்; பொருள்; புறத்திணையியல்: 5

என்று மூவேந்தரின் அடையாளப் பூமாலைகளும் குறிப்பிடப் பட்டுள்ளன. மூவேந்தரும் சேர மன்னர்கள் வானவன், வானவரம்பன். குட்டுவன், குடக்கோ, பொறையன், இரும்பொறை, கடுங்கோ, கோதை என்னும் சிறப்புப் பெயர்களாலும், சேரல், சேரலர், சேரமான் என்னும் பொதுப் பெயர்களாலும் வழங்கப்பெற்றனர்.

சேர வேந்தர் செய்யுட்கோவை என்னும் அரிய ஆராய்ச்சிப் பதிப்பு நூலை ஆக்கியளித்த பேராசிரியர் மு. இராகவையங்கார், பாண்டியநாடு ஐம்பத்தாறு காதமும், சோழநாடு இருபத்து நான்கு காதமும் பரப்பாகக் கொண்டிருக்கச் சேர நாடோவெனில் எண்பது காத அளவு பரப்புக்கொண்டது என்றும், தமிழகத்தை ஆட்சி புரிந்து வந்த மூவேந்தர்களுள் சேர வேந்தர் சிறக்க மதிக்கப் பெற்றமைக்கு அவர் நாட்டின் விரிவும், வளமும், வீரமும், தமிழ்ப்பற்றும் கொடையுமே காரணங்கள் என்றும் குறிப்பிடுவார்.

சேரநாடு நானில வளங்களும் நன்கு பொருந்திய நாடாகும். இரண்டாம் பத்தில் குமட்டூர்க் கண்ணனார் கடல்படு பொருளும், மலைபடு பொருளும் ஆறுபடு பொருளும் சேரநாட்டில் தட்டின்றிக் கிடைத்தன என்பதனை,

கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம்பல நிகழ்தரு நனந்தலை நன்னாட்டு
விழவறு பறியா முழவிமிழ் மூதூர்

—5: 16 - 18

என்று குறிப்பிட்டுள்ளார். மூன்றாம் பத்துப் பாடிய பாலைக் கௌதமனார், சேரநாட்டு மகளிர் அவல் குற்றிய

உலக்கையை வாழை மரத்தின் கண்ணே சார்த்தி வைத்து விட்டு, வள்ளைப் பூக்களைப் பறிப்பதற்கு வயலில் இறங்குவார்கள் என்றும், அந் நெல் வயல்களுள் பருத்த நெற்கதிர்கள் வளைந்து கிடக்கின்றன என்றும் அழகுறக் குறிப்பிடுவர்.

அவலெறி உலக்கை வாழைச் சேர்த்தி
வளைக்கை மகளிர் வள்ளை கொய்யும்
முடந்தை நெல்லின் விளைவயல்

—9: 1 - 3

மேலும் அவர், காலம் அல்லாக் காலங்களிலும் சேர நாட்டில் கரும்பு நிறைய விளைந்து அறுவடை செய்யப் படுவதனை

காலம் அன்றியும் கரும்புஅறுத்து ஒழியாது

—10: 14

என்று குறிப்பிடுவர். சேரன் காத்தோம்பிய நாடு பெயல் வளம் மிகுந்து, அதனால் வயல் வளம் சிறந்து, குறைவு படாத புது வருவாயினைக் கொண்டு திகழ்ந்தது என்பதனை மிகமிக நயமுற,

வயங்குகதிர் விரிந்து வானகம் சுடர்வர
வறிதுவடக் கிறைஞ்சிய சீர்சால் வெள்ளி
பயங்கெழு பொழுதோ டாநியம் நிற்பக்
கலிழுங் கருவியொடு கையுற வணங்கி
மன்னுயிர் புரைஇய வலனேர்பு இரங்கும்
கொண்டல் தண்தளிக் கமஞ்சூல் மாமழை
காரெதிர் பருவம் மறப்பினும்
பேரா யாணர்த்தால் வாழ்கநின் வளனே

—4 : 23 - 30

என்று கிளத்துவர்.

மறாஅ விளையும் அறாஅ யாணர்

—10: 8

என்று ஒரு தொடரில் சேரநாட்டு வளத்தினை நம் கண் முன்கொணர்வார் பெண்பாற் புலவர் காக்கை பாடினியார் நச்செள்ளையார்.

மழை உரிய காலத்தில் தப்பாது பொழிகிறது. ஆண்மானும் பெண்மானும் காட்டகத்தே கூடித் துள்ளித் திரிந்து விளையாடுகின்றன. பறவைகளும் வண்டினமும் மரக் கிளைகளிலிருந்து ஆரவாரிக்கின்றன. பழங்களும் கிழங்குகளும் பலரும் பலவாறு உண்ணவும் குறைவுபடா துள்ளன. பசு நிரைகள் பசியாரப் புல்மேய்ந்து களித்துலவு கின்றன. வறுமையறியாத வளங்கெழு சிறப்பினால் சேர நாட்டில் பலவாகிய புதுப்புதுக் கூல வகைகள்—தானிய வகைகள் பல்கிக் கிடக்கின்றன என்னும் அரிய செய்தியினை உரிய முறையில்,

வானம் பொழுதொடு சுரப்பக் கானம்
தோடுறு மடமான் ஏறுபுணர்ந்து இயலப்
புள்ளு மிஞிறு மாச்சினை ஆர்ப்பப்
பழனும் கிழங்கும் மிசையற அறியாது
பல்லான் நன்னிரை புல்லருந் துகளப்
பயங்கடை அறியா வளங்கெழு சிறப்பிற்
பெரும்பல் யாணர்க் கூலங் கெழும

—1: 7

என்று பெருங்குன்றூர்க் கிழார் பெருமிதத்துடன் குறிப்பிடுவார்.

புறநானூற்றின் இரண்டாம் பாடலில் ஓர் அரிய செய்தி பொதிந்துள்ளது.

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூத் தும்பை

ஈரைம் பதின்மரும் பொருதுகளத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
—புறம். 2: 13 - 16

இப் பகுதிக்குப் புறநானூற்றின் பழைய உரைகாரர், "அசைந்த தலையாட்டமணிந்த குதிரைகளையுடைய பாண்டவர் ஐவருடனே சினந்து நிலத்தைத் தம்மிடத்தே கொண்ட பொற்பூந் தும்பையுடைய துரியோதனன் முதலாகிய ஒற்றுவரும் பொருத போர்க்களத்தின் கட்படுந் துணையும் பெருஞ்சோறாகிய மிக்க உணவை இருபடைக்கும் வரையாது வழங்கினோய்" என்று குறிப்பிட்டுள்ளார். இப் பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் முதற்பத்தின் பாட்டுடைத் தலைவனாயிருக்க வேண்டும் என்றும், இவன் பாரத காலத்தவன் என்றும், குருச்சேத்திரத்தில் பொருத பாண்டவர், கௌரவர் ஆகிய இரு படைவீரர்களுக்கும் பெருஞ்சோறு வழங்கிய கொடையுள்ளத்தினன் என்றும், இவனைப் பாடிய முரஞ்சியூர் முடிநாகராயரும் பாரத காலத்தவராயிருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர் குறிப்பிடுவர்.

துறக்கம்எய்திய தொய்யா நல்லிசை
முதியர்ப் பேணிய உதியஞ் சேரல்
பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை
—அகம். 233: 7 - 9

என்று அகநானூற்றுப் பாடலொன்றும் இந் நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது.

சேரநாட்டு மக்களின் வாழ்க்கை செம்மாப்புடையதாகத் திகழ்ந்தது. பிறர் பொருள் விரும்பாத பெற்றியராகச் சேரநாட்டு மக்கள் விளங்கினர்; அறிவுத் திறம் மிகுந்திருந்தனர். செம்மை நெறி திறம்பாதவராய்த் துலங்கினர். அன்பு நெறிபற்றி வாழ்ந்தனர். நோயற்ற யாக்கை உடையோராய்ப் பொலிந்தனர். இதன் காரண

மாகத் திருவிழாக்கள் பலவற்றை அயர்ந்தனர். குரவைக் கூத்தும் துணங்கைக் கூத்தும் அவர்களால் விரும்பி மேற் கொள்ளப்பட்டன என்றும், இவ்வாறு அவர்கள் மகிழ்ச்சி யுடன் கூத்தாடுமிடத்தில் சுரை நிறைய நெய் பெய்து பெரிய திரியிட்டுக் கொளுத்தப்பட்ட நெடுவிளக்கு வைக்கப் பட்டிருந்தது என்பதனை ஐந்தாம் பத்தில், பரணர்,

சொகுசுரை கவரு நெல்வழிபு உராலின்
பாண்டில் விளக்குப் பரூஉச்சுடர் அழல
நன்னுதல் விறலியர் ஆடும்

—7 : 5-7

என்று குறிப்பிட்டுள்ளார். மருத நிலத்தில் வாழ்ந்த மகளிர் இரவும் பகலும் தாங்கள் அணிந்திருந்த அணிகலன்களைக் கூடக் களையாமல், செல்வக் களிப்புமிக்க விளையாட்டினை விரும்பிக் குரவைக் கூத்து அயர்ந்தார்கள் என்று அரிசில் கிழார் எட்டாவது பத்தில் ஏற்றமுடன் எடுத்துரைக்கின்றார்.

மருதம் சான்ற மலர்தலை விளைவயல்
செய்யுள் நரை ஓய்யும் மகளிர்
இரவும் பகலும் பாசிழை களையார்
குறும்பல் யாணர்க் குரவை அயரும்

—3 : 4-7

இனி, சேரர்தம் படை வீரத்தினைக் காண்போம். சேரர்கள் கடற்போரில் வல்லவர்கள் என்ற செய்தி பதிற்றுப் பத்தின் பலவிடங்களில் பகரப்படுகின்றது.

இருமுந்நீர்த்துருத்தியுள்
முரணியோர்த் தலைச்சென்று
கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின முன்பின் சேரன்

—10 , 2-4

என்று இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் குறிப்பிடப் பெறுகின்றான். செங்குட்டுவன் பகைவரின் கடற்படை

யினைத் தன் கடற் படையால் தாக்கி வெற்றி வாகை சூடியவன் என்பதனை,

.........நீர்ப்புக்குக்
கடலொடு உழந்த பனித்துறைப் பகலவ

—8 : 3-4

என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இமயவரம்பன் யவனரை வென்ற செய்தி, "நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து" என்ற இரண்டாம் பத்தின் பதிகச் செய்தியால் விளங்கும். மேலும் நெடுஞ்சேரலாதன் ஆரியர் நெருங்கி வசிக்கும் பேரிசை இமயம் தொடங்கித் தென்திசைக் குமரி வரை பல போர்களால் வென்று யானை மீது சிறக்க உலா வந்த காட்சியினை,

வலனுயர் மருப்பிற் பழிதீர் யானை
பொலன்அணி எருத்தம் மேல்கொண்டு
பொலிந்தநின்
மலர்கெழ் செல்வம் இனிதுகண் டிகுமே
....
....
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக கூறுநர் மறந்தபக் கடந்தே

—1 : 18-25

என்று பெருமிதம் பொங்கப் பாடுகின்றார். செங்குட்டுவனும் இது போன்றே இமயத்தை வடவெல்லையாகவும், குமரி முனையைத் தென் எல்லையாகவும் உடைய நாட்டின் இடைப்பட்ட இடங்களில் அரசோச்சிய மன்னர்களைப் போரில் வென்று அவர்களுடைய நாடுகளின் அழகினையும் சிதைத்த செய்தியினை வரலாற்று நிகழ்ச்சிகளைத் தம் பாடல்களில் மறவாது பொதிந்து வைப்பவர் என்ற பெருமைக்குரியவராகவும், சங்க காலத்

தின் தலை சிறந்த வரலாற்று உணர்வு மிக்க கவிஞர் எனப் பாராட்டப் பெறும் கீர்த்திக்கு உரியவராகத் திகழும் பரணர் பாடியுள்ளார்.

கடவுள் நிலைய கல்ஓங்கு நெடுவரை
வடதிசை எல்லை இமயம் ஆகத்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமம் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ.

—3 : 6-11

பெருஞ்சேரலிரும்பொறை என்ற சேரவேந்தன், தன் உயிர் போர்க்களத்தில் போதற்குச் சற்றும் அஞ்சாதவன் என்றும், போரற்ற அமைதிக் காலங்களில் தன்னை நாடி வந்த இரவலர்க்குக் கொடை வழங்கத் தயங்காதவன் என்றும், அதே சமயத்தில் பெரியோர்களை வணங்கி மகிழும் பண்பினன் என்றும் அரிசில் கிழார் பாடி மகிழ்கிறார்.

உயிர்போற் றலையே செருவத் தானே
கொடைபோற் றலையே இரவலர் நடுவண்
பெரியோர் பேணிச் சிறியோரை அளித்தி

—9 : 1-3

சேருடைய வீரர்களைப் பற்றிக் கபிலர் குறிப்பிடும் செய்தி பெரிதும் நினைவில் போற்றத்தக்கதாகும். சேரர் படை மாற்றானுடைய மதிலைத் தாக்கிப் பகைவன் தலைநகரத்தைப் பிடிக்க முயலுகிறது. மதிற் போரில் உழிஞைப் போரில் வெற்றி கண்டு கோட்டையின் உள்ளே நுழைந்த பின்னரே அடுத்த வேளை உண்ணுவது என்று உறுதி மேற்கொள்கிறது.

வெல்வரி நிலைஇய எயிலெரிந் தல்லது
உண்ணாது அடுக்கிய பொழுதுபல கழிய
எயிலெறிந் துண்ணும் நெஞ்சுபுகல் ஊக்கத்தர்

—8 : 5-7

அடிகளிலும், வேலூரிலிருந்து ஆமூர் செல்லும் வழியில் உள்ள மருத நில வருணனையை 178-195 வரை உள்ள அடிகளிலும் அமைக்கின்றார். கிடங்கில் நகர்ச்சிறப்பை 196-202 வரை உள்ள அடிகள் மொழிகின்றன. நல்லியக் கோடனின் இயல்புகள் 203-220 வரை உள்ள அடிகளில் கூறப்படுகிறது. யாழை இசைத்து அவன் சிறப்பினைப் பாட அவன் சிறுபாணனை உபசரித்துக் கொடை வழங்கிய செய்தியை 221-269 வரை உள்ள அடிகளால் தெளியலாம்.

பெரும்பாணாற்றுப்படை

காஞ்சியிலிருந்து அரசுபுரிந்த தொண்டைமான் பால் பரிசில் பெற்ற மீண்ட பாணன் ஒருவன் வறுமையால் வாடி வழியில் வந்த மற்றொரு பாணனை அத்தொண்டைமான் பால் ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது. வந்த பாணன் பேரியாழினைக் கொண்டிருந்தமையின் பெரும்பாணாற்றுப் படை எனப்பட்டது. 500 அடிகளால் அமைந்தது. ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

பெரும்பாணாற்றுப்படை அமைப்பு

முதுவேனில் வருணனை, பேரியாழ் வருணனை, பெரும்பாணன் வறுமை இவை 22 அடிகளில் சித்திரிக்கப் படுகின்றன, பரிசில் பெற்ற பாணன் வறுமை நீங்கிப் பரிசில் பெற்று வரல், இளந்திரையன் சிறப்பு முதலியன 23 - 45 வரை உள்ள அடிகளில் பேசப்படுகின்றது. காஞ்சிக்குச் செல்லும் வழிகள், உமணர், வணிகர், வழிகள் மிளகு வாணிகம், உல்குடைப் பெருவழி, அரண்கள், முல்லைநில வருணனை, மருதநில வருணனை, மருதநிலத்தில் வலையர், பாணர் வாழ்க்கை, மறையவர் உறைபதி, நீர்ப்பெயற்று, பட்டினவளம் இவற்றை 46 முதல் 351 வரை உள்ள அடிகளில் விரிக்கின்றார். பட்டினத்திலிருந்து காஞ்சி

செல்லும் வழியில் தோப்புக் குடிகள், பேரூர்கள், வள்ளிக் கூத்தாடும் மக்கள் உள்ள சிற்றூர்கள், இவற்றுக்கப்பால் உள்ள திருவெஃகா, அங்குள்ள அடர்ந்த சோலை, நீர்வளம், அப்பால் உள்ள கச்சிமூதூர் இவை 352 முதல் 392 வரை உள்ள அடிகளில் சிறப்பித்து உரைக்கப்படுகின்றன. 393-411 வரை உள்ள அடிகள் காஞ்சியின் புகழ் பாடுகின்றன. இளந்திரையன் வீரம், அரசிகள் அவனைப் பாராட்டல், உபசரிப்பு, கொடைச்சிறப்பு இவற்றை 411 முதல் 500 வரை உள்ள அடிகளில் குறிக்கின்றார்.

கூத்தராற்றுப்படை

மலையை யானையாகவும், மலையில் தோன்றிய ஓசைகளை மதநீர் பாயும் ஓசையாகவும் உருவகித்து 'மலைபடுகடாஅம் மாதிரத்தியம்ப' என்று கூறியுள்ளமையால் இது மலைபடுகடாம் எனவும் என்று கூறியுள்ளமையால் இது மலைபடுகடாம் எனவும், பரிசில் பெற்று வந்தால் ஒருவன் வழியிற் கண்ட கூத்தன் ஒருவனை ஆற்றுப்படுத்தியமையாற் கூத்தராற்றுப்படை எனவும் பெயர் பெற்றது. இது செங்கண் மாவைத் தலைகராகக் கொண்ட நன்னனின் மகனாய நன்னன் மீது பாடப்பட்டது. 5:3 அடிகளை உடையது. இதனைப்பாடியவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்.

முதல் 11 அடிகளில் இசைக்கருவிகள் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. 11 முதல் 20 வரை உள்ள அடிகளில் கூத்தனை எதிர்ப்பட்ட வழியின் இயல்பு கூறப்படுகிறது. கூத்தர் கைக்கொண்ட பேரியாழின் இயல்புகளை 21 முதல் 37 வரை உள்ள அடிகள் சிறப்பிக்கின்றன. 46 முதல் 50 வரை உள்ள அடிகள் கூத்தனின் இருக்கையையும், 51 முதல் 53 வரை உள்ள அடிகள் பரிசில் பெற்றுவரும் கூத்தன் நிலைமையையும் விரிக்கின்றன. நன்னன் சேய் நன்னன் பெருமையை 53 முதல் 94 வரை உள்ள அடிகள் விளக்கு

கின்றன. நாட்டு வளத்தினை 94 முதல் 144 வரை உள்ள அடிகள் காட்டுகின்றன. கூத்தர் பெறும் சிறப்பு, காவலர் சிறுகுடி, பாக்கத்தில் உள்ளோர் விருந்தோம்பும் சிறப்பு, இவற்றை 144 முதல் 185 வரை உள்ள அடிகள் உணர்த்து கின்றன. அவன் மலைநாட்டின் சிறப்பும் அம் மலையில் எழும் ஓசைகளும் 183 முதல் 348 வரை உள்ள அடிகளில் சிறப்பித்து உரைக்கப்படுகின்றன. கூத்தர் செல்லும் வழியின் இயல்பினை 349 முதல் 448 உள்ள அடிகளில் விளக்கு கின்றார். மருதநில வளம், சேயாற்றின் சிறப்பு, நன்னன் நாட்டின் மூதூர்ச்சிறப்பு, நன்னன் வேண்மானின் கோபுர வாயில் சிறப்பு இவை 449 முதல் 491 வரை உள்ள அடிகளில் விவரிக்கப்படுகின்றன. கோபுரவாயிலில் உள்ளார் உபசரிக்கும் முறையினை 492 முதல் 497 வரை உள்ள அடிகள் உணர்த்து கின்றன. கோபுரவாயிலில் காணப்படும் கையுறைப் பொருள் களை 498 முதல் 526 வரை உள்ள அடிகள் குறித்து நிற்கின்றன. கூத்தன் நன்னன்பாற் செல்லும் முறை, நன்னன் வேண்மானைப் புகழும் முறை, நன்னன் வேண்மானின் இயல்புகள், அவன் பரிசிற் சிறப்பு இவற்றை 527 முதல் 583 வரை உள்ள அடிகள் தெளிவாக்குகின்றன.

இதில் குறிஞ்சி நிலப்பகுதியில் முல்லை, பாலை, மருத நிலங்கள் இருப்பதாகப் பாடியுள்ளார். மலையில் புல்வெளி யுள்ள பகுதி முல்லை, கற்களும், பாறைகளும் நிறைந்த பகுதி பாலை, தினை விளையும் பகுதி குறிஞ்சி, கரும்புநெல் பயிராகும் ஆற்றுப்பகுதி மருதம் என மலை மீதுள்ள விளைவு களைக் கொண்டு நானிலங்களாகப் பகுத்துக் கூறியுள்ளார்.

நான்கு ஆற்றுப்படைகளிலும் பொதுச் செய்திகள்

1. நான்கு ஆற்றுப்படைகளிலும் பொருநன், பாணன், கூத்தன் இவர்களுடன் சென்றோர் வறுமைநிலை அறியப் படுகிறது.

2. இவர்கள் கைக்கொண்ட இசைக்கருவிகள் பற்றிய குறிப்புகளைத் தெளிய முடிகிறது.

3. பரிசில் பெற்ற பாணன் வள்ளலைக் காணுமுன் இருந்த வறுமைநிலை பரிசில் பெற்ற பின் பெற்ற செல்வ நிலை இவற்றை அறியமுடிகிறது.

4. புரவலன் இயல்புகள், அவன் தலைநகரத்துக்குச் செல்லும் வழி, தலைநகர்ச் சிறப்பு, ஆண்டுள்ளோர் வரவேற்பு, விருந்தோம்பற் சிறப்பு, பரிசு வழங்கல் இவற்றைத் தெளியமுடிகிறது.

"ஒவ்வோர் ஆற்றுப்படையிலும் கூறியவழி சுற்றுவழி யாகவே உள்ளது. அவ்வழி அக்காலமக்கள் பயணம் செய்த வழியாயிருந்திருக்கலாம் (அல்லது) ஐவகை நில வருணனையை ஆற்றுப்படையிற் புகுத்திக் கூறவேண்டும் என எண்ணி அவற்றை உள்ளடக்கிய சுற்று வழியாகவும் இருக்கலாம். உண்மை இப்பொழுது அறியுமாறில்லை" எனவும், "ஒவ்வொரு வழியிலும் அவ் வழியைக் கூறிய புலவர் கள் ஐவகை நில வருணனையை விடாமற் கூறியிருப்பதைக் காண இவ் வழிகள் புலவர் கற்பனை வழிகள் ஆகலாம் என்று கருதுதல் தரும்" எனவும் டாக்டர் மா. இராசமாணிக்கனார் அவர்கள் தம் பத்துப்பாட்டு ஆராய்ச்சி என்ற நூலில் குறிக்கின்றார்.

திருமுருகாற்றுப்படை

இது புலவராற்றுப்படை எனவும் கூறப்படும். இது தொல்காப்பியர் காலத்தும் அதற்கு முன்னும் காணப்படாதது. மனிதனைத் தெய்வத்திடம் ஆற்றுப்படுத்தும் நிலை அக் காலத்தில் அறவே இல்லை. இந்நூல் வீடுபேறு பெற விரும்பிய புலவன் ஒருவனை அப்பேறு பெறும் வகை அறிந்த புலவன் ஒருவன் முருகன்பால் ஆற்றுப்படுத்துவதாக அமைந் துள்ளது. இதனைப் பாடியவர் நக்கீரர். சங்க காலத்திற்குப் பின்னும் அப்பர், சம்பந்தர் காலத்திற்கு முன்னும் பாடப் பட்டதாக இருக்கலாம் என்பது டாக்டர் மா. இராச

மாணிக்கனார் அவர்கள் கருத்து. இது 317 அடிகளை உடையது.

மலைநாட்டுக் குரியவன் முருகன் என்பதை உணர்த்த வளம் மிகுந்த மலை ஒன்று சிறப்பிக்கப்படுகின்றது. முருகன் விரும்பிக் குடிகொண்ட ஆறுபடை வீடுகள் பேசப் படுகின்றன. முதற்பகுதியில் முருகன் திருவுருவச் சிறப்பு, அவன் மாலை விசேடங்கள், சூரர மகளிர் செயல்கள், முருகன் சூரரை வென்றமை, மதுரைச் சிறப்பு, திருப்பரங் குன்றம் இயற்கை வளம் (1 - 77) இவை குறிக்கப் படுகின்றன. இரண்டாம் பகுதியில் யானை இயல்பு, ஆறுமுகம் செயல்கள், திருச்சீர் அலைவாயில் அவன் இருத்தல் (78 - 125) முதலியன பேசப்படுகின்றன. மூன்றாம் பகுதியில் முனிவர் ஒழுக்கம், தேவமகளிர் இயல்புகள், திருமால் முதலியவர்கள் பற்றிய செய்திகள் இடம் பெறுகின்றன. நான்காம் பகுதியில் அந்தணர் இயல்பு, அவர்கள் திருவேரகத்தில் முருகனை வழிபடும் முறை (177 - 189) இவை சித்திரிக்கப்படுகின்றன. ஐந்தாம் பகுதி யில் குன்றக் குரவை, வழிபடும் மகளிர், ஆடுமகளிர், பாடுமகளிர் இயல்புகள், இவற்றைக் (190 - 217) காணலாம். ஆறாம் பகுதியில் முருகன் எழுந்தருளிய இடங்கள், அவனைத் துதிக்கும் முறை, அப் பெருமானிடம் சென்று அருள் பெறும்வழி, தொண்டர்தம் இயல்புகள், முருகன் அருள்புரியும் முறை, பழமுதிர் சோலைவளம் ஆகியன கூறப் பட்டுள்ளன. இந்த முறை வைப்பு பொருநராற்றுப்படை முதலிய ஆற்றுப்படைகளில் காணப்படவில்லை.

மற்ற ஆற்றுப்படைகள் எல்லாம் ஆற்றுப்படுத்தப் பட்டவரது பெயரால் அமைந்தனவாகும். திருமுருகாற்றுப்படை அவ்வாறு அமையாமல் பாட்டுடைத் தலைவன் பெயரால் அமைந்துள்ளது. புலவராற்றுப்படை பற்றி "புலவராற்றுப்படை புத்தேட்கும் உரித்தே' எனக் குறிக்கின்றது பன்னிருபாட்டியல்,

புறப்பொருள் காட்டும் ஆற்றுப்படை

சங்க இலக்கியத்தில் காணப்படும் ஆற்றுப்படைகளுக்கு விளக்கம் தரும் நூல் புறப்பொருள் வெண்பாமாலையே. தொல்காப்பியர் ஆற்றுப்படை பற்றிக் குறித்துச் செல்கின்றாரே தவிர அவற்றிற்கு எனத் தனி இலக்கணம் வகுக்கவில்லை. ஆற்றுப்படை இலக்கியத்திற்கு மட்டும் தனி இலக்கணம் வகுத்துச் செல்கின்றார். புறப்பொருள் வெண்பாமாலை பாடாண்திணை பற்றி விளக்கிக் கூறுகையில் நான்கு ஆற்றுப்படைகளுக்கும் இலக்கணம் கூறிச் செல்கிறது.

சேணோங்கிய வரையதனிற்
பாணனை ஆற்றுப்படுத்தன்று

எனப் பாணாற்றுப்படையையும்,

ஏத்திச் சென்ற இரவலன்
கூத்தரை ஆற்றுப்படுத்தன்று

எனக் கூத்தராற்றுப் படையையும்,

பெருநல்லான் உழையீராகெனப்
பொருநனை ஆற்றுப்படுத்தன்று

எனப் பொருநராற்றுப்படையையும்,

திறல் வேந்தன் புகழ்பாடும்
விறலியை ஆற்றுப் படுத்தன்று

என விறலியாற்றுப் படையையும் விளக்கி நிற்கின்றது.

இதனையடுத்துக் கலம்பகம், தனிப்பாடல்களிலும் தனிச் செய்யுட்களாக வந்துள்ளன. பிற்காலத்தில் வேறொரு புலவராற்றுப்படை, திருத்தணிகை ஆற்றுப்படை திருப்பாணாற்றுப்படை முதலியன இயற்றப்பட்டுள்ளன.

நிறைவுரை

இவ்வாறாகத் தொல்காப்பியத்தில் வித்திடப் பெற்ற ஆற்றுப்படை புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் சில பாடல்களாக முகிழ்ந்து பத்துப்பாட்டில் பலநூறு வரிகளைக் கொண்ட தனித்தனி ஆற்றுப்படைகளாக மலர்ந்தன. இவ்வாற்றுப்படை இலக்கியத்திற்குப் புறப்பொருள் வெண்பா மாலை என்ற நூல் இலக்கணம் வகுக்கிறது. புறப்பொருள் வெண்பாமாலையோடு இவ்வாற்றுப்படை மரபு மறைந்து விடவில்லை. பிற்காலத்தும் சில ஆற்றுப்படை இலக்கியங்கள் தோன்றி ஆற்றுப்படை மரபினைக் காத்தமையைப் புலவராற்றுப்படை முதலிய நூல்கள் காட்டுகின்றன. இவ்வாறாக 'ஆற்றுப்படை இலக்கியங்கள்' இலக்கிய உலகில் தனித்த ஓர் இடத்தைப் பெற்று மிளிர்கின்றன.

7. பாடாண் திணை

பாடாண் - விளக்கம்

ஒரு மன்னனின் இசை, வலிமை, தண்ணளி, வண்மை முதலியவற்றைப் புகழ்ந்து பாடுதல் பாட்டு ஆகும். பாடாண் என்னும் சொல்லுக்குப் பாடப்படுகின்ற ஆண்மகனுடைய ஒழுகலாறு என்பது பொருள் என்றும் இது வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை எனவும் கூறுவர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். தொல்காப்பியனார் இப் பாடாண் பகுதியை ஒன்பது நூற்பாக்களில் விளக்கிச் செல்கின்றார். முதலில் பாடாண் பகுதி கைக்கிளை என்ற அகத்திணைக்குப் புறனாகும் எனவும், ஆய்ந்து நோக்குமிடத்து அது எட்டுவகையினை உடையது என்பதனையும்,

> பாடாண்பகுதி கைக்கிளைப் புறனே
> நாடுங் காலை நாலிரண் டுடைத்தே (78)

என்ற நூற்பாவழி விளக்குகின்றார். எட்டுவகையாவன இன்னின்ன என்பதை இளம்பூரணர் கடவுள் வாழ்த்து வகை, வாழ்த்தியல்வகை, மங்கலவகை, செவியறிவுறுத்தல், ஆற்றுப்படை வகை, பரிசிற்றுறை வகை, கைக்கிளை வகை, வசை வகை என்பவற்றைக் குறிக்கின்றார்.

அமரர்கண் முடியும் கொடிநிலை, கந்தழி, வள்ளி, புலவராற்றுப் படை, புகழ்தல், பரவல் முதலிய ஆறும் கடவுட் புகழ்ச்சியின்றிப் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல். குற்றம் தீர்ந்த காமப் பகுதியிற் பாடும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வருதல் என்ற இவ்விரு வகை

யானும் ஒருவனைப் புகழ்ந்து பாடுவதும் பாடாண் பாட்டே என்பதை,

அமரர்கள் முடியும் அறுவகையானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப (79)

என்ற தொல்காப்பிய நூற்பாவழித் தெளியலாம்.

பாடாண் பகுதியை இவ்விரு நூற்பாக்களிலும் விளக்கியவர் அடுத்துச் சிலபொருட்கள் வரும் வேறுபாட்டினை உணர்த்துகின்றார்.

அதாவது பாடாண் பாட்டின்கண் வரும் செய்யுள் வரையறையை உணர்த்துகிறார்.

அதாவது தேவபாணியும், அகப்பொருள் பாடும் பாட்டும் இசைத்தமிழில் வரையறுத்து ஓதப்பட்டதுபோல வழக்கியல் மருங்கின் வகைபெற நிறுத்திப் பரவலும் புகழ்ச்சியும் கருதிய பக்கத்தினும் முன்னோர் கூறிய காமக்குறிப்பினும் செந்துறைப் பாட்டிற்கு உரிய செய்யுள் இவை என்று உரைத்தல் இல்லை என்பதை,

வழக்கியல் மருங்கின் வகைபட நிலைஇப்
பரவலும் புகழ்ச்சியும் கருதிய பாங்கிலும்
முன்னோர் கூறிய குறிப்பிலும் செந்துறை
வண்ணப் பகுதி வரைவின்றாங்கே (80)

என்ற நூற்பாவில் தெளிவாக்குகின்றார்.

புரைதீர் காமம் புல்லிய வகையான் வரும் பாடாண் பாட்டு கடவுள் மாட்டும் வரும்; ஏனையோர் மாட்டும் வரும் என்பதை,

காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர் (81)

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்கி நிற்கின்றது.

'காமப்பகுதி கடவுளும் வரையார்' என்பதற்கு விளக்கம் தரவரும் இளம்பூரணர், 'கடவுள் மாட்டுத் தெய்வப் பெண்டிர் நயந்த பக்கமும், மானிடப் பெண்டிர் நயந்த பக்கமும் என்றவாறு' எனக் குறிக்கின்றார்.

'அது கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயப்பனவும், அவர்மாட்டு மானிடப் பெண்டிர் நயப்பனவும், கடவுள் மானிடப் பெண்டிரை நயப்பனவும் பிறவும் ஆம்' என்பது நச்சினார்க்கினியர் உரை.

காமப்பகுதி கடவுள் மாட்டும் ஏனையோர் மாட்டும் மட்டுமன்றிக் குழவிப் பருவத்தும், ஊரின்கண் காமப்பகுதி நிகழ்த்தலும் உரித்து என்பதை,

குழவி மருங்கினும் கிழவ தாகும்
ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப
வழக்கொடு சிவணிய வகைமை யான

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள்வழித் தெளிவாக்குகின்றார் ஆசிரியர் தொல்காப்பியனார்.

கொற்ற வள்ளையும் ஓரிடத்தான

என்பதனால் புகழ்தல் கருத்தாயின் கொற்றவள்ளையும் பாடாண்பாட்டாம் என்பது பெறப்படுகிறது.

அடுத்து அமரர்கண் முடியும் அறுவகையான் வரும் பாடாண் பாட்டில் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் பாட்டுடைத் தலைவனைச் சார்த்தி வரும்போது கடவுள் வாழ்த்தொடு வரும் என அதன் மரபு உணர்த்து கின்றார்.

கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே

என்பது தொல்காப்பிய நூற்பா.

பாடாண்திணையின்கண் இயற்பெயர் இடம்பெறுமாற்றை,

மெய்ப்பெயர் மருங்கின் வைத்தனர் வழியே

என்ற தொல்காப்பிய நூற்பா விளக்கி நிற்கிறது.

இவ்வாறாகத் தொல்காப்பியனார் ஒன்பது நூற்பாக்களில் பாடாண் பாட்டினை விளக்கிச் செல்ல புறப்பொருள்வெண்பா மாலை ஆசிரியர் ஐயனாரிதனார்,

ஒளியும் ஆற்றலும் ஓம்பா ஈகையும்
அளியும் என்றிவை ஆய்ந்துரைத் தன்று

என்ற ஒரே கொளுவின் மூலம் உணர்த்திச் செல்கின்றார். அதாவது ஒரு மன்னனுடைய புகழும் வலியும் பொருளைத் தனக்கெனப் பாதுகாத்துக் கொள்ளாத வள்ளன்மையும் அருளுடைமையும் என்று கூறப்பட்ட இவற்றை ஆய்ந்து கூறுவது பாடாண்திணை என்பது இதன் பொருள்.

பாடாண்திணையின் துறைகள்

பாடாண்திணையின் துறைகளைப் பற்றித் தொல்காப்பியர் இரண்டு நூற்பாக்களில் கூறிச் செல்கின்றார். முதல் நூற்பாவில் பத்துவகைத் துறைகளைக் குறிக்கின்றார்.

1. கொடுப்போர் ஏத்தக் கொடார்ப் பழித்தல்.
2. வெற்றிச் சிறப்பாலும் குணச் சிறப்பாலும் உயர்ந்து நிற்போரைப் புகழ்ந்து கூறும் இயன்மொழி வாழ்த்து.
3. சேய்மைக்கண்ணின்று வருகின்ற வருத்தம் தீர வாயிற்காவலருக்கு உரைத்த வாயில் நிலை.
4. அரசன் இனிது துயில்கின்ற நிலைகூறும் கண்படை நிலை.
5. கபிலநிறப் பசுவினைக் கொடுக்கக் கருதிய வேள்வி நிலை.

6. விளக்கு ஏதுவாக வேலின் வெற்றியைக் காட்டுதல்.
7. வாயுறை வாழ்த்து.
8. செவியறிவுறூஉ.
9. புறநிலை வாழ்த்து.
10. கைக்கிளை.

என்பன. இவற்றில் கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் என்றது கொடுப்போர் ஏத்தல் எனவும், கொடார்ப் பழித்தல் எனவும், கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தல் எனவும் மூவகைப்படும் என்பது இளம்பூரணர் உரை.

இவ்வாறே இயன்மொழி வாழ்த்தும், இயல்மொழி எனவும், வாழ்த்து எனவும், இயல்மொழி வாழ்த்து எனவும் மூவகைப்படும் எனவும் குறிக்கின்றார் அவர்.

கொடுப்போர் ஏத்திக் கொடார்ப் பழித்தலும்
அடுத்தூர்ந் தேத்திய இயல்மொழி வாழ்த்தும்
சேய்வரல் வருத்தம்விட வாயில்
காவலர்க் குரைத்த கடைநிலை யானும்
கண்படை கண்ணிய கண்படை நிலையும்
வேலை நோக்கிய விளக்கு நிலையும்
வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூஉம்
ஆவயின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையொடு உளப்படத் தொகைஇத்
தொக்க நான்கும் உளவென மொழிப

என்பது தொல்காப்பிய நூற்பா.

மற்றொரு நூற்பாவில் மேலும் சில துறைகளைக் குறித்துச் செல்கின்றார்.

1. தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய துயிலெடை நிலை.
2. கூத்தராற்றுப்படை.
3. பொருநராற்றுப்படை.
4. விறலியாற்றுப்படை.
5. பாணாற்றுப்படை.
6. சிறந்த நாட்கள் உண்டாக்கிய செற்றத்தை நீக்கிப் பிறந்த நாட்கள் உளதாகிய பெருமங்கலம்.
7. ஆண்டுதோறும் முடி புனையும் வழி நிகழும் மிகப் புண்ணிய நீராட்டு மங்கலம்.
8. பகைவரைக் கருதிய வாள்மங்கலம்.
9. நிலைபெற்ற மதிலை ஒழித்த மண்ணு நீராடு மங்கலம்.
10. பரிசில் கடாவுதலாகிய கடைக்கூட்டு நிலை.
11. பரிசில் பெற்ற பின்வரும் அவன் கொடுத்த மிக்க வளனை ஏத்தி வழக்கின்கண் தோன்றிய இரு வகை விடை.
12. அச்சமும் உவகையும் ஒழிவின்றி நாளாலும் புள்ளாலும் பிற நிமித்தத்தாலும் காலத்தைக் குறித்த ஓம்படை.

என்பனவும் பாடாண் திணையின் துறைகள்.

தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்
கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்
சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்

சிறந்த சீர்த்தி மண்ணுமங் கலமும்
நடைமிகுதது ஏத்திய குடைநிழல் மரபும்
மாணார்ச் சுட்டிய வாள்மங்கலமும்
மன்எயில் அழித்த மண்ணு மங்கலமும்
பரிசில் கடைஇய கடைக்கூட்டு நிலையும்
பெற்ற பின்னரும் பெருவளன் ஏத்தி
நடைவயின் தோன்றிய இருவகை விடையும்
அச்சமும் உவகையும் எச்சம் இன்றி
நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலம் கண்ணிய ஓம்படை உளப்பட
ஞாலத்து வரூஉம் நடக்கையது குறிப்பின்
காலம் மூன்றொடு கண்ணிய வருமே

என்பது தொல்காப்பிய நூற்பா.

இவ்வாறாகத் தொல்காப்பியனார் பாடாண்திணையின் துறைகளாக 22 துறைகளைக் குறிக்கின்றார். புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் நாற்பத்தேழு துறைகளைக் குறிக்கின்றார். அவை.

1) வாயில்நிலை 2) கடவுள் வாழ்த்து 3) பூவை நிலை 4) பரிசில் துறை 5) இயன்மொழி வாழ்த்து 6) கண்படை நிலை 7) துயிலெடை நிலை 8) மங்கல நிலை 9) விளக்கு நிலை 10) கபிலை கண்ணிய புண்ணிய நிலை 11) வேள்வி நிலை 15) வெள்ளி நிலை 13) நாடு வாழ்த்து 14) கிணை நிலை 15) களவழி வாழ்த்து 16) வீற்றினிதிருந்த பெரு மங்கலம் 17) குடுமி களைந்த புகழ்சாற்று நிலை 18) மண மங்கலம் 19) பொலிவு மங்கலம் 20) நாள் மங்கலம் 21) பரிசில் நிலை 22) பரிசில் விடை 23) ஆள்வினை வேள்வி 24) பாணாற்றுப்படை 25) கூத்தராற்றுப்படை 26) பொருநராற்றுப்படை 27) விறலியாற்றுப்படை 28) வாயுறை வாழ்த்து 29) செவியறிவுறூஉ 30) குடை மங்கலம் 31) வாள் மங்கலம் 32) மண்ணு மங்கலம் 33) ஓம்படை 34) புறநிலை வாழ்த்து 35) கொடிநிலை 36) கந்தழி 37) வள்ளி 38) புலவராற்றுப்படை

39) புகழ்ந்தவர் பரவல் 40) பழிச்சினர் பணிதல் 41) கைக்கிளை 42) பெருந்திணை 43) புலவி பொருளாகத் தோன்றிய பாடாண் பாட்டு 44) கடவுள் மாட்டுக் கடவுட் பெண்டிர் நயந்த பக்கம் 42) கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் 46) குழவிக் கண் தோன்றிய காமப்பகுதி 47) ஊரின்கண் தோன்றிய காமப்பகுதி என்பன புறப்பொருள் வெண்பாமாலை ஆசிரியர் காட்டும் பாடாண் திணைத் துறைகள்.

ஐந்து துறைகள் விளக்கம்

மேற்கூறிய துறைவகைகளில் இயன்மொழி, கடைநிலை பரிசில்விடை, பரிசில் துறை, வாழ்த்தியல் (பாடப்பகுதியில் இடம் பெறுவன) என்ற ஐந்து துறைகளுக்குரிய விளக்கத்தை மட்டும் காண்பதே இப்பகுதி.

இயன் மொழி

தொல்காப்பியத்தில் கூறப்படும் துறைகள் பற்றிய விளக்கம் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் அளவிற்கு விளக்கமாக அமையவில்லை. தொல்காப்பியம் இயன்மொழி வாழ்த்தைப் பற்றிக் குறிக்கும்போது, வெற்றியினாலும் குணச் சிறப்பினாலும் உயர்ந்து நிற்போரைப் புகழ்ந்து கூறும் இயன்மொழி வாழ்த்து எனக் குறிக்கிறது.

அடுத்தூர்ந்தேத்திய இயன்மொழி வாழ்த்து

என்பது தொல்காப்பியம். இயன்மொழி வாழ்த்தைப் பற்றிப் புறப்பொருள் வெண்பாமாலை விரிவாகக் கூறுகிறது.

'இன்ன வள்ளல் இன்ன பொருளை வழங்கினர் நீயும் அவ்வள்ளலைப் போன்று எமக்கு வழங்குவாயாக' என இரவலன் புரவலனுக்குக் கூறுவதும், ஒரு வேந்தனது தன்மையைக் கூறிப் புகழ்வதும் இயன்மொழி வாழ்த்து என்பதை.

இன்னோர் இன்னவை கொடுத்தார் நீயும்
அன்னோர் போல அவைஎமக் கீகென
என்னோரும் அறிய எடுத்துரைத்தன்று
மயலது சீர்த்தி மான்தேர் மன்னவன்
இயல்பே மொழியினும் அத்துறையாகும்

என்ற கொளுக்களில் உணர்த்துகின்றார் ஆசிரியர் ஐயனாரிதனார்.

பரிசில் விடை

தொல்காப்பியத்திலேயே இத்துறை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. புலவன் ஒருவன் பரிசில் பெற்ற பின்னரும், அவன் கொடுத்த மிக்கவளனை ஏத்தி வழக்கின்கண் தோன்றிய இருவகை விடையும் இருவகை விடையாவன தான் போதல் வேண்டும் எனக் கூறுதலும், அரசன் விரும்பப் போதலும் என்பன என்பது இளம்பூரணர் கருத்து.

பெற்றபின்வரும் பெருவளன் ஏத்தி
நடைவயில் தோன்றிய விருவகை விடையும்

என்பது தொல்காப்பியம்.

வேந்தன் உள்ளம் மகிழுமாறு அவனது வெற்றியால் உண்டாய புகழைக் கூறிய பரிசிலர்க்குப் பொருள் வழங்கி விடை கொடுத்தது பரிசில் விடை என்னும் துறை என்பது புறப்பொருள் வெண்பாமாலை காட்டும் பரிசில் விடைத் துறை விளக்கம். இதனை,

வேந்தன் உள்மகிழ வெல்புகழ் அறைந்தோர்க்கு
ஈந்து பரிசில் இன்புற விடுத்தன்று

என்ற கொளுவால் தெளியலாம்.

பரிசில் துறை

புரவலன் காவல் தொழிலையுடைய வேந்தன் முன்னர்ச் சென்று தான் பெறக் கருதிய பரிசில் "இது" எனக் கூறியது பரிசில் துறையாம்.

மண்ணகங் காவல் மன்னன் முன்னர்
எண்ணிய பரிசில் இதுவென உரைத்தன்று

என்பது புறப்பொருள் வெண்பாமாலை.

கடை நிலை

தொல்காப்பியம் இத்துறையினைப் பற்றிக் கூறுகையில் சேய்மைக் கண்ணின்று வருகின்ற வருத்தம் தீர வாயில் காவலர்க்கு உரைப்பது வாயில்நிலை எனக் குறிக்கின்றது. இதனை,

சேய்வரல் வருத்தம் விட வாயில்
காவலர்க்கு உரைத்த கடைநிலை

என்ற தொல்காப்பிய வரிகளால் தெளியலாம். புறப்பொருள் வெண்பாமாலை,

புரவலன் நெடுங்கடை குறுகிய என்னிலை
கரவின்று உரையெனக் காவலற்கு உரைத்தன்று

என இத்துறையை விளக்குகின்றது. அதாவது அரசனது நெடியவாயிலை அடைந்த புரவலன் தமது வருகையினை மன்னனுக்குச் சென்று சொல்லுக என வாயில் காவலனுக்குக் கூறுவது வாயில்நிலை என்பது இதன் கருத்து.

வாழ்த்தியல்

தொல்காப்பியத்தில் வாழ்த்தியல் என்ற ஒரு துறை தனியாக விளக்கப்படவில்லை. பாடாண்திணைக்குரிய

எட்டு வகைகளுள் வாழ்த்தியல் வகை என்ற ஒன்றை இளம்பூரணர் குறித்துச் செல்கின்றார். புறப்பொருள் வெண்பாமாலையும் 'வாழ்த்தியல்' என ஒரு துறையைத் தனியே குறிப்பிடவில்லை.

நிறைவுரை

இவ்வாறாகத் தொல்காப்பியனாரும், ஐயனாரிதனாரும் பாடாண்திணையையும், அதன் துறைகளைப் பற்றியும் விளக்கிச் செல்கின்றனர்.

8. தமிழ் இலக்கியங்களில் கதிரவன்

"முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் பேர்த்தும் அப்பெற்றியதான மொழி தமிழாகும். இம் மொழியில் எழுந்துள்ள இலக்கியங்கள் தொன்மையும் சிறப்பும்கொண்டு துலங்குகின்றன. பழந்தமிழ் இலக்கியங்கள் தொடங்கி, இற்றைநாள் எழும் இலக்கியங் கள் வரை இயற்கையைப் பரவிப்போற்றி நிற்கக் காணலாம். சங்கத் தமிழகத்தே நாவீறு பெற்றுத் திகழ்ந்த நக்கீரர் முதல் இன்று வரை—அண்மைக்காலம்வரை நம்மிடையே வாழ்ந்து மறைந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரை வாழ்ந்த தமிழ்க் கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் இயற்கை வருணனைக்கென்ற இடம் ஒதுக்கியிருப்பதைக் காணலாம். இயற்கை மக்களுக்கு அளித்த கொடைகள் பலவென்றாலும் அவற்றுள் கதிரவன் தலையாய இடம் பெறுகிறான். கண்ணுள்ளவன் கதிரவனைக் காணாது இருக்க முடியா தன்றோ?

எனவேதான் சைவர் வீடுகளில் இன்றும் பாராயண நூலாகப் படிக்கப் பெற்றுவரும் திருமுருகாற்றுப் படையின் தொடக்கமே கதிரவனின் காட்சியாக அமையுமாறு நக்கீரர் பெருமான் நவின்றிருக்கக் காணலாம்.

உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
—திருமுருகாற்றுப்படை : 1-2

இத் தொடக்கக் காட்சியின் சீர்மையே கண்களைக் கொள்ளை கொள்ளுகின்றது; நெஞ்சை அள்ளுகின்றது. உலகிலுள்ள மக்களெல்லாம் மகிழ்வதற்கு இடமாகக் கதிரவன் கடல் மீதிலிருந்து வான உச்சி முகட்டை நோக்கி எழுகிறான்; அப்போது அவன் பலரும் கையெடுத்துக் கும்பிடும் கடவுளாக—கதிரவனாக—'பலர் புகழ் ஞாயிறாக' விளங்கு கிறான் என்று நக்கீரர் பெருமான் கூறியிருப்பதனை நோக்கும்பொழுது நீலக்கடலே நீல மயிலாகவும், கோலக் கதிரவனே ஞானபண்டிதனாம் முருகனாகவும் காட்சியளிக் கும் வீறார்ந்த காட்சியினை விளங்க உரைத்திருக்கக் காணலாம்.

இது போன்றே இந் நூற்றாண்டில் வாழ்ந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழர்தம் பழமையைச் சுட்ட வரும் பொழுது தமிழ் மொழியின் தொன்மையைப் பொருத்தமுறப் பொருள்படக் கிளத்துகின்றார்.

தமிழ் நிலவுடனும், கதிருடனும், விண்ணுடனும், மேகத் துடனும், கடலுடனும், பிறந்ததாகவும், அத் தமிழ்மொழியைப் பேசும் தமிழர் உலகின் பழைமைப் பொருட்களாம் திங்கள், கதிரவன், வானம், நட்சத்திரங்கள், கடல், மேகங்கள் இவையே போன்று பழமை வாய்ந்தவர்கள் என்றும் இயைபு புலப்படுத்திப் பேசுகின்றார்.

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்
விண்ணோடும் உடுக்களோடும்
மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த
தமிழோடு பிறந்தோம் நாங்கள்
(—பாரதிதாசன் கவிதைகள்; முதல் தொகுதி)

என்கிறார்.

'கதிரவன்' என்ற சொல் முதன்முதலாக மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெற்றிருந்தாலும், ஞாயிறு, உருகெழு மண்டிலம், உருப்பு அவிர் மண்டிலம், செழுங்கதிர் மண்டிலம், காய்ந்து செலல் கனலி, காய்கதிர், அகன்சுடர்

விரைசெலல் திகிரி முதலான கதிரவனைக் குறிப்பிடும் சொற்கள் பழந்தமிழ் நூற்களிற் காணக் கிடக்கின்றன. மேலும், இளங்கதிர், ஒரு தனித் திகிரி, உலகு விளங்கு அவிரொளி, வெய்யவன், காய்கதிர்ச் செல்வன், பரிதியஞ் செல்வன், வெயிலிளஞ் செல்வன், பகலோன், நேமிவான் சுடர், வெஞ்சுடர் இகலி, பருதி, விரிகதிர்க் கடவுள், நிறை கதிர்க் கடவுள், நெடுந்தேர் இரவி, ஏழ்பரித் தேரோன் முதலான சொற்கள் பிற்காலக் காப்பியங்களில் கதிரவனைச் சுட்டும் பெயர்களாக நிலவுகின்றன.

கிழக்கே தோன்றி மேற்கே மறைபவன் கதிரவன் எனும் உண்மையினைப் பல இலக்கியங்கள் பகர்கின்றன. கதிரவன் கடலிடைத் தோன்றிப் 'பலர் புகழ் ஞாயிறா'கவும் 'உலகு தொழத் தோன்றி வயங்கு கதிர் விரித்த உருகெழு மண்டில' மாகவும் ஒளிர்வதை முறையே திருமுருகாற்றுப்படையும், குறிஞ்சிப்பாட்டும் குறிப்பிடுகின்றன. கதிரவன் மறையும் இடம் மலை என்று குறிஞ்சிப் பாட்டும் நற்றிணை நானூறும் பின்வருமாறு நவில்கின்றன:

எல்லை செல்ல ஏழூர்பு இறைஞ்சிப்
பலகதிர் மண்டிலம் கல்சேர்பு மறைய
—குறிஞ்சிப்பாட்டு : 215-216.

சேய் விசும்பு இவர்ந்த செழுங்கதிர் மண்டிலம்
மால்வரை மறையத் துறை புறம் பின்றே
—நற்றிணை : 67.

குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த இளங்கோவடிகள் 'உதயகிரி'யில் கதிரவன் தோன்றுவதை,

உதயமால் வரை உச்சித் தோன்றி
உலகுவிளங் கவிரொளி மலர்கதிர்பரப்பி
—சிலப்பதிகாரம்: 5 : 5-6

என்று குறிப்பிடுவதோடு, அக் கதிரவன் மறையுமிடமும் மலையென்றே பின்வருமாறு குறிக்கக் காணலாம்.

மல்லல் மாஞால மிருளூட்டி மாமலை மேற்
செல்வன் கதிர்சுருங்கிச் செங்கதிரோன்
சென்றொளிப்ப
—சிலப்பதிகாரம் : 19 : 30-32

கதிரவன் தோன்றுமிடமும் கடல்; மறையுமிடமும் கடல் என்று குறிப்பிடுவர், தொண்டர் சீர் பரவவல்ல சேக்கிழார் பெருமான்.

.........கருங்கடல்
மீது தேரின்வந்தெய்தினன் வெய்யவன்
—பெரிய: திருஞான : 209

இலகு பசும்புரவி நெடுந்தேர் இரவிமேல்கடலிற்
செலவணையும் பொழுதணையத் திருவதிகைப்
புறத்தணைந்தார்
பெரிய: தடுத்தாட்: 82

"ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்" என்று தம் நூலின் தொடக்கத்தே பாடிய இளங்கோவடிகள் பின்னரும்,

மலர்பொதி யவிழ்ந்த உலகுதொழு மண்டிலம்
வேந்துதலை பனிப்ப வேந்துவாம் செழிபயன்
ஓங்குயர் கூடலூர் துயிலெழுப்ப
—சிலப்பதிகாரம்; 14:4-9

என்று உலகோர் கதிரவனைத் தொழுது நின்ற காட்சியினையும் கதிரவன் மதுரை மாநகர மக்களை வைகறையில் துயிலெழுப்பிய காட்சியினையும் ஒருங்கே புலப்படுத்தியிருக்கக் காணலாம்.

இருளைப் போக்கி ஒளியைத் தந்து இறப்பை நீக்கி அமிர்தத்தை உலகுக்கு ஈபவன் கதிரவன், கதிரவனின் கதிர்கள் உலகில் மண்டி நிற்கும் இருளைப் போக்கவில்லை எனில் உலகில் எத் தொழிலும் நடவாது. இதனை அகநானூறு,

பயங்கெழு திருவின் பல்கதிர் ஞாயிறு
வயங்கு தொழில் தரீஇயர் வலனேர்பு விளங்கி

அகநானூறு : 298

என்று குறிப்பிடுகின்றது. நாளைப் பகுப்பவன் ஆதலின் பகலவன் என்ற பெயரும், பகற்பொழுதைத் தோற்றுவிக்கின்ற காரணத்தால் பகல்செய்வோனாகவும் கதிரவன் துலங்குகின்றான்.

பல்கதிர் மண்டிலம் செய் தாற்றி

—நற்றிணை; 69.

பகற்செய்யும் செஞ்ஞாயிறு

—மதுரைக் காஞ்சி; 7.

மேலும் கதிரவன் இருளைக் குடித்து ஒளியை உமிழ்கிறான்; அதாவது தீமையைத் தான் ஏற்று நன்மையைப் பிறர்க்கு நல்குகின்றான் என்கின்றது பெரும்பாணாற்றுப் படை.

—பெரும்பாணாற்றுப்படை: 2 - 1.

பயன் கருதாது பாரினைப் பகல் செய்து ஒளியூட்டி நிற்கும் கதிரவனைக் கவிஞர்கள் பலர் உவமை வாயிலாக வருணித்துச் சிறப்புச் சேர்த்துள்ளனர். 'புலனழுக்கற்ற அந்தணாளராம்' 'பொய்யா நாவிற்' கபிலர் கதிரவன் அகன்ற வானவீதியாகிய கடலிலே வலம் வரும் ஓடம் என்று உவமை சொல்லியிருப்பதனைக் காணலாம்.

அகலிரு விசும்பிற்கு ஓடம் போலப்
பகலிடை நின்ற பல்கதிர் ஞாயிறு

—குறிஞ்சிப்பாட்டு: 101 - 2.

பகல் முழுதும் கொடிய வெப்பத்தைக் கொடுத்துவிட்டு, மாலைக் காலத்தே வெப்பம் குறைந்து மேற்றிசையில் மலைக் கண் மறையும் கதிரவனைப் பாம்பு உண்ட சந்திரனுக்கு உவமை காட்டியிருக்கிறார் சங்கச் சான்றோர் ஒருவர்.

உரவுக்கதிர் மழுங்கிய கல்சேர்பு ஞாயிறு
அரவு நுங்கு மதியின் ஐயென மறையும்
—அகநானூறு: 114.

கடுமையான கதிர்களைக் கொண்டு கோடைக்காலத்தே கொளுத்தும் வெய்யிலைக் கூட்டும் கதிரவனுக்குக் கொடுங் கோலாட்சி செய்யும் வேந்தன் ஒருவன் இளங்கோவடிகளால் உவமை காட்டப்பட்டுள்ளான்.

கொடுங்கோல் வேந்தன் குடிகள் போலப்
படுங்கதிர் அமையம் பார்த்திருந்தோர்க்கு
—சிலப்பதிகாரம்: 13: 15 - 16.

கதிரவன் எப்பொழுது மேற்றிசையில் சாய்வான், நாம் நம் மதுரைப் பயணத்தைத் தொடரலாம் என்று நண்பகல் வெப்பத்திற்கு ஆற்றாது ஒதுங்கியிருந்த கோவலன், கண்ணகி, கவுந்தியடிகளுக்குக் கொடுங்கோலாட்சியின் கொடுமை எப்பொழுது மறையும் என்று சமயம் எதிர்நோக்கி யிருந்த குடிகள் உவமை கூறப்பட்டுள்ளார்கள்.

கதிரவன் கடலுக்குப் பொட்டு இட்டது போல் தோன்றிய தாகத் திருத்தக்கத்தேவர் சிந்தாமணிக் காப்பியத்தில் செப்பியுள்ளார்.

கடலணி திலகம் போலக்
கதிர்திரை முளைத்த தன்றே.
—சீவக; சுரமஞ்சரி; 2053.

மணிமேகலைக் காப்பியம் தந்த சீத்தலைச் சாத்தனார் கதிரவனை உயிர் வழங்கு பெருநெறிக்கு உவமை காட்டுவார். கதிரவன் இருப்பதை உணரலாம்; ஆனால் அவனைக் கண்ணெடுத்து நீண்ட நேரம் கண்களாற் காணல் இயலாது. அது போலவே உயிரின் தன்மையும் அமைந்து கிடக்கிறதாம். உயிரின் காட்சி, செலவு போன்றவற்றை உணர இயலுமே தவிர எடுத்துக்காட்ட வொல்லாது. கதிரவனைக் கண்ணாற்

கண்டு கூறல் அரிதாக இலங்குவது போல உயிர் வழங்கு பெருநெறியும் காட்டலாகாப் பொருளாக இரங்குகின்றதாம்.

தண்பனி விழுங்கிய செங்கதிர் மண்டிலம்
உண்டென உணர்தல் அல்ல தியாவதும்
கண்டினிது விளங்காக் காட்சி போன்றது
உயிர்வழங்கு பெருநெறி ஒருதிறம்பட்டது
—மணிமேகலை; 12: 63 - 65.

ஆபுத்திரனின் தோற்றம் கதிரவனின் காலைத் தோற்றத்திற்கு உவமை கூறப்பட்டிருப்பதனையும் காணலாம்.

குணதிசை தோன்றிக் காரிருள் நீத்துக்
குடதிசை சென்ற ஞாயிறு போல
மணிபல் லவத்திடை மண்ணுட ம்பிட்டுத்
தணியா மன்னுயிர் தாங்குங் கருத்தொடு
சாவக மாளும் தலைத்தான் வேந்தன்
ஆவயிற் றுதித்தனன் ஆங்கவன் தானென்
—மணி: 14: 99 - 104.

திருநாவுக்கரசர் பெருமானின் பிறப்பினைச் சுட்டவந்த சேக்கிழார் பெருமான், கலை தழைக்கவும் தவநெறியாளர் சிறக்க வாழவும், உலகவிருள் போக்கும் கதிர்போல மருணீக்கியார் பிறந்தார் என்று குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

அலகில் கலைத்துறை தழைப்ப
அருந்தவத்தோர் நெறி வாழ
உலகில் வரும் இருள்நீக்கி
ஒளிவிளக்கு கதிர் போல
மலரு மருணீக்கியார்
வந்தவ தாரஞ்செய்தார்
—பெரிய; திருநாவுக்கரசர்: 18.

கவிச்சக்கரவர்த்தி கம்பநாடரும், அயோத்திநகர மாளிகைகளை வருணிக்குமுகத்தான், அம்மாளிகையின் மீது வேயப்பெற்ற பொன் தகடுகள், இளவெயிலின் கதிர்கள் வெள்ளியங்கிரியின் மீது விரிதலால் எழும் ஒளியைப் போன்று ஒளிவீசின என்று வருணித்துள்ளார்.

புள்ளியம் புறவு இறை பொருந்து மாளிகை
தள்ளருந் தமணியத் தகடு வேய்ந்தன
எள்ளருங் கதிரவன் இளவெயிற் குழாம்
வெள்ளியங்கிரி மிசை விரிந்த போலுமே
—கம்ப: நகரப்படலம் 28.

உலகில் இயல்பாக நிகழும் ஒரு நிகழ்ச்சியின் மேல், கவிஞன் தன் குறிப்பினைப் பொருட்பொருத்தமுற ஏற்றி வைத்துரைப்பது தற்குறிப்பேற்றம் என்னும் அணியின் பாற்படும். இவ் அணியினைச் சேக்கிழார் பெருமானும் கம்ப நாடரும் கதிரவன் வருணனை கொண்டே கையாண்டிருப்பது அவர் தம் கவிச் சிறப்பைக் காட்டுவதோடு, கதிரவன் கவிஞர்களுக்குப் பயன்படும் வெற்றியினையும் ஒருங்கே உணர்த்தும்.

காலையில் கீழ்த்திசையில் கதிரவன் தோன்றுவது, உலகில் இயற்கையாக நடைபெறும் நிகழ்ச்சியாகும். இவ்வாறு உலகில் இயற்கையாக நடைபெறும் நிகழ்ச்சியினைக் கவிஞர், நம்பியாரூரரின் திருமணக் காட்சியைக் காண்பான் போலக் காமுற்ற மனத்துடன் கதிரவன் உதயஞ் செய்தான் என்று குறிப்பிட்டிருப்பது தற்குறிப்பேற்ற அணியின் பாற்படும்.

மாமறை விதிவழாமன் மணத்துறைக்
கடன்களாற்றித்
தூமறை மூதூர்க் கங்குன் மங்கலந்
துவன்றி யார்ப்பத்

தேமரு தொடையன் மார்பன் திருமணக்
    கோலங் காணக்
காமரு மனத்தான் போலக் கதிரவன்
    உதயஞ் செய்தான்.

—பெரிய: தடுத்தாட்: 13.

கைகேயி தான் முன்னாளிற் பெற்ற வரங்களில் இரண்டிலொன்றால் சீதைகேள்வன் இராமனைக் காட்டிற்கு அனுப்புவதற்குத் தசரதனிடம் ஒப்புதல் பெற்றாள். இச் செய்தியால் அயோத்திவாழ் மக்கள் அவதியுற்றனர்; அஃறிணையுயிர்கள் வாட்டமுற்றன: இச் செயலால் கோபமுற்ற கதிரவன் கைகேயியின்மாட்டுப் பெருஞ்சினங் கொண்டு கீழ்த்திசையில் சிவந்து எழுந்தான் என்கிறார் கம்பர்.

பாப முற்றிய பேதை செய்த பகைத்திறத்தினில்
    வெய்யவன்
கோப முற்றி மிகச் சிவந்தனன் ஒத்தனன் குரை
    குன்றிலே

—கம்ப; அயோ; கைகேயி சூழ்வினைப்படலம்; 61.

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் மகாகவி பாரதியார்,

புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சிதந்து
விந்தை செய்யும் சோதி

யினைக் 'காலைக் கதிரழகின் கற்பனைகள் பாடுகின்றேன்' என்று கூறிப் பின்வருமாறு கதிரவனைப் புனைந்துரைத்துள்ளார்:

தங்கம் உருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ? வான்வெளியைச்
சோதிகவர்ந்து சுடர்மயமாய் விந்தையினை
ஓதிப்புகழ்வார் உவமையொன்று காண்பாரோ?

கண்ணையினிதென் றுரைப்பர்; கண்ணுக்குக்
கண்ணாகி
விண்ணையளக்குமொளி மேம்படும் ஓர்
இன்பமன்றோ?
மூலத்தனிப்பொருளை மோனத்தே சிந்தைசெய்யும்
மேலவருமஃதோர் விரியுமொளி என்பாரேல்
நல்லொளிக்கு வேறுபொருள் ஞானமிசை யொப்புளதோ
—குயிற்பாட்டு;

மேலும் அவர்,

பாரடியோ! வானத்திற் புதுமையெல்லாம்
....
உவகையுற நவநவமாத் தோன்றுங்காட்சி
யாரடியிங் கிவைபோலப் புவியின்மீதே
யெண்ணரிய பொருள்கொடுத்து இயற்றவல்லார்
சீரடியாற் பகவேத முனிவர் போற்றுஞ்
செழுஞ்சோதி வனப்பையெலாஞ் சேரக் காண்பாய்
—பாஞ்சாலி சபதம்;

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் காணுகின்ற பொருளி லெல்லாம் அழகைக் கண்டு, அதைச் சுவை பயக்க, கவிதை மணம் மணக்க விண்டவரும் ஆவர். "அழகுப் பொருள் என்றும் மகிழ்ச்சியில் திளைக்கச் செய்யும்" (A thing of beauty is a joy for ever) என்பர். அம் முறையில் அவர் காணும் அழகுப் பொருளில் கதிர் ஒன்றாகும். அழகின் சிரிப்பில் ஞாயிறு இடம் பெறுகிறது. "ஒளிப்பொருள் நீ; நீ ஞாலத்தொரு பொருள்" என்று அஞ்ஞாயிற்றைச் சுட்டு கின்றார். ஞாயிற்றைச் சிலிர்த்தெழும் சிங்கமாகப் பிறிதோ ரிடத்தில் நோக்குகின்றார்.

பொங்கியும் பொலிந்தும் நீண்ட
புதுப்பிடர்மயிர் சிலிர்க்கும் சிங்கமே

மேலும் அவர் வானத் தகளியின் பெருவிளக்கே" என்றும், "உன்கதிர் இருட்பலாவை உரித்து ஒளிச் சுவை

யூட்டிற்றே" என்றும், "மலையெலாம் சோலை எல்லாம் நனைக்கின்றாய் சுடர்ப்பொன்னீரால்" என்றும் கதிரவனைப் பாடியுள்ளார். சமுதாயவுணர்வுடன் பாடும் கவிஞர் அவர் என்பதனால்,

பாழ் என்ற நிலையில் வாழ்வைப்
பயிரிட்ட உழவன் நீ
கூழுக்கு வேரும் நீயே!
குளிருக்குப் போர்வை நீயே

என்றும் பாடியிருக்கக் காண்கிறோம்.

எனவே தமிழ் இலக்கியங்களில் கதிரவன் அன்றுதொட்டு இன்று வரை தமிழ்க் கவிஞர்களாற் சிறப்பிடம் தரப்பெற்று ஓர் உயரிய கற்பனையில் இடம்பெற்று நிற்கிறான் எனலாம். பலர் புகழ் ஞாயிறாக, பலர்தொழு ஞாயிறாக விளங்கும் கதிரவன் இயற்கையிற் புதுக்கோலங்காட்டி வழங்கும் விந்தைமிகு காட்சிகள் பலப்பலவாகும், அக் காட்சிகளில் திளைத்து மனம் இன்புறுவதே மகிழ்ச்சியும், அமைதியும் பெறுவதற்குரிய ஆறாகும்; அருமை வழியாகும்.

9. சங்க இலக்கியத்தில் அணிநலம்

தமிழிலக்கிய வரலாற்றில் சங்க காலம் பொற்காலம் எனப் போற்றப்பெறும் பெற்றி வாய்ந்ததாகும். முன்னைப் பழமைக் கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் சங்க இலக்கியம் தொல்காப்பிய இலக்கணத்தின் பெரும்பகுதியினையொட்டிக் காணப்படுகின்றது. பழந்தமிழ் இலக்கியமாகிய சங்க இலக்கியம் காதலையும் வீரத்தையும் பெரும்பாலும் பாடுபொருளாகக்கொண்டு எழுந்துள்ளது எனலாம். அறிஞர் எம்.எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள் "காதலும் போரும் பழந்தமிழ் இலக்கியத்தின் பிழிவாகவும், சமயமும் தத்துவமும் இடைக்கால இலக்கியங்களின் சாரமாக வும், அறிவியலும் மானிடவியலும் இக்கால இலக்கியங்களின் போக்காகவும் இலங்குகின்றன" என்று குறிப்பிட்டுள்ளார்.

சங்கத் தமிழ்ப் பாக்கள் அவை எழுந்த காலத்திலேயே பெரிதும் மக்களால் போற்றி வரவேற்கப்பட்டன எனலாம். ஏனெனில் பல அரசுகள் எழுந்த தமிழ்நாட்டில் மதுரை மாநகரம் சங்கம் வளர்த்த தலையாய நகரமாகத் துலங்கியது. ஆண்டுதோறும் புத்தம் புதிய கவிதைகளைத் தமிழ் நாடெங் கிலும் வாழ்ந்த கவிஞர்கள் இயற்றிக் கொண்டுவந்து மாடங் கள் நிறைந்த மதுரை மாநகரில் இளவேனிற்காலத்து நிலாக் கால இரவுகளில் பொதுமக்கள் பலரும் கூடியுள்ள அவையில் அரங்கேற்றம் செய்வர். பொருள் தேடச் சென்ற தலைவன் தான் திரட்ட நினைத்த அளவு பொருள் சேர்க்க முடியாமற் போய்விடினுங்கூட, புத்தம் புதுக் கவிதைகள் அரங்கேறும் அவ் இளவேனிற் காலத்தின் நிலவெரிக்கும் இனிய இராப்

போதில் மதுரைக்கு வந்து கவிச்சுவையில் திளைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர் என்ற குறிப்பு 'கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகை'யிற் காணப்படுகின்றது. எனவே தாம் எழுந்த காலத்திலேயே வாழ்வும் வளமும் பெற்றவை சங்க இலக்கியங்கள் எனலாம்.

மேலும் சங்ககாலத்து அரசர்களும் புலவர் பெருமக்களால் பாடல்வழிப் புகழப்படுவதனைப் பெரும் பேறாகக் கருதினர் என்பதனைத் தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் வஞ்சினக் கூற்றாலறியலாம். மாங்குடி மருதனாரைத் தலைமைப் புலவராகக்கொண்ட புலவர்அவை தன்னைப் பாட வேண்டும் என்ற விருப்பம் இம் மன்னன் வாய்மொழியால் விளக்கமுறுவதனை மதுரைக் காஞ்சி குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியம் பாட்டும் தொகையும் என வழங்கும். பாட்டு எனப்படுவது எட்டுத்தொகையாகும். அகமும் புறமும் கொண்டு இவை எழுந்துள்ளன. காதல், வீரம், கொடை முதலிய பண்புகளைப் பாடுவது சங்கப் பாடல்களின் முதன்மை நோக்கமாக அமைந்திருக்கக் காணலாம். இயற்கையின் வருணனை காதல், வீரம், கொடை முதலிய நிகழ்ச்சிகளைப் பாடுவதற்குப் பின்னணியாக அமைந்து இரண்டாம் இடத்தினைக் கவிதையிற் பெறுவதனைக் காணலாம்.

சங்க இலக்கியம் அணிநலஞ் சிறக்கப் பெற்று மிளிர்வதனைக் காணலாம். சங்க இலக்கியத்தினை உவமைக் களஞ்சியம் என்று குறிப்பிட்டுப் பின்வருமாறு டாக்டர் மு. வரதராசனார் கூறுவர் :

"பிற்காலத்து நூல்களில் வரும் உவமைகள் பலவும் சங்கப் பாட்டுகளுக்குக் கடன்பட்டவை எனலாம். சங்க நூல்களில் வரும் உவமைகள் இயல்பாக அமைந்து காணப்படுகின்றன. அந்தப் பழங்காலப் புலவர்களால் அமைத்துத்

தரப்பட்ட உவமைகளைப் பிற்காலத்தார் அவ்வாறே பின்பற்றி வழங்கியுள்ளனர்" (தமிழ் இலக்கிய வரலாறு, ப. 59.)

பிற்காலத்தெழுந்த அணியிலக்கண நூல் தண்டியலங்கார மாகும். இந் நூலிற் பல அணிவகைகள் கூறப்பட்டிருந்தாலும் பழைய நூலான தொல்காப்பியத்தில் உவமை அணி ஒன்றே கூறப்பட்டுள்ளது. ஒரு பொருளைத் தக்க ஒப்புமை காட்டி விளக்கும் உவமை, வினை, பயன், மெய், உரு ஆகிய நிலைக்களன்களில் பிறக்கிறது எனத் தொல்காப்பியப் பொருளதிகாரம் விளக்குகின்றது.

வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமத் தோற்றம்
—தொல். நூற்பா 272

என்பது தொல்காப்பிய நூற்பா.

மேலும் அவர் உயர்ந்த பொருள்வழி உவமையை விளக்க வேண்டும் என்பர்.

உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை
—தொல். நூற்பா 274.

மேலும், சிறப்பு, நலன், காதல், வலி ஆகிய சிறப்புக் களால் உவமை சிறப்புறும் என்பர் தொல்காப்பியனார்.

சிறப்பே நலனே காதல் வலியொடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப
—தொல். நூற்பா 275

உயர்ந்த பொருளையே உவமை காட்ட வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக,

அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்
—பட்டினப்பாலை 298

என்ற அடியினைக் கூறுவர். வலிமை மிகுதியுடைய விலங்கு கள் பலவற்றினும் அரிமா உயர்ந்த விலங்காதலின் அஃது

உவமையாகக் காட்டப்பட்டது என்பர் இளம்பூரணர். குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலின் முதலடியான 'தாமரை புரையும் காமர் சேவடி' என்பதனைக் காட்டி, சிறப்புடைய பல பொருள்களினும் தாமரை உயர்ந்ததாதலின் அஃது உவமை கூறப்பட்டது என்று அவர் மேலும் கூறுவர். இவ்வாறே சிறப்புப்பற்றி வந்த உவமைக்கு,

> முரசு முழங்கு தானை மூவரும் கூடி
> அரசவை இருந்த தோற்றம் போலப்
> பாடல் பற்றிய பயனுடை எழாஅல்
> —பொருநர். 54-56

என்ற அடிகளையும், நலம் பற்றி வந்த உவமைக்கு,

> ஓவத் தன்ன வியனுடை வரைப்பின்
> —புறம். 251:6

என்ற அடியினையும், காதல் பற்றி வந்த உவமைக்கு,

> கண்போல்வான் ஒருவ னுளன்

என்னும் அடியினையும், வலிமை பற்றி வந்த உவமைக்கு,

> அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்
> —பட்டினப்பாலை 298

என்ற அடியினையும் எடுத்துக்காட்டுவர்.

இனி, சங்க இலக்கியத்திற் காணலாகும் உவமைகள் சிலவற்றைக் காணலாம்.

எடுத்துக்காட்டுவமை அணி

பிற்காலத்தே எடுத்துக்காட்டு உவமையணி என்று குறிப்பிடப்பெறும் அணி ஓரோவழி, சங்க இலக்கியத்திற் காணப்படுகின்றது. இவ் அணியிற் கூறப்பெறும் செய்திகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய - ஐயந்திரிபற ஒப்புக் கொள்ளக் கூடிய செய்திகள் எனலாம். ஒரு புதிய கருத்தொன்றைச் சொல்ல வரும் புலவன் உலக மக்கள்

ஏற்கெனவே உறுதியாக ஒப்புக்கொண்ட சில உண்மைகளை எடுத்துக்காட்டி, அவை போலவேதான் இப்போது கூறவரும் செய்தியும் ஒக்கும் என்பான். எடுத்துக்காட்டாக ஒன்று காணலாம்.

பாண்டிய வேந்தன் போர்க்களம் புகுந்தால் அவனை யாரும் எதிர்த்து வெல்ல முடியாது என்பது கவிஞன் உணர்த் தவரும் செய்தியாகும். இதனை விளக்குவதற்கு உலகமக்கள் இயல்பாகவும் எளிதாகவும் அறிந்த மூன்று செய்திகளை எடுத்துக் காட்டுகளாகக் காட்டுகிறான் கவிஞன். முதலாவது கருத்து, வெள்ளம் அளவுக்கு மீறி மிகுந்தால் அதனைத் தடுத்த நிறுத்த அணைகளால் முடியாது என்பதாகும். இரண்டாவது கருத்து, தீ கை கடந்து மிகுமாயின் அதிலிருந்து உயிர்களைக் காப்பாற்ற ஒரு வழியும் இல்லை என்பதாகும். மூன்றாவது கருத்து, காற்று எல்லை கடந்து வீசத் தொடங்கினால் அதனை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதாகும். இவ்வாறு உலகம் உறுதி யாகத் தொன்றுதொட்டு நன்கறிந்து மூன்று செய்திகளைக் கூறி, அவற்றிற்கு நிகராக மன்னனின் மாற்ற முடியாத சினத்தையும் குறிப்பிட்டிருக்கும் புலவர் திறம் பின்வரும் புறப் பாடலடிகளால் விளங்கும்.

நீர்மிகின் சிறையும் இல்லை தீமிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை
வளிமிகின் வலியும் இல்லை; ஒளிமிக்கு
அவற்றோர் அன்ன சினப்போர் வழுதி
—புறநானூறு, 50 : 1—4.

இறுதி அடியில் இடம் பெற்றிருக்கும் "அவற்றோர் அன்ன" என்னும் உவம உருபு, முதலிற் கூறப்பட்ட மூன்று கருத்துக்களோடு இறுதியிற் புலவர் கூறவந்த கருத்தினை ஒன்றாக இணைக்கின்றது.

பிறிதொரு புறநானூற்றுப் பாடலும் இக் கருத்தினைச் சிறக்க விளக்கக் காணலாம்.

மலைச்சாரலில் வாழும் மறப்புலி மாறுபட்டுச் சினந் தெழுந்தால் அதனை எதிர்க்கும் மான் கூட்டம் ஏதும் இல்லை; கதிரவன் சினந்து நின்றால் அதன்முன் இருள் நிற்காது. நுண்ணிய மணல் தெறிக்கவும், கல் பிளக்கவும் நடக்கும் எருதுக்குத் தான் நடப்பதற்கெனத் தனித்துறை ஏதும் தேவையில்லை. இதைப்போலவே அரசன் போர்க் களம் புகுந்துவிட்டால் அவனை எதிர்த்து நிற்கும் வீரர் எவரும் இல்லை என்ற கருத்து, பின்வரும் பாடலிற் குறிப்பிடப்படுகின்றது.

அடைமல்கு குளவியொடு கமழும் சாரல்
மறப்புலி உடலின் மான்கணம் உளவோ
மருவின் விசும்பில் மாதிரத் தீண்டிய
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கப் பாருற் றியங்கிய
பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய
அரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெருமிதப் பகட்டுக்குத் துறையும் உண்டோ
....
பொருநரும் உளரோ நீகளம் புகினே
—புறநானூறு 90:2-9, 13

தற்குறிப்பேற்ற உவமை

உலகில் இயல்பாக நிகழும் ஒரு நிகழ்ச்சியின்மீது கவிஞன் தன் கற்பனையை ஏற்றிப் பொருள் பொருத்தமுற உவமை கூறுவது தற்குறிப்பேற்றம் எனக் கூறப்பெறும்.

ஊடியிருந்த காதலரைக் கூடி மகிழுமாறு கூவியழைப்பது போலக் குயில் கூவுதல் விளங்கியது எனப் பின்வரும் நற்றிணைப் பாடல் நவிலும்.

பொதும்புதோறு அல்கும் பூங்கண் இருங்குயில்
கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கையிட்டு

அகறல் ஓம்புமின் அறிவுடை யீரெனக்
கையறத் துறப்போர்க் கழறுவ போல்
மெய்யுற இருந்து மேவர நுவல

—நற்றிணை 343:4—8

சோலையில் இயல்பாகக் குயில் கூவுவதனை அஃது ஊடியிருக்கும் காதலர்களைக் கூடி மகிழுங்கள் என்று கூவுவதாகக் கவிஞர் குறிப்பிடுவது தற்குறிப்பேற்றவணி யாகும்.

தடுமாறு உவமை

ஒரே இடத்தில் பொருளுக்கு உவமை கூறப்பட்டு, மீண்டும் அவ்வுவமை பொருளாகவும் தோன்ற அமைக்கப் பட்டால் அது தடுமாறுவமம் என்று கூறப்படும்.

நற்றிணைப் பாடலொன்றில் இத்தகைய தடுமாறுவமம் ஒன்றனைக் காணலாம்.

தும்பியொன்று நாவற்பழத்தைத் தன் இனமாகக் கருதி அதனை மொய்க்கின்றது. அந்தத் தும்பியை நாவற்பழம் எனக் கருதி நண்டு ஒன்று அதனைப்பற்ற முயல்கிறது. அப்போது அத் தும்பி வாய்விட்டுக் கத்துகின்றது. இதில் தும்பி நாவற்பழத்திற்கும், நாவற்பழம் தும்பிக்கும் உவமைப் படுத்தப்பட்டிருப்பதனைக் காணலாம்.

புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழம்செத்துப்
பல்கால் அலவன் கொண்ட கோட்டூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்

—நற்றிணை 35:2—5

விலக்குவமை

உவமைகளை முதற்கண் அமைத்து அவற்றைக் காரணங்கூறி மறுத்துக் கூறலும் உண்டு. அதனை விலக்குவமை அணி என்பர்.

முதலாவதாக, கலித்தொகையின் ஒரு பாடலில் நிலவு, மூங்கில், குவளைப் பூ, மயில், கிளி முதலியவை தலைமகளின் பல்வேறு உறுப்பு நலன்களுக்கு உவமையாகக் கூறப்பட்டுப் பின் அவை பொருந்தா என விலக்கும் எதிர்மறைக் கூற்றும் உடன் அமையக் காணலாம். இவ்வாறு மறுப்பதால் உவமைகளைக் காட்டிலும் உவமேயப் பொருள் உயர்ந்தது என்னும் கருத்துப் பிறக்கின்றது.

முதலில் தலைமகன் தலைமகளின் நெற்றியையும், முகத்தையும், தோள்களையும், கண்களையும், மெல்லிய சாயலையும், இனிய சொற்களையும் கண்டு வியந்து நிற்கிறான். பிறகு அவ்வுறுப்புகளுக்கும் பண்புகளுக்கும் தக்க உவமை கூறிப் பொருத்திப் பாராட்டுகின்றான். ஆயினும் அவ் வனைத்தும் அவன் காதலியின் அழகுக்குப் பொருத்தமானதாக - அவன் மனத்திற்கு நிறைவு தருவதாக இல்லை. எனவே முன்னே உவமை கூறிய பொருள்களையே பொருந்தா எனக் கூறி விலக்கி விடுகின்றான்.

"நெற்றி வியத்தற்குரிய அளவில் தேய்ந்து குறுகி உள்ளது. அதனால் இது பிறைமதியன்று; முகத்தில் மாசு ஒன்றும் இல்லை. அதனால் அது முழுமதியன்று. தோள்கள் மூங்கிலையொத்து உள்ளன. எனினும் மூங்கில் தோன்றும் இடமான மலை அங்கில்லை; கண்கள் மலரை நிகர்த்துள்ளன. எனினும் அப் பூக்கள் பூக்கும் சுனை அங்கு இல்லை. அவள் மிகவும் மெல்ல நடக்கிறாள்; எனினும் அவள் மயில் அல்லள். குழைந்து குழைந்து பேசுகின்றாள்; எனினும் அவள் கிளி அல்லள்" என்று மறுப்புக் குரல் எழுப்பிப் பழகிய உவமைகளை விலக்கி அவள் அழகுச் செவ்வியை மிகுதிப்படுத்தி யுரைக்கின்றான். ஒருவகையில் வியப்புச் சுவையும் கலப்பதனால் மருட்கை உவமை என்றும் உரைக்கலாம். அக் கலிப்பாடல் வருமாறு:

நில்என நிறுத்தான் நிறுத்தே வந்து
நுதலும் முகனும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ
ஐதேய்ந் தன்று பிறையும் அன்று
மைதீர்ந் தன்று மதியும் அன்று
வேயமர்ந் தன்று மலையும் அன்று
பூவமர்ந் தன்று சுனையும் அன்று
மெல்ல இயலும் மயிலும் அன்று
சொல்லத் தளரும் கிளியும் அன்று
—கலித்தொகை, 55:6-14

புறநானூற்றிலும் இத்தகைய உவமை இடம் பெற்றுள்ளது. புலவர்களெல்லாம் பாரி பாரி என்று பாரியை உயர்வாகப் புகழ்கின்றனர். ஆனால் இவ்வுலகில் பாரி மட்டும் இல்லை; மாரியும் உண்டு; அம்மாரி பாரியைப் போலவே உலகோரைப் புரக்கின்றது என்று நிந்தை சொல்லும் போக்கில் பாரியைப் புகழ்ந்திருக்கக் காணலாம்.

பாரிபாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே
—புறநானூறு, 107

தண்டியலங்காரம் இப்பாடலை விலக்கணிக்கு எடுத்துக் காட்டாகத் தருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இல்பொருள் உவமை

உலகில் இல்லாத பொருளை உவமையாகக் கொண்டு வந்து உவமை கூறுவதனை இல்பொருள் உவமை என்பர். அபூத உவமை என்று தண்டியலங்காரம் குறிப்பிடும்.

ஞாயிறும் திங்களும் இணைந்து மண்ணுலகிற்கு வருவதென்பது நடவாத ஒன்றாகும்; ஏன் நடக்கமுடியாத

செயலும் ஆகும். ஞாயிறும் திங்களும் இணைந்து மண்ணகத்திற்கு வருதல் போலத் தமிழ்நாட்டு மன்னர்கள் இருவரும் இணைந்து பகையரசர்களை வென்றனர் என்று கூறப்படுவதனைப் புறப்பாடலொன்றிற் காணலாம்.

உருவச்சினம் திருகிய உருகெழு ஞாயிறு
நிலவுத்திகழ் மதிய மொடுநிலன் சேர்ந்தாங்கு
உடலருந்துப்பின் ஒன்றுமொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை உணங்கப் பண்ணி
—புறநானூறு, 25:3-6

இதுபோன்றே திங்களுள் தீத்தோன்றுவதும், நிழல் நிறைந்த குளத்து நீர்க் குவளை வெந்தழிவதும் ஞாயிற்றுள் இருள் தோன்றுவதும் தலைமகனின் வாய்மையிற் பொய் தோன்றுவது முதலானவற்றோடு உவமிக்கப்பட்டுள்ளமை இல்பொருள் உவமைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

குன்றகல் நன்னாடன் வாய்மையில் பொய் தோன்றில்
திங்களுள் தீத்தோன்றி யற்று
ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழற்கயத்துள்
நீருள் குவளைவெந் தற்று
தொடர்புள் இனையவை தோன்றின் விசும்பில்
சுடருள் இருள்தோன்றி யற்று
—கலித்தொகை 41:23-24; 30-31; 37-38

அந்தாதி உவமை

உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமை யாக்கியும் இயைபுபடுத்தித் தொடுப்பது அந்தாதி உவமை என்பர்.

சிறுபாணாற்றுப்படையில் கதுப்பு உவமையாகவும் பொருளாகவும் வருகின்றது. இவ்வாறே சாயல், அடி, குறங்கு, வாழை, ஓதி, சுணங்கு, முலை, எயிறு முதலியனவும்

உவமைகளாகவும் பொருளாகவும் அமைக்கப்பெற்று ஒரு தொடர்ச்சியாக ஒரு தொடர்பினைப் பெற்று வருகின்றது.

நெய்கனிந்து இருளிய கதுப்பின்; கதுப்பென
மணிவயின் கலாபம் பரப்பிப் பலவுடன்
மயில்மயில் குளிக்கும் சாயல்; சாஅய்
உயங்குநாய் நாவின் நல்லெழில் அசைஇ
வயங்கிழை உலறிய அடியின்; அடிதொடர்ந்து
ஈர்ந்துநிலந் தோயும் இரும்பிடித் தடக்கையின்
சேர்ந்துடன் செறிந்த குறங்கின்; குறங்கென
மால்வரை யொழுகிய வாழை: வாழைப்
பூவெனப் பொலிந்த ஓதி; ஓதி
நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
களிச்சுரும்பு அரற்றும் சுணங்கின்; சுணங்குபிதிர்ந்து
யாணர்க் கோங்கின் அவிர்முகை எள்ளிப்
பூணகத் தொடுங்கிய வெம்முலை; முலையென
வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
இன்சேறு இகுதரும் எயிற்றின் எயிறென

—சிறுபாணாற்றுப்படை, 14-28

இரட்டை உவமை

தொல்காப்பியம் சொல்லியலில் 'இரட்டைக்கிளவி' விளக்கப்படுகின்றது. 'இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே' என்பது தொல்காப்பிய நூற்பா. சலசல, பளபள, மடமட, படபட முதலானவை இரட்டைக் கிளவிகளாகும். அடையும் அது சிறப்பிக்கும் பொருளும், உவமையிலும் அடையும் பொருளுமாக இயைந்து வரும்.

எடுத்துக்காட்டாக, கண்பின் காயின் சுண்ணம் பூசப் பெற்ற மார்பு, பொன் துகள் படிந்த உரைகல்லை உவமை யாகப் பெற்றுள்ளதனைப் பெரும்பாணாற்றுப் படையில் காணலாம்.

பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பு
—பெரும்பாணாற்றுப்படை, 222-223

நற்றிணையில் இடம்பெறும் முதற்பாடலில் இரட்டை உவமைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டினைக் காணலாம்.

நீரின் றமையா வுலகம் போலத்
தம்மின் றமையா நந்நயந் தருளி
—நற்றிணை, 1:6-7

நிரல்நிறை உவமை

உவமைகள் ஒன்றன்பின் ஒன்று அடுக்கிக் கூறப்படுகின்றன. அவற்றைத் தொடர்ந்து அதே முறை வைப்பில் பொருள்களும் அடுக்கிக் கூறப்படுகின்றன. இதனைத் தொல்காப்பியனார் நிரல்நிறை உவமை என்பர்.

நிரல்நிறுத் தமைதல் நிரல்நிறை
—தொல். நூற்பா 309

சங்க இலக்கியத்தில் ஒழுங்காக முறை பிறழாமல் அமையும் உவமையாம் முறை நிரல் நிறையணி இடம் பெற்றிருக்கக் காணலாம்.

பொன்னும் மணியும் முறையே மகளிரின் மேனிக்கும் கூந்தலுக்கும் உவமைகளாக இடம் பெற்றுள்ளன.

பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங்கதுப்பும்
—நற்றிணை, 166 : 1-2

அடுத்து, மலரும் மூங்கிலும்போல மகளிர் கண்களும் தோள்களும் காட்சி தந்தன எனக் கூறப்பட்டுள்ளது.

போதும் பணையும் போலும் யாழ நின்
மாதர் உண்கணும் வனப்பின் தோளும்
—நற்றிணை, 166 : 3-4

நெருப்பும் காற்றும் வானத்தில் தோன்றுவதைப் போலத் துன்பமும் இன்பமும் ஒரே இடத்தில் அமைகின்றன என்பதனை நற்றிணைப் பாடலொன்று நவில்கின்றது.

தீயும் வளியும் விசும்பு பயந்தாங்கு
நோயும் இன்பமும் ஆகின்று மாதோ
—நற்றிணை : 294 : 1-2

பல்பொருளுவமை

ஒரு பொருளுக்கு ஓர் உவமை கூறுவது மரபாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களையும் உவமையாகக் கூறும்பொழுது அது வியப்புணர்ச்சியினை வழங்குவதோடு கவிஞனின் கற்பனையாற்றலையும் காட்டி நிற்கின்றது. இவ்வாறு அமையும் உவமை அணியினைப் பல்பொருள் உவமையணி என வழங்குவர்.

முல்லை, மகளிர் பற்களுக்கு உவமை காட்டப்படுவது உண்டு; இது போன்றே முத்தும் மகளிர் பற்களுக்கு உவமை கூறப்படுவது உண்டு. சில சமயங்களில் முல்லையும் முத்தும் மகளிரின் பற்களுக்கு உவமையாகத் தரப்படுதலும் உண்டு. வெண்ணிறமும், வடிவும், ஒளியும் இவற்றின் பொது இயல்புகளாகக் கொள்ளலாம்.

முகைமுல்லை வென்று எழில்முத்து ஏய்க்கும் வெண்பல்
—குறிஞ்சிப்பாட்டு 76

அன்னமும் மயிலும் புறாவும் மகளிரின் நடைக்கும் சாயலுக்கும் எழிலுக்கும் முறையே உவமிக்கப்பட்டுள்ளன.

ஆய்தூவி அனமென அணிமயில் பெடையெனத்
தூதுணம் புறவுஎனத் துதைந்தநின் எழில்நலம்
—கலித்தொகை 56:15-16

பிறிதுமொழிதலணி

கவிஞன், தான் கருதிய பொருளைக் கூறாமல் வெறும் உவமையை மட்டும் கூறிவிடுதல் ஒட்டணி அல்லது பிறிது மொழிதலணி எனப்படும்.

> கருதிய பொருள் தொகுத்து அது புலப்படுத்தற்கு
> ஒத்தது ஒன்று உரைப்பின் அஃது ஒட்டென
> மொழிப
> —தண்டியலங்காரம் 52

இவ்வணியினை நன்கு விளக்கக் கலித்தொகைப் பாடலொன்று எடுத்துக்காட்டாய் இலங்குகின்றது. எவரொருவரும் குளத்திற்குச் சென்று நீரைப் பருகுவது என்பது தங்கள் தாக விடாயைத் தீர்த்துக்கொள்வதற்குத் தானேதவிர அச் செயல் நீருக்கு இனிமை தரும் என்பதால் அன்று. இது போன்றே காதலன் ஒருவன் தான் விரும்பும் காதலியினைத் தழுவிக் கொள்வது தன் விருப்பம் தணிவதற்குத் தானே தவிர, அச் செயல் காதலிக்கு உவப்பளிக்குமா இல்லையா என்பதற்காக அன்று.

> வேட்டார்க்கு இனிதாயின் அல்லது நீர்க்கு; இனிதன்று
> உண்பவோ நீருண்பவர்
> —கலித்தொகை 62 : 10-11

நற்றிணைப் பாடலொன்றும் பிறிதுமொழிதலணி துலங்கத் திகழ்வதனைக் காணலாம்.

மரம் சாகும் அளவிற்கு அதனை வெட்டி மருந்தாக மக்கள்கொள்ள மாட்டார்கள். அதுபோலவே உடல் உரம் அழியும் அளவிற்குத் தவத்தை மேற்கொள்ள மாட்டார்கள். மக்கள் வளம் கெடும் அளவிற்கு மன்னர் வரிப்பொருளைக் கொள்ள மாட்டார்கள்.

மரஞ்சாம் மருந்தும் கொள்ளார் மாந்தர்
உரஞ்சாச் செய்யார் உயர்தவம் வளம்கெடப்
பொன்னும் கொள்ளார் மன்னர்

—நற்றிணை 226 : 1-3

விபரீத உவமை

உவமையும் பொருளும் இடம் மாறி அமைவதால் ஒரு புதுமை விளையக் காணலாம்.

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃது உவமமாகும்

—தொல் . நூற்பா 284

குவளை போன்ற கண் என்பது இயற்கையான உவமை; கண்போல் குவளை என்பது மாற்றம்; விபரீதம்.

தலைவியின் வடிவத்தை மயிலுக்கும், அவள் கூந்தலில் எழும் மணத்தை முல்லை மலரின் நறுமணத்திற்கும், அவள் தன் மருண்ட விழிகளை மானின் நோக்கிற்கும் தொகுத்து உவமை செய்யப்படுகின்றன.

நின்னே போலும் மஞ்ஞை யால நின்
நன்னுதல் நாறு முல்லை மலர
நின்னே போலு மாமருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென்
நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே

—ஐங்குறுநூறு, 492: 1 - 5

மாலை உவமை

உறவும் தொடர்பும் உள்ள பொருள்கள் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டு ஒரு மாலைபோல் அமையுமேயானால் அது மாலை உவமை எனப்படும். இஃது அந்தாதி உவமையோடு நெருங்கிய தொடர்புடையது.

பரிபாடலில் மாலை உவமை மாண்புறப் பொருந்தி வந்திருக்கக் காணலாம்.

திருமாலின் கொப்பூழில் தோன்றிய தாமரைப் பூவினைப் போன்றது சீறூர்; அப்பூவின் இதழைப் போன்றன தெருக்கள்; இதழகத்து அரிய முகையைப் போன்றது அரசன் கோயில்; அப்பொகுட்டில் உள்ள தாதுக்களைப் போன்றது தண்டமிழ்க் குடிமக்கள். அத் தாதினைத் தேர்ந்து உண்ணவரும் பறவைகளைப் போன்றவர் பரிசிலர் என்று குறிப்பிடப் பெறுவதனைக் காணலாம். கீழ்க்காணும் பரிபாடலில் உவமைச் செய்திகள் அந்தாதித் தொடை போன்று அமைந்து, ஒன்றனோடு ஒன்று தொடர்பு பெற்று மாலைபோல் காட்சியளிக்கிறது.

மாயோ கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீறூர்; பூவின்
இதழகத்து அனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிமக்கள்
தாதுண் பறவை யனையர் பரிசில் வினைஞர்
—பரிபாடல் 7: 1 - 6

வேற்றுமை அணி

பொருளுக்கும் உவமைக்கும் வேறுபாடு காட்டி, இவை யிரண்டும் ஒவ்வா எனக் குறிப்பிட்டுப் பொருளைச் சிறப்பித்தல் வேற்றுமை அணி எனப்படும். உவமையினும் பொருளே சிறந்தது என்பது இதன் தனிச் சிறப்பாகும்.

புறநானூற்றில் வேற்றுமையணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டு காணலாம். சேர மன்னனொருவன் கதிரவனோடு உவமிக்கப்படுகின்றான். இவ்வுவமையில் கதிரவன் சேரனோடு மாறுபடும் சிறப்புகளைச் சுட்டிக் காட்டிப் பின் வேறுபாடும் காட்டப்படுகின்றது.

கதிரவன் குறிப்பிட்ட காலங்களில் உதிக்கிறான். இடம் விட்டு இடம் ஓடுகின்றான். தன் நிலையில் மாறுபடு கின்றான். மலையில் மறைந்து ஒளிந்து விடுகின்றான். பகலில் மட்டும் உலகிற்கு ஒளி தருகின்றான். சேரமன்னன் இதற்கு மாறாக வீரமும் ஒடுங்கா வுள்ளமும், ஓம்பா ஈகையும் கொண்டு திகழ்கின்றான். அவன் தோன்றுவதற்குக் குறிப்பிட்ட காலம் இடம் என்ற வரையறை இல்லை. எந்தக் காலத்திலும் இரவலர்க்குக் கொடை வழங்குவான். பிறரிட மிருந்து அவன் தன்னை மறைத்துக் கொள்வதில்லை. தனக்கென எதையும் ஒதுக்கி வைத்துக் கொள்வதில்லை. இவ்வாறு சில வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டிக் கதிரவன் சேர மன்னனுக்கு ஒப்பாகமாட்டான் என்று நயம்படக் கிளத்துகின்றார் புலவர்.

ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறங்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந்து ஒளித்து
அகலிரு விசும்பி னாலும்
பகல்விளங் குதியால் பல்கதிர் விரிந்தே

—புறநானூறு, 8: 4 - 10

சில சிறந்த உவமைகள்

கபிலர் 'குறிஞ்சி பாடக் கபிலர்' என அழைக்கப் பெறுபவராவர். தோழி தலைமகள் தலைமகனிடத்துக் கொண்ட காதலைப் புலப்படுத்தும் நயம் போற்றத்தக்கது. பலா மரத்தின் சிறிய கிளையில் பெரிய பழம் தொங்குவது போன்று தலைவியின் சிறிய உயிர் கொண்ட இவள் உடம்பில் பெரிதான காமம் நிறைந்திலங்குகின்றது என்றாள்.

........சாரற்
சிறு கோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே
—குறுந்தொகை 18:3-5

நல்ல பசுவின் இனிய பாலானது அப்பசுவின் கன்றினாலும் உண்ணப்படாமல், கறக்கும் பாத்திரத்திலும் விழாமல், தரையிற் சிந்தி வீணானது போல, தலைமகளின் மாமையாகிய பேரழகு, அவளுக்கு அழகு பயந்து நிற்பதாகாமலும், அவள் தலைவனுக்கு இன்பம் பயவாமலும் பசலையானது உண்ணுதற்கு இடமாகப் போகின்றது என்ற கருத்தை உள்ளடக்கிய பாடல் உவமை நலத்தால் சிறந்து விளங்குகின்றது.

கன்று முண்ணாது கலத்திலும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காங்கு
எனக்கு மாகா தென்னைக்கு முதவாது
பசலை யுணீஇயர் வேண்டும்
தீதிலை யல்குலென் மாமைக் கவினே
—குறுந்தொகை-27

வாழ்வில் முன்பின் தொடர்பு ஒரு சிறிதும் இல்லாத தலைமகனும் தலைமகளும் ஊழ்வயத்தால் எதிர்ப்பட்டுக் கூடி மனம் ஒன்றுபடுதலைச் செம்மண் பூமியில் விழுந்த மழைநீர் செம்மண் நிறத்தைப் பெறுதலுக்கு உவமை காட்டிய புலவர் 'செம்புலப் பெயனீரார்' எனப்பட்டார்

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு எம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே
—குறுந்தொகை-40

தலைமகள் ஒருத்தி, தலைமகன் மாட்டுக்கொண்ட காதலின் மிகுதியால் அவன் நாட்டு வறண்ட குழிகளில் மான் உண்டு எஞ்சிய கலங்கள் நீர் தேன்கலந்த பாலினும் இனியது என்று இயம்புகின்றான்.

> தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
> உவலைக் கூவல் கீழ
> மானுண்டு எஞ்சிய கலுழி நீரே
>
> —ஐங்குறுநூறு-203:2-4

ஞாயிறு காயும் வெம்மையான பாறையின் பக்கத்தில் கையில்லாத ஊமன் கண்களாலேயே காக்கும் வெண்ணெய் உணங்கல் போலத் தலைமகனின் பிரிவுத்துன்பம் பரவியுள்ளது என்று கூறப்படுகிறது.

> ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
> கையில் ஊமன் கண்ணிற் காக்கும்
> வெண்ணெய் உணங்கல் போலப்
> பரந்தன் றிந்நோய் நோன்று கொளற்கு அரிதே
>
> —குறுந்தொகை 58

பழமொழியினை உவமையாக அமைத்தலுக்கும் இப் பாடலை எடுத்துக் காட்டலாம்.

இதிகாச கதை நிகழ்ச்சிகளை உவமையாக எடுத்தாளல்

வள்ளலிடமிருந்து பெற்றுவந்த பரிசுப் பொருள்களில் உயர்ந்த அணிகலன்களைப் புலவர் தம் சுற்றத்தினரிடம் தர, அவ்வணிகலன்களை எங்கெங்கே அணிந்து கொள்வது என்று தெரியாமல் முறைமாற்றி அணிந்து கொண்டனராம். இதுபோன்று இராவணன் சீதையை வெளவிச் சென்ற போது சீதை தன் அணிகலன்களைத் தரையில்போட, பின்னாளில் அதனைக் கண்டெடுத்த குரங்குகள் அவற்றை

அணிந்துகொள்ளத் தெரியாமல் முறைமாற்றி அணிந்ததைப் போல என்று உவமை உரைக்கப்படுகிறது.

கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மாதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப் பொலிந் தாஅங்கு

—புறநானூறு-378:18-21

ஐம்பெரும் பூதங்களை உவமை காட்டல்

நிலம், நீர், தீ, காற்று, விசும்பு ஆகிய ஐம்பெரும் பூதங்களின் ஆற்றலோடு மன்னனின் பொறுமை, சூழ்ச்சி, வலிமை ஆக்கல், அழித்தல் முதலிய ஆற்றல்கள் உவமிக்கப்படுகின்றன.

மண் திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போலப்
போற்றாப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்

—புறநானூறு 2:1-8

மகளிர் அழகுக்கு ஊர்களின் எழில்

சங்கக் கவிஞர்கள் பெண்களின் அழகைச் சில ஊர்களின் எழிலோடு உவமித்துப் பேசியிருக்கும் சிறப்பினைப் பின்வரும் தொடர்கள் கொண்டு அறியலாம்.

தண்கு வாயில் அன்னோள்

—அகம். 44:12

பிண்ட நெல்லின் அள்ளூர் அன்னஎம்
ஒண்டொடி

—அகம். 46:18

உவமை வழி வரலாற்றுச் செய்திகள்

தனக்குக் காப்பினை மிகுதிப்படுத்திய தாயினைக் கடிந்து கொள்ளும் தலைமகள், தன் தாய் பெண் கொலை புரிந்த நன்னன் போல வரையில் நிரயத்துச் செல்ல வேண்டும் என மொழிந்துள்ளது கொண்டு உவமைவழி, சில வரலாற்றுச் செய்திகளை அறிய வருகிறோம்.

பெண்கொலை புரிந்த நன்னன்போல

—குறுந்தொகை 292:5

உள்ளுறை உவமை

திணையை உணர்வதற்கு உள்ளுறை உவமம் பெருந் துணை புரியும் என்பர் தொல்காப்பியனார்.

உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே

—தொல். அகத். 46

கருப்பொருளோடு சார்த்தி ஒத்துப்பொருள் கொள்ளும் வகையில் இவ்வுள்ளுறைச் செய்தி கொள்ளப்படுகின்றது.

உள்ளுறுத் திதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதை உள்ளுறை உவமம்

—தொல். அகத். 48

உள்ளுறை உவமம் குறிப்பாகக் கொள்ளத்தக்கது என்றும், ஏனையுவமம் வெளிப்படையாக உணரத்தக்கது என்றும் கூறுவர்.

ஏனை உவமம் தானுணர் வகைத்தே

—தொல். அகத். 49

கழனி மாத்து விளைந்துகு தீம்பழம்
பழன வாளைக் கதூஉ மூரன்

—குறுந்தொகை 8:1-2

"வயலருகிலுள்ள மாமரத்தினது கனிந்து வீழ்கின்ற இனிய பழத்தைப் பொய்கையிலுள்ள வாளை மீன்கள் கவ்வி உண்ணுதற்கு இடமாகிய ஊரையுடைய தலைவன்" என்பது இதன் பொருளாகும்.

ஈண்டுக் கழனியினைத் தலைமகள் வாழும் ஊராகவும், மாமரத்தினைத் தலைமகளாகவும், மாம்பழத்தினைத் தலைமகனாகவும், பழனத்தினைப் பரத்தையர் வாழும் சேரியாகவும், வாளை மீன்களைப் பரத்தையராகவும் கொண்டு பார்த்தால் ஓர் அரிய உள்ளுறைக் கருத்துப் புலப்படும். தலைமகனே தலைமகளை விட்டு நீங்கிப் பரத்தையை நாடிச் சேர்ந்தானென்பதும், பரத்தை எந்த வகையிலும் பழிக்கத்தக்கவள் அல்லள் என்பதும் பொருள் வெளிப்படையாகும்.

இறைச்சி

இறைச்சி என்பது கருப்பொருளின் புறத்ததாகவே பெறப்படும் குறிப்புப் பொருளாகும்.

இறைச்சி தானே பொருள்புறத் ததுவே

—தொல். பொருள். 229

கருப்பொருள்களின் புறத்ததாகக் கொள்ளப்படும் இறைச்சி வேறு; உவமை வழியாக உள்ளுறையைப் போல அமைக்கும் இறைச்சி வேறு என்பர் நச்சினார்க்கினியர்.

இறைச்சியில் பிறக்கும் பொருளு மாருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே

—தொல். 230

இலங்கும் அருவித்தே இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள் பேணான் பொய்த்தான மலை

—கலித்தொகை 4

இப் பகுதிக்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் வருமாறு:

"சூளைப் பொய்த்தான் என்பதே கூற வேண்டும் பொருள். அதன் புறத்தே இங்ஙனம் பொய்த்தான் மலையகத்து நீர் திகழ்வான் என் என இறைச்சிப் பொருள் தோன்றியவாறு காண்க" என்பர்.

இவ்வாறு சங்க இலக்கியத்தில் உவமை என்கின்ற ஓர் அணியே பல்வேறு வகையிற் பாங்குற மிளிர்ந்து நிற்கிறது. சங்க இலக்கிய உவமைகள் உணர்ச்சிக்கு நிலைக்களனாய், கற்பனைக்கு ஊற்றாய், வடிவம் அமைந்து சிறந்த கருத்தின் கொள்கலனாய்த் திகழ்வதனைச் சிறப்புறக் காணலாம். சங்ககாலக் கவிஞர்கள் இயற்கையை நுணுகிக் கண்டு, மக்கள் வாழ்க்கையினை அவ்வினிய இயற்கையின் பின்னணியில் வடித்துப் படிப்போர் மனம் மகிழ்வதோடு கருத்து விளக்கமும் பெறும் அளவில் உவமைகளைக் கையாண்டுள்ளனர். சங்க இலக்கியம் உவமைக் களஞ்சியமாக அமைந்து, நமக்கு உவமை ஊட்டுவதோடு, வாழ்க்கையை வழிநடத்திச் செல்லக் கருத்துக் கருவூலங்கள் தந்து ஒளிவிடுகின்றன எனில் அக்கூற்று மிகையாகாது.

10. பண்டைத் தமிழரின் வணிகம்

ஒரு நாட்டின் தொழில்களிலே உழவும் வணிகமுமே தலைசிறந்தன என்பது அறிஞர் கொள்கை. ஒரு நாட்டின் மேம்பாட்டிற்கு இவ்விரு தொழில்களும் ஒருங்கு செழித்திருத்தல் இன்றியமையாததாகிறது. தமிழகமும் சங்க காலத்தில் இவ்விரு தொழிலையும் குறைவறப் பெற்றிருந்தது.

வியன்மேவன் விழுச்செல்வத்து
இருவகையா விசை சான்ற
சிறுகுடிப் பெருந்தொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு

எனவரும் மதுரைக்காஞ்சி அடிகளாலும், அப்பகுதிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு வாணிகம் என்கின்ற இரண்டு கூற்றாலே அகலம் பொருந்துதலையுடைய சீரிய செல்வத்தாலே புகழ் நிறைந்த குடிமக்கள் பொருந்திய நான்கு நிலத்து வாழ்வாருடனே' எனக் கூறும் உரையாலும் தமிழ்நாட்டில் இவ்விரு தொழிலும் பெற்றிருந்த செல்வாக்குப் பெறப்படும். இந்நலம் சான்ற வணிகத்தைப் பண்டைத் தமிழர் போற்றியதை ஆய்வதே இக்கட்டுரையின் கொள்கையாகும்.

பண்டமாற்று

சங்க காலத்திலே வாழ்ந்த தமிழர் அன்றாடத் தேவையான அரிசி, பருப்பு, உப்பு, பால், தயிர், மீன், இறைச்சி முதலான பொருள்களைக் காசு கொடுத்து வாங்காமல் பண்டமாற்று செய்து கொண்டனர். பண்டமாற்று என்பது

ஒரு பொருளைக் கொடுத்து மற்றொரு பொருளைக் கொள்வது. அதிக விலையுள்ள பொருள்களை மட்டும் காசு கொடுத்து வாங்கினர். பெரிய பட்டினங்களிலும் நகரங்களி லும் நகரங்களிலும் காசு கொடுத்துப் பொருளை வாங்கும் முறை இருந்த போதிலும், ஊர்களிலும் கிராமங்களிலும் பண்டமாற்று முறையே வழக்கத்தில் இருந்தது. தமிழ் நாட்டில் மட்டுமன்றிப் பிற நாடுகளிலும் பண்டமாற்று முறை இருந்து வந்தது. தமிழகத்திலிருந்த பண்டமாற்று முறையினைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன.

1. இடையன் பாலைக் கொடுத்து அதற்கு ஈடாகத் தானியத்தைப் பெற்றுக் கொண்டதை முதுகூத்தனார்,

பாலொடு வந்து கூழொடு பெயரும் யாடிடை இடையன்
—குறுந். 221:3-4

என்னும் தொடரால் குறிக்கின்றார்.

2. ஆயர் மகளிர் தயிரையும் மோரையும் மாறித் தானியத்தைப் பெற்று உணவு சமைத்து உண்டதைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் விளக்குகின்றார்.

....
உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
நாள்மோர் மாறும் ....
............ஆய்மகள்
அளவில் உணவில் கிளையுடன் அருத்தி
—பெரும்பாண். 155-165

3. இடைச்சியர் நெய்யைப் பண்டமாற்று செய்யாமல் காசுக்கு விற்று அக்காசுகளைச் சேமித்து வைத்தார்கள். குறிப்பிட்ட தொகை காசு சேர்ந்தபோது அக்காசைக் கொடுத்துப் பசுவையும் எருமையையும் விலைக்கு வாங்கினர்என்பதனை,

நெய்விலை கூட்டிப் பசும்பொன் கொள்வாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர்

—பெரும்பாண். 164-166

என்னும் பகுதியால் விளக்குகின்றார்.

4. வேடன் தான் வேட்டையாடிக் கொணர்ந்த மான் இறைச்சியை உழவனிடத்தில் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லை மாற்றிக் கொண்டதைக் கோவூர்கிழார் கூறுகின்றார். இடைச்சியரும் உழவனுக்குத் தயிரைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக் கொண்டவர் என்று இப் புலவரே கூறுகின்றார்.

கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்தசை சொரிந்த வட்டியும் ஆய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கோள் வெண்ணெல்
முகந்தவர் கொடுப்ப உவந்தனர் பெயரும்
தென்னம் பொருப்பன் நன்னாடு

—புறம். 33:1-8

5. பாணர் உள்நாட்டு நீர் நிலைகளில் வலை வீசியும் தூண்டிலிட்டும் பிடித்த மீன்களைப் பாண்மகளிர் ஊரில் கொண்டுபோய்ப் பயற்றுக்கும் தானியத்துக்கும் மாற்றிய செய்தியினை,

முள் எயிற்றும் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன் பெருவட்டி நிறைய மனையோள்
அரிகால் பெரும்பயறு நிறைக்கும்

—ஐங்குறு. மருதம். புலவிப்பத்து. 47

என்று ஓரம்போகியார் குறிப்பிடுகின்றார்.

அஞ்சில்ஓதி அசைநடைப் பாண்மகள்
சின்மீன் சொரிந்து பன்னெற் பெறூஉம்

—ஐங்குறு. மருதம், புலவிப்பத்து. 49

வலைவல் பாண்மகள் வாலெயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும்

—ஐங்குறு. மருதம், புலவிப்பத்து. 48

6. கடற்கரையைச் சார்ந்த உப்பளங்களில் நெய்தல் நில மக்கள் விளைத்த உப்பினை உப்பு வணிகர் மாட்டு வண்டிகளிலே நெல்லைக் கொணர்ந்து கொடுத்துவிட்டு எடுத்துச் சென்றதாக நற்றிணைச் செய்யுள் குறிப்பிடுகின்றது.

தன்னாட்டு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி
....
உமணர் போலும்

—நற். 183

உப்பினை நெல்லுக்கு மாற்றியதைக் கல்லாடனார்,

............ஆயும்
உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்பு விளை கழனிச் சென்றனள்

—குறு. 269:4-6

என்று விளக்குகின்றார்.

உப்பை ஊர்த்தெருக்களில் விற்ற உமணப்பெண் நெல்லுக்கு மாற்றியதை அம்மூவனார் குறிப்பிடுகின்றார்.

கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரிவிலை மாறுகூறலின்

—அகம். 140:5-8

நெல்லும் உப்பும் நேரே, ஊரீர்
கொள்ளீரோ வெனச் சேரிதொறும் நுவலும்

உப்பை நெல்லுக்கு மாற்றிய உப்பு வணிகர் தமக்குக் கிடைத்த நெல்லைச் சிறு படகுககளில் ஏற்றிக்கொண்டு கழிகளில் ஓட்டிச் சென்றதைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுகிறார்:

குறும்பல்லூர் நெடுஞ் சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி

—பட்டினப்பாலை. 28-30

உப்பை நெல்லுக்கு மாற்றியதை உலோச்சனார் கூறுகின்றார்:

உமணர் தந்த உப்பு நொடை நெல்

உப்பு விற்கும் நெய்தல் நிலப் பெண்ணை அகநானூறு குறிப்பிடுகின்றது:

நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரிவிலை மாறு கூறலின்

எருதுகள் இழுத்துச் செல்லும் உப்பு வண்டிகளைப் பற்றி சிறுபாணாற்றுப்படை:

நோன்பகட் டுமணர் ஒருகையொடு வந்த

என்று குறிப்பிடுகின்றது.

7. பரதர் கடலில் பிடித்த சுறா இறால் போன்ற மீன்களைப் பரதவர் மகளிர் எளிதில் தானியத்துக்கு மாற்றியதைக் குன்றியனார் நவில்கின்றார்.

இனிதுபெறு பெருமீன் எளிதினில்மாறி

—நற். 239:3

பசுமீன் நொடுத்த வெண்ணெல் மாஅத்
தயிர்மிதி மிதவை யார்த்துவம்

—நக்கீரர், அகம். 340:14-15

உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு

—குடவாயில் கீரத்தனார் அகம். 60:4

மீனை நெல்லுக்கு மாற்றினர். கிடைத்த நெல்லினை அம்பியில் ஏற்றுக்கொண்டு கழிகளில் வழியே வந்ததைப் பரணர் தெளிகின்றார்.

மீன்தொகுத்து நெல் குவைஇ
மிசை அம்பியின் மனைமறுக்குந்து

—புறம். 343:1-2

பரதவமகளிர் கடல் மீனைத் திருவிழா நடக்கிற ஊர்களில் கொண்டுபோய் எளிதில் விற்றதைச் சீத்தலைச் சாத்தனார்,

திமிலோன் தந்தக டுங்கண் வயமின்
தழையணி அல்குல் செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின் விலையெனப் பகரும்
கானலஞ் சிறுகுடி

—அகம். 320:2-5

என்னும் சங்கப்பாடலின் மூலம் உணர்த்துகின்றார்.

8. உழவர் மகளிர் தெருக்களில் பூ விற்றதைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ கூறுகிறார்.

துகிலிகை அன்ன துய்த்தலைப்பாதிரி
வாலிதழ் அலரி வண்டுபட ஏந்திப்
புதுமலர் தெருவுதொறும் நுவலும்
நொதுமலாட்டி —நற். 118:8-11

பெண் ஒருத்தி மலர் விற்றதைப் பாண்டியன் மாறன் வழுதி தம்முடைய செய்யுட்களில் கூறுகிறார்:

துயத்தலை இதழைபைங் குருக்கத்தியொடு
பித்திகை விரவுமலர் கொள்ளிரோ என
வணடுசூழ் வட்டியள் திரிதரும்
தண்டலை யுழவர் தனிமடமகள்

—நற் : 97:6-9

9. வேடவர்கள் ஒன்றுகூடிக் காட்டில் வேட்டையாடிக்கொன்ற யானையின் தந்தங்களை மதுபானக் கடையில் கொண்டுபோய்க் கொடுத்து மதுபானம் அருந்தினதை மாமூலனார் கூறுகிறார்.

வரிமாண் நோன்நாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அவரும்

—அகம். 61:8-10

10. வேடர் தேனையும் கிழங்கையும் கொணர்ந்து மதுபானக் கடையில் கொடுத்து அதற்கு மாறாக வறுத்தமீன் இறைச்சியையும், மதுவையும் வாங்கி உண்டதையும், உழவர் கரும்பையும், அவலையும் கொண்டுவந்து கொடுத்து அதற்கு மாறாக வறுத்த மான் இறைச்சியையும் மதுவையும் பெற்று உண்டு மகிழ்ந்ததையும் முடத்தாமக் கண்ணியார் கூறுகிறார்.

தேனெய்யொடு கிழங்கு மாறியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்பொடு அவல் வகுத்தோர்
மான்குறையோடு மது மறுகவும்

—பொருநரா. 214-217

11. பரதவர் மீன்பிடித்தபோது கிடைத்த முத்துச் சிப்பிகளைக் கள்ளுக்கடையில் மாற்றிக் கள் குடித்ததைப் பேராலவாயர் கூறுகின்றார்.

பன்மீன் கொள்பவர் முகந்த சிப்பி
நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கை

—அகம். 296:8-10

12. எயினர் மது அருந்துவதற்காக மதுவிற்கும் இடத்துக்கு வந்து எந்தப் பொருளும் இல்லாதபடியால் காட்டில் வேட்டையாடி யானைத் தந்தங்களைக் கொண்டுவந்து கொடுப்போம். அதற்கு ஈடாக இப்போது கடனாகக் கள்ளைக் கொடு என்று கேட்டதாக மருதனிள நாகனார் கூறுகின்றார்:

அரகிளர் பனைத்தோள் வயிறணி திதலை
அரிய லாட்டியர் அல்குமனை வரைப்பின்
மகிழ் நொடை பெறாஅர் ஆகி நனைகவுள்
கான யானை வெண்கோடு சுட்டி
மன்றாடு புதல்வன் புன்றலை நீவும்
அருமுனைப் பாக்கம்

—அகம். 245:8-13

13. கொல்லி மலைமேல் வாழ்ந்த மக்கள் தம் சுற்றம் பசித்திருப்பதனால், தங்களிடமிருந்த யானைத் தந்தங்களைத் தானியத்துக்கு மாற்றிச் சோறுசமைத்து உண்டனர் என்று கபிலர் கூறுகின்றார்.

காந்தளஞ் சிலம்பில் சிறுகுடி பசித்தெனக்
கடுங்கண் வேழத்துக் கோடு கொடுத் துண்ணும்
வல்வில் ஓரி கொல்லிக் குடவரை

—குறுந். 100:3-5

14. நெல் அளப்பதற்குரிய அளவையைப் பதிற்றுப் பத்து எடுத்து விளம்புகின்றது.

தொன்றுதிறை தந்த களிற்றொடு நெல்லின்
அம்பணவளவை விரிந்துறை போகிய

—பதிற். 66:7-8

அம்பண வளவை யுறைகுளித் தாங்கும்
கடுந்தே றுறுகிளை மொசிந்தன துஞ்சும்

—பதிற். 71:5.6

நாணய மாற்று

பண்டமாற்று வழங்கிய காலத்திலும் காசு வழங்கப் பட்டது. செம்பு, வெள்ளி, பொன் முதலிய காசுகள் வழங்கி வந்தன என்பதைச் சங்க இலக்கிய அடிகள் பிரதிபலிக் கின்றன.

1. காசுகள்நெல்லிக்காயின் வடிவம் போல உருண்டு சிறிது தட்டையாகஇருந்தன என்று மதுரைக் கொல்லன் வெண்ணாகனார் கூறுகின்றார். பாலை நிலத்து நெல்லிக்காய்கள் பொற்காசுகள் உதிர்ந்து கிடப்பன போலக் காணப்பட்டன என்று அவர் கூறுகின்றார்.

புல்லிலை நெல்லிப் புகரில் பசுங்காய்
கல்லதர் மருங்கில் கடுவளி உதிர்ப்பப்
பொலஞ்செய் காசிற் பொற்பத்தாஅம் அத்தம்

—அகம். 363:6-8

2. உகா மரத்தின் பழம்போல மஞ்சள் நிறமாக பொற்காசுகள் இருந்ததைக் காவன் முல்லைப் பூதனார்கூறுகின்றார்.

குயில்கண் அன்ன குரூஉக்காய் முற்றி
மணிக்கா சன்ன மாணிற இருங்கனி
உகாஅ மென்சினை உதிர்வன கழியும்
வேனில் வெஞ்சுரம்

3. பொற்காசுகளை மாலையாகச் செய்து மகளிர் அறையைச் சுற்றி அணிந்து கொண்டதைச் சங்கப் புலவர்கள் அறிவிக்கின்றனர்.

ஆசில் கம்மியன் மாசறப் புனைந்த
பொலஞ்செய் பல்காசு அணிந்த அல்குல்
—காவிரிப்பூம்பட்டினத்து காரிக்கண்ணனார்
—புறம். 353:1-2

அம்மா மேனி ஐதமை நுசுப்பில்
பல்காசு நிறைத்த கோடேந் தல்குல்
மெல்லியல் குறுமகள்
—மதுரைப் போத்தனார்
—அகம். 75:18-20

பொலம்பசும் பாண்டிற் காசுநிறை அல்குல்
இலங்குவளை மென்றோள்
—ஐங்குறு—பாலை—செலவழுங்குவித்தபத்து—10

4. களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார்க்கு 40 நூறாயிரம் பொன் அவன் பரிசிலாகக் கொடுத்தான் என்று கூறப்படுகிறது. (பதிற்றுப்பத்து - நான்காம் பத்து - பதிகம்

5. ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் 6ஆம்பத்துப் பாடிய காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்க்கு அவ் வரசன் நகை செய்து அணிதற்காக ஒன்பது காப்பொன்னையும் நூறாயிரம் காணமும் கொடுத்தான்.

6. செல்வக்கடுங்கோ ஆழியாதனைப் பாடிய கபிலருக்குப் பரிசாக அவ் வரசன் நூறாயிரம் காணம் வழங்கினான் என்று ஏழாம் பத்துப் பதிகம் கூறுகிறது.

7. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை அரிசில் கிழாருக்கு ஒன்பது நூறாயிரம் காணம் பரிசிலாகக் கொடுத்தான் என்பதைப் பதிற்றுப்பத்து 8ஆம் பத்துப் பதிகத்தினால் தெளிகிறோம்.

8. இளம்சேரலிரும்பொறை தன்னைப்பாடிய பெருங் குன்றூர் கிழார்க்கு முப்பதினாயிரம் காணம் பரிசிலாகக்

கொடுத்தான் என்பதை 9ஆம் பத்தின் பாயிரத்தினால் உணர்கிறோம்.

9. பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார்க்குச் சோழன் கரிகாலன் நூறாயிரங் காணம் பரிசு வழங்கினான்.

இதனால் காணம் என்னும் பொற்காசு அக் காலத்தில் வழங்கியதை அறிகிறோம்.

10. செங்கம் என்னும் ஊரில் ஈயக்காசுகள் வழங்கி வந்ததை அங்கு கிடைத்த பழங்காசுகளிலிருந்து தெளிகிறோம். அந்த ஈயக்காசுகளில் பொறிக்கப்பட்டுள்ள பிராமி எழுத்துக்களால் அவை கடைச்சங்க காலத்தில் கி.பி.2ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வழங்கி வந்தவை என்பது தெரிகிறது. அந்தக் காசில் உள்ள எழுத்துக்கள் தேய்ந்து உருத்தெரியாமல் மழுங்கிப் போனமையால் அவ்வெழுத்துக்களின் வாசகத்தை அறியமுடியவில்லை.

இந்தக் காசுகளே அன்றி அக்காலத்தில் கடல் கடந்த கப்பல் வாணிகத்தின் மூலமாக உரோம (யவன) தேசத்து நாணயங்கள் தமிழ்நாட்டில் வழங்கி வந்தன. அக் காசுகள் சமீப காலத்தில் ஏராளமாகப் புதையல் களிலிருந்து கிடைத்துள்ளன.

தரைவாணிகம் - போக்குவரத்துச் சாதனங்கள்

வாணிகப் பொருட்களை ஓரிடத்தினின்று வேறோர் இடத்திற்குப் கொண்டு செல்ல எருது, கழுதை, வண்டி, படகு, பாய்க்கப்பல்களைப் பயன்படுத்தினர்.

சிந்து, பாரசீகம், அரபி நாடுகளிலிருந்து குதிரைகள் அக்காலத்தில் கொண்டு வரப்பட்டன. இவை வணிகப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படவில்லை. அரசரும் செல்வந்தரும் ஊர்தியாகப் பயன்படுத்தினர்.

வெளிநாடுகளிலிருந்து அத்திரி என்னும் கோவேறு கழுதைகளும் வரவழைக்கப்பட்டன. அவையும் ஊர்தியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டன.

கொடுநுகம் நுழைந்த கணைக்கால் அத்திரி
வடிமணி நெடுந்தேர் பூண

—நக்கீரர், அகம். 350:6-7

கழிச்சுறா வெறிந்த புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழி பரிமெலிந் தசைஇ

—உலோச்சனார் - அகம். 120:10-11

கழிச்சேறு ஆடிய கணைக்கால் அத்திரி
குளம்பிலும் சேயிறா ஒடுங்கின
கோதையும் எல்லாம் ஊதை வெண்மணலே

—நற்றிணை 273:7,9

சிலப்பதிகாரத்திலும் கோவலன் அத்திரி ஊர்ந்து சென்ற செய்தி தெரியவருகிறது. எனவே அற்றை நாளில் அத்திரி உயர்தர ஊர்தியாகக் கருதப்பட்டமை புலனாகிறது.

வணிகப் பொருட்களைக் கொண்டுபோவதற்கு எருதுகள் பயன்பட்டன. மாட்டு வண்டிகளில் வணிகப் பொருட்களை எடுத்துச்சென்றனர். இதற்கு வணிகச் சாத்து என்பது பெயர்.

1. வணிகர் வாணிகப் பொருட்களை ஊர் ஊராக எடுத்துச் செல்லக் கழுதைகளையும் பயன்படுத்தினர். பாறைகளும் குன்றுகளும் உள்ள நாட்டிற்குச் செல்லக் கழுதைகள் பயன்பட்டன. கழுதைகளின் முதுகின் மேல் பொதிகளை ஏற்றி வணிகச்சாத்து ஒன்று சேர்ந்து போயிற்று.

நெடுஞ்செவிக் கழுதை குறுங்கால் ஏற்றை
புறநிறைப் பண்டத்துப் பொறை

—மருதனிள நாகனார் அகம். 343:12-13

2. பலாப்பழம் அளவாகச் சிறுசிறு பொதிகளாகக் கட்டப்பட்ட மிளகு மூட்டைகளைக் கழுதைகளின் மேல் ஏற்றிக்கொண்டு வணிகச்சாத்து சென்றதையும், இடையில் சுங்கச் சாவடிகளில் சுங்கஞ் செலுத்திய தையும், கடியலூர் உருத்திரங்கண்ணனார் கூறுகின்றார்.

தடவுநிலைப் பலவின் முழுமுதற்கொண்ட
சிறுசுளைப் பெரும்பழங் கடுப்ப மிரியல்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவு
—பெரும்பாண். 77-82

3. கிழக்குப்பக்கத்து நெய்தல் நிலத்தைச் சார்ந்த கடற்கரைப் பக்கங்களில் உண்டான உப்பை மூட்டை களாகக் கட்டிக் கழுதைகளின் மேல் ஏற்றிக்கொண்டு மேற்கேயுள்ள ஊர்களுக்கு வணிகர் சென்றனர்.

அணங்குடை முந்நீர் பரந்த செருவின்
உணங்குதிறம் பெயர்த்த வெண்கல் அமிழ்தம்
குடபுல மருங்கின் உய்ம்மார் புள்ளோர்த்துப்
படையமைத் தெழுந்த பெருஞ்செய்யாடவர்
நிரைபரப் பொறைய நரைப்புறக் கழுதைக்
குறைக் குளம் புதைத்த கற்பிறழ இயவு
—அகம். 207:1-6 சேந்தம்பூதனார்

4. வணிகச் சாத்தரை வென்று கொள்ளைக் காரர் வழிபறித்ததைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுகின்றார்.

சாத்தெறிந்து
அகர்கூட்டுண்ணும் அணங்குடைப் பகழிக்
கொடுவில் ஆடவர் —அகம். 7-9

மழைபெயல் மறந்த கழைதிரங் கியவில்
செல்சாத் தெறியும் பண்பில் வாழ்க்கை
வல்வில் இளையர்

—அகம். 245:5-7 மருதனிள நாகனார்

சங்ககாலத்து வாணிகம் தரைவழியாகவே இருந்தது. தரைவாணிகம் செய்த பெருவணிகருக்கு மாசாத்துவான் என்று பெயர். தரை வாணிகத்தில் வழிப்பறிக் கொள்ளைக் காரர்கள் தொல்லை கொடுத்தனர். எனவே வணிகர்கள் தங்களுடன் வில்வீரர்களையும், வாள் வீரர்களையும் உடன் அழைத்துச் சென்றனர். தரைவழியாக வட இந்திய நகரங் கட்குச் சென்று வாணிகம் செய்தவர்கட்குப் பெருங்குடி வணிகர் என்பது பெயர்.

சுங்கச் சாவடிகளில் அரசனுடைய அலுவலர்கள் தரை வணிகர்களிடமிருந்து சுங்கம் வாங்கியதைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் கூறுகிறார்:

சிறுசுளைப் பெரும்பழம் கடுப்ப மிரியல்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்து
அணர்ச் செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கும்
உல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன் காட்டியவு

இன்னணம் தமிழர்களின் தரைவாணிகம் மிகச் சிறந்த முறையில் நடைபெற்றது.

ஈ. கடல் வாணிகம் - கரையோர வாணிகம்

தரை வாணிகத்தோடு தமிழர்கள் கடல் வாணிகத் தினையும் மேற்கொண்டனர். கடல் வாணிகத்தில் கரை யோர வாணிகம், நடுக்கடல் வாணிகம் என இருவகை யுண்டு. மரக்கலங்களாகிய நாவாய்களில் உள்நாட்டுச்

சரக்குகளை ஏற்றிக்கொண்டுபோய் அயல்நாடுகளில் விற்று, அந் நாடுகளிலிருந்து வேறு பொருள்களை ஏற்றிக்கொண்டு வந்தார்கள். தமிழ்நாட்டுக்குக் கிழக்கே வெகு தூரத்தில் ஆயிரம் மைலுக்கப்பால் இருந்த காழகம், கடாரம் முதலான கடல் கடந்த நாடுகட்குச் சென்றபோது நடுக்கடலில் நாவாய் ஓட்டிச் சென்றனர். தொல்காப்பியர் காலத்திற்கு 8ஆம் நூற்றாண்டுக்கு முன்பே தமிழர் கடலில் வாணிகம் செய்தனர்.

முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை

என்னும் தொல். நூற்பாவின் மூலம் அக்காலத்துத் தமிழர் கடலில் செலவு செய்யும்போது மகளிரை அழைத்துச் செல்லல் கூடாது என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர் என்ற உண்மை தெளிகிறது.

பழங்காலத் தமிழர் வருணன் என்னும் தெய்வத்தைக் கடல் தெய்வமாகப் போற்றினர்.

வருணன் மேய பெருமணல் உலகம்
—தொல். அகத்.5.

பின்னர் இந்த வருண வழிபாடு மறையப் பௌத்த மதம் தமிழகத்துக்கு வந்தது. அப்போது அம் மதத்தின் சிறு தெய்வமாகிய மணிமேகலா தெய்வம் கடலில் பிரயாணம் செய்கிற நல்லவருக்குத் துன்பம் நேரிட்டால் அது அவர்களுக்கு உதவி செய்து காப்பாற்றுகிறது என்னும் நம்பிக்கை பௌத்த மதத்தில் இருந்தது. பௌத்தம் தமிழகத்தில் பரவிய போது தமிழ்நாட்டு மணிமேகலா தெய்வத்தையும் கடல் தெய்வமாக ஏற்றுக்கொண்டனர்.

கடல் வாணிகம் செய்தவர் நாவிகர் எனப்பட்டனர். கடல் வாணிகம் செய்த பெரிய நாவிகர் மாநாவிகர் எனப் பட்டனர். மாநாவிகர் என்ற பெயர் மருவி மாநாய்கர் என்று வந்திருக்கலாம். சிலப்பதிகாரக் கதை நாயகியின் தந்தை மாநாய்கன்.

மாகவான் நிகர்வண்கை மாநாய்கன்
—சிலம்பு. மங்கல வாழ்த்துக்காதை

கரையோர வாணிகம்

கொற்கை தொண்டி பூம்புகார் சோபட்டினம் முதலான தமிழ்நாட்டுத் துறைமுகப் பட்டினங்களினின்று நாவாய்களில் புறப்பட்டுச் சென்று தமிழ் வணிகர் கிழக்குக் கடல் ஓரமாகவே நாவாய்களைச் செலுத்தி நெல்லூர், கலிங்கப் பட்டினம், தம்ரலிப்தி (வங்காளத் துறைமுகம்) முதலான பட்டினங்கட்குச் சென்றனர். பிறகு கங்கையாறு கடலில் கலக்கின்ற புகர்முகத்தின் ஊடே கங்கையாற்றில் நுழைந்து கங்கைக் கரையில் இருந்த பாடலிபுரம், காசி முதலான ஊர்களில் வணிகம் செய்து திரும்பினர்.

கங்கை வங்கம் போகுவர் கொல்லோ
—நற்றிணை. 189:5

கி.மு. 4ஆம் நூற்றாண்டில் மகத நாட்டை அரசாண்ட நந்த அரசர் தங்களுடைய தலைநகரமான பாடலிபுத்திரத்தில் கங்கையாற்றின் கீழே பெருஞ்செல்வத்தைப் புதைத்து வைத்திருந்ததைத் தமிழக வணிகரின் மூலமாகத் தமிழ்நாட்டவர் அக்காலத்தில் அறிந்திருந்தனர்.

பல்புகழ் நிறைந்த வெல்போர் நந்தர்
சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ
—அகம். 265:4-6

என்னும் இப் பாடலில் நந்த அரசரின் செல்வப் புதையலைப் பேசுகின்றார். தமிழ் வணிகர் கலிங்கநாட்டிலே போய் வாணிகம் செய்தனர். அந்த வணிகச் சாத்து கி.மு. 300 - 150 வரையில் தங்கியிருந்தது. நாளுக்கு நாள் தமிழ் வணிகரின் செல்வாக்கு வளம்பெறுவதைக் கண்ட கலிங்க

வேந்தன் காரவேலன் தன்னுடைய ஆட்சிக்குத் தமிழ் வணிகர்களால் ஆபத்து ஏற்படுமோ என்றஞ்சி அந்த வணிகச் சாத்தினை அழித்தான் என்று அவனது ஹத்தி கும்பா குகைக் கல்வெட்டு எழுத்துச் சாசனம் அறிவிக்கின்றது.

கலிங்கத்திலிருந்து தமிழகத்திற்குக் கொண்டு வரப் பட்ட முக்கியப்பொருள் பருத்தித்துணி. கலிங்கத்தினின்று வந்தமையால் காலப்போக்கில் 'கலிங்கம்' என்ற சொல்லே ஆடையைக் குறித்து நிற்கும் பொதுச்சொல்லாயிற்று. கலிங்க நாட்டினின்று தமிழகத்திற்கு வந்த மற்றொரு பொருள் சந்தனக்கல். (வடவர் தந்த வான்கேழ் வட்டம்.)

அடுத்து ஆந்திர நாட்டிலே பெயர்போன அமராவதி நகரத்திலும் தமிழ்வணிகரின் ஆட்சி நடைபெற்றிருக்கின்றது. அமராவதி நகரில் உள்ள பௌத்தத்தூபி (கி.மு. 200 முதல் கி.பி. 200) யினைக் கட்டத் தமிழ் வணிகர்களும் (தமிள (தமிழ்) கண்ணன், இளங்கண்ணன், இவர்களின் தங்கை, நாகை), உதவி செய்துள்ளனர் என்ற செய்தியினை 3½" உயரமும் 2அடி 8" அகலமும் உள்ள ஒரு கல்லில் பிராமி எழுத்தில் எழுதப்பட்ட சாசனம் தருகின்றது.

இலங்கையிலும் தமிழ்வணிகர் வணிகம் செய்து மேன்மை பெற்றுள்ளனர். தமிழ் வணிகச் சாத்து கி.மு. 2 இல் இலங்கைக்குச் சென்று வணிகம் செய்ததை அங்குள்ள ஒரு பிராமி எழுத்துக் கல்வெட்டுச் சாசனம் கூறுகிறது.

இன்றைக்கு 2200 ஆண்டுகட்கு முன்பு தமிழ் வணிகச் சாத்தனுடைய மாளிகை கட்டப்பட்டுப் பிற்காலத்தில் மண் மூடிக் கிடந்திருத்தல் வேண்டும். பின் மழைநீரினால் மண்மேடு கரைந்து அங்குக் கல்லில் எழுதப்பட்ட பிராமி எழுத்துக்கள் வெளிப்பட்டன. இதில் கற்பாறையோடு சார்ந் திருந்த மாளிகையில் அக்காலத்தில் தமிழ் நாவாய்த் தலைவன் அமர்ந்திருந்த இடத்திலும் மற்ற வணிகர்கள் அமர்ந்திருந்த இடங்களிலும் அவர்களுடைய பெயர்கள்

பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றினின்று கி.மு. இரண்டாம் நூற்றாண்டிலேயே தமிழ்வாணிகர் அநுராதபுரத்தில் பெரிய வணிக நிலையம் அமைத்திருந்தமை தெளிவாகிறது.

கி.மு. ஒன்று, இரண்டாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் வேறு சில தமிழ் வணிகர் இருந்ததை அக்காலத்துப் பிராமிய எழுத்துச் சாசனங்கள் கூறுகின்றன.

தமிழ்நாட்டு வணிகர் இலங்கைக்குச் சென்று வாணிகஞ் செய்ததைச் சங்க இலக்கியங்கள் கூறவில்லை. ஆனால் கி.மு. 2ஆம் நூற்றாண்டில் தமிழ்வணிகர் இருவர் இலங்கையை அரசாண்டதை மகாவம்சமும் தீபவம்சமும் கூறுகின்றன. அதாவது 'சேனன் குட்டகன்' என்னும் இருவரும் அற்றை நாள் இலங்கை மன்னன் சூரதிஸ்ஸன் என்னும் சிங்கள அரசனை வென்றதைச் செப்புகின்றது. இவ்விருவரும் அஸ்ஸா நாவிகள் - குதிரை வணிகர் எனப்பட்டனர்.

நடுக்கடல் வாணிகம்

தமிழகத்துக்குக் கிழக்கே பசிபிக் மாக்கடலில் காணப்படும் இற்றை நாளில் 'கிழக்கிந்தியத் தீவுகள்' என்றும் 'இந்தோனேஷியத் தீவுகள்' என்றும் வழங்கப்படும் அற்றை நாள் சாவக நாட்டோடும் தமிழர் கடல்வழிவாணிகம் செய்துளர்.

> சாவக நாடு - சாவா தீவு (இன்றியமையாதது)
> சாவா - யவதீபம் - வடநாட்டார்
> சாவா - யெதீயவோ - சீனர்

இந்தியாவிற்கும் சீனதேசத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்த இச்சாவக நாடு அக் காலத்தில் புகழ்பெற்ற வணிக மத்திய இடமாக இருந்தது.

தமிழகத்தின் சேரநாட்டு மிளகை யவனர் கப்பலில் எடுத்துச்சென்று உரோமாபுரி முதலான மேல்நாடுகளில்

விற்றனர். எனவே சேரநாட்டு மிளகு போதுமான அளவு தமிழகத்திற்குக் கிடைக்கவில்லை. எனவே பற்றாக் குறையை நிறைப்படுத்தச் சாவகத்து மிளகு தமிழகத்திற்குத் தருவிக்கப்பட்டது.

தமிழகத்துக் கப்பல் வணிகர் சாவக நாட்டுக்குக் கடல் கடந்து சென்று அங்கு உண்டான வாசனைப் பொருட் களான சந்தனம், சாதிக்காய், கற்பூரம், பிசின், இலவங்கம் முதலியனவற்றையும், பவழமும் சீனத்திலிருந்து அங்குக் கொணரப்பட்ட பட்டுத்துகிலையும் கொணர்ந்து பழந்தமிழ் நாட்டில் விற்றனர். சாவகத்தில் கிடைத்த வாசனைப் பொருட்களைச் சிலப்பதிகாரம் செப்புகின்றது.

தக்கோலம் தீம்பூத் தகைசால் இலவங்கம்
கற்பூரம் சாதியோ டைந்து —சிலம்பு

தமிழ்நாட்டினின்று சாவக நாட்டிற்குச் சென்ற கப்பல்கள் முதலில் இலங்கைத் தீவின் வடகோடியில் இருந்த மணிபல்லவம் என்னும் சம்புகொல பட்டினத்துச் சென்று தங்கின. பின் அங்கிருந்து சாவகத்திற்குச் சென்றன. இடையில் நாகர்மலைத் தீவுகள் இருந்தன. இங்கு வாழ்ந்த நாகர்கள் (நக்கசாரணர்) நாகர்மலைத் தீவிற்குக் கப்பற் பயணிகள் சென்றால் கொன்று தின்றுவிடுவர். சாதுவன் என்னும் வணிகன் மட்டும் இவர்களிடமிருந்து தப்பியவன் என்ற செய்தியை மணிமேகலை தருகின்றது.

கடலில் செல்லும் கப்பல்கள் காற்றினால் திசைமாறிச் செல்லும்போது பரதவர் அவைகளை அடக்கினர் என்பதை,

முரசு கடிப்படைய அருந்துறை போகிப்
பெருங்கடல் நீந்திய மரம்உலி யுறுக்குப்
பண்ணிய வினைவர் போல

என்னும் பதிற்றுப்பத்து அடிகள் வலியுறுத்துகின்றன.

கடுங்காற்றினால் தாக்குண்டு திண்மையான கயிறுகளையும் அறுத்துப் பாய்மரத்தை ஒடித்து நாவாயை அடித்துச் சென்று பாறைக்கல்லில் மோதி நீர்ச்சுழியில் அகப்பட்ட நாவாயை மாங்குடி மருதனார் கூறுகின்றார்.

பனைமீன் வழங்கும் வளைமேய் பரப்பின்
வீங்குபிணி நோன்கயிறு அறிஇ இதை புடையூக்
கூம்புமுதல் முருங்க எற்றிக் காய்ந்துடன்
கடுங்காற்று எடுப்பக் கல்பொருது உரைஇ
நெடுஞ்சுழிப் பட்ட நாவாய்

—மதுரை. 375 - 379

சாதுவன் என்பவன் கடற்பயணம் செய்தபோது கப்பல் நாகர்மலைத் தீவுக்கு அருகில் முழுகிப் போனதையும், அவன் ஒரு மரத்தைப் பற்றிக்கொண்டு தீவில் கரையேறியதையும்

நளியிரு முந்நீர் வளிகலன் வவ்வ
ஓடிமரம் பற்றியூர்திரை யுதைப்ப
நக்கசாரணர் நாகர்வாழ் மலைப்
பக்கஞ் சார்ந்தவர் பான்மையின் ஆயினன்

—மணி. 16-13-16

என்னும் மணிமேகலை அடிகள் பகர்கின்றன.

மணிபல்லவத்தினின்று காவிரிப் பூம்பட்டினத்திற்குக் கப்பலில் வந்த கம்பளச் செட்டி என்பவனின் கலம் இரவில் கரையை அடைகிற நேரத்தில் கவிழ்ந்தது என்பதனை மணிமேகலை நவில்கின்றது.

துறைபிறக் கொழியக்
கலங் கொண்டு பெயர்ந்த அன்றே காரிருள்
இலங்குநீன் அடைகரை யக்கலங் கெட்டது

—மணி. 25. 189-191

இவ்வாறாகக் காற்றினாலும், மழையினாலும், புயலினாலும் இடுக்கண்கள் நேர்ந்தபோதும் அஞ்சாமையுடன் கடலில் நாவாய்களைச் செலுத்தி வணிகம் செய்தனர். இவ்வியற் பகையே அன்றிக் கப்பற் கொள்ளைக்காரர்களாலும் இன்னல் கள் நேர்ந்தன.

கடலில் நாவாய் ஓட்டும் தொழில் செய்பவருக்கு மீகாமர் என்பது பெயர். கப்பலோட்டும் தொழில் செய்தவர் பரதவர் என்றும் பரதர் என்றும் பெயர் பெற்றனர்.

துறைமுகங்களில் கள் விற்கப்பட்டமையும், அக் கள்ளினை வாங்கிக் குடித்து மாலுமிகள் மகிழ்ச்சியாக இருந்தமையையும் சங்க இலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன.

வேறுபன் னாட்டுக் கால்தர வந்த
பல்வினை நாவாய் தோன்றும் பெருந்துறைக்
களிமடைக் கள்ளின் சாடி

—நற்றிணை. 295

முழங்குநீர் முன்றுறைக் கலம்புணர் கம்மியர்
துழந்தடு கள்ளின் தோப்பியுண் டயர்ந்து
பழஞ்செருக் குற்ற அனந்தர்ப் பாணி

—மணி. 7. 70-72

நாவாய்க் கப்பல்களை மகிழ்வுடன் எதிர்கொண்டழைத் ததைப் பரிபாடல் நவில்கின்றது.

தாம் வேண்டும் பட்டினம் எய்திக் கரைசேரும்
ஏயறு நாவாய் வரவெதிர் கொள்வார் போல

—பரிபாடல் 10. 38-39

துன்பங்கள் மிகுந்த நிலையிலும் திரைகடல் ஓடித் திரவியம் தேடிய வணிகர்களுள் பெரும்பொருள் ஈட்டிய

வணிகச் செல்வர்கட்கு எட்டிப்பட்டமும், எட்டிப்பூவும் அளித்துச் சிறப்பித்தனர். காவிரிப்பூம்பட்டினத்தில் சாயலன் என்னும் வணிகன் எட்டிப்பட்டம் பெற்றிருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

எட்டிச் சாயலன் இருந்தோன் தனது
பட்டினி நோன்பிகள் பலர்புகு மனையில்
—அடைக்கலக் காதை. 163-164

எட்டிப்பட்டம் பெற்றிருந்த ஒரு வாணிகனை மணிமேகலைக் காவியம் கூறுகிறது.

வணிக மரபின் வருபொருள் ஈட்டி
நீள்நிதிச் செல்வனாய் நீனில வேந்தனில்
எட்டிப் பூப்பெற்று இருமுப்பதிற் றியாண்டு
ஒட்டிய செல்வத்து உயர்ந்தோன் ஆயினான்
மணி. 22. 111-114

பிறநாட்டு வாணிகம்

தமிழ் வாணிகர் அயல்நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்தது போலவே அயல்நாட்டு வாணிகரும் தமிழகத்துக்கு வந்து வாணிகம் செய்தனர்.

மொழிபெயர் தேத்தோர் ஒழியா விளக்கம்
—சிலம்பு. 6:43

மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிதுறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம்
—பட்டினப்பாலை. 216-218

இப் பகுதிகள் அக்காலத்தில் வணிகத்தில் உலகப் புகழ் பெற்ற காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்திலே அயல்

நாடுகளினின்று கப்பலோட்டி வந்த வேறு மொழி பேசிய மக்கள் தங்கியிருந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது.

1. அரபு வணிகர்

தமிழ்நாட்டிற்கு வடமேற்கிலிருந்து வந்த அராபியர் சேரநாட்டின் முசிறித் துறைமுகத்தில் வந்து தங்கினர். வாணிகம் செய்தனர். முசிறியில் இவர்கள் செய்த வணிகப் பகுதிக்குப் பந்தர் என்று பெயர்.

நன்கல வெறுக்கைத் துஞ்சும் பந்தர்
—பதிற். 6 ஆம் பத்து

பந்தர்ப் பயந்த பல்புகழ் முத்தம்
—8 ஆம் பத்து

பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்
—7 ஆம் பத்து

தமிழ் நாட்டோடு தொடர்பு கொண்டமையின் அரிசி என்னும் தமிழ்ச்சொல் அரபி மொழியில் ஒருஜ் என்றழைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டுச் சேரநாட்டு மூங்கிலைக் கொண்டு சென்று அரபி நாட்டில் வளர்த்தனர்.

தமிழ்நாட்டு மிளகைக் (சேரநாடு) கொண்டு போய்ச் செங்கடல் துறைமுகங்களிலும் எகிப்து நாட்டில் நீலநதி கடலில் கலக்கும் இடத்திலிருந்து அலெக்சாந்திரியத் துறைமுகப் பட்டினத்திலும் விற்றனர்.

தமிழர் கிழக்கிந்தியத்தீவுகளினின்று கொண்டு வந்த பொருள்களை அரபியர் வாங்கிச் சென்று வெளி நாடுகளில் விற்றனர்.

2. யவன வணிகர்

1. கிரேக்கரும் உரோமரும் யவனர் எனப்பட்டனர். யவனர் ரோமாபுரியிலிருந்து வந்து ஆசிய ஐரோப்பாக் கண்டங்களின் மத்தியத்துறைமுகப் பட்டினத்தில் (அலெக்சாண்டிரியா) தங்கினர். பின் அரபியரின் செங்கடல் வாணிகத்தைக் கைப்பற்றினர். செங்கடலை எரித்ரைக் கடல் என்றே அழைத்தனர். அரபிக்கடல், குமரிக்கடல், வங்காளக் குடாக்கடல்களுக்கு வந்து வாணிகம் செய்தனர். இக் கடல்களையும் எரித்ரைக் கடல் என்றே அழைத்தனர்.

2. யவனர் அக் காலத்தில் நடுக்கடலில் பயணம் செய்யாமல் கடற்கரை ஓரமாகவே பயணம் செய்தனர். பின்னர் ஹிப்பலஸ் என்னும் அறிஞன் பருவக் காற்றின் பயனை அறிந்தபோது யவனர்கள் கப்பல்கள் மூலம் நேராகத் தமிழ்நாட்டிற்கு வந்தனர்.

3. அகஸ்தஸ் - சீசர் என்னும் அறிஞன் யவன - தமிழர் வணிகத்தை விரிவுபடுத்தினான்.

4. உரோமாபுரி அரசர்களின் உருவ முத்திரை இடப்பட்ட பழைய நாணயப் புதையல்கள் தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்டன. அவையும் தமிழ் யவனர் தொடர்புக்குச் சானறு பகர்கின்றது.

5. தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் யவன வணிகர் செய்த வணிகத்தைச் செங்கடல் வாணிகம் என்ற பெயர் பெற்ற நூல் விளக்குகின்றது.

6. உரோம் சாம்ராச்சியத்தை ஆண்ட அகஸ்தஸ் சீசருக்கு மதுரையிலிருந்து ஒரு பாண்டியன் தூது அனுப்பினான்.

7. வணிகத்தின் காரணமாக வந்த தமிழர் பின் தமிழகத்தில் தங்கித் தச்சுத் தொழில் செய்தனர்.

யவனத் தச்சர்

—மணிமேகலை. 19: 103

அரிக்கமேடு என்னும் இடத்திலிருந்த யவனத் தொழிலாளிகள் சிலர் கண்ணாடி மணிகளைச் செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

8. கோட்டை வாயிலை யவன வீரர்கள் காவல் காத்திருந்ததைச் சிலம்பு குறிப்பிடுகின்றது.

கடிமதில் வாயில் காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க்கு அயிராது புக்கு
—சிலம்பு. ஊர்காண்: 66 - 67

9. பாண்டியனுடைய பாசறையில் இருந்த யவனர்களைப் பற்றி முல்லைப்பாட்டு குறிப்பிடுகின்றது.

மத்திகை வளைஇய மறிந்துவீங்கு செறிவுடை
மெய்ப்பை புக்கு வெருவருந் தோற்றத்து
வலிபுணரி யாக்கை வன்கண் யவனர்
—முல்லை. 59 - 61

10. யவனர் தமிழர் வணிகத் தொடர்பின் காரணமாகச் சில கிரேக்க மொழிச் சொற்கள் தமிழில் கலந்துவிட்டன. மத்திகை சுருங்கை, கலம் கன்னல்.

1. மத்திகை—முல்லைப்பாட்டு 59 ஆம் அடி

2. சுருங்கை—கிரேக்கச் சொல்—சுரங்கம்
சுருங்கை நெடுவழி—பரிபாடல் 20: 104
சுருங்கை வீதி—சிலம்பு. 14: 65

சுருங்கை—கரந்துறை. ஒழுகுநீர் புகுகையை ஒருத்தருமறியாதபடி மறைத்துப்படிந்த வீதி

—அரும்பத வுரையாசிரியர்

3. கலம்—இருவருக்குமுரிய பொதுச்சொல்
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
யவனர் நன்கலம் தந்த தண்கமழ் தேறல்

4. கன்னல்—கிரேக்கம்—தமிழ்
காலத்தை அளக்கும் கருவி—கன்னல்
பொருதளந் தறியும் பொய்யா மாக்கள்
குறுநீர்க் கன்னல் இனைத்தென் றிசைப்ப

—முல்லை. 55-59

5. தமிழ்—கிரேக்க இலத்தீன்
அரிசி—ஒரிஜா
சோபட்டினம்—சோபட்னா
காவிரி—கபிரில்
முசிறி—முசிரில்
கருவூர்—கரோரா
மதுரை—மதோரா
தொண்டி—திண்டிஸ்
குமரி—கொமாரி
கொற்கை—கொல்சாய்
நாகப்பட்டினம்—நிகாமா
மசூலிப்பட்டினம்—மசோலியா

11. யவன நாட்டினின்று வந்த அன்னப்பறவையின் உருவமாக அமைக்கப்பட்ட 'ஓதிம' விளக்கையும், பெண்வடிவமாக அமைத்த பாவை விளக்கையும் தமிழர் உபயோகித்தனர்.

யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கையேந் தையகல் நிறைய நெய்சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தது நிமற்ளரி
—நெடுநல்வாடை 101: 103

பாவை விளக்கின் பரூஉச்சுடர் அவிழ
—முல்லை. 85

யவன ஓதிம விளக்கு
—பெரும்பாண். 316-317

12. யவன வணிகர் பொற்காசுகளையும் வெள்ளிக் காசுகளையும் கொடுத்துத் தமிழ்நாட்டுப் பண்டங்களை வாங்கிச் சென்றனர்.

13. கொங்கு நாட்டில் கரூர், காட்டன்கன்னி, குளத்துப்பாளையம், பொன்னசர், பொள்ளாச்சி, வெள்ளலூர் முதலான இடங்களிலும் பாண்டி நாட்டில் மதுரை கலையம்புத்தூர், கரிவலம் வந்த நல்லூர், புதுக் கோட்டையைச் சார்ந்த கடுக்காக் குறிச்சியிலும், தஞ்சை, மகாபலிபுரம் முதலான ஊர்களிலும் கிடைத் துள்ள யவன நாணயங்கள் அக் காலத்தில் நடந்த தமிழ் —யவன வாணிகத்துக்குச் சான்றாக இருக்கின்றன.

14. யவனர் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் கொடுப்ப
—புறம். 56

யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
—அகம். 149

மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
—சிலம்பு

என்னும் இலக்கியச் சான்றுகள் யவனரோடு தமிழர் கொண்ட வணிகப் பிணைப்பினைக் காட்டுகின்றது.

15. உரோம மன்னர் உயர்குடி மக்கள், பெண்மணிகள் ஆகியோர் ஆடை அணிகலன் அணிமணி இனப்பொருட்களுக்காகச் செலவு செய்த பொன்னால் உரோம உலகு வறுமையுற்றும் தமிழகம் வளமுற்றும் வந்ததைக் கண்டு பிளினி வருந்துகிறார். ஆண்டுதோறும் சீனா, தென்னாடு அரேபியா ஆகிய நாடுகட்கு உரோமர் வணிகத்திற்காக அனுப்பிய 1000 கோடி செஸ்டர்சுகள் பாதி தென்னாட்டுக்குச் சென்றதாக அவர் கணித்தார். இதற்கேற்ப ஏறக்குறைய எல்லாப் பேரரசர் கால நாணயங்களையும் புதை பொருள் ஆராய்ச்சியாளர் கண்டெடுத்துள்ளனர். உரோம நாட்டில் அடித்த நாணயங்கள் பாதிக்குமேல் தமிழகத்திலே வந்து நிலையாகத் தங்கிற்று என்பதை இது காட்டி நிற்கிறது.

தென்னிந்தியாவிற்கும் எகிப்து, மெசபடோமியா சுமேரியா, பாலத்தீனம் முதலிய நாடுகட்குமிடையே வாணிகத் தொடர்புகள் நெடுங்காலத்துக்கு முன்னமே தோன்றின.

16. எகிப்தோடு உள்ள வாணிகம் மிகப் பழமையானது. தென்னிந்தியாவிலிருந்து மெல்லிய துணிவகைகளும் கருங்காலிக் கட்டைகளும் எகிப்திற்குச் சென்றன. சேர நாடாகிய கேரளத்திலிருந்து இலவங்கம் சென்றதாக இருக்கலாம். கி.மு. 3000த்தில் தென்னாட்டு வணிகரே பாபிலோனுக்குத் தம் சரக்குகளை அனுப்பினர். செங்கடல் வாணிபத்தை அரபியர் தம் கைக்குள் வைத்திருந்ததனால் கி.மு. 2600 முதல் தென்னாட்டினர் எகிப்தியருக்கு வேண்டிய மிளகு, திப்பிலி, தேக்கு, குங்கிலியம், தானியங்கள், புலித்தோல், தந்தம்,

பொன், ஆகிய சரக்குகளைக் கிழக்கு ஆப்பிரிக்காமூலம் அனுப்பினர்.

14. பாலத்தீனத்தைக் கி.மு. 8ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த சாலமனுக்கு 3 ஆண்டிற்கு ஒருமுறை பல அரிய பொருட்கள் பரிசுகளாகக் கப்பலில் அனுப்பப்பட்டு வந்தனவாம். தங்கம், வெள்ளி, குரங்குகள், மயில்கள், சந்தனக் கற்கள், வைரங்கள் முதலியன சாலமனுக்கு அனுப்பிய பொருட்களைச் சார்ந்தனவாம். அவற்றில் மயில்களும் சந்தனக் கட்டைகளும் தென்னிந்தியாவி லிருந்து சென்றிருக்க வேண்டும் என்பது திண்ணம். ஏனெனில் அவற்றைக் குறிக்க ஹீப்ரு மொழியில் வழங்கும் சொற்களாகிய துக்கிம், ஆல்மக் என்பன முறையே தமிழ்ச்சொற்களாகிய தோகை, அகில் என்ப வற்றிலிருந்து தோன்றியது என்பதற்கு ஐயமில்லை.

15. சுமேரியத் தலைநகரான மூக்கியரிலிருந்து சந்திரன் கோவிலிலும், நெபைகத்நெஸார் மன்னனின் அரண்மனையிலும் மலபாரினின்று சென்ற தேக்குக் கட்டைகள் காணப்படுகின்றன.

பாபிலோனில் ஆடைகளைக் குறிக்கும் பட்டியல் ஒன்றில் சிந்து என்ற பெயர் காணப்படுகிறது. வெண் துகிலைக் குறிக்கும் இச்சொல் கன்னடத்திலும், துளுவிலும் வழங்கிவரும் சிந்தி என்ற பழைய திராவிடச் சொல்லிலிருந்து தோன்றியனவாக இருக்கலாம். இது தென்னிந்தியாவோடு பாபிலோனியா நடத்தி வந்த வாணிபத் தொடர்பை விளக்குதற்கு ஏற்ற சான்றாகும்.

ஆப்பிரிக்காவில் கட்டடத்திற்குரிய மரங்கள் இருந்தா லும் தென்னாட்டுத் தேக்கே உயர்வாகக் கருதப்பட்டு உயரிய கட்டடங்கட்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன. தவிர அவுரியும் நல்லெண்ணெயும் தென்னாட்டினரா

லேயே அவர்கள் வாழ்வில் புகுத்தப்பட்டன. பண்டு நாட்டிலிருந்து ஓபிர் என்ற அதன் துறைமுகத்திலிருந்தும் கலங்கள் அடிக்கடி சென்று வந்தன. பண்டு என்பது தென்னாட்டுப் பாண்டிய நாடு. ஓபிர் என்பது கன்னியாகுமரியை அடுத்த உவரி என்ற பண்டைத் துறைமுகம். தங்கத்துக்கும் முத்துக்கும் பெயர் போனது.

ஐரோப்பாவோடு தென்னிந்தியா ஏறத்தாழக் கி.மு. 500 முதல் வாணிகம் தொடங்கியது. தென்னிந்தியப் பொருட்களை மேற்கு ஆசியாவிலிருந்து பெற்று ஐரோப்பாவிற்கு எடுத்துச் சென்று விற்பனை செய்தவர்கள் கிரேக்கர்களே. ஆகையால் தென்னிந்தியப் பொருட்கள் சிலவற்றின் தமிழ்ப்பெயர்கள் கிரேக்க மொழியில் புகுந்தமை வியப்பிற்குரியதன்று. சோபாகிளிஸ், அரிஸ்டோபெனிஸ் முதலியோரின் நூல்களில் இப்பெயர்கள் இணைந்துவிட்டன.

தமிழ்—கிரேக்கம்
அரிசி—ஓரிசி
கருவாய்—கார்ப்பி
இஞ்சி—சிக்கி பெரோசு
பிப்பிலி—பெப்பரி

உரோம வல்லரசன் அகஸ்டஸின் காலத்தைச் சேர்ந்த ஸ்டிராபோனின் விவரணம், சுமார் கி.பி. 60இல் தோன்றிய பெரிபுளூஸ் என்னும் நூல், பிளினியின் இயற்கை வரலாறு என்னும் நூல்களில் கிறிஸ்துசகாப்தத்தில் ஆரம்ப நூற்றாண்டுகளில் ஐரோப்பாவோடு நடைபெற்ற தென்னிந்திய வாணிகத்தைப் பற்றிய விவரங்கள் கிடைக்கின்றன:

கி.மு. 6 முதல் கி.பி. 6 வரை தொடர்ந்து நடைபெற்ற உரோம - யவன வணிகம் கி.மு. முதல்

நூற்றாண்டில் உச்சநிலை அடைந்தது. வணிக வளர்ச்சி கருதி கி.மு. 20 கி.பி. 107, கி.பி. 138. கி.பி. 336 ஆகிய ஆண்டுகளிலும் உரோமப் பேரரசிடம் பாண்டிய அரசியல் தூதர்களை அனுப்பியதாக அறிகிறோம். கி.மு. 20இல் ஒரு தூது மெய்க்காப்பாளர் படைக்கு வீரர்களைத் தருவிப்பதற்காக யவனர் படைத்தலைவரிடம் அனுப்பப்பட்டது.

கி.மு. 9 முதல் 8 வரை தென்னாட்டு இயந்திரங்கள் அஸீரியாவில் இறக்குமதி செய்யப்பட்டன. கி.மு. 6 முதல் 2 வரை தேக்கு, கருங்காலி சந்தனம் ஆகிய வற்றின் வாணிகம் பெருக்கமுற்றது. கி.மு. 50 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட புத்தநூலாகிய பவேரு சாதகம் தென்னாட்டிலிருந்து முதன்முதல் மயில் பாபிலோனுக்குச் சென்றது பற்றிய சுவையான கதை ஒன்றினைக் கூறுகிறது.

தென்னாட்டு வணிகர்களுடன் வட ஆரியர் கடல் கடந்து வாணிகம் செய்ததை ஆரிய சுமிருதி வாணராகிய போதாயணர் கண்டிக்கிறார்.

கி.மு. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாணக்கியர் (அ) கௌடில்யர் தென்னாட்டு வாணிபத்தைச் சிறப்பித்துள்ளார். சிந்து கங்கைவெளி அந்நாளில் கம்பளி, தோல், குதிரை ஆகிய மலிவான சரக்கையே அனுப்பிற்று என்றும் ஆனால் தென்னாடு முத்து. வைரம், தங்கம் ஆகிய விலையுயர்ந்த பொருட்களை அனுப்பிற்று என்றும் அவர் குறிக்கின்றார்.

யவனர் திரைச்சீலை பாவை விளக்கு முதலிய கலைப்பொருட்களையும், கோட்டைகளுக்கான பொறிகளையும், அரசர் பெருமக்களுக்குப் புட்டி மதுவையும் தமிழகத்திற்குக் கொண்டு வந்தனர். யவனப் பெண்டிர்

ஆடல் மகளிராகவும், ஆடவர் மெய்க்காப்பாளராகவும் தமிழகத்தில் வாழ்ந்து வந்தனர். மதுரை, புகார் காவிரிப் பூம்பட்டினத்திலும் யவனர் சேரிகள் இருந்ததாகத் தமிழ் நூல்கள் குறிக்கின்றன.

மேற்குக் கடல் துறைமுகமாய முசிறியில் உரோமக் குடியிருப்புக் கோயிலும், உரோமக் காவல் வீரர் 2000 பேரும் இருந்ததாகப் பியூட்டிங்கெரியம் (Peutinggerium Tables) பட்டயம் கூறுகின்றது. பின்னர் கிரேக்கர்களுடைய நிலை தளரவே அராபியர்கள் இந்த வர்த்தகத்தை நடத்த முன் வந்தனர். உரோமப் பேரரசு நீரோ கி.பி. 68 இல் இறந்த பின் தமிழ்நாட்டோடு நடந்த உரோம வாணிகம் குன்றியது. ஆனால் தக்கணத்தின் வடமேற்குக் கரையில் உள்ள நாடுகளோடு அது பின்னும் தொடர்ந்து நடத்தி வந்ததாகவே தோன்றுகிறது. தக்கணத்தில் உள்ள தேர் ஸொபரா, பைதான் கல்யான் போன்ற பல துறைமுகங்களைப் பெரிபுளுஸ்ப் நூல் குறிப்பிடுகின்றது. தமிழகத்தில் உரோம் நாட்டு வாணிகம் கி.பி. 4ஆம் நூற்றாண்டில் புத்துயிர் பெற்றது. ஆனால் அதன்பயன் நீடிக்கவில்லை. உரோமாபுரியில் நிகழ்ந்த சில அரசியல் மாறுதல்கள் வாணிபத்திற்குத் தடைவிதித்தன.

ஏற்றுமதிப் பொருட்களும் இறக்குமதிப் பொருட்களும்

அக்கால வியாபாரப் பொருட்களைப் பற்றிய குறிப்புக் களைப் பட்டினப் பாலையிலும் மதுரைக் காஞ்சியிலும் காணலாம். அருமையும் பெருமையும் சான்ற பொருட்கள் காவிரிப்பூம்பட்டினத்து மறுகுகளில் மண்டியும் மயங்கியும் கிடந்த நிலைமையினை,

நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு
—பட்டினப்பாலை. 185-193

என்னும் வரிகள் உணர்த்தா நிற்கின்றன.

பண்டமாற்றாகக் கொள்ளும் பொருட்டுக் கப்பல்கள் சிறந்த குதிரைகளைக் கொண்டு வந்ததை,

இருங்கழிச் செறுவிற் தீம்புளி வெள்ளுப்புப்
பரந்தோங்கு வரைப்பின வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய...பெருநீரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கலனுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியோ டனைத்தும்
—மதுரை. 318-323

என்னும் மதுரைக்காஞ்சிப் பகுதி விளக்குகின்றது.

நனந்தலை வினைஞர் கலங்கொண்டு மறுக

என்னும் மதுரைக்காஞ்சிப் பகுதி அணிகள் விற்பனைக் காகத் தூரதேசங்கட்கு எடுத்துச் சென்றமையைக்குறித்து நிற்கின்றது.

தென்னிந்தியாவிலிருந்து ஏற்றுமதியான பொருட்களுள் முத்து, வைரம், இரத்தினக் கற்கள், மிளகு, கருங்காலி, கருமருது, தேக்கு, சந்தனம், வெண்துகில், அரிசி, ஏலக் காய், இலவங்கப்பட்டை, இஞ்சி முதலானவை சிறப்

பானவை. சிங்கம், கடுவாய்ப்புலி, குரங்கு முதலிய விலங்குகளும், மயில், கிளி போன்ற பறவைகளும் ஏற்றுமதியாயின. இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களில் பவளம், கண்ணாடி, ஈயம், பித்தளை, தகரம், ஜாடி, திராட்சை ரசம் முதலியன முக்கியமானவை. அடிமைகளும் இளம்பருவமுடைய மகளிரும் கிரேக்க நாட்டினின்று கொண்டு வரப்பட்டனர்.

மேல்நாடுகளோடு வாணிபம் செய்ததுமின்றி அதே காலத்தில் இந்தியர் கீழ் நாடுகளோடும் ஊக்கமாய் வாணிபம் நடத்தி வந்தனர். கிழக்கில் சீனாவோடும் தென்னிந்தியா நீண்ட காலத்திற்கு முன்னமே வாணிபம் தொடங்கியது. கி. மு. 7 ஆம் நூற்றாண்டிலேயே சீனாவிற்கு இந்தியப் பொருட்கள் சென்றதாகச் சில வரலாறுகள் கூறுகின்றன. தமிழில் பட்டினைச் 'சீனம்' என்றும் சர்க்கரையைச் 'சீனி' என்றும்வழங்கும் பெயர்கள் அந்நாட்டுடன் முன்னாளில் நாம் கொண்டிருந்த தொடர்பை நன்கு விளக்குவனவாம்.

பிலிப்பைன் தீவுகளில் கிடைத்த கோடரிகள், கத்திகள், ஈட்டிகள் முதலான புதைபொருட்கள் தென்னிந்தியாவில் கி. மு. 10 ஆம் நூற்றாண்டளவில் பயன்படுத்தப்பட்ட பொருள்களை ஒத்திருக்கின்றன. இவைபோன்ற புதை பொருட்கள் மலேயா, ஜாவா, வடக்கு போர்னியா முதலிய இடங்களிலும் கண்டுள்ளனர். இவற்றையெல்லாம் கண்டு பிடித்த செயல்களால் வடபிலிப்பைனோடு தென்னிந்தியா விற்குக் கி. மு. 1000 ஆண்டு முதலே வாணிகத் தொடர்பு இருந்தமை தெளிவாகிறது.

கலைத் தொடர்பு

கி. மு. 6 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் முதல் அரசனான விசயன் பாண்டியன் மகளை மணம்புரிந்து கொண்டான். பாண்டியன் இளவரசி சென்ற கப்பலில் யானைகள், தேர்கள், அரசியல் பணியாளர்கள் 75

பணிப்பெண்கள், 700 பணியாட்கள் ஆகியோர் சென்றதாக அறிகிறோம். மன்னரைப் போலவே மக்களும் இருநாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர்.

'எலாரா' என்ற சோழ நாட்டுத் தமிழ்வீரன் இலங்கையை வென்று கி.மு. 205 முதல் 161 வரை ஆட்சி செலுத்தியதாக அறிகிறோம். தமிழ் மரபில் இவன் ஏலேல சிங்கன் என்று குறிக்கப்படுகின்றான். ஏழுகடல் கடந்தாலும் ஏலேல சிங்கன் கப்பல் திரும்பி வரும் என்ற பழமொழியும், ஏலேலோ என்ற கப்பல் பண்ணும் தமிழரிடையே அவன் மரபை நினைவூட்டி நிற்கும். மான் தோட்டத்தில் இவன் கட்டிய கோவில்களும் குளங்களும் இவனது வெற்றிக்கும் கலைப் பண்புக்கும் சான்று பகர்வன.

பாரத இராமாயண காலச் செய்திகளைப் பற்றியும் கி.மு. 4ஆம் நூற்றாண்டில் கங்கை வெளியில் ஆண்ட நந்தரைப் பற்றியும், கி. மு. 3ஆம் நூற்றாண்டில் சிறிதளவில் நடைபெற்ற மௌரியப் படையெடுப்பைப் பற்றியும் சங்க நூல்கள் கூறுகின்றன.

நெல்லூரினின்று தெற்கே கூடலூர், புதுச்சேரி வரையிலும் ஒருவகைத் தகட்டுச் செம்பு நாணயங்கள் நிலத்தில் கண்டெடுக்கப்பட்டன. இச் செப்புத் தகட்டுக் காசுகளின் ஒரு புறத்தில் 2 பாய்மரம் உள்ளதும் துடுப்புக்களால் செலுத்தப்படுவதும் ஆகிய தோணியின் வடிவம் பொறிக்கப் பட்டிருக்கின்றது.

துறைமுகங்கள்

தமிழகத்தில் நடைபெற்ற வாணிகத்தின் காரணமாகப் பல துறைமுகப் பட்டினங்கள் சிறந்து இலங்கின,

1. காவிரிப்பூம்பட்டினம்

வெளிநாட்டிலிருந்து வந்த பண்டங்கள் ஈங்கு இறக்குமதி செய்யப்பட்டன.

........சும்பொடு
மீப்பாய் களையாது மிசைப்பரந் தகாஅர்
புகாஅர்ப் புகுந்த பெருங்கலந் தகாஅர்
இடைப்புலம் பெருவழிச் சொரியும்
கடற் பஃறாரத்த நாடு கிழவோயோ

—புறம். 30:10-14

இத்துறைமுகத்தின் கரையருகே உயர்ந்த மேடைகளும் பண்டகசாலைகளும் இருந்தன. அவ்விடத்திற் குவிந்துள்ள பொருள்களில் சோழர் முத்திரை பொறிக்கப்பட்டது.

நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்வணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்

—பட்டினப்பாலை. 129-136

இத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதியான பொருட்கள், மலைபோல் காணப்பட்டன.

2. முசிறி

தமிழ்நாட்டுப் பொருள்களைக் கொணர்ந்து தமிழ்நாட்டுப் பொருள்களை எடுத்துச் செல்லும் வணிகர் வந்த நாவாய்கள் பல இத்துறைமுகத்தில் நெருங்கி

வந்தன. இத் துறைமுகத்தில் நெருங்கிக் கிடந்த பொருள்களாக,

மீனொடுத்து நெற்குவைஇ
மிசையம்பியின் மனைமறுக்குந்து
மனைக்குவைஇய கறிமூடையாற்
கலிச்சும்மைய கரைகலக்குறுந்து
கலந்தந்த பொற்பரிசம்
கழித்தோணியாற் கரைசேர்க்குந்து
மலைத்தாரமுங் கடற்றாரமும்
தலைப்பெய்து வருநர்க்கீயும்

—புறம். 343:1-8

யவனர் கொண்டு வந்த மரக்கலங்கள் பொன்னொடு முசிறிக்கு வந்து மிளகொடு மீளுவதை,

யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்

என்னும் அகநானூற்று அடிகளால் உணரலாம்.

குட்ட நாட்டிலிருந்து வந்த முத்தும், மிளகும், யானைத் தந்தங்களும் பட்டும் இரத்தினமும் ஏற்றுமதி செய்யப்பட்டன என்பது வரலாற்றாசிரியர் கருத்து.

3. கொற்கை

பாண்டியரின் சிறந்த துறைமுகம். முத்துக்குப் பெயர் பெற்ற இடம். இக்கொற்கையினை மதுரைக் காஞ்சி,

விளைந்துதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை இருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற் கொற்கையோர் நசைப்பொருந

—மதுரை. 135-138

என்று குறிக்கின்றது.

மகாஅரன்ன மந்தி மடவோர்
நகாஅரன்ன நளிநீர் முத்தம்
வாள்வா யெருந்தின் வயிற்றகத் தடக்கி
—சிறுபாண். 56-58

மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன
—அகம். 27:8-9

இவர்திறை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்றுறை
—அகம். 130:9-10

வினைநவில் யானை விறற்போர்ப்பாண்டியன்
புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்றுறை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து
—அகம். 201:3-5

காண்டொறும் கலுழ்த லின்றியு மீண்டுநின்
முத்துப்படு பரப்பிற் கொற்கை முன்றுறை
—நற். 25:5-6

இவற்றிலிருந்து கொற்கைத் துறைமுகத்தின் சிறப்பினையும் அங்கு விளையும் முத்துக்களையும் பற்றி அறிய முடிகிற தன்றோ.

இவ்வாறே கொல்லம், எயிற்பட்டினம், அரிக்கமேடு (பொதவுகே) தொண்டி, மருங்கூர்ப்பட்டினம், குமரி, மங்களூர், நறவு, மாந்தை, வைக்கரை, மேல்கிந்த முதலிய துறைமுகங்களும் வணிகத்துறையில் சிறந்து விளங்கின.

வணிகர் பண்பு

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் வணிகம் உலக நன்மைக்காகவே நடந்து வந்தது. பொருள் ஈட்டுவது

என்னும் கருத்தால் மட்டும் அவர் இத்தொழிலை நடத்த வில்லை. பல இடங்களில் விளையும் பல்வகைப் பண்டங் களை ஓரிடத்திற் கொண்டு வந்து குவித்து, அப்பண்டங்கள் கிடைக்காத வேறிடங்களுக்கு அவற்றை அனுப்பி நாடு முழுவதும் வறுமையின்றி நலமாக இருக்க அவர் வழி தேடினர். வணிகர்களின் பண்பினைப் பட்டினப்பாலை மிக நயம்பட நவில்கின்றது.

> நெடுநுகத்துப் பகல்போல
> நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
> வடுவஞ்சி வாய்மொழிந்து
> தமவும் பிறவுமொப்ப நாடிக்
> கொள்வதூஉ மிகைகொளாது
> கொடுப்பதூஉம் குறைபடாது
>
> —பட்டினப்பாலை, 206-210

மதுரைக்காஞ்சியும் வணிகரின் பண்பினை விளக்கா நிற்கின்றது.

> அறநெறி பிழையா தாற்றின் ஒழுகி
>
> —மதுரை. 500

வணிகத்தின் சிறப்பினைக் கூறவரும் பொய்யில் புலவரும்,

> வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
> பிறவும் தமபோற் செயின்

கலங்கரை விளக்கம்

பெருங்கப்பல்களும் செழித்த வாணிபமும் அக்காலத்தில் இருந்தமையால் நடுக்கடலிற் கப்பல்கள் சென்று திரியும் இராக் காலத்தில் திசை தடுமாறாது கரைசேர்தற்குத் துணையாகக் கடற்கரைப் பட்டினங்களில் கலங்கரை விளக்கங்களை அமைத்தனர். ஆழ்ந்த கடலிற் செல்லும் கலங்களுக்குத் துணையாகவுள்ள விளக்குகளைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை பாடுகின்றது.

இரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
உரவு நீரழுவத் தோடு கலங்கரையும்
துறை பிறக் கொழியப் போகி

—பெரும்பாண். 349-351

முடிவுரை

இன்னணம் பண்டமாற்றின் மூலமாகவும், நாணய மாற்றின் வழியாகவும் வணிகம் செய்து பின் தரை வாணிகத்தையும், கடல் வாணிகத்தையும் போற்றினர். கடல் வாணிகத்திலும் கரையோரமாகவே கலம் செலுத்தியும் நடுக்கடலில் கலம் செலுத்தியும் வணிகம் செய்தனர். கடல் வாணிபத்தின் மூலம் கலாச்சாரத் தொடர்புகள் வளர்ந்தன. துறைமுகங்கள் பல்கிப் பெருகின. நாட்டின் பொருளாதாரம் வணிகர்களால் சிறப்புற்றது.

இன்னணம் பண்டைத் தமிழரின் வணிகம் மிகச் சிறந்த முறையில் எக்காலத்தவரும், எந்நாட்டவரும் போற்றும் வகையில் அமைந்திருந்தது.

11. இசைக்கலை

முன்னுரை

1. கலை ஒருமை உணர்வைத் தருவது.
2. உள்ளத்தைத் திறந்து காட்டுகிறது.
3. பண்பாட்டின் அடிப்படையில் அமைந்து தூய நல்ல உள்ளத்தில் அமைதியினின்று பிறப்பது கலை.
4. இக்கலை உயிர்களை எல்லாம் உயர்த்தும், வாழ்விக்கும், வளம் பெருக்கும்.
5. பண்பாட்டின் எல்லை இகவாத கலை வெறும் புலன் உணர்விற்கு மட்டுமன்றி மக்கள் உள்ளத்திற்கும் உணர்வூட்டும்.
6. மக்கள் உள்ளத்தில் கால எல்லையைக் கடந்து அழியாது நிலைபெற்ற கலை உண்மையில் சமுதாயத்தை உயர்த்த உதவும்.

இந்நலம் சான்ற கலைவகையில் ஒன்றான இசைக்கலை பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இசையின் ஆற்றல்

இசை என்னும் சொல் இசைவிப்பது, தன் வயப் படுத்துவது என்று பொருள்படும். இசை கல்மனத்தையும் கரைந்துருகச் செய்யும் பெற்றி வாய்ந்தது. கற்றோரும் மற்றோரும் இசையில் வயப்பட்டே நிற்பர். அன்பைப் பெருக்கி ஆருயிரை வளர்ப்பது இசை. இசையைக் கேட்டு

இன்புறாத உயிர்கள் இல்லை எனலாம். ஓரறிவு உயிர்கள் முதல் ஆறறிவு உயிர்கள் ஈறாக இசையில் தம்மை மறக்கின்றன.

தமிழ் இசை

இசை இனியது. தமிழ் இசை அதனினும் இனியது. தமிழ் இசை உள்ளத்தோடு உணர்வோடு வாழ்க்கையோடு பொருந்தியது. இது வரலாற்றுக் காலத்துக்கு முன்னர் அரும்பியது என்றாலும் இன்றும் இயல்பு பொன்றாது பொலிவு குன்றாது இளமை தாழாது எழில் மாளாது சுவை மாறாது. ஆற்றல் ஆறாது நிலைத்து நிற்கின்றது. இதற்கு முடிவில்லை. இதன் வாழ்வு எல்லையற்றது. இதன் தன்மை இன்பந் தருவது. இதன் ஆற்றல் அளவிடற்கரியது. இதன் தரம் ஒப்புமை அற்றது. இசையின் அருமையையும் பெருமையையும் ஓர்ந்தே பழந்தமிழர் இசைத் தமிழை முத்தமிழுள் நடுநாயகமாக வைத்தனர்.

இசையின் இனிமை

"இசை எழுச்சி தரும் முதன்மை வாய்ந்தது. அது புறப்பகட்டானது என்று பலரும் கூறுகின்றனர். ஆனால் அது உண்மையில் கருத்தியல் கோட்பாடேயாகும்" என்பர் மேனாட்டு அறிஞர்களான பிளாட்டோவும், அரிஸ்டாட்டிலும்.

'இசை இன்பக் கலைகளின் முடி' என்பர் காண்ட் என்னும் அறிஞர். சுருங்கக் கூறின் இசை மெய்விளக்கியலின் நுட்பம், தெய்வீகப் பண்பு ஆகிய இரண்டின் உட்கருத்தாக உந்தி இசை வரலாற்று அரங்கில் முதல் பங்கு எடுக்கிறது.

இசையின் ஏற்றம்

"இசையாவது வரலாற்றின் ஊழியில் துளிர்த்த ஒரு சமுதாயக் கலையாக மிளிர்கிறது. எந்தப் பண்பாடும்

இசையை மரபுரிமையாகப் பெற்றுள்ளன" என்பர் டி. எம். பெர்ரி என்னும் ஐரோப்பிய இசை வல்லுநர். உண்மையில் இசை தொன்மைக் காலந்தொட்டு மக்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்து இணைந்துபிணைந்து காணப்படுகிறது. தமிழகத்தில் ஒரு குழந்தை பிறந்தநாள் தொட்டு அது தன் முதலாவது உயிர்க்காற்றை இழுக்க ஆரம்பித்தது முதல் தொட்டு இறுதி மூச்சுவரை தமிழ்இசை அதன் வாழ்க்கையோடு ஒன்றித்து நிற்கிறது. ஏன்? அது உயிர்நீத்த பின்னர் கூட அதன் தாயும் உறவினரும் இசைக்கும் ஒப்பாரிப்பாடல் அதன் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. இன்னணம் இசை மனித வாழ்வில் பின்னிப் பிணைந்து காணப்படுகிறது.

மக்கள் தம் நுண்ணறிவு மாட்சியால் தம்மிடற்றிலிருந்தும் கருவிகளினின்றும் எழுப்புகின்ற பலவகை இசையானது பின் பக்திப்பாடலாக, உழைப்புப் பாடலாக, உணவுப் பாடலாக, போர்ப்பாடலாக, காதற் கவிதையாக, விளையாட்டுப் பாட்டாக, ஏன் ஆற்றல் வாய்ந்த ஆயுதமாக ஊக்கம் ஊட்டும் மருந்தாக விளங்கின. இசையை விரும்பாதவர் எவருமில்லை. அறிவே உருவாகிய ஆண்டவனும் இசையை விரும்புகிறான். அவன் இசை வடிவமாக இருக்கிறான் என்றும், இசையின் பயனாக உள்ளான் என்றும் ஆன்றோர் கூறுவர்.

ஏழிசையாய் இசைப்பயனாய்

—சுந்தரர்

எம்மிறை நல்வீணை வாசிக்குமே

—அப்பர்

கலைகட்கெல்லாம் தெய்வமாகிய நாமகள் கையில் வீணையை அமைத்துள்ள நம் முன்னோர்கள் இசைக் கலையை எவ்வளவு சிறப்பாகப் போற்றியிருத்தல்வேண்டும்? இன்னணம் தம் வாழ்வையே இசைமயமாகக் கொண்ட தமிழர் வாழ்வில் இசைக்கலை பெற்றிருந்த செல்வாக்கினை இனி வரலாற்றுப் பாங்கான வளர்ச்சியின் வழி காணலாம்.

தொல்காப்பியம் உணர்த்தும் இசை

பழந்தமிழ் மொழியின் ஒப்பற்ற இலக்கணத்தைத் தெளிவுறக்கூறும் தொல்காப்பியம்,

> அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
> உளவென மொழிப இசையொடு சிவணிய
> நரம்பின் மறைய என்மனார் புலவர்
>
> —தொல். 38

என்ற வகையில் பரந்துபட்ட இசைத்தமிழ்க் கலையில் விளக்க நுட்பத்தைச் சுட்டிக் கூறிவிட்டது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நிலம் பகுத்து வாழ்ந்த தமிழ்மக்களின் கருப்பொருள்களைக் கூறுமிடத்து அவ்வந் நிலங்களுக்குரிய இசைக் கருவியாய யாழினையும், பண்ணையும் குறிக்கின்றார்.

குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த குறவர்கள் குறிஞ்சிப் பண்ணைப் பாடிக் குதூகலமுற்றனர். அவர் குறிஞ்சி யாழினையும் தொண்டகப் பறையினையும் துணைக்கருவி களாகக் கொண்டனர்.

முல்லை நிலத்தில் உறைந்த ஆயர்கள் முல்லைப் பண்ணைப் பாடி எல்லையற்ற இன்பம் கொண்டனர். இவர் கள் முல்லை யாழையும் ஏறுகோட்பறையையும் இசைத்து இன்புற்று வந்தனர்.

மருத நிலத்தில் குடியேறிய உழவர்கள் மருதப்பண்ணை இசைத்து பொருதலற்று வாழ்ந்தனர். மருதயாழும், மணமுழ வும் மீட்டிக் களிப்புற்றனர். இந்த நிலத்தில் பலவகைப் பண்களும் பறைகளும் யாழ்களும் எழுந்தன.

நெய்தல் நிலத்திலே இருந்த பரதவர்கள் நெய்தற் பண்ணை (செவ்வழிப் பண்ணை)ப் பாடிக் களிப்புற்றனர். இந்நிலமக்கள் விளரியாழும் செவ்வழி யாழும் மீன்கோட் பறையும் இசைத்து இன்புற்று வாழ்ந்தனர்.

பாலை நிலத்தில் வாழ்ந்த எயினர்கள் பாலைப் பண்ணைப் பாடி உவகையுற்றனர். இவர்கள் பாலை யாழினை மீட்டி நிரைகோட் பறையை முழக்கி மகிழ்ந்து வாழ்ந்து வந்தனர்.

இன்னணம் தமிழர் கண்ட இவ்வைம்பெரும் பண்களும் ஆதிப்பண்களாகப் போற்றப் பெறுகின்றன. இந்த ஐந்து பண்களினின்றே, தமிழர்கள் பன்னிரண்டாயிரம் பண்களைக் கண்டனர். ஆதிப் பண்கள் ஐந்தில் எதனின்று எப்பண்கள் கிளைத்தன என்று இன்று திட்டவட்டமாகக் கூறுதற்கியல வில்லை. அவைகளைப் பண்டையோர் பாடும் முறையில் பாடுவதும் அருமையாக இருக்கின்றது.

பண்டைத் தமிழர் இசை அறிஞர்கள்; பண்களைக் கண்டதோடு அமையாது அவைகளுக்குரிய காலமும் கண்டறிந்துள்ளனர். குறிஞ்சிப்பண் பாடுதற்குரிய காலம் யாமம், முல்லைப்பண் பாடுதற்குரிய காலம் மாலை, மருதப்பண் பாடுதற்குரிய காலம் விடியல், நெய்தற்பண் பாடுதற்குரிய காலம் எற்பாடு. பாலைப்பண் பாடுதற்குரிய காலம் நண்பகல் என ஆய்ந்து அறிந்துள்ளனர்.

தமிழர்களின் முன்னோர்கள் தமிழ்ப்பண்ணைத் துணைக் கருவிகளோடு இசைத்துப் பாடிவந்தனர். முல்லை நிலத்திற்குச் சென்றால் முல்லைப்பண்ணைப் பாடுவர். இவ்வாறே ஒவ்வொரு நிலமக்களும் தத்தம் நிலப்பண்களைப் பாடுவதை மரபாகக் கொண்டு வாழ்ந்தனர். ஒருவர் எந்த நிலத்திற்குப் போந்தாலும் அவ்வந் நிலத்திற்குரிய பண்ணைப் பாடுவது முறைமை என்று பத்துப்பாட்டு, மலைபடு கடாம் போன்ற பழம்பெரும் தமிழ் இலக்கியங்கள் பகர்கின்றன. ஒரு நிலத்து வாழும் மக்கள் தங்கள் வாழும் நிலத்தில் பிற பண்களைப் பாடுவது தவறன்றெனினும் ஒவ்வொரு நில மக்களும் தத்தம் பண்ணைப் பாடுதலே சிறப்பாகக் கொண்டிருந்தனர்.

மருதநிலத்திற்குரிய மருதப்பண்ணை யாழோர் தாள அறுதியை இனிதாக உட்கொண்டு நரம்பை இனிதாகத் தெறித்து மருதத்தை வாசிக்க இருள் மாய்ந்து கதிர்விரியும் விடியற்காலம் தோன்றும் என்பதை மதுரைக்காஞ்சி புலப்படுத்தும்.

சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ண......
....
புலர்ந்து விரி விடிய லெய்த

—மதுரை. 657-664

நன்னனுக்குரிய மருதநாட்டில் எருதையோட்டும் உழவ ரோதையுடன் கூட யாழிலே மருதத்தை வாசித்துப் பாணர் தங்கிப் போவர் என்பதை,

......கடும்பு வருந்தி
யெருதெறி களம ரோதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி யசையினிர் கழிமின்

—மலைபடு. 468-470

என்னும் மலைபடுகடாத்துவரிகள் தெளிவுபடுத்துகின்றன. மருதத்தை வாசித்த கரிய தண்டினையுடைய சிறிய யாழின் நரம்பினோசைக்கு மேற்போகாது அவ் வோசையுடனே கூடி ஓரோசையாம் இனிதாய பாட்டினைப் பாடுவர் விறலியர் என்பதை மலைபடுகடாம் வரிகள் உணர்த்துகின்றன.

மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்

—மலைபடு. 534-536

குறிஞ்சிப்பண் நடுயாமத்தில் இசைக்கக் கூடியது. அதிசயம் பொருந்திய இனிய யாழினையுடைய விறலியர் நறிய கரியபக்கமலையிலே குறிஞ்சிப் பண்ணைப் பாடுவதை மலைபடுகடாம் தெளிவிக்கின்றது:

இரும்பூது கஞலிய வின்குரல் விறலியர்
நறுங்கா ரடுக்கத்துக் குறிஞ்சிபாடி

—மலைபடு. 358-359

பெரிய மலைப்பக்கத்தே கொடிச்சியர் குறிஞ்சிப்பண் பாடுவதை அகநானூறு அறிவிக்கின்றது.

வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி

—பெரும்பாண். 182

நெய்தல் முல்லை நிலங்கட்குரிய மாலை நேரப் பண் செவ்வழிப்பண். மகளிர் முழவு ஆகுளி என்னும் கருவிகளின் இசைக்கு ஒத்து ஒலிக்கும் யாழிலே செவ்வழிப் பண்ணை எழுப்புவர். பின்னர் ஒள்ளிய சுடர்விளக்கு முற்படப்பூசைக்கு வேண்டும் பொருளுடன் கோயிலுக்குச் செல்வர். இராக் காலத்தில் முற்பகுதி இவ்வாறு கழியும். இதனை,

திவவுமெய்ந் நிறுத்தச் செவ்வழி பண்ணிக்
குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி
நுண்ணி ராகுளி யிரட்டப் பலவுட்
டொண்சுடர் விளக்க முந்துற மடையொடு
....
முந்தை யாமஞ் சென்ற பின்றை

—மதுரை. 604-620

என்னும் மதுரைக்காஞ்சி அடிகள் புலப்படுத்தா நிற்கின்றன. செவ்வழி இரக்க உணர்ச்சியை எழுப்பும் ஒரு பண் என்பதை,

அருளா யாகலோ கொடிதே யிருள்வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழநின்
காரெதிர் கானம் பாடினே மாக

—புறம். 144:1-3

பிரிந்தார்க்குத் துன்பம் தரும் யாழின் கண்ணே செவ்வழிப் பண்ணைப் பாடி அரிய உயிர்களை வருத்தும் அவ்

வோசையை மாரிக்காலத்து மாலைப்பொழுதில் தமியளா யிருக்கும் தலைவி கேட்டு உள்ளம் சோர்வாள் என்பதை அகநானூறு செப்புகின்றது,

பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப
ஆருயிர ணங்குத் தெள்ளிசை
மாரி மலையுந் தமியள் கேட்டே

—அகம். 214:13-15

பாலை நிலத்திற்குரிய பாலைப்பண் நண்பகலில் இசைக்கப்படுவது. பாணனது கையிலுள்ள பேரியாழைப் பாலைப்பண்ணாக அமைத்து மிடற்றுக்குரலோடு ஒன்றுபட்ட இனிய இசையிலே தழிஞ்சி என்னும் துறைப்பொருள் அமைந்த பாடல்களைப் பாடுவர் என்பதைப் பதிற்றுப்பத்து,

பாணர் கையது பணிதொடை நரம்பின்
விரல்கவர் பேரியாழ் பாலை பண்ணிக்
குரல்புண ரின்னிசைத் தழிஞ்சி பாடி

—பதிற். 57:7-9

என்று போற்றுகின்றது. இனிய நரம்புக் கட்டையுடைய பாலை யாழை வாசித்தலில் வல்லோன், பண்கள்எல்லாவற்றி லும் துன்பத்தைச் செய்யும் உறுப்பையுடைய பாலைப் பண் களை மாறிமாறி வாசிப்பான். இத்தகைய பாலைப்பண் வெவ்வேறு சுவையுடைய மதுவிற்கு ஒப்பாகும். இதனை,

தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையு குறுப்பிற் பண்ணுப் பெயர்த்தாங்குச்
சேறுசெய் மாரியி னளிக்குநின்
சாறுபடு திருவி னனைமகி ழானே

—பதிற். 65.14-17

என்னும் பதிற்றுப்பத்து அடிகளால் உணரலாம். அழியை அலைக்கும் கள்வர் தம் கையில் உள்ள படைக்கலன் களைக்

கைவிடும்படிச் செய்து மறத்தினை அவர்களிடத்து நின்று பெயர்க்கும் தன்மையது பாலைப்பண்ணைக் கொண்ட யாழ். இதனை,

> ஆறலைக் கள்வர் படைவிட வருளின்
> மாறுதலை பெயர்க்கு மறுவின் பாலை
>
> —பொருந.21-22

என்னும் பொருநராற்றுப்படை வழி விளங்கலாம். இப்பண் யாழில் அன்றி எழுப்பப்படுவதைப் பெரும்பாணாற்றுப்படை உணர்த்தா நிற்கின்றது.

> குழலினின்றீம் பாலை —பெரும்பாண். 179-180

இன்னணம் தொல்காப்பியர் குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலத்திற்குரிய பண்களையும், யாழ்களையும், இசைக்கப்படும் காலத்தையும் கூறிய அவர் செய்யுளியலில் நால்வகைப் பாக்களுக்குமுரிய ஓசைகளைக் கூறுகின்றார். அவை அகவல் செப்பல் துள்ளல் தூங்கல் என்பன. இவையும் இசைப்பாக்களே. வல்லிசை, மெல்லிசை குறுஞ்சீர் நெடுஞ்சீர் முதலிய வண்ணங்களை வகுத்துரைப்பதனால் இயற்றமிழோடு இசைத்தமிழ் விரவியிருந்தமை தெளிவாகிறது. இசையையும் கூத்தினையும் உறுதுணையாகக் கொண்ட பாணரும் கூத்தரும் பொருநரும் ஒருவரை ஒருவர் ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படையென்னும் துறையாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இச் சான்றுகளால் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னும் அவர் காலத்தும் தமிழர் இசைக்கலையில் சிறந்து நின்ற பான்மை தெளிவாகிறது.

சங்க இலக்கியங்களும் இசையும்

பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும், திருக்குறளும், சிலம்பு, மணிமேகலை என்னும் இரட்டைக் காப்பியங்களும்,

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களும், பல குறிப்புக்களைத் தருகின்றன. வரி வண்டுகளின் இசையினால் புதல்களி லுள்ள பூங்கொத்துக்கள் கட்டு நெகிழ்ந்து மலர்வன என்னும் செய்தியைக் குறுந்தொகை,

............பிதலும்
வரிவண் டுதவாய் நெகிழ்ந் தனவே

—குறுந். 260:1-2

என்று கூறுகின்றது. குறிஞ்சி நிலமகள் ஒருத்தி தழைத்து நீண்ட தனது கூந்தலைக் கையாற் பெயர்த்துக் கோதிக் கொண்டு பெரிய மலையின் பக்கத்தே குறிஞ்சிப் பண்ணைப் பாடிக்கொண்டு நிற்கின்றாள். தினைக்கதிரினைத் தின்று கொண்டு நின்ற யானை ஒன்று அப் பாட்டைக் கேட்டதும் தான்கொண்ட தினைக்கதிரினையும் உட்கொள்ளாது நின்ற நிலையினின்றும் அகலாது துயில்வரப் பெறாத கண்கள் துயில் வரப்பெற்று விரைந்து தூங்கும் நிலையினை அகநானூறு,

ஒலியல் வார்மயிர் உளரினள் கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுபெற் றொய்யென
மறம் புகல் மழகளி றுறங்கும்

—அகம். 102:5-9

என்னும் வரிகளால் படம்பிடித்துக் காட்டுகிறது.

வழிப்பறிக் கள்வர் இசைக்கு மயங்கித் தம் தொழிலை மறந்து நிற்றலை,

ஆறலைக் கள்வர் படைவிட வருளின்
மாறுதலை பெயர்க்கு மருளின் பாலை

—பொருந. 21-22

என்னும் பொருநராற்றுப்படைகள் தெளிவிக்கின்றன. இன்னிசை இயக்கிப் பேய்களை வெருட்டிக் கலைத்த நிகழ்ச்சியைப் புறநானூறு கண்முன் நிறுத்துகிறது.

இசைமணி யெறிந்து காஞ்சிபாடி
நெடுநகர் வரைப்பிற் கடிநறை புகைஇக்
காக்கம் வம்மோ காதலந் தோழி
வேந்துறு விழுமந் தாங்கிய
பூம்பொறிக் கழற்கா னெடுந்தகை புண்ணே

—புறம். 281 5-9

விளரி என்னும் இரங்கற் பண்பாடி நரிகளை ஓட்டிய நிகழ்ச்சியினைப் புறம்,

சிறாஅர் துடியர் பாடுவன் மகாஅ அர்
தூ வெள் ளறுவை மாயோற் குறுகி
இரும்பூட் பூச லோம்புமின் யானும்
விளரிக் கொட்பின் வெண்ணரி கடிகுவென்

—புறம். 291:1.4

என்று செப்புகின்றது.

நைவளப் பருகிய நயந்தெரி காலை
காமர் வண்டு காமரம் செப்பவும்

என்னும் பகுதிகளால் நைவளம், சீகாமரம் என்னும் பண்களை அறிகிறோம். பரிபாடல் சங்க காலத்தில் வழங்கிய ஒருவகை இசைப்பாடலே. ஒவ்வொரு பாடலுக்கும் பண் வகுக்கப்பட்டுள்ளது இசை வகுத்த சான்றோர்களின் பெயர்களும் காணப்படுகின்றன. இதை நோக்கின் அக்காலத்து இசைவளம் நன்கு புலனாகும். சிலப்பில் பலவகையாக வரிப்பாடல்கள் அறியப்படுகின்றன. அவை ஆற்றுவரி, கானல் வரி, கந்துகவரி, வேட்டுவவரி. குன்றக் குரவைப் பாட்டு முதலியனவாகும். கூத்துக்கலை இசையின்றிச் சிறப்புறாது. பண்டு கூத்துக்கலையும் இசைக்கலையும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன ஏழு சுரங்களாகும். இவை தற்போது சட்ஜம், ரிடபம். காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் என்று வழங்கப்படுகின்றன, இவற்றின் முதல் எழுத்துக்களை சரிகமபதநி என்பர். இவை ஏழும் நிறைந்தது பண் என்றும் இவற்றில் குறைந்து வருவது திறம் என்றும் பெயர் பெறும். நெட்டெழுத்துக்கள் ஏழும் ஆலாபனையில் பயன்பட்டன வாம்.

1. தாரம்

இது மெய் எழுத்தாய 'க' என்ற குறியீட்டெழுத்து உடைமையால் காந்தாரம் எனப்பட்டது. இதுவே முதல் இசையாகும். காந்தர்வம் இன்பத்திற்குக் காரணமாக இருப்பது போன்று இவ்விசை இயல்பாக இக் காலத்துத் தம்பூர் என்ற கருவியிலும் முறை சுருதி சேர்க்கப்பட்டால் ஒலிக்கின்ற ஒலித்தன்மையில் உள்ளீடாகக் கேட்கப்படுவது.

2. குரல்

தமிழ் மரபில் ஓரிசை ஈரிசை மூவிசை என்ற பகுப்பு அமைதியில் இரண்டாம் இசையாய குரல் எனும் இவ்விசை மகளிர் குரலை ஒத்தது எனப்படும். நடுவான இடத்தைப் பெற்றிருப்பதால் இது மத்திமம் எனவும் கூறப்படும்.

3. துத்தம்

இது தொந்தம், துருத்தி என்ற சொற்களைப் போன்று முன்னுள்ள எல்லை, பின்னுள்ள எல்லை, ஆகியவைகளின் அளவு ஒத்திருக்க நடுநின்றமையால் துத்தம் எனப்பட்டது. இனி முறையில் ஐந்தாவதாக நிற்பது கருதிப் பஞ்சமம் என்று பகரப் பெறுவதும் வழக்காயிற்று.

4. கைக்கிளை

இசை வகையில் சிறியகிளை என்ற பொருளில் இக்கைக்கிளைப் பெயர் காரணப் பெயராக எழுந்துள்ளது. இதன் குறியீட்டெழுத்து 'த' ஆனதால் அவ்வெழுத்தினைத் தழுவி வருவதுபற்றித் தைவதம் எனக் கூறப்பெறுவதும் உண்டு,

5. உழை

உழை என்ற சொல் இடத்தது என்று பொருள் பெறும். குழலிலும் யாழிலும் இடக்கையால் இசைக்கப் படுவது குறித்து இச்சொல் வழங்கி வந்தது என்றும் கூறலாம். இதன் குறியீட்டெழுத்து 'நி' ஆனதால் நிசாதம் என்று கூறும் பழக்கமும் பிற்காலத்தில் எழுந்தது.

6. இளி

இதற்கு அடிமணை, இசை, பட்டடை என்னும் பெயர்கள் உண்டு. ஆறுபிறப்பிப்பது என்றும் ஆறாவது என்றும், ஆறு நிலைகளின் வழி வருவது ஆகலாலும் சட்ஜம் என்று கூறப்பட்டது.

7. விளரி

ஒரு நிரலாக உள்ள ஒரு தொகுதியை நிறைவு செய்கின்ற ஒன்றினுக்கு விளரி என்று பெயர். இது இகர விகுதி பெற்று இறுதி இசை என்ற பொருளில் இரிஷபம் எனக் கூறப்பெற்றது.

இக் காரணங்கள் யாவும் தமிழ்மரபை ஒட்டியனவாகும். எந்த மரபைக் கொண்டு காரணம் கற்பித்தாலும் ஒலி வகைகளான இவற்றிற்குப் பொருந்தும். எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே என்பது தமிழ் இலக்கண வழக்கு.

இசை அலகோடு - சுருதியோடு இயங்குவது இசைப் பனவாம். அதனோடு தாளமும் சேரின் இசையளவு பாவாகும். இசைப்பாவில் பத்துவகையும், இசையளவு பாவில் ஒன்பது வகையும் உண்டென்பர். பண்ணென்பது இக் காலத்து இராகமே. அது வண்ணம், நிறம், என்று கூறப்பெறும். பண்ணுக்குக் கோவையும், பாலையும் உறுப்புக்களாம். கோவையென்பது சுரம். பாலை என்பது சுரத்தானமாகும். பண்ணும் திறமும் பயில, குழலும் யாழிசையும் சேரத் தாளத்தோடு பாடப்பெறுவது இசைப்பாட்டாம். பிற்காலத் தேவாரப் பாக்கள் இவ்வகையின. வரிப்பாட்டும் இத்தகை யதே. பல்லவி, அநுபல்லவி, சரணம் என்ற அமைதி யுடையது கீர்த்தனை. இது பிற்காலத்தில் நுழைந்தது. இசைப்பாட்டெல்லாம் பண்டு செந்துறை வெண்டுறை, வரி உருஎனவழங்கின. சிந்து, அம்மானை, சாழல், தெள்ளேணம் கும்மி ஆகியவை இசைப்பாட்டு வகையினவே.

சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதை இசைக்களஞ்சிய மாகும். இதில் இசையாசிரியன் இலக்கணம், குழலாசிரியன் இலக்கணம், தண்ணுமை ஆசிரியன் இலக்கணம் ஆகியவை கூறப்பட்டுள்ளன.

யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குரல் தண்ணுமை, ஆடலொடு இவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கித்
தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்து
தேசிகத் திருவின் ஓசையெல்லாம்
ஆசின்று உணர்ந்த அறிவினன் ஆகிக்
கவியது குறிப்பும் ஆடல் தொகுதியும்
பகுதிப்பாடலும் கொளுத்தும் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபினது இசையோன் தானும்

என இசையாசிரியனின் இலக்கணம் இயம்புகிறது. ஆடல் அரங்கில் எழுந்த இசை முழக்கத்தினை,

குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடி நின்றிசைத்தது ஆமந்திரிகை

என்று குறிப்பிடுகின்றார். பெண்கள் உலக்கை கொண்டு குற்றும்பொழுதும் பந்தாடும் பொழுதும், ஊசலாடும்பொழுதும் பாடிக்கொண்டே செயல்பட்டனர் என்பதைச் சிலப்பதிகாரம் வாழ்த்துக்காதையால் அறியலாம். கடற்கரை ஓரத்திலிருந்து இன்பமாகப் பாடும் பாடல் வரிப்பாடல் எனப்பட்டது. அது கானல்வரி எனவும் பெயர் பெற்றது. அப் பாடல்களைச் சிலப்பதிகாரத்தில் கண்டு மகிழலாம்.

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்த எல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தோன் வாழி காவேரி

சிலப்பதிகாரத்தில் வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, ஊர் சூழ்வரி, குன்றக்குரவை, வாழ்த்துக்காதை என்னும் ஆறு காதைகளும் இசைப்பாக்களின் தொகுதியே ஆகும்.

பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
தவள முத்தம் குறுவாள் செங்கண்
குவளை அலை கொடிய கொடிய

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேகலை களார்ப்ப வார்ப்ப வெங்கணுந்
தென்னன் வாழ்க வாழ்க வென்று சென்றுபந் தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க வென்று பந்தடித்துமே

என்பன முறையே கானல்வரியிலும் வாழ்த்துக்காதையிலும் உள்ளன.

இன்னணம் சங்க இலக்கியங்கள் அற்றைத் தமிழரின் இசை ஞானத்தை இயம்பிக் கொண்டிருக்கின்றன.

இசைவாணர்கள்

சமுதாயத்தில் பொருளாதார வளம் பெருகப் பெருக இசைக்கருவிகள் பல எழுந்தன. அப்பால் இசை வளர்ப்பதற்கும் இசைக்கருவிகள் செய்வதற்கும் இசைப் பாட்டுக்கள் இயற்றுவதற்கும், பாடுதற்கும் இசைக்கருவி களைப் பழுது பார்ப்பதற்கும், அதை மீட்டுவதற்கும், கூத்தாடுவதற்கும், நாட்டியம் ஆடுவதற்கும் தனித்தனி இனம் தோன்றியது. சமுதாயத்தில் பாணன், பாடினி, விறலியர், கூத்தர் போன்றோர் தோன்றினர். துடியர் பறையர் என்போர் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே துளிர்த்து விட்டனர்.

பாணர்களும் பாடினிகளும்

பாணர்கள் பண்டைத் தமிழகத்தில் பாடுவதையே தொழிலாகக் கொண்டு பண்புடன் வாழ்ந்த ஓரினத்தவர்கள். இவர்களில் ஆண்மக்களைச் சென்னியர், வயிரியர் செயிறியர், மதங்கர், இன்னிசைகாரர், பாணர் என்று பிங்கல நிகண்டு கூறுகிறது. பெண்பாலாரைப் பாடினி, விறலி, பாட்டி, மதங்கி, பாடல் மகடூஉ, பாண்மகள் என்று திவாகரம் கூறுகிறது.

பாணர்களில் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் என மூன்று வகையினர் உண்டு. இசைப்பாணர் மிடற்றால் பாடுபவர்கள். யாழ்ப்பாணர் யாழ் மீட்டுபவர்கள். மண்டைப் பாணர் மண்டையோட்டில் இரந்துண்பவர்கள்

யாழ்மீட்டும் பாணர்களில் சீறியாழ் மீட்டும் சிறுபாணர் பேரியாழ் மீட்டும் பெரும்பாணர் என இருவகை உண்டு சீறியாழ் என்பது செங்கோட்டியாழ் எனப்படும். இது ஏழு நரம்புகளையுடையது. பேரியாழ் பெரிய யாழ் ஆகும். அது பரவையாழ் என்றும் கூறப்படும். இது இருபத்தொரு நரம்புகளையுடையது. சிறுபாணரை ஆற்றுப்படுத்தி இயற்றப்பட்ட நூல் சிறுபாணாற்றுப்படை என்ற நூல். பெரும்பாணரை ஆற்றுப்படுத்தத் தோற்றுவிக்கப்பட்ட நூல் பெரும்பாணாற்றுப்படை என்ற பெருமை சான்ற நூலாகும்.

யாழ்ப்பாணர் என்போர் யாழை மட்டுமன்றிக் குழலையும் மீட்டி வந்தனர் என்று இளங்கோவடிகள் எடுத்துக்காட்டியுள்ளார்,

குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின்றி சைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறன் மரபிற் பெரும் பாணிருக்கையும்

—சிலப். 5: 35-37

தமிழகத்தில் பழங்குடி மக்களில் பாணர்க்குச் சிறப்பான இடம் அளிக்கப் பெற்றிருந்தது என்பதை நமக்கு மாங்குடி கிழார் என்னும் சங்கப் புலவர் ஒருவரும் அறிவுறுத்துகிறார். துடி எனும் இடை சுருங்கிய பறையை இயக்குபவராகிய துடியர், யாழ் எனும் நரம்புக் கருவியை மீட்டுபவராகிய பாணர், பறையாகிய தோற்கருவியை முழக்கும் பறையர் ஆகிய குடிமக்கள் சமுதாயத்தில் இருந்த நிலையினை,

துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை

—புறம். 335

என்று புறம் செப்புகின்றது.

இசைக்கலைஞர்களாய துடியர்களும், பாணர்களும், பறையர்களும் பிற்காலத்தில் புறநகரில் ஒதுங்கி வாழ்ந்தவர். அவர்கள் வறியர்களாய் வாழ்ந்து வந்தனர் என்றாலும் அவர்கள் இழிந்தவர்களாக எண்ணப்படவில்லை. பாணர்களையும் பாடினிகளையும், விறலியர்களையும், துடியர்களையும், பறையர்களையும், அரசர்கள் தம் அவைகளில் இடம்பெறச் செய்து அவர்களின் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும், சுவைத்தும் வந்தனர். பாணர்க்கும் பாடினியருக்கும் விறலியர்க்கும், பிறர்க்கும் பொற்றாமரைப் பூவும், பொன்னரி மாலையும் முத்து வடமும் பரிசளித்து வந்தனர் என்பதை,

எரியகைந் தன்ன வேடி றாமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி
நூலின் வலவா நுணங்கரின் மாலை
வாலொளி முத்தமொடு பாடினி யணிய

—பொருந. 159-162

என்னும் பொருநராற்றுப்படை வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

பொன்னாற் செய்த தாமரைப் பூவை, பாணனது கறுத்த தலைமயிரிலே பொலிவு பெறச் சூட்டிப் பொன்னரி மாலையை வெள்ளிதாகிய ஒளியையுடைய முத்தத்தோடே பாடினி ஆட வலிமை மிக்க சோழ அரசன் கரிகாற் பெருவளத்தான் நல்கினான் என்று சங்கநூல் சான்று தருகின்றது.

பாணர்களுக்கு அரசர்கள் அளித்த பரிசும் சிறப்பும்,

அழல்புரிந்த வடர் தாமரை
ஐதடர்ந்த நூற் பெய்து
புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்
பாலுமயி ரிருந்தலைப் பொலியச் சூட்டி
பாண்முற் றுகநின் னாண்மகி ழிருக்கை

என்னும் புறநானூற்றுப் பகுதியால் விளக்கமுறுகிறது.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்து பாணர்கள் தமிழகத்தில் நிலைத்த குடிகளாய்த் தழைத்திருந்தனர். அவர்கள் தலைவன் தலைவியரிடத்துத் தூது போதலை அகப்பொருள் நூல்கள் கூறும். விறலியர்களும் தூது போதல் உண்டென்பதை 'விறலி விடு தூது' விளக்குகிறது. தொல்காப்பியத்தில் பாணர் மூலம் தலைமகனது ஊடலைத் தீர்ப்பது முந்தையோர் கண்ட முதிய வழக்கம் என்பது நன்கு தெரிகிறது.

பாணன் கூத்தன் விறலி பரத்தை
யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
பேணுதகு சிறப்பிற் பார்ப்பான் முதலா
முன்னுறக் கிளந்த அறுவரோடு தொகைஇத்
தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்

—தொல். 1438

என்பது தொல்காப்பியம்,

பாணன் தலைமகள் ஊடல் தீர்க்கும் வாயில்களில் ஒன்றாவான். வையாவிக் கோப்பெரும் பேகன் தன் மனைவி கண்ணகியைத் துறந்திருந்தபொழுது அவனாலே துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக அவனைப் பாடிய பரணரும் அரிசில் கிழாரும், பெருங்குன்றூர் கிழாரும் அகத்தினை மரபின்படித் தம்மைப் பாணராக வைத்துச் செய்யுள் செய்தமை மேலே குறித்த கருத்தினை வலியுறுத்தும், அத்தகைய பாடல் ஒன்றில்,

பசித்தும் வாரேம் பாரமு மிலமே

எனப் பரணர் பாடுவார். ஏனெனில் உண்மைப் பாணராயின் இவ்விரண்டும்-பசியும் காக்கப்படும் சுற்றமும்-உடையராகவே இருப்பர்.

பாணர்களின் வறுமையையும், அவர்களது உடல் நிலையையும்,

உடும்புரிந்தன்ன என்பெரு மருங்கிற்
கடும்பின் கடும்பசி களையுநர்க் காணாது
சிலசெவித் தாகிய கேள்வி நொந்துநொந்து
ஈங்குவென் செய்தியோ பாண

என்னும் புறநானூற்று அடிகள் உணர்த்தி நிற்கின்றன. பாணர்களின் நிலையை மற்றொரு புறநானூற்றுப் பாடல் புலப்படுத்துகிறது,

கையது கடனிறை யாழே மெய்யது
புரவல ரின்மையிற் பசியே யரையது
வேற்றிழை நுழைந்த வேர்நனை சிதாஅர்
ஓம்பி யுடுத்த வுயவிற் பாண

—புறம், 69:1 - 4

என்பது அப்பாடல்.

பாணர்கள் உவப்ப அவருடைய பசியை ஆற்றியவன் என்னும் சிறப்புடையவன் நம்பி நெடுஞ்செழியன். இதனை,

பாடுநர்க் கீத்த பல்புக ழன்னே
ஆடுநர்க் கீத்த பேரன் பின்னே
....
அனையனென்னா தத்தக் கேளனை
நினையாக் கூற்ற மின்னுயி ருய்த்தன்று
பைத லொக்காற் றழீஇ யதனை
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்

என்னும் புறப்பாட்டடிகள் உணர்த்தி நிற்கின்றன.

பாரி, பாடல்வல்லுநருக்கு நாடும் ஊரும் பரிசிலாகக் கொடுத்ததைப் புறம் விளக்கி நிற்கிறது.

ஆடினீர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே
—புறம். 109: 17-18

பாணர்களின் பழம்பெரும் குடியில் திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருப்பாணாழ்வார், பாணபத்திரர், மதங்க சூளாமணியார் முதலியோர் தோன்றினர். சம்பந்தப் பிள்ளையார் பாணரைக் குலவேற்றுமை நிலவேற்றுமை பாராது சிவனடியார்கள் இல்லத்திற்கு அழைத்துச்சென்று அவருக்கு உணவு படைக்கும்படிச் செய்து உடனிருந்து வந்ததோடு உயர்குலத்தார் இல்லத்திற்குள்ளே பாணர் உறைவதற்கும் இடம் அளிக்கச் செய்தார். இடைக்காலத்தில் பாணர்கள் திருக்கோயிலினுள் புகவொட்டாது தடுக்கப்பட்ட நிலையையும் திருஞானசம்பந்தர் மாற்றி அமைத்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணரது யாழ் மழையில் நனைந்து கட்டழியாதபடி எழில் குன்றாதபடி இறைவன் பாணர்க்குப் பொற்பலகையிட்டு அவரது யாழின் ஒலியினை மிகுவித்தருளினார்.

இன்று பாணர்குலம் எண்ணிக்கையில் சிறுபான்மையராய் மதுரை, திருநெல்வேலி, சாத்தன்குளம் போன்ற இடங்களில் வாழ்ந்து வருகின்றனர். தொழிலின்றிப் பலர் தையல்தொழில் புரிந்து வருகின்றனர். சிலர் கூத்தாடி வயிறு வளர்த்து வருகின்றனர். பாணர்கள் முற்காலத்தில் தூண்டில் மீன்பிடித்து வயிறு வளர்த்த செய்தியினை,

பச்சூன் பெய்த கவல்பிணி பைந்தோல்
கோள்வில் பாண்மகன் தலைவலித் தியாத்த
நெடுங்கழை தூண்டில் நடுங்க நாண்கொளீஇ
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
—பெரும்பாண்.

எனப் பெரும்பாணாற்றுப்படை அடிகள் பேசுகின்றன. பாண்மகளிர் மீன் விற்று வந்த செய்தியினை,

சங்க.—13

அம்சில் ஓதி அசைநடைப் பாண்மகள்
சில்மீன் சொரிந்து பல்நெற் பெறூ உம்

—ஐங்குறு.

என்னும் ஐங்குறு நூற்றடிகள் தெளிவாக்குகின்றன.

கேரளநாட்டில் பாணர் இனம் இன்றும் இருந்து வருகின்றது. இவர்களில் திருவரங்கப் பாணன், மீன்பிடிக்கும் பாணன், குடைகட்டிப் பாணன், புள்ளுவப் பாணன் என நான்கு பிரிவுகள் உண்டு. இவர்களில் புள்ளுவப் பாணர் இன்று ஆடுமாடு மேய்த்துவரும் மலைச்சாதியினராய் மாறிவிட்டனர். இவர்கள் இன்று வேட்டையாடுவர். வில் கொண்டு பறவைகளை அடித்து வீழ்த்துவர். அந்த வில் நாணை விரல் கொண்டு மீட்டி இன்னிசையெழப் பாடுவர். இந்தப் புள்ளுவப் பாணர்கள் இன்றுவரை தம் பழைய மரபு கெடாதபடி பாதுகாத்து வருகின்றனர்.

மேலும் இப்பாணர் பாட்டுப்பாடல் மத்தளம் கொட்டல் முதலியவைகளில் திறமை மிக்கவர்களாய் உள்ளனர். தோல் கட்டுதல், போன்ற தொழில்களையும் செய்து வருகின்றனர். இவர்கள் இன்று தீண்டத்தகாத குலத்தவர்கள் போல் எண்ணப்பட்டு வருகின்றனர்.

இலங்கையின் வடபாகத்தில் தமிழர்கள் வாழும் பகுதி யாழ்ப்பாணம் எனப்படும். யாழ்ப்பாணம் பகுதியில் சிங்கை நகர் என்னுமிடத்தில் உக்கிரமசிங்கன் மகன் செய்துங்க வரராசசிங்கன் என்பவன் ஆட்சி நடாத்துங்கால் யாழ்ப்பாடி என்னும் பாணன் ஒருவன் அவனது அவைக்களம் அண்மி யாழ்மீட்டி அவனது அகங்குளிரச் செய்தான். அதனால் அவ்வரசன் அகமகிழ்ந்து இன்று கரையூர் என்றும் பாசறையூர் என்றும் அழைக்கப்படும் மண்மேட்டைப் பரிசாக அளித்தான். அதன்பின் அங்குப் பாணனும் அவன் சுற்றமும் குடியேற அவ்விடம் யாழ்ப்பாணம் என அழைக்கப்பட்டது. பின் பரங்கிக்காரர் கட்டிய குடாநாடு முழுவதற்கும் யாழ்ப்பாணம் என்ற பெயர் உரித்தாகி

நிலைத்துவிட்டது என்று கூறப்படுகிறது. இந்தக் குடாநாடு முழுவதும் பாணனுக்குப் பரிசாக வழங்கப்பட்டது என்று கூறுவாரும் உண்டு. மறுப்பாரும் உண்டு. (Ancient Jaffna - Mudaliar C. Rasanayagam. C.C.S. P. 273. 274)

யாழின் மறுமலர்ச்சியிலே பாணர் இனமும் யாழ்க் கொடியும் ஏன் யாழ்ப்பாணமும் சிறப்புற்று எழும் என்பதி ஐயமில்லை.

விறலியர்

விறலியர் பாணர் இனத்தில் ஒரு பிரிவினர். ஆடல் தொழில் புரியும் ஆண்மக்கள் கூத்தர் எனப்படுவர். பெண்கள் விறலியர் எனப்படுவர். பாணனும் பாடினியும் ஒருவகுப்பார் என்றும், கூத்தரும் கூத்தியும் பாணர்களில் ஒரு பிரிவினர் என்றும், விறலியர் இவ்விரண்டும் அல்லாத ஒரு தனி இனம் என்றும் கூறுவாருமுண்டு. பாடினிகளே விறலியர் என்று மொழிநரும் உண்டு.

எண்வகைச் சுவையும் உள்ளத்தில் உதிக்கும் குறிப்புகளும் வெளிப்பட ஆடுதல் விறலாதலின் அதனை ஆடுபவள் விறலி எனப்பட்டாள். இவர்களை வேந்தர்களும் மன்னர்களும் வள்ளல்களும் நிலக்கிழார்களும் ஆதரித்து வந்தனர். மன்னர்கள் அவர்களுக்குப் பொற்கலங்களை, பொற்றாமரைப் பூவை, யானையைப் பரிசளித்து வந்தனர். நன்னன் சேய் என்னும் சங்ககால அரசன் விறலியர்க்குப் பேரணிகலங்களைப் பரிசளித்து வந்தான் என்பதை மலைபடுகடாம் உணர்த்தி நிற்கின்றது.

தலைவன் றாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை யணிய
—மலைபடு. 569- 570

விறலியாற்றுப்படை என்பது வேந்தன் புகழைப் பாடுவதும், விறலியை ஆற்றுப்படுத்துவதும் ஆம். தொகை நூல்கள் பல விறலியரைப் பற்றிப் பேசுகின்றன.

விறலியர் என்றால் கூத்தி, ஆடுமகள், ஆடுகளமகள், பாடன் மகடூஉ, பதினாறு வயதுப்பெண் என்று நிகண்டு களில் குறிப்பிடப்பட்டுள்ளது. விறலியர் சங்ககாலத்தில் கூத்துக்கலையைக் காத்து வந்தனர். இவர்கள் ஆடும் அரங்கை ஆடுகளம், அரங்கம், அம்பலம், கூத்தம்பலம், ஆடரங்கம், மன்றம் என அழைத்தனர்.

விழாக்காலங்களில் விறலியர் மறலியும் உவக்கும் பல்வேறு கூத்துக்களை ஆடுவர். விழாக்களில் அரங்கேறிய விறலியர் சிறப்புற ஆடினர் என்று கண்டால் அவர் களுக்கு அரசன் அரிய பொன் அணிகலன்களையும் பிற விலையுயர்ந்த பொருள்களையும் பரிசாக அளிப்பான். பட்டங்களையும் வழங்குவான். மாதவியாகிய மேதகு விறலிக்கு மன்னன் தலைக்கோல் என்னும் பட்டம் சூட்டி னான், என்று இளங்கோவடிகள் காட்டுகின்றார்.

கூத்தர்

ஆடல் பாடல் வளர்ச்சியுற்றுக் கூத்தாக எழுந்தது கூத்து என்பதை இன்று நாடகம் என நவில்கின்றோம். கூத்து என்பது கதை தழுவி வரும் ஆடலும் பாடலும் ஆம். கூத்தாடுபவர்கள் கூத்தர் எனப்பட்டனர். கூத்தாடும் மகளிர் கூத்தி எனக் கூறப்பெறுவார். கூத்தாடும் இடம் அம்பலம். ஆடும் அரங்கு, கூத்தம்பலம், கூத்துமேடை என அழைக்கப் பெறும்.

பொருநர்

பாணர்களில் ஒரு பிரிவினர் பொருநர். இவர்கள் ஏர்க் களம் பாடும் பொருநர். போர்க்களம் பாடும் பொருநர், பரணி பாடும் பொருநர் என மூன்று பிரிவினராகக் காணப் படுகின்றனர். பத்துப்பாட்டுள் ஒன்றாகிய பொருநராற்றுப் படை பொருநன் ஒருவனைக் கரிகாற் பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்தியதாகப் பாடப்பெற்ற நூலாகும். போர்க்

களம் பாடும் பொருநர் வேந்தனின் வெற்றியை வெகுவாகப் புகழ்ந்து பாடுவோர்களாவர். இவர்கள் மன்னர்களால் பொன்னும் பொருளும் மணியும் கொடுத்து ஆதரிக்கப்பட்டு வந்தனர். ஏர்க்களம் பாடும் பொருநர் பெரிய நிலக்கிழார் களைப் பாடி அவர்களால் உணவூட்டப் படுபவர்களாய் இருந்தனர். பரணிபாடும் பொருநர் ஆயிரம் யானைகளைப் போரில் கொன்று பகைவர் மீது வெற்றி பெற்ற பேரரசனைப் புகழ்ந்து பாடுபவர் ஆவர். இவர்களுக்கு மன்னர்கள் பொன் மாலை, முத்துமாலை, யானை போன்ற பரிசுகளை அளிப்பார்கள்.

சேரமான் வஞ்சி பொருநர்களை ஓம்பியதைப் புற நானூறு செப்புகின்றது:

விரும்பிய முகத்த னாகி யெனதரைத்
துரும்புபடு சிதாஅர் நீக்கித் தன்னரைப்
புகைவிரிந் தன்ன பொங்குதுகி லுடீஇ
அழல்கான் றன்ன வரும்பெறன் மண்டை
நிழல் காண் டேற னிறைய வாக்கி
யானுண வருளலன்றியுந் தானுண்
மண்டைய கண்ட மான்வறைக் கருனை
கொக்குகிர் நிமிர லொக்க லார
வரையுறழ் மார்பின் வையகம் விளக்கும்
விரவுமணி யொளிர்விடு மரவுற ழாமொடு
புரையோன் மேனிப் பூத்துகிற் கலிங்க
முரைசெல வருளியோனே

—புறம். 398: 18-29

என்னும் புறநானூற்றுப் பாடலின் மூலம் பொருநர்கள் பறை கொட்டுபவர்கள் என்பதும் பாணரும் பொருநரும் வேறுவேறு தன்மை கொண்டவர்கள் என்பதும் தெளிவாகிறது. அக் காலத்தில் பொருநரின்றிக் கோடியர் வயிரியர் என்று இரு இசைக் குழுவினரும் இருந்தமையும் அறியப்படுகிறது.

வயிரியர்

வயிரியரும் ஒரு வகை ஆடல்மக்கள். பண் அமைந்த நரம்பினையுடைய தோலாற் போர்க்கப்பட்ட யாழையும் மார்ச்சனை நிறைந்த மத்தளத்தினையுமுடைய வயிரியர் என இவரைப் புறநானூறு குறிக்கும்.

பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர்
இன்மை தீர்க்கும் குடிப்பிறந்தோயே

—புறம். 164

கோடியர்

கோடியரும் கூத்தராவர். விழாவின்கண் ஆடும் கோடியரின் வேறுபட்ட கோலம்போல அடைவடைவே தோன்றி இயங்கி போகின்ற இயல்பையுடையது இவ்வுலகம் என உறையூர் முதுகண்ணன் சாத்தனார் பாடுவர்.

.... விழவிற்
கோடியர் நீர்மைபோல முறைமுறை
ஆடுநர் கழியு மிவ்வுலகத்து

—புறம். 29;22.24

இசைச்சங்கம்

தமிழகத்தில் முத்தமிழும் வளர்க்க முப்பெரும் சங்கங்கள் இருந்தன. அவை முதல், இடை, கடை என மூன்று சங்கங்கள். இந்த முத்தமிழ்ச் சங்கம் மூன்றிலும் இசைத் தமிழ் ஆய்வு சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. இசை ஆய்வு நடத்த சுண்ணாகனார், கேசவனார், நல்லச் சுதனார் முதலிய இசைப்புலவர்கள் இருந்து வந்தனர்.

தமிழ்மூதாட்டி என்று போற்றப்பெறும் ஔவைப் பெருமாட்டி பிள்ளையாரை நோக்கி,

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்றருவேன்
—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூ மணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா

என்று பாடியிருப்பது முத்தமிழ்ச்சங்கம் நிலவி இருந்தது என்றும் கருத்தை அரண் செய்து நிற்கிறது. திருக்கோவையார்,

சிறைவான் புனல்தில்லைச் சிற்றம்
பலத்துமென் சிந்தை யுள்ளும்
உறைவான் உயர்மதிற் கூடலி னாய்ந்த
வொண்தீந் தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோவன்றி
ஏழிசைச் சூழல் புக்கோ
இறைவா தடவரைத் தோட்டு
என்கொண்டு புகுந் தெய்தியதோ

எனக் கூறும்செய்யுளில் ஏழிசைஎன்றுகுறிப்பிடப்படுவது தமிழ் இசை என்றும் சூழல் எனப்படுவது சங்கம் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. இதன்மூலம் இயற்றமிழ் வளர்க்க இருந்த சங்கம் போன்றே இசைத்தமிழ் வளர்க்கத் தனிச்சங்கம் நிறுவிப் பாண்டியர்கள் பைந்தமிழையும் இசையையும் பாங்குற வளர்த்து வந்தனர் என்று எண்ணப்படுகிறது. இந்தக் கருத்தை ஆதரித்து நளவெண்பாவில் கூறும்,

ஆழி வடிவம்பலம்ப நின்றாலும் அன்றொருகார்
ஏழிசை நூற் சங்கத் திருந்தாலும்

என்ற செய்யுள் முற்காலத்தில் இசை வளர்க்கத் தனிப் பெரும் சங்கம் நிலவியிருந்தது என்பதை வலியுறுத்துவதாகும்.

இசை நூற்கள்

சங்க காலத்தில் இசை வளர்க்கப் பல புலவர்கள் இருந்து வந்தனர். எண்ணற்ற இசைப்புலவர்கள் இசை

பாடியும், இசைக் கருவிகளை இயக்கியும், இசை நூல்கள் இயற்றியும் வந்தனர். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் தம் உரைப் பாயிரத்தில் பண்டிருந்த பல இசை நூல்களின் பெயர்களைத் தந்துள்ளார்.

அகத்தியம், இசைநுணுக்கம், இந்திர காளியம், குண நூல், கூத்தநூல், செயிற்றியம், தாளவகையோத்து, நூல், பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், பரதம், பெருங்குருகு, பெருநாரை, நாடகத் தமிழ்நூல், முறுவல், முதலிய நூல்கள் அடியார்க்கு நல்லார் காலத்தில் இருந்த இசைநூல்கள் ஆகும். இவையாவும் இன்று இறந்துபட்டன.

இசைக்கருவிகள்

இசையை எழுப்பும் கருவிகள் பலவகைப்படும். இக் கருவிகளைப் பசிய நிறமுள்ள பைகளுக்குள்ளே போட்டு கார்காலத்தில் பழுக்கும் பலாக்காய்களைப் போன்று தோளில் வைத்துச் சுமக்கும் கம்பின் இருபக்கத்திலும் பாரம் ஒத்திருக் கும்படி கட்டித் தூக்கிச் செல்வர் பாணர்.

> கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
> நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையர்
>
> —மலைபடு. 12-13

இவ் விசைக்கருவிகளைத் தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், மிடற்றுக்கருவிகள் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

யாழ்

சங்க நூல்களில் வில்யாழும், சீறியாழும், பேரியாழும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

> .... குமிழின்
> புழற்கோடறாத் தொடுத்த மரபுறி நரம்பின்
> வில்யாழ்
>
> —பெரும்பாண். 180-182

கருங்கோட்டுச் சீறியாழ்
—நெடுநல். 70

ஏழ்புணர் சிறப்பி னின்றொடைச் சீறியாழ்
—மதுரை. 559

வள்ளுயிர்ப் பேரியாழ்
—மலைபடு. 37

இடனுடைப் பேரியாழ்
—பெரும்பாண். 462

என்பன சங்க இலக்கியங்கள் காட்டும் யாழ்வகைகள்.

பத்துப்பாட்டில் நான்கு பாடல்கள் யாழின் அமைப்பைப் பற்றி விரிவாக விளக்குகின்றன.

குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்கழ லுருவின் விசியுறு பச்சை
மெய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்
றைதுமயி ரொழுகிய தோற்றம் போலப்
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை
யளைவா ழலவன் கண்கண் டன்ன
துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி
யெண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி
யண்ணா வில்லா லமைவரு வறுவாய்
பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்
மாயோன் முன்கை யாய்தொடி கடுக்கும்
கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவவி
னாய்தினை யரிசி யவைய லன்ன
வேய்வை போகிய விரலுளர் நரம்பிற்
கேள்வி போகிய நீள்விசித் தொடையல்

இது பொருநராற்றுப்படை சித்திரிக்கும் யாழின் அமைப்பு. இதில் பத்தல், தோற் பார்வை, ஆணி, வறுவாய், மருப்பு, திவவு, நரம்பு என்பன இங்குக் காட்டப்படும் யாழின் உறுப்புக்கள். இவ்வாறே சிறுபாணாற்றுப்படையும், மலைபடு

கடாமும், பொருநராற்றுப்படையும் யாழின் அமைப்பைச் சித்திரிக்கின்றன.

சிறுபாணாற்றுப்படையில் திவவு, ஆணி, அகளம், பச்சைப் போர்வை, நரம்பு ஆகியவை உறுப்புகளாகக் கூறப் படுகின்றன.

பெரும்பாணாற்றுப்படை போர்வை, வறுவாய், கவைக் கடை, திவவு, மருப்பு, நரம்பு என்பனவற்றை உறுப்புகளாகக் காட்டுகிறது.

மலைபடுகடாம் திவவு, நரம்பு, ஆணி, யாப்பு, பச்சைப் போர்வை உந்தி மருப்பு இவற்றை யாழ் உறுப்புக்களாகக் குறிக்கின்றது.

பறை

ஆடலிலும், போரிலும் இசைவிழாக்களிலும் பறைக்கருவி சிறந்த இடம் பெற்றிருந்தது. பறை முரசு, முழவு என வழங்கப்பட்டன.

முழவு

விழாக்களில் முழவு இமிழ்வதை மதுரைக்காஞ்சி மலைபடுகடாம் போன்ற நூல்களில் குறிக்கப்படுகின்றன.

முழவிமிழு மகலாங்கண்
விழவு நின்ற வியன்மறுகு

—மதுரை. 327-328

குரூஉக்கட் பிணையற்கோதை மகளிர்
முழவுத் துயிலறியா வியலி ளாங்கண்
விழவின் அற்றவன் வியன்கண் வெற்பே

மலைபடு.349-51

சில நேரங்களில் முழவின் ஓசைக்கேற்ப யாழில் இசை எழுப்புவர்.

குரல்புணர் நல்யாழ் முழவோ டொன்றி

முழவு வாரினால் வரிந்து கட்டப்பட்டிருக்கும் என்பதை,

.... பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொடு

—மலைபடு. 2-3

விசிபிணிக் கொண்ட மண்கனை முழவு

—புறம். 15:23

ஓசை அமைதிக்காக முழவின் பக்கங்களிற் பூசப்பெறும் [illegible] மண் எனப்படும்.

மண்ணமை முழவு

—பொருந. 109

முழவு ஆடவரின் தோள்களுக்கு உவமையாகக் கூறப்பெறும்.

முழவுத் தோள்

—மதுரை. 99

முழவுத் தோளென்னை

—புறம்.88;6

முரசம்

முரசம் அமைந்த விதத்தினைப் பல சங்கப் பாடல் களும் அறிவிக்கின்றன.

கொல்லேற்றுப் பைந்தோல் சீவாதுபோர்த்த
மாக்கண் முரசம்

—மதுரை. 732-733

விசித்து வினை மாண்ட மயிர்க்கண் முரசம்

—புறம். 63:7

சிலைத்தார் முரசம்

—புறம். 36:12

முரசத்தின் ஒலி இடி முழக்கத்திற்கும், கடலொலிக்கும், அருவி ஒலிக்கும் உவமிக்கப்படும். இதனை,

முரசதிர்ந்தன்னவிண்குர லேற்றொடு
—குறிஞ்சி. 49

படுமழை யுருமி னீரங்கு முரசு
—புறம். 350:4

............புணரி
குனில்வாய் முரசினிரங்கும்
—குறுந். 322:2-3

அருவி முழவின்
—நற். 176: 9

என்னும் இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

அருவி
தண்ணென் முரசி னீமிழிசை காட்டும்
—குறுந். 365: 3-4

போர்க்களங்களிலும் முரசங்கள் முழங்கின. முரசங்கள் காலையில் இயம்புகின்றமையைச் சங்கப் பாடல்கள் சாற்றுகின்றன.

படுகண் முரசங் காலையியம்ப
—மதுரை. 232

இமிழ் முரசிரங்க
—மதுரை. 672

நாண்முர சிரங்கு மிடனுடை வரைப்பு
—புறம். 161: 29

தழங்குரன் முரசங் காலை இயம்ப
—ஐங். 448: 1

பதலை

பதலை இருந்தமையைச் சங்க இலக்கியங்களால் உணரலாம்.

பதலை ஒருகண் பையென வியக்குமின்
—புறம். 152:17

என்னும் புறநானூற்றடியாலும்,

நொடிதரு பாணிய பதலை
—மலைபடு. 11

என்னும் கூத்தராற்றுப்படை அடியானும்,

பதலைப்பாணப் பரிசிலர்
—குறுந். 59:1

என்னும் குறுந்தொகை அடியாலும் பதலை எனும் இசைக் கருவி இருந்தமை தெளிவாகும்.

தொண்டகம்

தொண்டகப் பறை கொண்டு புள் ஓப்பினமையைக் குறுந்தொகை சாற்றுகிறது.

குறக்குறு மாக்கள் புகற்சியின் எறிந்த
தொண்டகச் சிறுபறைப் பாணி அயலது
பைந்தாள் செந்தினைப் படுளி ஓப்பும்
—நற். 104:4-6

தொண்டகப் பறையின் தாளத்திற்கேற்ப ஆடவர் பெண்டிரோடு கலந்து தெருக்களில் ஆடுவர் என்பதை அகநானூறு குறிக்கின்றது.

கறங்கு வெள்ளருவி பிறங்குமலைக் கவாஅன்
தேங்கமழ் பிணர் வேங்கை சூடித்
தொண்டகப் பறைச்சீர் பெண்டிரோடு விரைஇ
மறுகிற் றூங்கும்
—அகம். 118: 1-4

ஆகுளி

மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் புறநானூறு முதலிய நூல்களில் காணப்படும் சிறுபறை. இதன் ஒலியினையும், ஒலிக்கப்படும் விதத்தையும்,

நுண்ணி ராகுளி யிரட்ட
—மதுரை. 605: 606.

............ஆகுளிகடுப்பு
குடிஞை யிரட்டு நெடுகலை யடுக்கத்து
—மலைபடு. 140:141

என்பன காட்டும்.

எல்லரி

மலைபடுகடாம் குறிக்கும் சிறிய பறை. விளக்கம் பொருந்திய தாளத்தைக் கொண்டு ஒலிக்கும் வலிய வாயை யுடையது, எல்லரி. இதனை.

கடிகவர் பொலிக்கும் வல்யெல்லரி
—மலைபடு. 10

என மலைபடுகடாம் குறிக்கின்றது.

தடாரி

தடாரி என்பது கிணைப்பறை.

அரிக்குரற் தடாரி
—புறம். 390: 8

எனப் புறநானூற்றாலும்,

அரிக்குரற் றடாரியின் யாமை மிளிரி
—புறம். 249: 4

மதியத்தன்னவென் னரிக்குரற் றடாரி
—புறம். 398: 12

என்னும் புறநானூற்றடிகளாலும்,

பைத்த பாம்பின் றுத்தி யேய்ப்பக்
கைக்கச டிருந்த வென் கண்ணகன் றடாரி
—பொருந. 69-70

என்னும் பொருநராற்றுப்படை அடிகளாலும் சங்ககாலத்தில் தடாரிப்பிறை இருந்தமை தெளிவாகிறது.

குழல்

சங்க கால இசைக்கருவிகளில் ஒன்று. தாளவறுதியை உடைய குழலோசையின் தாளத்திற்கேற்ப மகளிர் ஆடுவர். இதனை,

> அறற்குழற் பாணி தூங்கு யவரொடு
>
> —சிறுபாண்

என்னும் சிறுபாணாற்றுப்படை அடி உணர்த்தி நிற்கிறது.

பாட்டைச் சுருதி குன்றாமற் கைக்கொண்டு நிற்கும் தன்மை வாய்ந்தது குழல் என்பதை மலைபடுகடாம் புலப்படுத்துகிறது.

> விளிப்பது கவருந் தீங்குழல்
>
> —மலைபடு. 8

குழலால் எழுப்பிய பாலைப்பண்ணை,

> குழலி வின்றீம் பாலை
>
> —பெரும்பாண். 179-180

எனப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

> ஆம்பலங் குழல்
>
> —நற். 113-11

> தீங்குழணம்பில்
>
> —ஐங். 215:4

என்பன ஆம்பற் பண்ணையுடைய புல்லாங்குழல்களைக் காட்டி நிற்கின்றன.

குழல் சித்திரிக்கப்பட்டிருக்கும் நிலையினைப் பெரும்பாணாற்றுப்படை வரிகள் சித்திரிக்கின்றன.

> அந்நுண விர்புகை கமழக் கைம்முயன்று
> ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
> செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலி
> னின்றீம் பாலை
>
> —பெரும்பாண். 177-180

வயிர்

இது ஊதுகொம்பு என்று இக்காலத்தில் வழங்கப்படுகின்றது.

வளைநரல வயிரார்ப்ப
—மதுரை. 185

வயிரும் வளையுமார்ப்ப
முல்லை. 92

வயங்குகதிர் வயிரொடு வலம்புரி யார்ப்ப
—பதிற். 67:6

ஏங்குவயி ரிசைய கொடுவா யன்றி
லோங்கிரும் பெண்ணை யகமட வகவ
—குறிஞ்சி. 219-220

...............தடந்தாள் நாரை
செறிமடை வயிரின் பிளிற்றி
அகம். 40:14-15

கான மஞ்ஞைக் கமஞ்சுன் மாப்பெடை
அரியான் றடைகண வயிரின் நானும்

என்பன வற்றால் அக்காலத்தில் வயிர் என்னும் இசைக்கருவி இருந்தமையையும் அதில் இசை இசைக்கப்பட்டமையும் நன்கு தெளிவாகின்றன.

பாண்டில்

மிக அருகிக் காணப்படும் கஞ்சதாளம்
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்
—மலைபடு. 4

என மலைபடுகடாம் பாண்டிலைப் பற்றிப் பேசுகின்றது. சங்கு என்பதும் அக்காலத்திலிருந்த இசைக்கருவிகளுள் ஒன்றாம்.

இன்னணம் சங்க இலக்கியங்களின் மூலமும், தொல் காப்பியத்தின் மூலமும், சங்ககாலத்தில் இசை பெற்றிருந்த

சிறப்பு புலனாகும். சங்க காலத்தில் சிறப்புற்ற ஒன்றாக அமைந்து துலங்கிய இசை பல்லவர் காலத்தில் பெற்ற நிலையினை இனிக் காண்குவம்.

பல்லவர் காலத்தில் இசை

கி.பி. 4ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் பல்லவராட்சி ஏற்பட்டது. வடநாட்டில் குப்தர் ஆட்சிக் காலத்தில் தோன்றியநெறியான ஆடிப்பாடிக் கடவுளை வணங்கும் பக்தி நெறி தமிழகத்தில் பரவியது. சமணர், பௌத்தர், வைதிகர் நுழைவாலும் செல்வாக்கினாலும் வடமொழி தமிழகத்தில் கால்கொண்டது. வடசொற்களும், வடமொழி இலக்கண நூல்களும் வழிபாட்டு முறைகளும் தமிழில் புகுந்தன. இந்த மாறுதல்களைத் திருநாவுக்கரசர் முதலிய சமயக்குரவர் பாடல்களிலும் ஆழ்வார் பாடல்களிலும் காணலாம். காந்தாரம், தக்கேசி, சாதாரி, காந்தார பஞ்சுரம், கௌசிகம், மேகராகம் முதலிய பண்வகைகளும், சதகம், தசாங்கம், பதிகம், யமகம், முதலியனவும் வடவர் கூட்டுறவால் நிகழ்ந்தவையாகும்.

தேவார ஆசிரியரும், பிற சைவப் பெரியார்களும் இசைபாடி இறைவனை மகிழ்வித்தனர். இறைவனையே இசை வடிவத்தில் கண்டனர். இயலவன், இசையவன், பண்ணவன், என்றெல்லாம் நாயன்மார்கள் இறைவனைப் போற்றினார்கள். ஞானசம்பந்தர் தாளமிட்டும், பதிகங்களைப் பாடி இறைவனைத் திங்கள்தொறும் சென்று வணங்கினர். திருநாவுக்கரசரும், சுந்தரரும் இப்படியே இசைபாடி இறைவனைப் போற்றினர். பெண்களும் இறைவனுடைய பல தன்மைகளைப் பாடிக்கொண்டே கழல், பந்து, அம்மானை முதலிய ஆட்டங்களை ஆடினர் என்று சம்பந்தர் பாடல் தெரிவிக்கின்றது. இவ்வாறே இளம் பெண்கள் பூக்கொய்தல், சுண்ணம் இடித்தல் முதலிய பல வேலைகளைச் செய்துகொண்டே இறைவன் சிறப்புக்களை

எடுத்துப்பாடி மகிழ்தல் பழைய வழக்கம் என்பதைத் திருவாசகப் பாடல்கள் உணர்த்துகின்றன.

மாடுகளை மேய்த்து வந்த ஆனாய நாயனார் புல்லாங் குழலில் ஐந்தெழுத்துக்கள் ஓதி இறைவனை அடைந்தார் என்று பெரியபுராணம் பேசுகின்றது. திருநீலகண்ட யாழ்ப் பாணரும் திருப்பாணாழ்வாரும் யாழ்மீட்டியும் பாடியும் பேறு பெற்றனர் என்று நூல்கள் கூறுகின்றன.

சமயக்குரவர் பாக்கள் பல கொல்லி, இந்தளம், சீகா மரம், குறிஞ்சி, நட்டபாடை, வியாழக் குறிஞ்சி, செவ்வழி, புறநீர்மை, முதலிய தமிழ்ப்பண்களில் பாடப்பட்டுள்ளன.

திருநாவுக்கரசர் ஈசன் எந்தை இணையடி நீழல் மாசில்லாத வீணையொலி போன்றது என்று கூறுகின்றார். இதிலிருந்து அவரது இசைப்புலமையையும் இசை இன்பத் தில் ஆழ்ந்து கிடந்த நுட்ப உணர்வினையும் நாம் நன்கு அறியலாம். சைவ வைணவ சமயங்கள் பல்லவர் காலத்தில் மிகுதியாகப் பரவுதற்குரிய சிறந்த காரணங்களுள் இசைப் பாக்களும் ஒன்றாகும். பல்லவப் பெருநாட்டிலிருந்து பெருங் கோயில்களில் இசைவெள்ளம் கரைபுரண்டு ஓடியது என்பதைத் திருமுறைப் பாடல்கள் உணர்த்தி நிற்கின்றன.

பண்ணியல் பாடல் அறாத ஊர்
பத்திமைப் பாடல் அறாத ஊர்
பாஇயல் பாடல் அறாத ஊர்
தையலார் பாட்டு ஓவாச்சாய்க்காடு
மாதர் மைந்தர் இசைபாடும் பூம்புகார்
பாலென வேமொழிந் தேத்தும் ஆவூர்

இவற்றால் பெண்களும் ஆண்களும் இசையில் சிறந்திருந் தனர் என்பது தெளிவாகும்.

தேவாரம் குறிக்கும் இசைக்கருவிகள்

யாழ், குழல், கின்னரி, கொக்கரி, தக்கை, முழவம், மொந்தை, மிருதங்கம், மத்தளம், தமருகம், துந்துபி,

[illegible] முழவு, தக்கலநம், முரசம், உடுக்கை, தாளம், துடி, [illegible] முதலியன. இவற்றுட் பல சங்க காலத்தி [illegible] தமிழகத்தில் இருந்தவை. வீணை, தமருகம், [illegible], துந்துபி என்பன வடவர் கோரிக்கையால் [illegible] எனக் கொள்ளலாம்.

[illegible] அருட்பாடல்களும் இவ்வாறே தமிழ்ப்பண் [illegible] மொழிப் பண்களிலும் பாடப்பட்டுள்ளன.

[illegible] வர்மன் இராசசிம்மன் முதலிய பல்லவ [illegible] இசையில் பெரும்புலமை பெற்றிருந்தனர். குடுமி [illegible] மலையிலுள்ள இசை பற்றிய கல்வெட்டு அப்பர் [illegible] மகேந்திரன் வெட்டுவித்ததாகும். அக் [illegible] செய்திகள் அவனது இசையறிவை நன்கு [illegible] றன. சங்க காலத்தில் இல்லாத வீணை பல்லவர் [illegible] தமிழகத்தில் நுழைந்தது. இவை எட்டிற்கும் [illegible] உரிய என்று குடுமியான் மலைக் கல்வெட்டு இசை [illegible] திகளைக் கூறுவதால் ஏழு நரம்புகளையுடைய [illegible] எங்கும் இருப்பது. 8 நரம்புகளையுடைய [illegible] மகேந்திரன் புதிதாகக் கண்டுபிடித்தான் [illegible]. மகேந்திரவர்மன் பரிவாதினி என்னும் பெயர் [illegible] வீணையை வாசிப்பதில் வல்லவனாக இருந்தான்.

[illegible] பெண் தன்தோழியை அணைத்துக்கொண்டு [illegible] போல மங்கை ஒருத்தி பரிவாதினியை அணைத்துக் [illegible] உறங்கினாள். அந்த வீணை பொன் நரம்புகளை [illegible] என்று அசுவகோஷர் புத்த சரிதத்தில் கூறியுள் [illegible]. இவற்றைக்கொண்டு மகேந்திரன் பயன்படுத்திய [illegible] வீணை எத்தகையது என்பதை ஒருவாறு அறியலாம்.

இராசசிம்மன் வாத்ய வித்யாதரன் (இசைக்கருவி [illegible] தில் வித்யாதரனை ஒத்தவன்). அதோத்ய துரும்பு ([illegible], முரசம், குழல், தாளம் இவற்றில் துரும்பை [illegible]) வீணாநாரதன் (வீணை வாசிப்பதில் நாரதனைப் [illegible] றவன்) என்று காஞ்சி கைலாசநாதர் கோயில் [illegible] டுக்கள் கூறுகின்றன.

சோழர் காலம்

வடவர் கூட்டுறவால் பலவகைச் சந்தங்கள் தமிழில் புகுந்தன. வடுகச்சந்தம், கருநாடகச் சந்தம் முதலிய சந்தங்கள் யாப்பருங்கல விருத்தியுரையில் குறிக்கப் பட்டுள்ளன. வேதச் சுலோகங்கள் ஒருவகைச் சந்தத்தில் பாடப்பட்டன. அவற்றைப் பாடியோர் ஆரியம் பாடியோர் எனப்பட்டனர்.

ஒன்பதாம் திருமுறையிலுள்ள பாக்கள் திருவிசைப் பாக்கள் எனப்பட்டன. இராசஇராசன் எழுப்பித்த இராச இராசேச்சுவரம் என்னும் பெருவுடையார் திருக்கோயில் தமிழிசையின் தாயகம் போல் நிலவியது. இங்குத் திருப்பதிகம் விண்ணப்பம் செய்ய 48 பேர் நியமிக்கப்பட்டனர். கொட்டி மத்தளம் வாசிக்க இருவர் நியமிக்கப்பட்டனர். இவர்களன்றி ஆரியம் பாடச் சிலரும், தமிழிசை பாடச் சிலரும், ஆடல் பாடல் இயற்ற 400 தனிச் சேரிப் பெண்டுகளும் குடியேற்றம் பெற்றனர். இசையில் வல்ல ஏந்திழையார்கள் கந்தர்விகள் என்றும், இசையில் வல்ல ஆடவர்கள் கந்தவர்கள் என்றும் அழைக்கப் பெறலாயினர். அங்கு கந்தவர்கள் மட்டும் 75 பேர் இருந்தனர். கொட்டி மத்தளக்காரர், துணைக் கருவியாளர், வீணை மீட்டுபவர்கள், வங்கியம் - பாடவியம் மொராலியம் - உடுக்கை முதலியவைகளை இசைப்பவர்களுமாகப் பலர் இருந்தனர். கரடிகை - சகடை - உவச்சகப் பறை முதலிய தோற் கருவிகளை முழக்குபவர்கள் பலர் இருந்தனர்.

அரசன் நம்பியாண்டார் நம்பியின் துணைக்கொண்டு மூவர் கை இலச்சினை பெற்ற காப்பினையுடைய தேவாரத் திருப்பதிகங்களைத் தேடி எடுத்துப் புற்றினால் பொன்றியவை போக எஞ்சியவற்றை எடுத்துத் தொகைப் படுத்தி வகைப்படுத்தித் திருமுறைகளாக, கோயில்கள் தோறும் ஓதும் வண்ணம் ஏற்பாடு செய்தான் என்பர்.

இராசராசனுக்குப் பின் எழுந்த சீவக சிந்தாமணி பெருங்கதை போன்ற நூல்கள் யாழ்மீட்டுவதைப் பற்றியும், பிற இசைக்கருவிகள் இசைப்பதைப் பற்றியும் சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. சீவக சிந்தாமணி பெருங்கதை, கல்லாடம் போன்ற நூல்களும் இவைகளுக்குப் பின் எழுந்த தண்டியலங்காரமும் இசைத்தமிழின் ஏற்றத்திற்கு ஏற்ற எடுத்துக் காட்டுக்களாக இலங்கின. ஆண்களின் கண்களால் தென் படாது நோன்பு நோற்ற சுரமஞ்சரி என்னும் அரசிள மங்கையை சீவகன் இசைபாடி தன்வயப்படுத்தினான்.

சோழமண்டலத்தில் 11 ஆம் நூற்றாண்டில் ஆரியர் அணி அணியாய்த் தமிழகத்தில் குடியேறினர். ஆரியர்களின் குடியேற்றத்தினாலும் தமிழ்இசை வளர்ச்சி குன்றியது எனலாம். ஆரிய இசையும் ஆரியப்பண்பாடும் தமிழகத்தின் முகத்தோற்றத்தை மாற்ற முற்பட்டது.

எனினும் பொதுவாக 11 ஆம் நூற்றாண்டு தமிழிசைக்கு ஏற்ற காலமாகவே இருந்து வந்தது. கி.பி.11 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த குலோத்துங்கன் மூவர் அருளிய திருப்பதிங்களைச் செப்பேடுகளில் எழுதி இசைக் கருவூலமாகப் பாதுகாத்து வந்தான். இவன் தமிழ்ப்புலவர்களை மட்டுமன்றித் தமிழிசைப் புலவர்களையும் ஆதரித்தான். குலோத்துங்கன் மனைவி ஏழிசைவல்லபி தன் பெயருக்கேற்ப ஏழிசை வல்லவளாக இருந்தாள்.

திருப்பதிகத் திருமுறை வகுத்த நம்பியாண்டார் நம்பியும் அபயகுலசேகரன் என்னும் சோழ மன்னனும் திருமுறைகளுக்குப் பண் தெரியாது மயங்கிக் கிடந்தபொழுது திருநீலகண்ட யாழ்ப்பாணர் பரம்பரையில் திருஎருக்கத்தம் புலியூரில் உள்ள ஒரு பாடினியார் இசையில் வல்லவர் என்பதை அறிந்து அங்கு சென்று அவரிடம் பண்ணடைவு கேட்டுத் தமிழிசைக்குப் பெரும் ஏற்றமளித்தார் என்று நாட்டச் சான்றுகள் உள.

கி. பி. 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் காலத்திலேயே இசை மரபு அருகியது. ஆனால் முற்றிலும் மறைந்துவிட்டது என்று சொல்வதற்கில்லை. சேக்கிழார் பெரிய புராணத்தில் கூறும் பழந்தமிழர் இசையினைப் பற்றிய குறிப்புக்கள் இதைத் தெளிவாக உணர்த்துகின்றன. இந்த நூற்றாண்டிலே நாடெங்கும் பரவி நின்ற இசை திருக்கோயில்களுக்குள்ளே அடங்கிக் கிடக்க நேர்ந்தது. அது மக்களிமிடருந்து மறைந்து கோயில்களுக்குச் செல்லும் ஒருசில அடியவர்கள் மட்டும் சிறிது நேரம் பக்திச் சுவைக்குக் கேட்கும் இசையாகத் திகழ்ந்தது. அதுவும் இல்லையேல் மறைந்தது போன்றிருக்கும்.

பிற்காலத்தில் இசை

விசயநகர ஆட்சியில் கி.பி.14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூர் தென்னாட்டின்மீது படையெடுத்தான். விந்த மலைக்குத் தென்பாற்பட்ட யாதவ அரசு, காகதீய அரசு, கொய்சல அரசு, பாண்டிய அரசு என்பவை அச் சேனைத் தலைவர்முன் தலைதாழ்ந்தன. தமிழகம் அவரது படையெடுப்பால் நிலைதளர்ந்தது. முஸ்லீம்களைத் தடுத்து நிறுத்தி இந்துக்களைக் காக்கவேண்டும் என்ற உணர்ச்சியுடன் பல்லாரி மாவட்டத்தில் விசய நகர அரசு ஏற்பட்டது. அந்த அரசர்கள் கன்னடத்தையும் தெலுங்கையும் வளர்த்தனர். ஆந்திர இசையையும், கருநாடக இசையையும் வளர்த்தனர். நடுவில் இந்த இரண்டும் ஒன்றாகிக் கர்நாடக இசை என்றே வளரலாயிற்று.

துங்கபத்திரை ஆறு முதல் கன்னியாகுமரி வரை உள்ள நாடு விசயநகர ஆட்சிக்குட்பட்டது. விசயநகர வேந்தர்க்கு அடங்கிய நாயக்கர் ஆட்சி மதுரையிலும் தஞ்சாவூரிலும் செஞ்சியிலும் ஏற்பட்டன. அதனால் ஆந்திரமும் கர்நாடகமும் தமிழ்நாட்டு அரசாங்க அலுவலராகத் தெற்கே குடியேறினர். இந்த மாறுதல்களால் தமிழ்நாட்டில் கர்நாடக இசை

நுழைந்து பரவத் தொடங்கியது. இங்ஙனம் ஏற்பட்ட ஆட்சிமுறை மாறுபாட்டால் புதிய மன்னர்களை மகிழ்வித்துப் பரிசுபெறத் தமிழ் இசைவாணர் கர்நாடக இசையைக் கற்கலாயினர். இப் புதிய போக்கினால் தமிழகத்தில் வாழையடிவாழையாக இருந்து வந்த தமிழிசை சிறிதுசிறிதாக மறைந்தது. தெலுங்குப் பாடல்கள் செல்வாக்குப்பெற்றன.

பிறநாட்டு இசைகள்

இஸ்லாம், கிறித்துவம் என்னும் இரண்டு புதிய சமயங்களின் நுழைவாய் அச் சமயங்களைத் தழுவிய தமிழர் இந்துஸ்தானி இசையையும், மேனாட்டு இசையையும், கற்கலாயினர். கிறித்துவக் கோயில்களில் இன்றளவும் மேனாட்டு இசையே இருந்து வருகிறது. அந்த இசையில் தமிழ்ப் பாடல்களும் பாடப்பெறுகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் இசைக்கலை

ஆங்கில இசையில் Band இசை தமிழகத்தில் பரவியது. இன்றும் பல திருமணங்களில் அவ் விசையை நாம் கேட்கிறோம். நம்நாட்டு நாதசுரம் அழியாமல் இருந்து வருகிறது. பண்டைக்காலப் பறை, சங்கு, முரசம், உடுக்கை, தாழம், கொம்பு முதலிய இசைக்கருவிகள் சிற்றூர்களில் நிலைத்து இருந்து வருகின்றன. ஏற்றம் இறைக்கும் பொழுதும், நாற்று நடும்பொழுதும், கனமான பொருளை இழுத்துச் செல்லும்போதும், நெடுந்தூரம் வண்டிகளை இழுத்துச் செல்லும்போதும், சுண்ணம் இடிக்கும்பொழுதும் அவ்வத் தொழிலில் ஈடுபட்ட ஆண்களும் பெண்களும் பாக்களைப் பாடுகின்றனர். இவ்வாறு பாடும் வழக்கம் சங்க கால முதலே இருந்து வருகின்றது. குழந்தைகளை உறங்க வைக்கும் தாலாட்டுப் பாடலும் பழமையானது. ஏறத்தாழ 10 ஆண்டுகட்கு முன்வரையில் தமிழிசை இன்னிசை அரங்குகளில் தெலுங்குப் பாடல்களே ஆட்சி புரிந்தன. தமிழ்

மக்கள் நடுவில் தமிழிசைவாணர் தெலுங்குப் பாடல்களையே பாடி வந்தனர். ஒவ்வோர் இசையரங்கில் இறுதியில் மட்டும் இரண்டொரு தமிழ்ப்பாடல்களைப் பாடினர். தமிழ்ப் பற்றுடைய நம் மக்கள் இக் கேடான நிலைகண்டு மனம் வருந்தினர். செய்வகை அறியாது விழித்தனர். அந்த நிலையில் செட்டி நாட்டரசர் இராசா. சர். அண்ணாமலை செட்டியார் தமிழிசையை வளர்க்க முற்பட்டார். அவருக்கு உதவியாக டாக்டர். ஆர். கே. சண்முகம் செட்டியாரும், சர். எம். ஏ. முத்தைய செட்டியாரும் நல்லறிஞர் பலரும் இருந்தனர். இவர்கள் முயற்சியில் தமிழகத்துப் பேரூர்களில் தமிழிசைச் சங்கங்கள் தோன்றின. தலைமைச் சங்கம் சென்னையில் நிறுவப்பட்டது. பலர் தொடக்கத்தில் தமிழிசை இயக்கத்தை வெறுத்தனர். அரசரும் பிறரும் மனம் தளராது தமிழிசையை வளர்க்கத் தொடங்கவே முதலில் தோன்றிய வெறுப்பு மறைந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பல தமிழ்ப் பாடல்கள் நூல்கள் வடிவில் வெளிவந்தன. இன்றும் அவை வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொர் ஆண்டும் டிசம்பர் இறுதியில் சென்னையில் தமிழிசை மாநாடு நடை பெற்று வருகிறது. தமிழிசை வாணர் குழுவில் தமிழ்ப் பண்கள் ஆராயப்பட்டு வருகின்றன. சங்க நூல்களை நன்கு ஆய்ந்து பல யாழ்களைப் பற்றிய உண்மைகளை விபுலானந்த அடிகள் யாழ்நூல் என்னும் பெயரில் எழுதியுள்ளார். தமிழிசை பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுவிட்டதால் தெலுங்குப் பாடல்களையே பாடிக் கொண்டிருந்த இசைவாணரும் இப் பொழுது தமிழ்ப்பாடல்களைப் பாடி வருகின்றனர்.

தமிழ் மக்கள் நாடகக் கலையின் உயர்வை இப்பொழுது உணர்ந்து வருகின்றனர். சமயம் வரலாறு சீர்திருத்தம் இவற்றைத் தழுவிய நாடகங்கள் இன்று நடிக்கப் பெறுகின்றன. டி.கே.எஸ். சகோதரர்கள், சிவாஜிகணேசன், எம்.ஜி. ராமச்சந்திரன், கே.ஆர். இராமசாமி, எஸ்.எஸ். இராசேந்திரன், தங்கவேலு, தேவி நாடக

சபையார், நவாப் இராசமாணிக்கம் முதலிய நாடகக் கலைஞர்கள் பலவகை நாடகங்களை நடித்துக் காட்டுகின்றனர். இவற்றில் எல்லாம் தமிழிசை முழக்கமிடுகிறது. தமிழ்ப்படக் காட்சிகள் மிகச் சிறந்த முறையில் இசைக் கலையை வளர்த்து வருகின்றன. காலத்திற்கேற்ற கருத்தமைந்த பாடல்கள் கேட்டு மகிழ்தற்குரியன.

கட்சிப் பாடல்கள்

தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் சமுதாய நலக் கட்சிகளும் தத்தம் கொள்கைக்கேற்பப் பாடல்களைக் கட்சிக் கூட்டங்களில் பாடின. அப் பாட்டுக்களின் வாயிலாக அவர்தம் கொள்கைகளைப் பரப்பினர். பாரதியார் பாடல்களைத் தெருக்களில் பாடியது காங்கிரஸ் கட்சி மிகச் செல்வாக்குப் பெற்றதற்குக் காரணமாம்.

பொதுவாகச் சென்னை வானொலி நிலையத்திலும் சிறப்பாகத் திருச்சி வானொலியிலும் நாள்தோறும் தமிழிசை பரப்பப்பட்டு வருகின்றன. மேனாட்டு இசையிலும், கர்நாடக இசையிலும், தமிழிசையிலும், அரபுநாட்டிசையிலும் தமிழ்ப்பாக்கள் உருவாகிக் கொண்டே வருகின்றன. இந்த வளர்ச்சி வரவேற்கத்தக்கது.

முடிப்புரை

பண்டைக்காலத்தில் இசை மக்களுக்குரிய ஒன்றாக இருந்தது. பின்னர் இடைக்காலத்தில் அது மன்னர்க்குரிய கலையாக நிலக்கிழார்களின் கலையாகப் போற்றப்பட்டது. முதலில் இருந்தது தமிழிசை. பின்னர் வடமொழியாளர் இசைத் தமிழில் கலந்தது. விசய நகர ஆட்சியின் விளைவால் கர்நாடக இசை கால் கொண்டது. முகம்மதிய ஆட்சியில் இந்துஸ்தானி நுழைந்தது. பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியால் மேனாட்டு இசை பரவியது. ஆட்சி மாறுபட்டால் சமுதாயத் துறைகள் பலவற்றிலும் மாறுதல் ஏற்படுவது போலவே கலைத்துறையிலும் மாறுதல்கள் ஏற்படுவது இயற்கையே அன்றோ!

12. தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கருத்துகள்

அமெரிக்கர்களுக்கு வரலாற்றுப் பழமை இல்லை. உருசியர்கள் பழமையைப் போற்றுவதில்லை. புதுமையை உயர்த்திப் பேசுவதில் இருநாட்டவரும் ஒன்றுபடுகின்றனர். இலக்கியங்களையும் அவற்றின் ஊடகங்களாகிய மொழிகளையும் கூட அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்கின்ற போக்கு இன்று வளர்ந்துவிட்டது. இலக்கியத்தை மனித நேயவியல் (Humanology) என்கிறார் மாக்சிம் கார்க்கி.

கணிப்பொறியின் துணைகொண்டு செயற்கை நுண்ணறிவை (Artificial Intelligence) உருவாக்க இயலும் என்னும் அளவிற்கு அறிவியல் வளர்ந்து கொண்டு இருக்கிறது. அறிவியல் கண்டுபிடிப்புகளும் பயன்களும் மனிதனின் வாழ்க்கையை எளிமையாக்குமேயன்றி இனிமையாக்க இயலாது என்றும் அந்த ஆற்றல் இலக்கியத்திற்கே உண்டு என்றும் கூறுகிறார் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன். இலக்கியமும் அறிவியலும் மனிதனின் இரு கண்கள் என்று கருதுவதே சாலச் சிறந்தது.

மாறி வரும் அறிவியல் உண்மைகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரையில் இயற்கையைப் பற்றிய அறிவியலாரின் கருதுகோள்கள் முற்றிலும் மாறுபட்டிருந்தன. காற்றை ஒரு தனிப்பட்ட வளிமமாகவும், நீரை ஒரு தனிப்பொருளாகவும், தீயை ஓர்

ஆமியும் பொருளாகவும், நிலத்தை உறுதிப் பொருளாகவும் அசையாத ஒன்றாகவும், வானத்தை இல் பொருளாகவும் நினைத்தனர். ஆயின் இன்று காற்றை ஒரு கலவை (Mixture) யாகவும், நீரினை ஒரு கட்டுப் பொருளாகவும் (Compound) தீயை ஓர் ஆற்றலாகவும் (Energy) நிறுவி இருக்கின்றனர். பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட செய்திகளைக் கொண்டு முற்காலத்தில் கருதுகோள்களாக இருந்தன வற்றைத் தவறானவை என்று மதிப்பிடுவதைவிட முன்னைய சிந்தனையின் வளர்நிலையே பின்னையது என்று நினைப்பது முறையான பார்வையாகும் என்று தாமஸ் ஆல்வா எடிசன் கருத்துத் தெரிவித்துள்ளார். இக்கால அறிவியல் உண்மைகளை முற்கால இலக்கியங்களில் புகுத்திக் கால முரண் (Anachronism) என்ற பிழையைச் செய்வதனைக் காட்டிலும் இலக்கியங்களில் அவ்வக் காலங்களுக்கு உகந்த அறிவியல் கருத்துக்கள் எவ்வாறு பாறைகளில் தொல்லுயிரிகள் இயற்கையாகப் படிந்திருக்கின்றன என்பதை நோக்கலாம்.

இலக்கியமும் அறிவியல் நூல்களும்

குடும்ப மருத்துவ நூல் ஒன்று, உறக்கத்தைப்பற்றி ஷேக்ஸ்பியர் கூறிய விளக்கம், மருத்துவ வல்லுநர்கள் ஆய்ந்து கண்ட உண்மையோடு அப்படியே ஒன்றுகிறது என்று பல அறிஞர்களை மேற்கோள் காட்டி எழுதி இருக்கிறது. அந் நாடகப் புலவர் கருத்து வருமாறு:

> Sleep that knits up thet travell'd sleave of care
> The death of each day's life, sore labours bath,
> Balm of hurt minds, great nature's second course
> Chief nourisher in life's feast.

சங்க இலக்கியத்தில் அருமையும் எளிமையும் வாய்ந்த குறுந்தொகையில் அம்மூவனார் பாடிய பாடலில் துஞ்சா

மையின் கொடுமைகளைக் கூறி அதன்வழி உறக்கத்தின் உயர்வை வலியுறுத்துகிறார்.

யார்அணங் குற்றனை கடலே பூழியர்
சிறுதலை வெள்ளைத் தோடு பரந்தன்ன
மீனார் குருகின் கானலம் பெருந்துறை
வெள்வீத் தாழை திரையலை
நள்ளென் கங்குலம் கேட்கும் நின்குரலே (163:1.5)

என்பது பாடல். மற்றும் ஒரு புலவர் (கூவன் மைந்தன், குறுந். 224) உளவியல் பகுப்பாய்வாளர்கள் (psycho-analysts) ஆய்ந்து கண்டுபிடித்த துஞ்சா நோயினை (Insomnia) அவர்கள் கருதிய போக்கிலேயே உரைத்திருக்கிறார்.

கவலை யாத்த அவல நீளிடைச்
சென்றோர் கொடுமை எற்றி துஞ்சா
நோயினும் நோய் ஆகின்றே

என்றார். உளவியல், உள மருத்துவம், இலக்கியம், சமூகவியல், தத்துவம் ஆகிய துறைகளில் மேலைநாட்டவர்களுக்கு இந்தியர்கள்தான் வழிகாட்டியாக இருக்க முடியும் என்று பூதான இயக்கத்தின் தந்தை வினோபாபாவே உரைத்தமை இவண் நினைத்துப் பார்த்தற்குரியது.

மருத்துவத்தின் தந்தையாகக் கிரேக்க நாட்டறிஞர் இப்போகிரேடஸ் கருதப்படுகிறார். அவர் உடலமைப்பினை நான்கு வகையாகப் பிரித்திருக்கிறார். எல்லா வகையாலும் சிறந்த உடலினையே தூய உடம்பு என்கிறார். இதனைப் ''புனித நோய்'' (Sacred Disease) எனும் அவர்தம் நூலில் காணலாம். பாலை பாடிய பெருங்கடுங்கோ அவர்கள் இப்போகிரேடஸ் கூறிய கருத்தினைத் ''திருந்திய யாக்கை'' என்றே குறிப்பிடுகிறார். மனித யாக்கை செப்பமுறுவதற்கு அடிப்படையானவை சோறும் தண்ணீருமே. எனவே இவ் விரண்டையும் 'இரு மருந்து' என்ற சொல்லால்

கோவூர் கிழார் குறித்தமை மருத்துவ அறிஞர்தம் ஆய்விற்கு நல்விருந்தாய் அமையும்.

பசலை எனும் ஒருவகை குறுகிய காலத் தோலின் நிற மாறுபட்டு நோயினைப் புலவர்கள் குறித்திருக்கிறார்கள். இது பெண்களுக்கு மட்டுமே வரக்கூடிய நோயாகவும் உரைத்திருக்கிறார்கள். நாளமில்லாச் சுரப்பிகள் சுரக்கும் மனித வளர்ச்சிக்கு உதவும் நீர்களின் வேதியியல் வினை நிகழ்வால் ஏற்படும் மாறுபாடாக இருக்கலாம் என்று பெண் மருத்துவ அறிஞர்கள் (Gynaecologists) கருதுகின்றனர். உடலில் குருதியோட்டத்தின் அளவில் சிறிது குறைந்தால் தான் தோலின் நிறம் மாறுபடும் என்று மனிதத் தோலியல் வல்லுநர்கள் கருத்துத்தெரிவிக்கின்றனர். இதனைக் குருதிக் குறைபாட்டு நோய் அல்லது ரத்த சோகை (Anaemia) என்று அழைக்கலாம். இதில் பல வகை உண்டு. எனவே சங்ககால மக்களுக்கு இந்த நோயைப் பற்றிய நுட்பமான அறிவு இருந்ததோடு அதனைப் பற்றி இன்றைய அறிவியல் அறிஞர்கள் முழுநேர ஆய்வு நிகழ்த்தவும் குறிப்புகளை விடுத்துச் சென்றுள்ளனர்.

> .... அலர் வாய்
> அயலிற் பெண்டிர் பசலை பாட
> ஈங்கா கின்றால் தோழி
>
> —நற்றிணை 378:6-8

> நோய்தந் தனனே தோழி
> பசலை ஆர்ந்த நம்குவளையம் கண்ணே
>
> —குறுந்தொகை 13 : 4-5

பிற மேற்கோளைகளையும் இந் நோக்கில் ஆய்ந்தால் பல நுட்பங்கள் புலப்படும்.

கருவுற்ற பெண்கள்

கருவுற்ற பெண்களின் வயிற்றில் ஐதுமயிர் (பொருநர் ஆற்றுப்படை6-7)என்ற ஒருவகை முடிகாணபடும் என்றனர்.

இவர்கள் மண்ணையும் புளிப்புச் சுவையுடைய பொருள்களையும் விரும்பியுண்பர் என்பதனை,

> ....நின்நாட்டு
> வயவுறு மகளிர் வேட்டுனின் அல்லது
> பகைவர் உண்ணா அருமண்ணினையே

என்ற புறநானூற்றுப் பாடல் (புறம். 20:13-15) பகுதியாலும் பிறவற்றாலும் அறியலாம். ஆடவனுடைய உயிரணு காரத் தன்மையுடையது (Alkaline by nature) என்றும் அது பெண்ணின் முட்டையோடு சேரும்பொழுது அதனை நடுநிலையாக்கவே கருவுற்ற பெண்கள் புளிப்பு, உப்பு மற்றும் துவர்ப்புச் சுவையுடைய பொருள்களை விரும்பி உண்கின்றனர் என்றும் கூறுவர். உயிர் ஊக்கிகளின் (Hormones) சேர்க்கையால் வேதியியல் மாறுபாடு பெண்ணின் உடலமைப்பிலும் உள்ளத்தின் போக்கிலும் ஏற்படுகிறது என்று இன்றைய மருத்துவ அறிவியல் கூறுகிறது. பெண்ணின் உடற்கூறு அமைப்பு ஆடவனிடமிருந்து வேறுபட்டது என்னும் அறிவியல் உண்மையை அக் காலச் சான்றோர்கள் அறிந்திருந்தனர் என்பது நாம் பெருமையும் பெருமிதமும் கொள்ள வேண்டிய செய்திகள். குறுந்தொகையில் கச்சிபேட்டு நன்னாகையாரின் பாடலும் நோக்கற்குரியது (287).

இயற்பியல் செய்திகள் (physics)

வேகம் (speed) எனும் கோட்பாட்டினை அக் கால மக்கள் பதிய வைத்திருந்தனர்.

> நீரி மிகிற் சிறையுமில்லை; தீமிகின்
> மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை
> வளிமிகின் வலியும் இல்லை
>
> (புறநானூறு 51:1-3)

என்ற ஐயூர் மூடவனார்தம் பாடல் நம்மைச் சிந்திக்கச் செய்கிறது. நியூட்டன் அவர்கள் விசை (force) என்

பதற்குக் கொடுத்த விளக்கத்தை வைத்து இப் பாடலை உற்று நோக்கும்போழ்து இயக்கத்தினால் (movement) விசை உண்டாகிறது என்பது புலனாகும். "ஓய்வு நிலையிலோ, தொடர்ந்த இயக்கத்திலோ இருக்கும் ஒரு பொருளை அதன் நிலையில் மாற்றம் ஏற்படச் செய்யும் ஓர் ஆற்றலை விசையெனலாம்" என்பதே நியூட்டனின் முதல் விதி. ஒரு மணித் துளிக்கு எவ்வளவு கல் என்ற அளவீடுதான் வேகம் எனப்படும். எனவே நீரின் இயல் பான வேகத்தில் மாற்றம் ஏற்படுகிறது. அதற்குக் காரணம் விசை என்று உய்த்துணரச் சான்றோர்கள் வாய்பளித் துள்ளனர். நியூட்டனின் இரண்டாவது விதி, பொருளின் விசைக்கு ஏற்ப இடமாற்றம் என்பது வினையும் மறு வினையும் அளவில் ஒத்தவை ஆயினும் எதிர் நிலை யுடையன என்பது அவருடைய மூன்றாவது விதி.

நியூட்டனின் அறிவியல் நோக்கு மூன்று விதிகளும் நம் முன்னையோரின் விதிக் கொள்கையோடு அரண்பட்டுச் செல்வதை நோக்கலாம்.

.........நீர்வழிப் படூஉம் புணைபோல்
ஆருயிர் முறைவழிப் படூஉம்

என்ற கணியன் பூங்குன்றனார் வெளிப்பாட்டில் நியூட்டனின் இரண்டாவது விதியும், "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா பிற்பகல் தாமே வரும், "வினைவிளைகாலம்", "தலைவிதி தடுக்கற்பாற்றோ" ஆகிய இலக்கிய அடிகள் யாவும் நியூட்டனின் தத்துவத்தை விளக்குவனவாகவே உள்ளன. நியூட்டன் அவர்களையே அவருடைய நண்பர்கள் வினவியபொழுது "முறையாகப் புரிந்து கொள்ளப்பட்ட விதிக்கொள்கையே இயற்கை எனக்கு அறிவுறுத்திய இவ் வறிவியற் கொள்கை" என்று கூறினார்.

இடி மின்னல் பற்றிய கருத்துக்கள்

துஞ்சுவது போல இருளி விண்பக
இமைப்பது போல மின்னி உறைக்கொண்டு
ஏறுவது போலப் பாடுசிறந் துரைஇ
நிலம்நெஞ்சு உட்க ஓவாது சிலைத்தாங்கு
ஆர்தளி பொழிந்த வார்பெயற் கடைநாள்
—அகநானூறு 139:1-5

மலைஇமைப் பதுபோல் மின்னி
சிலைவல் ஏற்றொடு செறிந்தஇம் மழைக்கே
—நற்றிணை. 112:8-9

ஆகியனவும் அவை போல்வன பிறவும், மழைக்காலத்தில் மின்னல் முதலிலும் இடி பின்னரும் தோன்றும் என்று சான்றோர் கூறினர். அவ்வளவோடு நில்லாமல் காலை நேரத்தில் இடிக்கும் இடி கடுமை வாய்ந்தது என்றதொரு குறிப்பினை அகநானூற்றுச் சான்றோர் ஒருவர் உரைத்துள் ளார். இதுவும் அறிவியல் அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உட்பட்ட புலம் என்று கூறலாம்.

காலை வானத்துக் கடுங்குரற் கொண்மூ
—அகநானூறு 174:7

என்பது மதுரை அளக்கர் ஞாழர் மகனார் மள்ளனார் கூற்று.

பேய்த்தேர்

ஒரே ஊடகத்தின் (medium) அடர்வு வேறுபாட்டினால் ஒளிக்கதிர்கள் ஒளிரும்போழ்து விலகல் ஏற்பட்டுக் கண்ணிற்குப் பொய்த் தோற்றமான ஒரு காட்சியை உருவாக்கு கின்றன. இதுவே கானல் நீர் (mirage) என்று அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். அகநானூற்றுப் பாடல் ஒன்றின் பகுதி இந்தக் கருத்தினை விளக்குவது போல் தோற்றம் அளிக்கின்றது.

உவல்இரு பதுக்கை ஆள்உடு பறந்தலை
உருவில் பேஎய் ஊராத் தேரொடு
நிலம்படு மின்மினி போல பலவுடன்
இலங்கு பரல்இமைக்கும்
—அகநானூறு 67:14-18

இப் பாடற்பகுதியில், மின்மினி போல்...இமைக்கும், என்பது ஒளிரும் கோட்பாட்டை (reflection theory) விளக்குவதுபோல உள்ளது. அறிவற்ற விலங்குகளைப் பேய்த்தேர் ஏர்ப்பதோடல்லாமல் சிந்திக்கும் ஆற்றல் உள்ள மனிதர்களையும் ஏமாற்றும் பெற்றியது என்பதால்தான் இலக்கியங்களில் பேய்த்தேர் இடம் பெற்றது எனலாம்.

இராமன் விளைவு (Raman's effect)

கண்ணின் பார்வைக்கோணத்தினை மாற்றுவதால், பொருளின் முழுமையான அளவுகள் தெரிகின்றன என்பதே சர் சி. வி. இராமனின் அறிவியல் கண்டுபிடிப்பு. சான்றோர் களின் உவமைகள் இக் கருதுகோளுக்கு அரண் செய்கின்றன. "வையங் காவலர்" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் கதிரவனைப் பற்றிப் புலவர் கபிலர் பாடிய கருத்துக் களைப் பயில்வோர்க்கு இக் கண்ணோட்டம் புலப்படும்.

......வீங்கு செலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந் தொளித்தி
அகலிடு விசும்பி னானும்
பகல்விளங் குதியால் பல்கதிர் விரித்தே

என்பன அவர்தம் பாடலடிகள். பல்கதிர் என்ற சொல்லாட்சி பல்வேறு வண்ணங்களையுடைய கதிர் எனப் பொருள் கொள்ள வாய்ப்பிருக்கிறது. வைரத்தின் பார்வைக் கோண வேறுபாட்டினால்தான் அது பளிச்சிடுகிறது. பல்வேறு வண்ணங்களையும் காண்பவர்கட்கு விருந்தாகப் படைக் கிறது. முழுமையாகத் தனக்குள்ளேயே ஒளிரும் ஆற்றல்

இருப்பதால்தான் அது பளிச்சிடுகிறது என்பது இயற்பியலின் விளக்கம். அத்தகு சிந்தனையின் முன்னோட்டம் கபிலரின் பாடலில் காணலாம்.

பனி பற்றிய சிந்தனை

குன்று குளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்
—நெடு. 12

முளரி கரியும் முன்பனிப் பானாள்
—அகம். 163:8

வயங்கு கதிர்கரந்த வாடை வைகறை
—அகநானூறு. 24:6

ஆகிய மேற்கோள்களும் அவை போல்வன பிறவும் பனி யென்பது ஒருங்கிய வெப்பம் (latent heat) கொண்ட நீர்மத்தின் ஒருநிலை என்பதை அறிய முடிகிறது.

வெப்பநிலைப் பாதுகாப்பு

ஒரு பொருளின் வெப்ப நிலை மாறாமல் அதனைப் பாது காத்து வைக்கும் அமைப்புக் கொண்ட கருவியினைச் சேமச் செப்பு என்று பெயரிட்டு அழைத்தனர். அது குறித்த கோட் பாட்டு உருவாக்கம் அக் காலத்தில் முகிழ்க்கவில்லையாயி னும் பயன்பாடு மட்டும் நிலவி வந்தது என உணரலாம். வெப்ப இயக்கம், வெப்பக் கதிர்வீச்சு, வெப்பக் கடத்தல் ஆகியன குறித்து விரிவான சிந்தனை இல்லாவிடினும் முன்னோட்டச் சிந்தனை இல்லை என்று கூறி மறுப்பதற்கில்லை. குறுந் தொகையின் பின்வரும் பாடல் இக் கருத்தினை வலியுறுத்தும்.

ஆசுஇல் தெருவின் ஆசுஇல் வியன்கடை
செங்நெல் அமலை வெண்மை வெள்ளிமுது
ஓர்இல் பிச்சை ஆர மாந்தி
அற்சிர வெய்ய வெப்பத் தண்ணீர்
சேமச் செப்பில் பெறீஇயரோ நீயோ
—குறுந்தொகை. 277:1-5

[illegible] ஆய் பாடல் அடிகளாகும். இதிலிருந்து வெப்பம் [illegible] ஆற்றலின் (Energy) ஒரு வடிவம் (Form) எனப் [illegible].

கதிரவனே ஆற்றலின் தோற்றம்

இயற்பியல், உயிரியல், மற்றும் வேதியியல் வல்லுநர்கள் கதிரவனையே ஆற்றலின் முதலிடமாகக் கருதுகோள் வகுத்துள்ளனர். ஆற்றலை உருவாக்கவோ அழிக்கவோ இயலாது என்றும் அதன் வடிவத்தை மட்டும் மாற்றலாம் என்று ஆய்வுகள் நிகழ்த்தி நிறுவியுள்ளனர். இதனை ஆற்றலின் அழிவின்மை விதி (Law of conservation of Energy) என்று விளக்கம் கூறியுள்ளனர். இலக்கியப் படைப்பாளிகள் ஞாயிற்றின் ஆற்றலை அவர்களின் கால எல்லைக்கு அப்பால் சிந்தித்துக் கற்போர்க்கு உணர்த்தியிருக்கின்றனர்.

(1) உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு

—*திருமுருகாற்றுப்படை 1:2*

(2) .... தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெரும

—புறநானூறு 6:28-29

(3) செஞ்ஞாயிற்றுத் தெறல்

—புறநானூறு 20:8

(4) உரவுச்சினம் திருகிய உருகெழு ஞாயிறு

—புறநானூறு 25:3

(5) ஞாயிற்றன்ன வெந்திறல் ஆண்மை

—புறநானூறு 55:13

(6) ஞாயிறு அனையை நின் பகைவர்க்கு

—புறநானூறு 59:6

(7) இருளும் உண்டோ ஞாயிறு சினவின்
—புறநானூறு 90:8

(8) உருகெழு ஞாயிற்று ஒண்கதிர்
—புறநானூறு 160:1

(9) இருள்கண் கெடுத்த பருதி ஞாயிறு
—புறநானூறு 174:3

ஆகிய மேற்கோள்களின்வழி ஞாயிற்றின் அளவற்ற ஆற்றலை அறிஞர்கள் உணர்த்தியிருக்கின்றனர்.

கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே

எனும் தொல்காப்பிய நூற்பாவினை அறிவியலார் பார்வைக்குக் கொண்டு வந்தால் தமிழன் அறிவியல் நோக்கில் முதலடி எடுத்து வைத்தவன் என்பது புலப்படும்.

கதிரவன் ஓரிடத்தில் இல்லாமல் சுழன்று கொண்டே திரியும் ஒரு கோள் என்று அறிந்திருந்தனர். "மாறிவருதி" என்ற கபிலரின் சொல்லாட்சியும், "வானம் ஊர்ந்த வயங்கொளி மண்டிலம்" என்ற ஔவையாரின் வெளிப்பாடும், "செஞ்ஞாயிற்றுச் செலவு" என்ற உறையூர் முதுகண்ணன் சாத்தனார் கூற்றும் நினைத்துப் பார்க்கத்தக்கவை.

வேதியியல் கருத்துக்கள் (Thoughts on chemistry)

மிகமிக அண்மைக் காலத்தில்தான் வேதியியல் என்பது முழுமையான அறிவியலாக உருப்பெற்றது என்பர். தமிழ் மொழியிலும் இயற்கையிறந்த நிகழ்வுகளைச் சுட்டாத பதினெண் சித்தர் பாடல்கள் சிலவற்றில் வேதியியல் கருத்துக்கள் பதிந்து காணப்படுவதாகக் கொள்ளலாம். கரியும் தண்ணீரும் சேர்ந்த கூட்டுப்பொருள்தான் மனிதன் என்கிறது வேதியியல் (Human body is a Complex Compound of Carbon, Hydrogen and Oxygen) சித்தர்கள்

"காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா" என்று கூறியதிலிருந்து காற்றின் அளவு மனிதனுக்கு மனிதன் வேறுபடும் என்ற உண்மையை உணர்த்தினர். காற்றின் இயக்கமே உயிரின் இயக்கம் எனக் கருதினர். மூச்சுக் காற்று நின்றால் இறப்பு என்றும் அவர்கள் கணித்தனர். உடலினுள் காற்றின் சீரான இயக்கத்தில் தடை ஏற்பட்டால் விரைவில் இறப்பு நிகழ வாய்ப்பு உண்டு என்றும் சுட்டினர்.

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே

என்ற திருமூலரின் திருமந்திரத்தில், மேற்கூறிய கருத்து வலிமை பெறுவதோடு உணவியல் (Dietitics) உடலியல் (Physiology) நோயியல் (Pathology) ஆகியன பற்றியும் கருத்தோட்டம் இருத்தல் நோக்கற்குரியது. "பண்டம் பெய் கூரை" என்று உடலைப் பற்றி இவர் கூறியமை மெய்யியல் அறிஞர்களை வியக்கச் செய்யும்.

மாங்காய்ப் பால்உண்டுமலைமேல் இருப்போர்க்குத்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி—குதம்பாய்
தேங்காய்ப் பால் ஏதுக்கடி

என்பது குதம்பைச் சித்தர் பாடிய பாடல் ஆகும். இதில் உயிர் வேதியியல் (Biochemistry) குறிப்பு இருப்பதாகக் கூறுவர். மலை என்பது தலைக்குட்பட்ட பகுதியாகிய மூளையையும் அது ஆகுபெயராய் மனத்தையும் சுட்டும். மனத்தால் நினைத்து இன்பம் அடைகின்றவர்கள் உடலாலும் உள்ளத்தாலும் நிலைத்து இன்பம் பெறுவதோடு இவ்வுலகில் நீடுவாழ்ந்து ஏனையவர்கட்கும் வழிகாட்டியாக விளங்குவர். அவ்வாறில்லாமல் உடலுறுப்புக்களின் சேர்க்கையால் கிட்டும் இன்பம் விலங்கு நிலை இன்பம் என்றும் அது நோயையும் காமத்தையும் மிகுவித்து இடையறாத துன்பத்தைத் தரவல்லது என்றும் அதனைத் தவிர்ப்பது

நல்லது என்றும் இச் சித்தர் பரிந்துரைப்பதாகக் கொள்ளலாம். மரத்தின் பிடியிலிருந்து காய் விழும்பொழுது காம்புப் பகுதியிலிருந்து இயல்பாகவே பால் வடிவதை நோக்கலாம். ஆயின் தேங்காய்ப்பால் அதன் துருவல்களைப் பிழிவதால் கிடைக்கும். இதனால் தேங்காயின் வடிவம் அழியும். மாங்காய்ப் பாலினால் காயின் வடிவமோ சுவையோ எடையோ சிறிதும் குன்றுவதில்லை. மனிதன் தன் ஆற்றலை உறுப்புக்களின் மிகுசெயல்பாட்டில் செலவழித்து வேதியியல் நோக்கில் உயிரைத் தேய்த்து மாய்கிறான். ஆற்றலைப் பாதுகாக்கும் பயிற்சியை மனிதன் பெற வேண்டும் என்பதைத்தான் குதம்பைச் சித்தர் குறிப்பாகப் பாடியிருக்கிறார். எனவே மாங்காய்ப்பால் என்பது மனத்தால் கிடைக்கும் இன்பத்தினையும் தேங்காய்ப் பால் என்பது உடல்வழி கிடைக்கும் விலங்கியல் இன்பத்தையும் சுட்டுகின்றன. உடல் இல்லாமல் மனம் இயங்க வாய்ப்பு இல்லையாதலால் உடலுக்கும் மனத்திற்கும் இடையே இடையறாத வேதியியல் நிலைவினை (Chemical reaction) நடைபெறுகிறது என்றும் இதனால் ஏற்படும் விளைவுகளை உடல் - உள்ள மாறுபாடுகள் (Psychosomatic changes) எனவும் கூறுவர். இத்தகு அணுகுமுறைகளை மன வேதியியல் முறை எனவும் அழைப்பர் (Mental Chemistry Method) வேதியியல் வினையாக்கத்தினைப் பின்வரும் கலித்தொகை அடிகள் குறிப்பால் உணர்த்தும்.

> திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய
> மருந்து போல்மருந் தாகிமனன் உவப்ப
>
> —பாலைக்கலி 16:19-20

பெரும்பாணாற்றுப்படையில், தன் இயல்பிலிருந்து சுருங்கிய மாவடு பற்றிய குறிப்பு உள்ளது. வேதியல் மாற்றத்தினால்தான் உப்பிடப்பட்ட மாவடு, நீர்ம நிலையில் சுருங்குகிறது எனவும் இதனைச் சவ்வூடு பரவல் (Osmosis) என்றும் இயல்பு வேதியியல் (Physical Chemistry) வல்லுநர்கள் கூறுவார்கள். வேதியியல் அடிப்படையில்தான் மாவடு

சுருங்கியிருக்கிறது என்று நாம் பார்வையைச் செலுத்தும் அளவிற்குக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடியமை பாராட்டற்குரியது.

> .... பைந்துணர்
> நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
> தகைமாண் காடியின் வகைப்படப் பெறுகுவீர்
> —பெரும்பாணாற்றுப்படை 308:16

என்பன அவ் வடிகள் ஆகும்.

தமிழ் இலக்கியத்தில் உள்ள உவமைகளில் 'இளமாங்காய் போழ்ந்தன்ன கண்' என்பது சிறப்பான ஒன்றாகும் (கலி. 108:28). கழனி மாஅத்து விளைந்திடு தீம்பழத்தினை (குறுந். 8:1)யும் அறியாதவர்கள் இல்லையென்றே கூறலாம். மாவினைப் பற்றிய பார்வை புலவர்களிடத்தில் கூர்மையாக இருந்தமையால் சுருங்கிய மாவடு அஃதாவது 'கொக்கின் நறுவடி விதிர்த்த தகை மாண்காடி' சவ்வூடு பரவலின் விளைவு என்பதை அவர்கள் காலத்திற்கேற்ற வகையில் உய்த்துணர்ந்தனர் எனத் தெளியலாம்.

ஆய்வுக் கூடத்தில் ஹைடிரஜனையும் ஆக்ஸிஜனையும் மின் திறனின் முன் இணைக்கும்பொழுது பேரொலி உண்டாவதைக் கண்டறிந்தனர் அறிவியல் அறிஞர்கள். எனவே இயற்கையில் மழை பெய்கின்றபொழுது காற்று மண்டலத்திலுள்ள உயிரியமும் (Oxgen) நீரியமும் (Hydrogen) மின்னலின் முன்னிலையில் இணைந்து இடியுடன் கூடிய மழையைப் பெய்விக்கின்றது என்பது அறிவியல் அறிஞர்களின் தெளிந்த முடிபு. இரண்டு வளிமங்கள் சேர்வதால் மழை பெய்கின்றது எனும் உண்மையை அக் காலத்துச் சான்றோர்கள் அறியாமல் இருந்திருந்தாலும் மழை பெய்தல் என்பது ஓர் வேதியல் நிகழ்வு எனக் கருதியிருக்கக் கூடும். இடி, மின்னல், மழை ஆகிய மூன்றையும் தொடர்ந்து குறிப்பிட்டுச் சான்றோர்கள் பாடியிருக்கின்றனர்.

பெருங்கடல் முகந்த இருங்கிளைக் கொண்மூ
இருண்டு உயர்விசும்பின் வலனேர்பு வளைஇ
போர்ப்பு உறுமுரசின் இரங்கி, முறைபுரிந்து
....
....
மின்னுடைக் கருவியை ஆகி நாளும்
கொன்னே செய்தியோ அரவம்?
—அகநானூறு 188:1-8

எனவரும் அடிகளில் இவை மூன்றும் குறிக்கப் பெற்றமை நோக்கற்குரியது. நல்வெள்ளியார் (நற்றிணை 7:3-6) பேரி சாத்தனார் (நற்றிணை 104:9-12) மதுரை மருதனிள நாகனார் (அகம் 312:10-14), மாறோக்கத்து நப்பசலையார் (புறம் 174:24-28) ஆகிய சான்றோர்களின் பாடல் பகுதிகளும் இக் கருத்திற்கு அரணாய் அமைகின்றன. பகல் நேரத்தில்மின்னலைவிட இடியே மனிதனை வெகுவாகப் பாதிப்பதால் மின்னலைப்பற்றிய குறிப்பு சில பாடல்களில் இல்லாமற் போகலாம். கதிரவன் ஒளிக்கு அது ஒப்பாகாமையால் அதனை அறிஞர்கள் கூறாமல் விடுத்திருக்கலாம். இதுவும் மனத்தில்கொள்ளவேண்டிய ஒரு செய்தி.

கரைப்பான் (Solute) கரைபொருள் (Solvent) கரைதிறன் (Solubility) கரைசல் (Solution) ஆகியன பற்றிய செய்திகளை அறிஞர்கள் அறிந்து வைத்திருக்கின்றனர். "செம்புலப் பெயல் நீர்" எனும் அரியதொடர் ஒன்றே இதனை விளக்கப் போதுமானதாகும். மழை நீரில் பல பொருள்கள் கரையும். எனவே மழைநீர் ஒரு கரைப்பான். செம்புலத்திலுள்ள சில உப்புக்கள் நீரில் கரைந்தன. அவை கரைபொருட்கள். இரண்டும் சேர்ந்து கரைசலாக மாறுகின்றன. 'அன்புடை நெஞ்சம் தாம் கலந்தன' என்ற வெளிப்பாடு இஃது ஒரு வேதியல் மாற்றம் என்பதை நினைவுபடுத்தும். அண்மைக் காலத்தில்தான் தண்ணீரில் கரையும் பொருட்கள் "குளோரைடு, கார்பனேட்" என்று கண்டுபிடிக்கப்பட்டன. தமிழக மக்கள், உப்பு நீரில் கரையும் என்ற எளிய

உண்மையை அரிய இலக்கிய உவமைகளின் வழி உணர்த்தியிருக்கிறார்கள்.

..................புணர்திரைக்
கடல்விளை அமுதம் பெயற்கு ஏற்றாஅங்கு
உருகி உகுதல் அஞ்சுவல்
—நற்றிணை. 88:3-5

..................மிகுபெயல்
உப்புச்சிறை நில்லா வெள்ளம் போல
நாணுவரை நில்லாக் காமம்
—அகம். 208: 18-20

ஆகியன அறிவியல் அறிஞர்களின் சிந்தனைக்கு நல்விருந்தாம்.

"சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய கல்" வேதியியல் மாற்றத்தின் மாண்பினை நன்கு எடுத்துரைக்கும்.

சுற்றுப்புறச் சூழல் உயிரியல் (Environmental Biology)

இன்றுமிக விரிவாக ஆய்வு செய்யப்படும் அறிவியல் பாடங்களுள் இது முன்னுரிமை பெறுவதோடு சமுதாயப் பயன்பாடும் மிக்கதாகக் காணப்பெறுகிறது. சுற்றுச் சூழலை உயிரற்ற சூழல் (Abiotic Background) மற்றும் உயிர்ச்சூழல் (Biotic) என இருவகையாகப் பகுத்துள்ளனர். உயிரற்றதில் நிலம், பொழுது, காற்று, நீர், மலை ஆகியனவற்றையும் உயிர்ச் சூழலில் ஓரறிவுயிர் முதல் ஆறறிவுள்ள மனிதன் வரையும் சேர்த்துள்ளனர். இவ் வுயிரினங்களில் ஒன்று மற்றொன்றின் இரையாக இருந்து தட்பவெப்ப நிலைக்கேற்பச் சுற்றுச் சூழலின் சமன்பாட்டைச் சமநிலைப் படுத்துகின்றன (Ecological balance) என்ற கருத்தே இன்றைய வல்லுநர்களின் முடிவு. தொல்காப்பியர் உரைத்த முதற்பொருளும் கருப்பொருளும் இவ் வறிவியல் உண்மையின் சாயலைப்

பெறுகின்றன. ஒன்று மற்றதின் இரையாக இருந்து உணவுச் சங்கிலித் தொடர் ஏற்பட்டு அது பலவகையாகப் பின்னிப் பிணைந்து சிலந்தி வலைபோன்ற அமைப்பினைப் பெறு கின்றன என்பதும் அறிஞர்களின் கருத்தாகும்.

"கோழிலை வாழை கோள்முதிர் பெருங்குலை" எனத் தொடங்கும் அகநானூற்றுப் பாடலில் குரங்கின் உணவாக வாழை, பலா, தேன் ஆகியன சுட்டப்பட்டு ஒருவகை உணவுச் சங்கிலி (Food chain) குறிக்கப்படுகிறது. இத்தகைய குரங்கு, தன்னை உணவாகக் கொள்ளும் விலங்காகிய மடங்கலைக் கண்டு வெருவியதாக நற்றிணைப் புலவர் பொதும்பில்கிழார் கூறியுள்ளார்.

தடங்கோட்டு ஆமான் மடங்கல் மாநிலைக்
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தென
துஞ்சுபதம்பெற்ற துய்த்தலை மந்தி
....
...........மருட்கை உடைத்தே

—நற்றிணை. 57: 1-7

என்பன அப்பாடல் அடிகளாம்.

இதே போன்று, கணம் கொள்சேவல் நள்ளிருள் யாமத்தில் இல்எலி பார்த்திருக்கும் நேரத்தில் பிள்ளை வெருகிற்கு இரையாயிற்று எனத் தொடர்நிலை உணவுச் சங்கிலி பற்றிப் பேசுகின்றார் மதுரைக்கண்ணனார் (குறுந். 107: 1-4). அகம். 3, 8, 29, 112, 193 ஆகிய பாடல்களில் பல்வேறு உணவுத் தொடர்கள் குறிக்கப்பட்டுள்ளன. "கோம்பிக்கு ஒதுங்கிய மேயா மஞ்ஞை" என்ற திருக்கோவையாரும் கருதத்தக்கது.

மனிதன் தான், சுற்றுச் சூழல் பின்னணியை மாற்றியமைத்துச் சமன்பாட்டை முரணும்படியாகச் செய்கிறான் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். முக்கோண அமைப்புள்ள சுற்றுப்புறச் சூழலைக் கூம்பு வடிவ நிலைக்கு மாற்றி இயற்கையின் போக்கில் மாறுதலை ஏற்படுத்து

திரான் என்றும் கூறினர். இத்தகைய மாற்றங்களை வேந்தர்கள் செய்ததாகப் புலவர்கள் உயர்வுநவிற்சியாகக் கூறியிருந்தாலும் அவற்றில் அறிவியலாரின் கருத்திழை யோட்டம் இருப்பதைக் காணலாம்.

........மருங்கற
மலை அகழ்க்குவனே கடல்தூ ர்க்குவனே
வான் வீழ்க்குவனே வளி மாற்றுவன்

எனத் திருமாவளவனது ஆற்றலைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பாடற் பகுதியைப் பிறமொழிகளில் மொழியாக்கம் செய்தால் பழந்தமிழர்களின் அறிவியல் கண்ணோட்டம் நன்கு விளங்கும். "நிலம் நீர் வளி விசும்பு என்ற நான்கின் அளப்பரியையே! (பதிற்றுப்பத்து. 14:1.2) "தேவர் பரந்த புலம் ஏஎர் பரவா, களிறாடிய புலம் நாஞ்சில் ஆடா, மத்துரறிய மனை இன்னியம்இமிழா" (பதிற்றுப்பத்து. 15:1.6) ஆகியன மனிதன் மாற்றியமைத்த இயற்கைச் சூழலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். கடல்கொந்தளிப்பு, கடுங்காற்று, கடுந்தீயினாலும் சூழல் மாறுபடும் என்று ஐயூர் முடவனார் (புறம். 51:1-3) பகர்ந்தமை சிந்தித்தற்குரியது.

மண்ணியல் கருத்துக்கள் (Geological thinking)

நிலம் நடுங்கும் என்ற உண்மையை அறிந்திருந்தனர். 'உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம்' (அகம். 255:1) என்னும் அடியே இதற்குச் சான்று. இது நில நடுக்கக் கோட்பாட்டு உருவாக்கத்தின் தொடக்க நிலை எனலாம். கடல், சிறிது சிறிதாக நிலப்பகுதிதனை அரித்துத் தன்னுள் அடக்க முயலும் என்பது, பொங்கு திரை பொருத வார்மணல் அடைகரை (நற். 35:1) "முழங்கு திரை கொழீஇய மூரி எக்கர்" (நற். 263:1), "தாழ்நீர், வெண்தலைப் புணரி அலைக்கும் செந்தில்" (புறம். 55:17-18) ஆகிய சான்றோர் தம் செய்யுட்பகுதிகளால் அறியலாம்.

இயற்கைத் தேய்வு (Weathering) பற்றி மேற்கோள்கள் பல உள்ளன. கூதிர்க் காலத்தில் வீசும் வாடைக்காற்று, குன்றினையும் குளிர்விக்கச் செய்து அதன் ஆற்றலைக் குறைக்கும் என்றார் நக்கீரனார் (நெடுநல்வாடை 12). கதிரவனின் வெம்மையால் மலை வெம்பி வெடித்து மண் துகளைத் தரும் என்றார் பாலை பாடிய பெருங்கடுங்கோ (பாலைக்கலி 12:-1-5), 19:2-6) மண்துகள்களிடையே நெருக்கம் இருப்பதால்தான் நிலம் உறுதிப்படுகிறது என்கிறார் முரஞ்சியூர் முடிநாகராயர். இவ் வுலகையே மண்ணகம் என்று இரும்பிடர்த்தலையார் அழைக்கும் பாங்கும் நோக்குதற்குரியது (புறம். 3:2.).

ஒரு நாட்டின் மேடு, பள்ளம், மலை, கடல், ஆறு ஆகியனவற்றைப் பற்றி ஆராயும் இயல் நில அமைவியல் ஆகும் (Topography). இந் நாட்டின் அமைவியலைப் படம் பிடித்துக் காட்டுபவர்போல் காரி கிழார் புறநானூற்றில் பாடலொன்றைத் தொடங்கியிருப்பது இந்திய வரைபட ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்தும்.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்

என்னும் பாடலடிகள் தமிழகத்தின் நில அமைப்பினை நன்கு எடுத்துக்காட்டும். நில அமைப்பியல் வேறு, புவியியல் (Geography) வேறு.

மலையிலிருந்து விழும் அருவி படிபோல் அமைந்து மலையைத் துளைப்பதோடு (Cascading) ஓரிடத்திலிருந்து ஒரு பொருளை எவ்வாறு மற்றோர் இடத்திற்குக் கொண்டு சேர்க்கிறது (Transportation) என்பதை நக்கீரர்தம் திருமுருகாற்றுப்படை அடிகளால் அறியலாம்.

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
....
இழுமென இழிதரும் அருவி
—திருமுருகாற்றுப்படை 297-316

என்பன அவ் வடிகளாம். பெருங்கல் விடர்அளைச் செறிய என்ற குறிப்பு டாக்டர் சரவணன் போன்ற ஆராய்ச்சி அறிஞர்களையும் சிந்திக்கச் செய்யும். மண்ணியல் அறிஞர் கள் காட்டும் பானைத்துளைகள் (pot holes) அருவியின் இழிதரு ஆற்றலால்தான் நிலத்தில் தோன்றுகின்றன.

ஆறு ஒரு மண்ணியல் சார்பாளனாக (River as a geological agent) இயங்கும் பெற்றியினைப் பட்டினப் பாலை நன்கு பகர்கிறது (1.7). ஓர் ஆற்றின் இலக் கணத்தை அறிவியல் கூட இதிலிருந்துதான் எடுத்துக் கொள்ளல் வேண்டும். மலையில் தொடங்கிக் கடலில் முடிவதுதான் ஆறு என்கிறார் கடியலூர் உருத்திரங் கண்ணனார். இதனுள் பள்ளத்தாக்கு உருவாக்கத்தின் இளமைநிலை (Youthful stage of valley Development) முதுமை நிலை (Matured stage) ஆகியன அடங்கும் என்று கவினுறக் கூறுவர். கடலோடு கலப்பதற்கு முன்பாக ஆறு வளைந்து வளைந்து சென்று (Meandering) தன் வலிமை குன்றி அளவால்குறையும் என்பர் ஆற்றியல் அறிஞர்கள் (River experts). இவ் வுண்மைதனை "யாறுபோலப் பரந்தொழுகி" எனும் வெளிப்பாட்டினால் உணரலாம். பெண்ணின் கூந்தலைப் போல் ஆற்றுமணல் அலை அலையாய் படிந்திருப்பதைக் கண்டுதான் வையைப் பெண்ணாக உருவகித்தார். ஆற்றில் உள்ள மின்னோட்ட வலிமையால்தான் இவ் வமைப்பு வரு கிறது என்றும் இதனை மின்னோட்டப்படிவ அமைப்பு என்றும் அதனால் ஏற்படும் மெல்லிய தழும்புகள் (Current bedding and ripple marks) காண மகிழ்வைத் தரும் என்றனர் அறிவியல் அறிஞர்கள். "மல்லல் பேரியாற்று நீர்வழிப் படூஉம் புணை' கொண்டு ஆற்றின் மின்னோட்ட வலிமையை அறியலாம். பரிபாடலில் வையை ஆற்றின்

செயல்களாக வருணிக்கப்படுபவையெல்லாம் மண்ணியல் அறிமுகப்பாடங்களில் இடம் பெற வேண்டிய விழுமிய செய்திகளாம்.

குற்றவியல் (Criminology)

எது குற்றம் என்று வரையறை செய்ததோடு அதனைக் கண்டுபிடிக்கும் முறைகளையும் சான்றோர்கள் கோடிட்டுக் காட்டினர்.

> ஆன்முலை அறுத்த அறனில் லோர்க்கும்
> மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
> வழுவாய் மருங்கில் கழுவாயும் உளஎன
> ....
> செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்
> —புறநானூறு 34:1-6

என்பன, குற்றவியல் அறிஞர் தத் (Dutt) அவர்களின் கருத்துக்களோடு இணைந்து செல்வன. ஆட்கொலையைத் (Honicide) தொல்காப்பியர், உறுப்பறையினுள்ளும் அறிவுக்கொலையை (Brainwash) தீக் கொலையினுள்ளும் குறிப்பிட்டார். உள்நோக்கம் (Motive) இதனுள் அடங்கும். எனவே கொலைகளில் உணர்வு மேலிட்டுக் கொலை திட்டமிட்டுச் செய்யப்படும் கொலை (Alleged Murder) என இரு வகைப்படும் என்பதும் இன்று குற்றவியல் அறிஞர்கள் கூறும் நுண்ணிய பாகுபாட்டைத் தொல்காப்பியர் அன்றே கூறியமை பாராட்டற்குரியது.

> நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும்
> அறிபவர்
> நெஞ்சத்துக் குறுகிய கரிஇல்லை

என்பது மனச்சாட்சியின் மாண்பினை எடுத்துரைக்கின்றது. குற்றவியலுக்கு அடிப்படையான மனச்சாட்சியைச் (Consci ousness) சங்க இலக்கியம் நன்கு இயம்பியுள்ளது, ''அறிகரி

பொய்த்தல் ஆன்றோர்க்கில்லை, '' என்பதையும் எவரும் மறுத்தற்கில்லை.

சமூகவியல் (Sociology)

குறுந்தொகையில் கடுந்தோட்கர வீரன் பாடிய பாடலை மையமாகக் கொண்டு சமூகவியல் நோக்கில் காப்பியம் எழுதலாம்.

> கருங்கட் தாக்கலை பெரும்பிறி துற்றென
> ....
> சாரல் நாட

—குறுந்தொகை 69:1-5

என்பன அப் பாடலடிகள். இதில் தற்கொலை ஒரு குற்றமாகக் கருதப்படவில்லை; ஆயின் மனநோயாகக் கருத வாய்ப்புண்டு எனச் சிந்திக்க வைக்கிறார் புலவர்.

முடிவுரை

1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் *21* ஆம் தேதி நிலவில் காலடி வைத்த ஆம்ஸ்ட்ராங் அவர்கள் ஆஸ்கார் ஒயில்டு குறிப்பிட்ட சீன நாட்டுத் தத்துவ ஞானி இருக்கிறாரா என்று தேடிப் பார்த்தாராம். ஆனால் அவரைக் காண இயலவில்லை. ஆயின் ஒன்றுமட்டும் உண்மை. ஆஸ்கார் ஒயில்டின் கற்பனைதான் நிலவுப்பயணத்திற்கு உந்துதலாக (Motivation) இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் மனம் திறந்து ஒப்புக்கொண்டனர். இலக்கியத்தையும் அறிவியலையும் பார்க்கின்ற மனிதன் ஒருவனே! கண்கள் பொதுவானவை. இரண்டுமே படைப்பாற்றல் உடையவை தாம்! அறிவியலுக்கு அடிப்படை உண்மை காண்பது. இலக்கியத்திற்கு உண்மையை உணர்த்துவதுதான் உயிர். அறிவியல் உண்மைகள் மாறி வருபவை (Variants). ஆயின் இலக்கிய உண்மைகள் நிலைத்தவை (Constant). இலக்கியம் அறிவியலோடு ஒத்துச் செல்லும். ஒன்று மற்

றொன்றை ஒளிர்விக்கும் தன்மையுடையது. எனவே இலக்கியத்தில் அறிவியல் பார்வை உறுதியாக அமையும் என்று நம்பலாம். முடிவுகள். கற்பிதங்களின் அடிப்படையில் அமைவன (Conclusions are based on assumptions) என்பது ஹார்டுவர்டு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி முடிவு. அறிவியலும் இலக்கியமும் ஒன்றாக இணைந்து இவ்வுலகிற்கு நன்மை விளைவிக்க வேண்டும் என்பது இக் கட்டுரையின் நோக்கம். இலக்கியத்தின் நிழலில் அறிவியல் மறையும் என்பதில் ஐயப்பாடில்லை.

உதவிய நூல்கள்

1. Articles in Science Today, Times of India Publication, Bombay.
2. True stories of Strange Murders, Dutt, Bombay.
3. Physical Sciences with Basic Mathematics, V. P. Manickavasagam.
4. Meller's Inorganic Chemistry.
5. General Geology, Arthur Holmes.
6. Family Material Medica.
7. Abnormal Psychology, Coleman, Bombay (Indian Edition)
8. Collins English Dictionary, 1981.
9. Science-its environment, NCERT, Delhi.
10. Treatment of Nature in Sangam Literature - Dr. Mu. Va.
11. The Hindustan year Book, 1986.
12. Span, January 1983.
13. சங்க இலக்கியம் - மர்ரே வெளியீடு.
14. பன்னிரு திருமுறை வரலாறு, அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு.
15. Soicial Scences, Moscow, 1985.

சி. பா.



தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில், கற்றஇடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ. ஆனர்சு அங்கு! முதல் வகுப்பில் தேறிய முதல்வர். 'குறுந்தொகை பற்றிய ஆய்வுரைக்கு 1963-ல் எம்.லிட்., பட்டமும், 'சேர நாட்டுத் தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புக்கள். நல்ல நடை கொண்ட இந்த நாகரிகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னாள் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர், தற்போது தஞ்சைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தருமாவார்.

முப்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர்தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு' ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். பெருந்தகை மு.வ. ஆங்கிலத்தில் ஒரு நூல், 'சங்க கால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உருபா முதல் பரிசைப் பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற் புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்), சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்), சங்கத் தமிழ்ச் செல்வர் (தருமை ஆதீனம்)

பெருந்தகை மு.வ. வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ் பாடும் அந்தமிழ்த் தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடு படு!

—மா.செ.